வெளியீடு எண் 416

பசுபதிநாத்

(நேபால யாத்திரை)





தருமபுர ஆதீனம்
24 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

தருமபுர ஆதீனம்

24 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

13 ஆவது ஆண்டுக் குருபூசை விழா மலர்

விளம்பி வைகாசி 14 ஆம் நாள்

1958

உ

குருபாதம்

கட்டளைக் கலித்துறை

உன்னற் கரியா னுலகம் பரவும் ஒளியுருவான்
பன்னற் கமுதாய்ப் பரிவா னருளார் பசுபதிதாள்
சொன்னாற் றருமைக் குருமணி சிந்தையிற் றுன்னியதால்
மன்னும் உரைமலர் சார்த்தினன் யானவன் மாணடிக்கே.



மகிமைதங்கிய
மகேந்திரவீரவிக்ரமசஹா
நேபால அரசர்

வெளியீடு எண் 416

உ

குருபாதம்

பசுபதிநாத்

(நேபால யாத்திரை)

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்


ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளப்பாங்கின் வண்ணம் வெளிவருவது.

தருமபுர ஆதீனம்

1958

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.



தருமபுர ஆதீனம் 25 ஆவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

முன்னுரை

ஆண்டவன் எங்கும் நிறைந்த பொருள் என்று சொன்னாலும், நமது சிந்தையில் நிறுத்தி வழிபட அவனுக்கு உருவங்களும், ஆலயங்களும் அமைத்து வழிபடும் முறைகளையும் நம் பெரியோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். பிரதிஷ்டையாலும், பாடல்பெற்றதாலும் பெருமைமிக்க தலங்கள் பல நம் நாட்டில் இருக்கின்றன. அதேபோல தீர்த்த மகிமை உள்ள பல நதிதீரங்களும், சமுத்திர தீரங்களும், மலையுச்சிச் சிகரங்களும் அமைந்திருக்கின்றன. இவையே உய்வளிக்கும் உயர்சேமமாக நம் முன்னோர் நமக்கும் உலகுக்கும் விட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

மூர்த்தி, தலம், தீர்த்த யாத்திரை செல்வதால் ஆன்ம லாபம் ஏற்படுவதோடு, உடல்நலப் பெருக்கத்துக்கும் அது உதவுவதாகிறது என்று அறிவில் மேலோர் சொல்லுகிறார்கள்.

இவ் ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அடிக்கடி அடியிற் கண்ட அருளுபதேசம் வழங்கி வருவதும் அன்பர்கள் பலரும் அறிந்த வொன்றே.

"வியாபார நோக்கம் உடையவர்கள் சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுதெல்லாம் ஓடி ஓடிப் பல நாடுகளுக்கும் சென்று தம்முடைய லாபப் பெருக்கத்தில் நாட்ட முடையவர்களாக இருப்பதுபோல், அலையும் மனமுடைய நாம் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் அதை நழுவ விடாது சிவ சிந்தனையைப் பெருக்கிக்கொள்ளுதல் வேண்டும். அதுவே உய்யும் வழி. அந்தப் பொருளாதார முன்னேற்றம் ஒருக்கால் தடைப்படவும் கூடும். லாப மில்லாமல் அந்த வியாபாரத்தில் பெருநஷ்டம் ஏற்பட்டுப் பல துன்பங்களும் ஏற்படவும் கூடும். முன்தேடி வைத்திருக்கும் சேமநிதியும்கூட அதில் சேர்ந்துபோய் விடவும் கூடும். அதனால் உயிர்விடும் அளவுக்குக்கூட மனமுடைந்து போவதுமுண்டு. அதுபோது நாம் சேமிக்கும் இந்த ஆன்ம லாபம் உழைக்க உழைக்கக் கூடுவதல்லாமல் எந்தக் காரணத்தைக் கொண்டும் என்றும் குறையாததாய், இந்தப் பிறவியில் நம்முடைய குறிக்கோள் கிட்டாவிட்டாலும் அடுத்த பிறவியின் சேமவைப்பாய் நின்று உதவும். ஆகவே வாருங்கள்! அதனைத்தேடிச்சேமிப்போம்; ஆண்டவன் கருணைப்பெரு வெள்ளம் எங்கும் பெருக்கெடுத்து ஓடுகிறது. உண்ட மட்டும் பலன் உண்டு. காலத்தை வீணாக்காதீர்கள்".

மாட்டைத் தேடி மகிழ்ந்துநீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடும் நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே,

பிறருக்கு உபதேசமாவது மட்டுமல்ல. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திலேயே நடந்துகாட்டி, பிறரை

வலிய அழைத்து உடன் கூட்டிச்சென்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அடையும் பெரும்பேற்றை மற்றையோரும் அடைய உதவுகிறார்கள். இதுவே காருண்யம் என்பது. பிரதிபலன் கருதாத சேவை என்றுகூடச் சொல்லலாம்.

அறிவாலும், அனுபவத்தாலும், பொருளாலும் ஏழையாகவும் தனித்தனியேயும் ஏழைகளாகவும் உள்ள பலர் அந்தப் பலனடைந்து உய்வகை காண்கிறார்கள்.

அந்தப் பெருங்கருணைச் செயலில் இந்தப் பெரிய யாத்திரையும் ஒன்று. அதன் அனுபவ பலன், அங்கங்குமுள்ள தல தீர்த்த மகிமைகள், பிரயாண அனுபவங்கள், அங்கங்கே ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருவுளத்தில் தோன்றும் சிந்தனைகள், முதலியன இதில் உள்ளன.

இவ்விதமாக ஒவ்வொரு யாத்திரை அனுபவமும் அச்சிட்டுப் புத்தக வடிவிலும் ஞானசம்பந்தம் வாயிலாகவும் வழங்கி உடன் வர முடியாதவர்களும் பயன் பெற உதவி வருகிறார்கள் என்பதும் உலகம் அறிந்த ஒன்று.

இது போன்ற கருணைச் செயலுக்கு நன்றியாக நம்முடைய வணக்கங்களைச் செலுத்திக் கொள்வதொன்றே நம்மால் செய்யக்கூடியது. அத்தோடு நம் வாழ்வில் அவ்வருளுபதேசங்களைப் பின்பற்றி உய்வோம்,

இந்த நூலை எழுதிய ஆதீனத் திருக்கோவில்களின் கண்காணிப்பாளர் திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர் அவர்களுக்கும், உடனிருந்து ஆராய்வதில் துணை புரிந்து உதவிய, ஆதீனக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், செஞ்சோற்கோண்டடல், வித்துவான், திரு. சோ. சிங்காரவேலனுர்க்கும் சேந்தமிழ்ச் சோக்கர் திருவருளும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் குரு வருளும் பேருகுவனவாக.

இந்நூலைப் பார்வையிட்டுப் பாராட்டுரை வழங்கி யுள்ள "கலைமகள்" ஆசிரியர், சேந்தமிழ்ச் சேல்வர், திரு. கி. வா. ஜகந்நாதன், எம். ஏ., அவர்களுக்கும், மதிப்புரை அளித்துள்ள சேன்னை சட்டசபை உறுப்பினர் திரு. கே. விநாயகம், M.A., L.T., B.L., F.R.E.S. (Lond) அவர்களுக்கும் சேந்தமிழ்ச் சோக்கர் திருவருள் பேருகுக.

" அன்றுமுதல் இன்றளவும் மேலும் அடியேனுக்(கு)
என்றுநீ நன்மைசெய்வ தன்றிநான் — ஒன்றேனுஞ்
செய்யுமா(று) எங்ஙன் சிவனே இனிநாயேன்
உய்யுமாறு எங்ஙன் உரை "

—சோக்கநாத வேண்பா

வாழ்க உலகேலாம்!

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்து
அருளாணையின் வண்ணம்

தருமபுரம்,
27—5—58.

வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்
ஆதீன சமயப் பிரசார நிலயம், சேன்னை.

சேந்தமிழ்ச் செல்வர், வாகீச கலாநிதி, வித்துவான்,

திரு. கி. வா. ஜகந்நாதன் M. A., அவர்கள்

(ஆசிரியர், கலைமகள், சென்னை.)

அளித்த

பாராட்டுரை

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்று தாயுமானவர் சொன்னார். ஆனால் ஸ்ரீ கல்யாண சுந்தர தேசிகருக்கும், அவருடைய நண்பர்களுக்கும் சற்குரு வாய்த்தபிறகு, அப்பெருமான் திருவருளாலே மூர்த்தி, தலம், தீர்த்த சேவை கிடைத்தது. தருமை ஆதீனத்தில் பரமாசாரியர்களாக எழுந்தருளியிருக்கும் ஞானதேசிகரவர்கள் அடிக்கடி தலயாத்திரை புரியும் விருப்புடையவர்கள். தமிழ் நாட்டில் உள்ள தலங்களை வழிபடுவதோடு, வடநாட்டில் நெடுந்தொலைவில் போதற்கரிய இடங்களில் உள்ள தலங்களையும் சென்று தரிசித்துவரும் சங்கற்ப பலம் உடையவர்கள். அவர்கள் திருக்கேதாரத்துக்குச் சென்று வந்த செய்தியை முன்பு தருமை ஆதீனத்திலிருந்து வெளியான, "திருக்கேதார யாத்திரை" என்ற நூல் விளக்கும்.

இப்போது அவர்கள் நேபால யாத்திரை போய் வந்தார்கள். அந்த யாத்திரையில் நிகழ்ந்த நிகழ்ச்சி களையும், அங்கங்கே உள்ள சிறப்புக்களையும், தல வரலாறுகளையும் ஸ்ரீ கல்யாணசுந்தர தேசிகரவர்கள் விரிவாக எழுதி இந்த நூலை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆங்கிலத்தில் யாத்திரை நூல் (Travelogue) என்றே ஒருவகையாக இவ்வகை நூல்களைப் பிரித்திருக் கிறார்கள். ஓரிடத்துக்கு யாத்திரை செல்பவர் அவ் விடத்தைப் பற்றிய செய்திகளை மாத்திரம் சொல்வது யாத்திரை நூலாகாது. பூகோளம், சரித்திரம் என்ற துறைகளில் அமைந்த நூல்களில் இடத்தைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளலாம். யாத்திரை செய் பவர் அங்கங்கே பலவகையான அனுபவங்களைப் பெறுகிறார். இடம் பொருள் ஏவலுக்கு ஏற்ற வகையில் சில சுவையான நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. சிலவகை யான மக்களைச் சந்திக்கிறார். மனத்தை உருக்கும் பண்புடையாளரைக் காண்கிறார். நகைச்சுவை ஊட்டும் நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார். அவற்றையும் தம்முடைய உள்ளத்தே எழும் உணர்ச்சிகளையும், சுவைபட எழுதுவதே யாத்திரை நூலாகும். அதில், போன இடத்திலுள்ள சிறப்புக்களை நாம் காண்பதோடு, யாத்திரை செய்தவருடைய உள்ளத்தோடு உள்ளம் வைத்து ஒட்டி உணரும் இன்பமும் நமக்கு உண்டாகிறது.

இந்தப் புத்தகத்தில் தேசிகரவர்கள் யாத்திரை உருவானதற்குரிய காரணங்களைச் சொல்கிறார். போகும்

வழியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைச் சொல்கிறார். அவ்வவ் விடத்தின் வரலாற்றையும், கர்ண பரம்பரைச் செய்தி களையும் சுவைபடச் சொல்கிறார்.

சென்னையிலே திருவொற்றியூருக்குப் போனபோது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம், வழிபடுவோர் வீண் பேச்சுப் பேசுவதைப்பற்றி அருளியதை எடுத்துச் சொல்வதை யாவரும் படித்து உளங்கொள்ள வேண்டும். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தோடு அளவளாவும் அறி வாளிகளை இதில் காணுகிறோம். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் பொருள் நிரம்பிய நல்லுரைகளையும் அறிவாளிகள் கூறும் கருத்துக்களையும் பார்க்கிறோம். காசியில் பிரணவத்தைப் பற்றிச் சந்நிதானமும் வேறு இருவரும் உரையாடுவது அறிவுக்கு விருந்து. இடை யிடையே தேசிகரே பல நுட்பமான உண்மைகளைச் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமாகக் கூறியிருக்கிறார். இறைவனுடைய பஞ்சமுகத்தைப் பற்றிய விளக்கம் போன்ற பல உண்மைகளை இந்த நூலில் பார்க்கிறோம்.

விமானத்தில் போனபோது ஆந்திரர் ஒருவர் நடந்துகொண்ட மாதிரியைக் கண்டு நமக்கும் கோபம் வருகிறது. ஹௌரா ஸ்டேஷனில் கண்ட வங்காளி தமிழ் நாட்டினரைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ளாமல் சிலவற்றைச் சொன்னபோது, தேசிகர் அவர்கள் உண்மையை விளக்கி விடையிறுத்த செய்தி யைப் படிக்கும்போது தேசிகருக்கு, ஒரு "தாங்க்ஸ்" சொல்ல வேண்டும்போல் இருக்கிறது. 'வஜ்ர சூரணம்'

என்ற ஹிந்திச் சொல்லால் வந்த குழப்பம் ஓர் அற்புத மான நகைச்சுவைச் சிறுகதையாகவே இருக்கிறது. நேபாலத்துத் தலைமைப் பூசாரியாகிய ஸ்ரீ ராவல் சுப்பிர மணியபட் தம்முடைய தனயன் இப்போதோ, அடுத்த கணமோ என்று இருக்கும்போது, ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் சௌகரியங்களைக் கவனித்துக்கொண்ட வரலாறு மனத்தை உருக்குவது. அவருடைய ஒரே திருமகன் யமன் வாயிலிருந்து மீண்டான் என்று படிக்கும்போது நாம் ஆறுதல்பெற்று, ''அவன் நீடுழி வாழட்டும்'' என்று வாழ்த்துகிறோம்.

காசி, பசுபதிநாதர் கோயில், காளிகட்டம் முதலிய தலங்களைப்பற்றிய வரலாறுகளை இந்த நூலில் காணு கிறோம். அங்கங்கே உள்ள மக்களின் பழக்க வழக்கங் களை அறிகிறோம். பல லட்சக் கணக்கு விலையுள்ள ஏகமுக ருத்திராட்சம் நேபாலத்தில் பசுபதிநாதரிடமும் அரசரிடமும் இருக்கிறதென்பது வியப்பை ஊட்டும் செய்தி. அங்கே வைஷ்ணவர்கள் ஊனுண்ணுதவர்கள், சைவர்கள் ஊனுண்பவர்கள் என்பதும், ஸ்ரீ ராமநவமி யன்று திரள்திரளாக மக்கள் சிவாலயம் சென்று வழி படுவார்கள் என்பதும் நமக்குப் புதுமை யுணர்ச்சி யூட்டும் செய்திகள்.

காளிகட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை யன்று ஆயிரக் கணக்கான மக்கள் காளி கோயிலுக்குச்சென்று வழிபடுவதும், ஆண்களும் பெண்களும் பக்தி பரவசத் தால் கை கோத்து நடனமாடுவதும், காசியில் சாதுக் களுக்கு மிகஉயர்ந்த முறையில் விருந்து இட்டு உபசரிப்

பதும் போன்ற பல அரிய காட்சிகளை இந்த நூலிலே பார்த்து மகிழ்கிறோம்.

வேதம், சாஸ்திரம், தேவாரம் முதலிய நூல்களி லுள்ள பகுதிகளைத் தேசிகர் இடையிடையே காட்டி யிருக்கிறார். தத்துவப் பொருளை இக்காலக் கண் கொண்டு விளக்கியிருக்கிறார்.

நூலைப் படிக்கும்போது நாமும் ஒருமுறை சென்னை சென்று, காசிக்குப்போய்க் கங்கை நீராடிக் குமாரசாமி மடத்தில் உணவு உண்டு, காளி கட்டத்தில் நாவை நீட்டிக்கொண்டு நிற்கும் காளி தேவியைக் கும்பிட்டு விட்டு, விமானம் ஏறிக் காஷ்டமண்டபமாகிய காட் மண்டுக்குப் போய், நேவா என்னும் முனிவர் பாலனம் செய்த நேவா பாலமாகிய நேபாலத்துக்குப்போய்ப் பசுபதி நாதரைத் தரிசித்து வருகிறோம். புத்தகம் முடிந்தவுடன் பழையபடி நம்முடைய இடத்தில்தான் இருக்கிறோம் என்ற நினைவு வருகிறது.

பிறகு, எப்போதாவது நமக்கும் இப்படி யாத்திரை செய்யச் சந்தர்ப்பம் கிடைக்குமா என்ற ஆசை நம் உள்ளத்தில் இடம் கொள்கிறது. அந்த ஆசையைத் தூண்டுவதுதான் இந்தப் புத்தகத்தின் பயன்; இந்த எழுத்துக்கு வெற்றி.

சென்னை சட்டசபை உறுப்பினரும், நகரசபை
உறுப்பினருமான
உயர்திரு. K. விநாயகம் M.A., L.T., B.L., F.R.E.S.
(Lond) அவர்கள் வழங்கிய

மதிப்புரை

திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர் அவர்கள் எழுதிய 'பசுபதி நாத்' (நேபால யாத்திரை) என்னும் நூலைப் படிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. உண்மையில், அதை ஒரு வாய்ப்பு என்று குறிப்பிடுவது தவறு. ஒரு பாக்கியம் - அதுவும் சரியல்ல - கிடைத்தற்கரிய பேறு எனக் கூறலாம். ஏனெனில், மற்ற யாத்திரை வரலாறுகளை மட்டும் கூறுவதல்ல. இந்நூலில், நம் நாடே உய்யும்படி, பல பேருண்மைகளை வெளியிட்டிருக்கிறார் நூலாசிரியர்.

மற்ற நாட்டு மக்கள், நாகரிகம் இன்றி, காட்டுமிராண்டிகளாக வாழ்ந்திருந்த காலத்தில், நம் பாரதம், நாகரிகத்தின் விளைநிலமாக விளங்கியது. அன்று மட்டுமல்ல இன்றும் மற்ற நாட்டு மக்கள் இந்தியாவுக்கு உலக அரங்கிலே, ஒரு முக்கியமான மதிப்பு வாய்ந்த ஸ்தானத்தை அளித்துள்ளார்கள். இதற்குக் காரணம், நம் சமய வளர்ச்சியே யாகும். நம் இந்தியா பக்தித்

துறையில் அடைந்திருக்கும் வளர்ச்சி சொல்லத் தரமன்று. பல சமயப் பெரியார்களின் அருந்தொண்டே இதற்கு அடிப்படையாகவுள்ளது. இன்றும், தருமபுரம் ஆதீனம் செய்துவரும் திருத்தொண்டும், இறைவன் திருவருளை மக்களனைவரும் பெற வழிகாட்டும் தெய்வத் திருப்பணியேயாகும்.

இவ்வித மேன்மைகளனைத்தும் பொருந்திய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விஜயம் செய்த நேபாலத்தில் உள்ள சைவப் பெருங் கோயில்களைப்பற்றி அனைவரும் தெரிந்துகொள்ளும் பொருட்டு, இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இவ்விதமாக ஒவ்வொரு யாத்திரை அனுபவமும் அச்சிட்டுப் புத்தக வடிவிலும், சொற் பொழிவுகள் மூலமாகவும் வழங்கிப் பிரயாணம் செய்ய இயலாதவர்களும், பயன்பெறச் செய்வதைத் தன்னலங் கருதாத பொதுநலச் சேவை எனவே கூறவேண்டும். யாத்திரை அனுபவங்கள், அங்கங்கே உள்ள தல தீர்த்த மகிமைகள், புராண வரலாறுகள், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் சிந்தனையில் தோன்றிய பொன் மொழிகள்யாவும் அடங்கியிருக்கின்றன.

நேபால பசுபதிநாதரின் திருவருளை அனைவரும் பெற, நம்மை நேபாலத்திற்கே அழைத்துச் செல்லுகிறார் ஆசிரியர். அவர் தம் அனுபவங்களையும், விஷயங் களையும் சொல்லிக் கொண்டு போகும் பாணியே தெளி வாகவும், படிக்கப் படிக்கத் தெவிட்டாததாகவும் இருக் கிறது. எப்பாலவரும், எப்பிராயத்தவரும், எக்காலத்தும்

படித்து இன்புறும் வண்ணம் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. மக்களில் சிலருக்குக் கடவுள் நம்பிக்கையற்று, நாத்திகம் பரவும் இந்நாளில். இம்மாதிரியான நூல்கள் அவசியம் நம் நாட்டிற்குத் தேவைப்படுகின்றன. இந்நூலை அனைவரும் படித்து நேபாலப் பசுபதிநாதரின் திருவருளைப் பெறுவாராக.

உ

குருபாதம்

பொருளடக்கம்

			பக்கம்
1.	முன்னுரை	...	v
2.	பாராட்டுரை	...	ix
3.	மதிப்புரை	...	xiv
4.	ஸ்ரீ காசி யாத்திரை	...	20
5.	நேபால யாத்திரை (பிரயாண அனுமதிச் சீட்டு)		58
6.	பசுபதிநாதர் புராண வரலாறு	...	98
7.	பஞ்சமுகப் பிரம்மம்	...	105
8.	வைத்தியநாத் தாம்	...	148
9.	பாட்ணு	...	162
10.	ஏனைய ஜோதிர்லிங்க ஸ்தலங்கள்	...	167
11.	பசுபதித் திருவிருத்தம்	...	174
12.	பிற்சேர்க்கை - நேபால சரித்திரம்	...	177

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்துடன் நேபாலயாத்திரையில் கலந்துகொண்டவர்கள்

சிவதர்ம பாஸ்கர

1. சிவஸ்ரீ. ம. க. சுந்தரேச பட்டர் அவர்கள்,
   மதுரை ஸ்ரீ மீனுட்சிசுந்தரேஸ்வரர் ஆலய
   பிரதம ஸ்தானிக பூசகர்.

2. V. கல்யாணசுந்தரம் பிள்ளை,
   ஸ்ரீ குமாரசுவாமி மடம் மானேஜர்.

3. T. துரைசாமிப் பிள்ளை,
   ஆதீனம் உதவி அட்டவணை.

4. நடராஜன்,
   ஆதீனம் பணிவிடை.

5. அ. கல்யாணசுந்தர தேசிகர்.
   ஆதீனத் திருக்கோவில்களின் கண்காணிப்பாளர்.

உ
குருபாதம்


பட அட்டவணை

பக்கம்

1. தருமபுர ஆதீனம் 24-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் -முகப்புப் படம்
2. தருமபுர ஆதீனம் 25-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் v
3. ஸ்ரீகாசி - விஸ்வேஸ்வரர் அர்த்தயாம வழிபாடு xx
4. ஸ்ரீ விஸ்வேஸ்வரர் 1
5. 64 கட்ட தரிசனம் 16
6. பாட்னு - கண்காட்சிச் சாலை 17
7. சாது சமாராதனை 32
8. ஸ்ரீ குமாரசுவாமி மடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தைக் கொலுவிருத்தி வழிபடல் 33
9. ஸ்ரீ விஸ்வேஸ்வரர் பாலபிஷேகம் 40
10. பாற்கடலில் பாற்கடலிங்கபிரான் 41
11. பிரயாகையில் திருமஞ்சனம் 48
12. பிரயாகையில் அனுஷ்டானம் 49
13. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும் உடன்சென்றோரும் 56
14. ஸ்ரீ கேதாரேஸ்வரர் பாலபிஷேகம் 57
15. பாக்மதியில் திருமஞ்சனம் 80
16. ஸ்ரீ பசுபதிநாதர் வழிபாட்டிற்கு எழுந்தருளல் 81


பக்கம்

17. நந்தியும் ஸ்ரீ பசுபதிநாதர் மேற்குத் திருவாயிலும் 88
18. ஸ்ரீ பசுபதிநாதர் (உருவ அமைப்பு) 89
19. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஸ்ரீ பசுபதிநாதர் தரிசனம் முடித்துத் திரும்புதல் 96
20. தேவபட்டணம் 97
21. வைத்தியநாதத்தில் காளி எழுந்திருத்து 128
22. ,, ஸ்ரீ கிருஷ்ணர் கோவில் 129
23. ,, தீர்த்தக் கிணறு 144
24. ,, வழிபாடு முடிந்து திரும்பும் காட்சி 145
25. ,, வைத்தியநாதர் விமானம் 152
26. ,, அரசாங்கக் கோடி 153
27. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும் அமேரிக்கத் தொழிலதிபரும் 160
28. பாட்னுவில் தான்யக் களஞ்சியம் 161
29. ஜாவாவில் நரசிம்ஹமூர்த்தி 176
30. 15 கோடி வருஷமான (கல்லான) மரம் 177
31. கட்மண்ட் விமானக்கூடம் 192
32. ,, விமான நிலயத்தில் 193
33. ,, ராஜு அரண்மனை 208
34. ,, அரசன் ,, 209
35. தேவபட்டணத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அட்டை முன்புறப் படம்
36. ஸ்ரீ பசுபதிநாதர் ஆலய முகப்பு கீழ்த் திருவாயில் அட்டைப் பின்புறப் படம்.



ஸ்ரீ விஸ்வேஸ்வரர் அர்த்தசாம வழிபாடு

ஸ்ரீ காசியில்



ஸ்ரீ விஸ்வேசரர் அலங்காரக் காட்சி

௨

குருபாதம்

பசுபதிநாத்

அண்டமும் பிண்டமும்

அண்டத்துக்குள்ளது அத்தனையும் பிண்டத்துக்கும் உண்டு. அண்டம், பஞ்சபூதச் சேர்க்கையாலானது. பஞ்ச பூத இயக்கத்தால் இயங்குவது. அவை அப்படி இயங்க இயக்கும் கர்த்தா ஒருவன் உண்டு. அந்த இயக்கம் ஒரு நியதியின் வழியே நடப்பது. நியதி தவறின் அதனுல் விபரீத விளைவுகள் உண்டாவதை நாம் பார்க்கிறோம்; அநுபவிக்கிறோம்.

முதல்வன்

விபரீதங்கள் நிகழாவண்ணம் அந்த அந்தப் பூதப் பொருளுக்கும் அமைப்புக்கள் பல உண்டு. அதற்கு அளவும் உண்டு. பாதுகாப்பும் உண்டு. இதனை இப்படி நிறுத்திக் காக்க ஒரு முதல்வனும் உண்டு. அவன் யார்? எங்குள்ளான்? எப்படி யிருப்பான்? இது ஒரு தனித் தேட்டை. இது ஆறறிவு பெற்றுவிட்டதால் மாத்திரம் கிடைக்கக்கூடியதன்று. அதற்கு முயற்சி வேண்டும்.

வழிதெரிய வேண்டும். தெரிவிக்க ஒரு வழிகாட்டி வேண்டும். அவனும் தெளிந்தவனாக இருக்கவேண்டும். அவன் கண்டு காட்டுபவனாக இருக்கவேண்டும். இப்படியே இலக்கணம் வகுக்கலாம்.

உயிரணு

அண்டத்தைப் படைத்த ஆண்டவன் அதிலிருந்து வாழப் பிண்டத்தையும் படைத்தான். அந்தப் பிண்டம் வாழ உயிரையும் கொடுத்தான். பிண்டமோ அண்டத்தைப் போலப் பஞ்ச பூதச் சேர்க்கையாலானது. குறிப்பிட்ட நியதியால் இயங்குவது. தசை, நார், எலும்பு, இரத்தம் இப்படியாகப் பல பொருள்களால் ஆக்கப்பெற்றது. அவை கெடாதவண்ணம் காத்துத் தொழிற்படஉயிரணுக்கள்வேலை செய்துவருகின்றன. உடலுறுப்புக்கள் சிறியனவாயினும் பெரியனவாயினும் அவையவையியங்கவேண்டியமுறையில் இயங்கிச் செய்யவேண்டிய தொழிலைச் செய்ய உயிர் அணுக்கள் உதவிபுரிகின்றன.நோயணுக்களாகியநச்சணுக் கள் உடற்பகுதியில் எங்கும் புகாவண்ணம் உடல் முழுதும் பரவிநின்று ஓடியோடிக் காத்து வருகின்றன. அப்படி ஏதேனும் மீறிப் புகுந்தாலும் அவைகளை எதிர்த்து விரட்டிப் பழையநிலையில் உடல் இயங்க—நினைத்த இன்பத்தை நாடிப் பெற்று வளர உதவுகின்றன. அப்படியும் முடியாத நிலையில் நோயணுக்கள் மிகுந்து வலுத்துவிட்டாலும் உயிரணுவும் அதனால் ஏற்படும் துன்பத்தை அநுபவித்துக் கடைசிவரை எதிர்ப்புக்காட்டி மருத்துவ உதவியினால் முடிந்தமட்டும் வலிமைபெற்றுப் போராடி நோயகற்றி முன்னையினும் அதிக வளமும் வனப்பும் இன்பமும் பெறச் செய்கின்றன.

3

உடற் படைப்பில் உபதேசம்

இவ்விதமாக ஆண்டவன் உடற்படைப்பில் பெரிய உபதேசத் தத்துவத்தை வைத்திருக்கிருன். உடற்கூறு தெரிந்த நிபுணர்கள் இவற்றின் அமைப்பை வைத்து வலிமைபொருந்திய இயந்திரங்கள் பல செய்து அற்புதம் காட்டி வருகிருர்கள். இந்த அறிவு வளர்ச்சியை உலகியல் அறிவு வளர்ச்சியாக மேலோர் சொல்லுவார்கள். அதிலே ஓரளவு இன்பம் நிறை அற்புதம் இருந்தாலும் அற்பமாக அழிந்துபோகக் கூடியவைதான். அதையும் நாம் பார்க்கிருேம். மனித முயற்சி எல்லாம் இன்பநாட்டம் கருதியே.

குறிக்கோள்

இன்பம்—வற்ருத, தேவிட்டாத, நிலைத்த இன்பமாக இருக்கவேண்டும். அதனைக் காணவேண்டும். அது கைகூடவேண்டும் என்பதுதான் குறிக்கோள். குறிக்கோள் இலக்குத் தவறிப்போவதும் உண்டு. ஆராய்ச்சிக்காரர்கள் இந்த உண்மையை அறிவர். ஒரு குறிப்பிட்ட பொருளைப் பகுத்து ஆராய்ந்துபார்க்கப் புகும்பொழுது அவ்வாராய்ச்சி யில் இடைப்பட்ட பலன்களாகப் பல அவனுக்குக் கிடைக்கக்கூடும். அந்த இடைப்பட்ட பலன் ஏதாவ தொன்றில் அவன் நாட்டம் நிலைத்துவிட்டால் தொடங்கிய ஆராய்ச்சி முற்றுப்பெருமல் குறிக்கோள் கெட்டவனுகிருன்.

ஆசான்

அப்படி ஆராய்ச்சி செய்வதற்குமுன், அந்தவழியில் அவனைப் புகுத்திவிட ஆசான் ஒருவன் வேண்டியிருக் கிறது. அந்த ஆசானும் குறிப்பிட்ட குறிக்கோளின்

எல்லேயைக் கண்டிருந்தாலோழிய தன் மாணுக்கனது முயற்சிக்கு உதவிசெய்யவல்லவனுகான். ஆகவே நல்ல ஆசான் ஒருவன் வேண்டும். அவன் சோன்னதைக் கேட்டுப் புரிந்து அவன் வழியிலே உறுதியாக நிற்கும் ஆராய்ச்சி மாணவனே குறிக்கோளே அடையமுடியும். அப்படி அடைவதில்தான் இடைப்பட்ட பலன் பலவும் அததுவும் தான்தான் பேரியதேன்று-புதியதேன்று நற்பயன் என்று காட்டி மயக்கும்.

அந்த வழியில் இறங்காது அவற்றின் உதவிகோண்டு உறுதியாக உழைத்தால் குறிக்கோள் கிட்டும். முயற்சியின் முழுப் பயன் அடைந்தவன் ஆகிருன். இது உலகியல் ஆராய்ச்சி. உலகியல் இன்பம்.

அப்படி வருந்திக் கண்ட பயன் - இன்பம் நிலேத்ததா ? முடிவானதா ? அதற்குமேல் அதைவிடச் சிறந்தது வேறு ஒன்றும் இல்லேயா ? என்பது நுனித்தறியவேண்டியது. இவன் கண்ட முடிவைவிடச் சிறந்ததாக வேறு ஒருவன் வேரேருவழியில் கண்டுவிடமுடியும். இப்படியே ஒவ் வோருவர் காண்பதும் மற்ரேருவர் காண்பதற்குச் சிறிய தாக - சிறப்பில் குறைவானதாக ஆகிக்கோண்டேவரு கிறது. முடிவில் முதன்முதலிற் கண்டவன் மூடனுகிருன். அவனுடைய அறிவுரை சில சமயங்களில் பயனில்லாத தாகவும்முடிந்துவிடும். இவ்விதமாகப் பேரிய ஆராய்ச்சியில் தோடங்கிய ஒன்று பயனின்றிப்போதலும் உண்டு. ஆனுல் பயன் உள்ளதாக, நிலேத்ததாக தேவிட்டாததாக, அதனே விட மேலாக வேரேன்றனேயும் காணமுடியாததாக இன்பம் உண்டு அல்லவா ? அதனே அடைய முடியுமா ? இப்படி அவாவுகிறது மனித மனம். கவலேப்படுகிறது. அதற்கும் ஆசான்வேண்டும் என்று முன்னே சோல்லப்பட்டிருக்கிறது.

முயன்ருல் முழுப் பலன் கிட்டும். நம்முடைய முயற்சி - இடைவிடாத சோர்வடையாத முயற்சியாக இன்பம் கண்ட போழுதும் அதனைக் காத்து நிலைத்து வைத்துக் கோள்ளவேண்டிய அளவு உறுதியானதாக இருத்தல் வேண்டும். இதனையே ஆண்டவன் உடற்கூற்றமைப்பில் உயிரணுக்களை வைத்துக்காட்டியிருக்கிருன். தன் முயற்சி ஆன்மாவுக்கு உண்டு என்று ஞானியர் நமக்குச் சோல்லியிருக்கிருர்கள். தேரிந்து முயலக் குரு உபதேசம் வழி. காட்டியாக அமைகிறது.

அத்துவிதம்

அவன் காட்டிய வழியிலே உழைத்துவரும்போழுது இடைப் பலன்கள் இன்பம் போல அதிலும் நிலைத்திருப் பவைபோலப் பல வந்து வந்து குறுக்கிடும். ஆனுல் அவ்வப்போழுதும் அததுவும் சிறு இன்பங்களாக, நிலைத் தவைகளல்லாதனவாக உற்று நோக்கில் தேரியவரும். ஆனுல் ஆராய்ச்சியில் இடைப் பலன் கண்டு அதனையே தன் குறிக்கோளடைவாக நினைத்து ஏமாந்து போவார் போல் இந்த வழியிலும் பலரும் ஏமாறுவதும் உண்டு.* உறுதியோடு உழைத்தவர்கள் நிலைத்த பேரின்பத்தைக் கண்டு அதிலே இரண்டறக்கலந்து என்றும் உறவாடிநிற்பர். இதனையே 'அதுவதுவாதல்' 'நானும் நீயுமாய் ஏகபோக மாய்' என்றேல்லாம் நம் குருமுதல்வர்கள் பலர் சோல்லுகிருர்கள். அதுவே அத்துவிதச் சேர்க்கையாகும்.

---

* பரபரக்க வேண்டாம் பலகாலும் சோன்னேன்
வரவரக் கண்டாராய்மனமே — ஒருவர்க்கும்
தீங்கு நினையாதே சேய்நன்றி குன்ருதே
ஏங்கி இளையா திரு. —குருஞானசம்பந்தர்.

குரு உபதேசம்

இதுவரை சொல்லியதில் இன்பம் அதுவும் நிலைத்த இன்பம் ஒன்றுண்டு ; அது மனித வாழ்வின் குறிக்கோள்; மனிதன் அடையக்கூடியது; மனிதனால் அடையமுடியும்; முயற்சி வேண்டும். முயற்சி செய்யும் ஆற்றல் உயிருக்கு உண்டு, என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. உடலிலே உயிரணுக்கள் கலந்து நின்று வேலைசெய்வதுபோல ஆண்டவன் உயிரிலே கலந்து நின்று உயிர்க்குயிராய் எங்காவது தவறாதபடிக் காத்துவருகிறான். நோயணுக் கண்டவுடன் மருத்துவம் செய்துகொள்ளுதல்போல ஆசாரியன் நமக்கு வாய்க்கிறான். அவன் உபதேசம் நன் மருந்தாகின்றது. நோயணுவை - உயிர் நோயை அகற்ற அது பெரிதும் உதவுகிறது. இன்பம் கண்டபொழுதும் நிலைத்துக் காத்துக்கொள்ள குரு உபதேசமும் உதவுகிறது. ஆண்டவனுடைய அருள் நம்மை எந்த நிலையிலும் எப் பொழுதும் இருந்து காத்துவருகின்றது. அவனுடைய திருவடிப்பேறுதான் முன்னேசொன்ன தேவிட்டாத பேரின் பம். அதனைக் கண்டு பற்றிக்கொள்ளுதல்தான் நம்முடைய குறிக்கோள்.

நற்சேர்க்கை

குறிக்கோள் சித்திபெற எல்லா வழியிலும் முயற்சி வேண்டும். சிந்தனையிலும் பாவனையிலும் சேர்க்கையிலும் மூவகையிலும் சிறப்பு வேண்டும். சிந்தனையும் பாவனையும் நிலைத்தாலும், அவை நழுவாதபடி நற்சேர்க்கையும் வேண்டும். நற்சேர்க்கை ஒரே இடத்திலிருந்து கிடைக்கக் கூடியது ஆகாது. பல இடங்களுக்கும் சென்று நல்லோ ரைக் கண்டு அவரிணக்கம் கொண்டு வெற்றிகாண

வேண்டும். அது மூர்த்தி தீர்த்தம், ஆலயம் இவைகளிற் சிறந்தஇடங்களில் நமக்கு வாய்க்கும். அந்த வாய்ப்பு எங்கேஎப்போழுது என்று சோல்லமுடியாது. அதற்காக அவ்வப்போழுதும் யாத்திரை சென்றுவருதல் நலம்.

"மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனேனத் தோழுமே".

யாத்திரை

இந்த அடிப்படையில் நம்முடைய பேரியோர்கள் இந்தியப் புண்ணியபூமி முழுவதிலும் ஆங்காங்கும் பலப் பல தீர்த்தங்களையும் பேரிய தலங்களையும் கண்டு நமக்கு சேமவைப்பாக விட்டுச்சேன்றிருக்கிறார்கள்.

வடநாட்டிலுள்ளவர்கள் தேன்னாட்டிலே பேரிய க்ஷேத்திரங்களைக் காணவருகிறார்கள். சேதுவிலே ஸ்நானம் செய்கிறார்கள். பேரிய பலனளிப்பதாகக் கோள்ளுகிறார்கள். தேன்னாட்டிலுள்ளவர்கள் வடநாட்டில் காசியையும், கங்கையையும் அதேபோல் இமயத்தில் கயிலையையும் ,கேதாரத்தையும், பதரியையும், நேபாளத்தில் பசுபதிநாதரையும் நம்நாட்டில் பல இடங்களில் ஜோதிர் லிங்கங்களையும் தீர்த்தமாடவும் தரிசிக்கவும் சேன்று பயன்பேருக்கி வருகிறார்கள்.

இந்து சமயம்

இந்தியப் பண்பாடு சமயப் பண்பாட்டிலே ஊறி நிற்பது. அதிலே நாடு, மோழி எந்த வேற்றுமையும் காண முடியாது. வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டு உறவாடச் செய்வது. நாட்டின் போதுச்சமயங்களிற் சிறந்தவை

சைவமும் வைணவமும். இதுவே இந்து சமயம். இந்திய நாட்டினருடைய சமயம் என்று பொதுவாகப் பேசப் படுகிறது. சைவ வைணவம் மதத்தாலும் கொள்கை யாலும், வேறுபட்டிருந்தாலும் குறிக்கோள் ஒன்றேயாக இருப்பவை. அந்தந்த சமய வழியிலும் தனித்தனியே ஆலயங்கள் பல அமைத்து வழிபட்டாலும் முடிவில் இரண்டும் அற்றநிலையில் ஒரேபொருளைக் காண்கின்றோம். " அரியலால் தேவியில்லை " என்றும் " மறிகடல் வண் ணன் பாகா...அறிவனே " என்றும் சொல்லுகிறது சைவத் திருமுறை. " த்வம் மே சதஸ்ருணும் மத்தியே சக்தீநாம் புருஷாஹ் வய :- " நான்கு சக்திகளுள்ளே நீவிர் புருஷ சக்தி யாவீர் (அசுரகாண்டம்) " ஏகைவ சக்தி; பரமேஸ் வரஸ்ய பின்னு சதுர்த்தா விநியோக காலே, போகே பவானி, புருஷேஷு விஷ்ணு, கோபேது காளி, ஸமரேது துர்க்கா " (சிவாகமம்) ஆகவே சிவனாக, சிவசக்தியாக அங்கே பதியாக, பசுவாக, பசுபதியாக எல்லாம் ஒன்றாகப் பரம் பொருளைக் காண்கின்றோம்.

பதி

இயக்கும் பொழுது இறைவன் பதியாக இருக்கிறான் இயங்கும்பொழுது சக்தியாக நின்று அருள்புரிகின்றான். அந்தச் சக்தி (சிவசக்தி) விஷ்ணுவாக இருக்கிறது. இரண்டும் ஒன்றாக உள்ள நிலையில் பரம்பொருள் (சிவம்) பரசிவம் என்று சொல்லுகிறோம். வைணவர்கள் நாராயணன் என்று சொல்லுகிறார்கள். தைத்திரேய உப நிஷத் : " ஆகாசம் சரீரம் பிரும்மா - யஸ்யஸா பரமாதேவி சக்திராகாச சம்நிதா " என்று சொல்லப்பட்டிருக்கிறது. உபசார வழியிலே ஆண்டவனுடைய சக்தியை அவனாகவே சொல்லுவதுண்டு. ஆண்டவனைக் காட்டும் ஆசானையும்

கடவுளாகவே - ஆண்டவனுகவே கொள்வது நம்முடைய மரபு. அந்த ஆண்டவனைப் பதி என்கிறோம். அவன் தானே தலைவனுக, தனக்கோர் தலைவன் இல்லாதவனுக, எல்லாவற்றுக்கும் மேலானவனுக, எல்லாவற்றுக்கும் நாயகனுக இருக்கிறுன். இப்படியே வேதங்களும் சுருதி வாக்கியங்களும் முறையிடுகின்றன.

பசு

அந்த ஆண்டவன் ஒரு நித்திய வஸ்து. அதேபோல ஆன்மாவும் நித்திய வஸ்து. ஆன்மா சாரும் தன்மையை உடையது. எதை எதைச் சார்ந்ததோ அந்த வண்ணமாக ஆகிவிடக்கூடியது. ஆகவே சார்ந்ததன் வண்ணம் அமைந்து நிற்கும் இயல்புடையது. அதற்கு நல்வழி நிறுத்தக்கூடிய தலைவன் வேண்டும். இயல்பாக ஒரே வழியிலே நிலைத்து நிற்கும் ஆற்றல் இல்லாதது. பாச வழியிலே சென்ருல் ஆண்டவனை மறக்கும். அதனின்றும் விடுபட்டு அருள் வழியிலே நின்ருல் ஆண்டவனேடு உறவாடி இன்பம் பெருக்கும். இப்படி நல்ல வழியிலே - அருள் வழியிலே இழுத்து நிறுத்த ஓர் தலைவன் வேண்டும் என்று மேலே சொல்லியிருக்கிறது. அந்தத் தலைவன் தான் கடவுள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

வேதச் சான்றுகள்

யஜுர் வேதத்தில் :— நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்ய வர்ணுய ஹிரண்யருபாய ஹிரண்ய பதயே அம்பிகாபதயே உமாபதயே பசுபதயே நமோ நம: |

नमो हिरण्यबाहवे हिरण्य वर्णाय हिरण्यरूपाय
हिरण्य पतये अम्बिकापतये उमापतये पशुपतये नमो नमः ।

பொருள் :— சுவர்ணம் போன்ற கைகளை உடைய வனுயும், சுவர்ணம் போன்ற வடிவை உடையவனுயும், சுவர்ணங்களுக்கு அதிபதியாயும், அம்பிகை உமை என்ற சக்தி பேதங்களுக்கெல்லாம் நாயகனுயும் இருக்கிற பசுபதிக்கு நமஸ்காரம்.

ருத்ரம் :— நமச்சர்வாய ச் பசுபதயே வ

नमः शर्वाय च पशुपतये च

"ஸ்ருணுதி ஸர்வம்" சங்காரகாலத்தில் எல்லா வுலகத்தையும் தன்னுள் ஒடுக்கிக்கொள்ளுகிருர் என்ப திஞல் சர்வன். அதுபோல் பிரமன் முதல் புழுவரை யிலுள்ள ஸகல பசுவர்க்கங்களையும் சிருஷ்டித்துக் காப்பதிஞல் பசுபதி என்று பேயர்.

ஜோதிர்லிங்கங்கள்

அவனுக்கு உருவம் இல்லை. ஆனுல் அருபியும் அல்ல. ரூபாருபன என்றும் சொல்லுகின்றன. அந்த ரூபாருபத்தைத்தான் சிவலிங்க உருவில் சைவர்கள் வழிபடுகிருர்கள். எல்லா ஆலயங்களிலும் இலிங்கத் திருமேனிகள் எழுந்தருளியிருக்கப் பேற்றிருந்தாலும் பிரதிஷ்டையால் மகிமை அதிகம் இருப்பதாக நம்புகிருேம். சிறந்த பிரதிஷ்டைகளாக ஜோதிர்லிங்கங்கள் நம்நாட்டில் வழிபடப் பேறுகின்றன. அவை அமையப்பேற்ற ஆலயங் களுக்குத் தனிப் பேருமை உண்டு. தமிழ்நாட்டில் பாடல் பேற்ற பதிகள் தனிப்பேருமையோடு எண்ணப்படுவது பலரும் அறிந்ததே. பாடற்பேருமை இல்லாவிட்டாலும் இயல்பால் ஜோதிர்லிங்கங்களாக, உலக ஒளியாக அமையப்

பெற்ற பன்னிரு மாபெருந் தலங்கள் உள்ளன. அவை யாவன :- ஓங்காரம், சோமநாதம், ஸ்ரீ சைலம், வைத்ய நாதம், மகாகாளம், பீம்சங்கரம், கேதாரம், காசி, இராமேசுவரம், குஸ்மேஸ்வரம், நாகேசம், த்ரயம்பகம்.

பசுபதிநாதர்

அவற்றுள் கேதார தரிசனம் செய்வோர் நேபாள பசுபதி நாதர் தரிசனம் செய்தால்தான் யாத்திரை முடிவடையும், முழுப்பலனும் உண்டு என்று சொல்லுகிருர்கள். பீமனுக்குக் கேதாரத்தில் பின் பாகம் தரிசனம் கொடுத்தார் என்றும், அதனுடைய தலைப்பகுதி நேபாள பசுபதிநாத மென்றும் புராணங்கள் இயம்புகின்றன. இலிங்கத் திருமேனி அமைத்து வழிபடும் எல்லா ஆலயங்களிலும் முகம் அமைப்பது கிடையாது. அவன் பரமசிவன்; திகம்பரன் என்றெல்லாம் சொல்லுவோம். அதனுேடு உருவத்தில் பரமசிவனுக்கு ஐந்து முகங்கள் உண்டு என்று ஆகமங்களும், வேதங்களும் சொன்னுலும் இலிங்கத் திருமேனியில் அமைத்துக் காண்பது கிடையாது. அப்படி அமைத்த திருவுருவம் பசுபதிநாதர். நான்கு திக்குக்கும் நான்கு முகங்களும் ஊர்த்துவமுகம் ஒன்றும் ஆக ஐந்து முகங்கள் அமையப் பெற்றிருக்கின்றன. ஐந்து முகங்கள் :- ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம். இறைவனின் ஐந்தொழில் அருளிப்பாட்டை உணர்த்துவன.

கிழக்கு நோக்கிய முகம் பூரி என்றும், மேற்கு நோக்கியது துவாரகை என்றும், தெற்கு நோக்கியது இராமேசுவரமென்றும், வடக்கு நோக்கியது கேதாரம் பதரி பசுபதி கயிலை நாதர் என்றும், மற்ருென்றுமேல்நோக்கியது

என்றும் சொல்லுகிறுர்கள். எங்கும் அவன் நிறைந்திருக் கிருன். எங்கும் அவனுடைய திருவருள் விலாசம் பெருகி நிற்கிறது. திக்கெல்லாம் அவன் அருள்நோக்குக்கு இலக்கா கியவை. அவன் அப்படியிருந்து ஆன்மாக்களைக் காத்து உய்வித்து ஆன்மநாயகனுக-பசுபதியாக விளங்குகின்ருன் என்ற உயர்ந்த உண்மையை இத்திருவருவம் எடுத்துக் காட்டுகிறது. அத்தோடு போதுவாக எங்கும் சிவாலயங் களிலுள்ள நந்தி பெருமானை உற்றுநோக்கியதாக அமையப் பெற்றிருக்கும். நேபாளத்தில் நந்தி மேல் நோக்கியதாகத் தலைநிமிர்ந்து படுத்திருக்கும். ஆகவே எல்லாம் கடந்த பரம்போருளே எனக்கு நாயகன், அவனையே நாடுகிறேன் என்று உறுதி செய்கிறது அந்த நந்தி. நந்தியைக் கோவிலமைப்பில் பசுவாக ஆன்மாவாக - அவன் அருளிற் றிளைத்து நிற்கும் உயிராக அமைப்பது ஆகமவிதி.

தேவபட்டணம்

ஐந்து முகத்தோடு பெருமான் பசுபதி நாதர் நேபாளத் தில் எழுந்தருளியிருக்கும் ஆலயம் அமையப்பேற்ற இடம் தேவ பாட்டம் (தேவபட்டணம்) என்று குறிக்கப்படுகிறது. தேவதேவராகிய பசுபதிநாதர் எழுந்தருளியுள்ள ஆல யத்தை நடுவில்வைத்துச் சுற்றிலும் பல நூற்றுக்கணக் கான ஆலயங்கள், எழுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சக்தி ஆலயங்களும், விஷ்ணு ஆலயங்களும், சிவபேதங்க ளுடைய ஆலயங்களும். சிவ ஆலயங்களும் இப்படியாகத் தேவ பட்டணமாகவே அது காட்சி யளிக்கிறது. அந்தப் பட்டணத்து ஆலயங்களில் சிவபேதத்தில் பைரவ மூர்த்தமும், விஷ்ணுவில் பாலகண்டீர பாலாஜியும் (பாற்கடலில் அரவணைக் கிடந்தபெருமான்) சிவசக்தி

பேதத்தில் குஹ்யேஸ்வரி, வத்சலேஸ்வரி, இராஜ ராஜேசுவரி, ஜெயவாகேசுவரி என்ற பல பெருந்தலங்களும் அமையப்பெற்றிருக்கின்றன.

நேபாளத்தில் சமயம்

நேபாளமே ஒரு பெருங்கோயில் என்று சொல்லி விடலாம். போதுச்சமயம் அங்கே சைவம். பௌத்தமும் அங்கே மிகுதியாகப் பாராட்டப்படுகிறது. ஆனல் பௌத்தர்களும் சைவர்களும் ஒருவரோடோருவர் கலந்து உறவாடி மதவேற்றுமைதெரியாது எல்லோரும் எல்லா ஆலயங்களிலும் சென்று வழிபட்டுப் பயன் பெருக்கிக் கோள்ளுகிருர்கள். அரசன் ஒரு நல்ல சைவ அரசன். அவன் திருமுடியிலே பசுபதிநாதருடைய திருவடிகள் இருக் கின்றன. திருவடியே சரணம்; அதுவே பாதுகாப்பு; நான் பசுபதிநாதருடைய தூதுவனுக - விஷ்ணுவினுடைய அம்சமாக நாட்டைக் காக்கிறேன்; பஞ்சகிருத்தியம் செய்யக்கூடிய சர்வ வல்லமை உள்ள பசுபதிநாதர் எல்லா வற்றிற்கும் மேலான கடவுள்; அவருடைய திருவடி - திருவருள் நலத்தால் வளர்மதியாக இந்த நாட்டின் பெயரும் புகழும் மேலும் மேலும் ஓங்கி வளரட்டும் என்ற பிரார்த்தனேயோடு ஆட்சி செலுத்துகிருன் அரசன்.

பௌத்தர், சித்தார்த்தர், திருவவதாரம் செய்த லும்மினித் தோட்டம் (ருமேந்தே), அவரது நாடு கபில வாஸ்து, கடைசியாக அவர் முத்தியடைந்த காஸ்யா, நேபாளத்தில் அமைந்திருக்கின்றன. ஆகவே நேபாளம் பௌத்தர்களுக்கும் பெரிய புண்ணியபூமி. இந்துக்கள் பசுபதிநாதம், முக்திநாதம், கயிலேயங்கிரி இம்மூன்றையும் மிகப் பெரிய புனிதத் தலங்களாக வழிபட நேபாளம்

வருகிறார்கள். கயிலை அடிவரை நேபாள எல்லை. நேபாள நாடு முழுவதிலும் எங்கும் ஆலயங்கள். பௌத்த விகாரங்கள் பரவிக்கிடக்கின்றன. இதனால்தான் நேபாளம் ஒரு பெரிய ஆலயம் என்று சொல்லக்கூடியதாக இருக்கிறது.

பக்தியும் வீரமும்

அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்று சொல்லுவதற்கு இலக்கணமாக அரசன் சிவபக்தனாக - பக்தியிலும் வீரத்திலும் சிறந்தவனாக இருப்பதுபோல நாட்டு மக்களும் பக்தியிற் சிறந்தவர்களாக - வீரத்திலும் உலகப் புகழ் பெற்றவர்களாக இருக்கிறார்கள். நேபாள நாட்டில் அதிகாலையில் அந்தக் கடுங்குளிரில் நாலரை மணிக்கு எழுந்து பனிநீரில் குளித்து அவரவர் அவரவர் இஷ்ட மூர்த்தியை வழிபட்டுத் தோத்திரித்துப் பிறகுதான் செய் தொழிலுக்குச் செல்லுகிறார்கள். அவர்கள் செல்லும் நடை ஒரு கம்பீர நடையாக - விறுவிறுப்புடையதாக இருக்கும். அப்படிப் போகும்போழுதும் அவர்கள் வாய் ஏதாவது தோத்திரம் சொல்லும். வீண்பேச்சுப் பேசாது. அவர்களே இப்போழுது உலகத்தில் கூர்க்கர்கள் என்று புகழ்பெற்றவர்கள். யுத்தத்திலே முன்னணியில் நின்று உயிரையும் மதியாது விடாப்பிடியாக முன்னேறி வேற்றி கண்டு வரும் மாவீரர்கள்.

விஞ்ஞான ஆராய்ச்சியில் பயன்கோண்டு ஆளில்லாப் போரிடும் வல்லமை பெருக்கிவரும் இந்நாளிலும் கூர்க்கர்கள் தங்கள் தங்கள் படையில் ஒரு பகுதி இருந்தால் சிறப்புண்டு, நிச்சயம் வேற்றி தங்களுக்குண்டு என்று மேல்நாட்டவரும் விரும்பிக் கேட்டுப் பேற்றுப் போற்றி வருகிறார்கள்.

இப்போழுது போதுவாக ஒரு பேச்சு மலிந்துவரு கிறது. சமய போதம், சமய ஒழுக்கம் ஒருவனுடைய ஆண்மையைக் குறைத்துவிடுகிறது. வீரத்தன்மை இழந்து அவன் சாத்வீகனுக - சாதுவாக அதற்குப் போருள் சேயலற்றவனுக ஆகிருன் என்று பேசப்படுகிறது. அது தவருனது. சிறந்த பக்தி உடையவன். சிறந்த மத ஒழுக்கமுடையவன் உலகச் சிறப்புவாய்ந்த வேற்றி வீரனுகவே விளங்குகிருன் ; விளங்க முடியும் என்பதை மேய்ப்பித்து நேபாளநாடு நமக்கு உபதேசம் சேய்கிறது.


அப்பரின் வீர முழக்கம்

நமது சமயாசாரியர்களில் முதுமை மிக எய்திய அப்பர் பேருமானும் அந்தத் தளர்ந்த வயதிலேயும் கோமாற்கே நாமேன்றும் மீளா ஆளாய்ச் கோய்மலர்ச் சேவடியிணையே குறுகிேேமே யாதலால் நாமார்க்கும் குடி யல்லோம் நமனையஞ்சோம் என்றேல்லாம் வீர முழக்கம் சேய்கின்ருர். அரச ஆணையும், ஆனையின் பலமும். நஞ்சின் வேகமும், கடலின் ஆழமும் அவரை ஒன்றும் சேய்யமுடியாதவை ஆயின. அவற்றைக் கண்டு அவர் நேஞ்சம் கலங்கவில்லை. தமக்குக் கிடைத்த பற்றுக் கோட்டைப் பலமாக - உறுதியாகக் கைக்கோண்டார். முன்னே சோன்ன உலகியல் நிலையில் வலிமை போருந்திய எல்லாம் அவர் முன்னே வலியிழந்தன. ஆட்சிபீட அதிகாரம் மிக்க வலிமை போருந்தியது. அதை வைத்துக் கோண்டு யாரையும் ஆட்டிவைத்துவிட முடியும் என்று ஏமாந்த அரசனும் தன் பலவீனத்தை உணரும்படிச் சேய்தது ஒரு வயோதிக அடியாரின் உறுதிப்பாடு. அவர் இருந்த நிலையில் வீரமுழக்கம் சேய்ய வேறு உலகியற் பற்றுடையவர் யாராலும் முடியாது. ஏதோ ஒன்றைக்

கண்டு அஞ்சித்தாளுகவேண்டும். வீரனென்று வேற்றுரை சொல்லி நீரையும் நெருப்பையும் யானையையும் ஆட்சி வெறியையும் கண்டு கலங்காத மனிதனைக் காண்பது அரிது. அவற்றைத் துச்சமாகக் கருதும் ஆற்றல் அப்பருக்கு எங்கிருந்து வந்தது? அதுதான் முதிர்ந்த பக்தியின் விளைவு. ஆண்டவனிடம் அடைக்கலம் புகுந்ததன் விளைவு. பற்றவேண்டிய இடத்தில் அடிமைப்பட்டதன் விளைவு. அடிமையென்று சொன்னதால் அங்கே ஆண்மையிழந்து விடவில்லை. ஆண்மை பெருகிற்று. வீரமுழக்கம் செய்தது. வெற்றி கண்டது. அதுவும் ஒரு நாட்டைக் கைப்பற்றியது. ஆட்சி நிறுவியது. அதிலே சைவ ஆட்சி. வீணுக அலைப்புண்ட ஒரு நாட்டைச் சீர் திருத்தி நல்ல நாடாக-சைவ நாடாக ஆக்கிற்று.

நேபாளக் காற்று

இந்த எண்ணங்கள் - வீர உணர்ச்சிகள் அடியாரின் பெருமைகள் அந்த நேபாள மண்ணிலே, அந்த நேபாளக் காற்றிலே நம்முடைய உடல் தோய்ந்தவுடன் நமக்கு நம்மையறியாமலே உண்டாகின்றன. உண்மை அறிவும் உணர்ச்சியும் படைத்த எவனுக்கும் அது வீண்போகாது. கோரக்கநாதர் துணை, பசுபதிநாதர் துணையென்று வீர முழக்கம் செய்யும் கூர்க்கர்கள் நாடு அடிமைப்பட்டதாகச் சரித்திரம் கண்டதில்லை. ஆண்மைமிக்கதாகவே காண்கிறது. வீரம் செறிந்ததாகவே காண்கிறது. இன்றும் வெற்றிமுழக்கம் செய்வதாகவே காண்கிறது. அதற்குக் காரணம் நாடுமுழுவதும் ஆண்டவனைச் சரணடைந்து ஆண்டவனிடம் அன்புசெலுத்தி அவனே புகல் என்று கண்டு செயலாற்றுவதுதான். நாடு சிறிதே யாயினும் புகழாற் பெரியதுதான்.



64 கட்ட தரிசனம் (மோட்டார் படகில்)

பாட்னு



கண்காட்சி சாலை

இமயம் ஞானபூமி

இமயப் பனிவரையை அடிமுதல் முடிவரை ஞானபூமி யாகப் பெரியோர் கருதுகிறார்கள். நல்ல அநுபவம் உள்ள வர்கள் அந்தக் கடுங்குளிரில் - உடல்விறைக்கும் பனிநீரில் விடியுமுன்னமே நீராடி அவரவர் நித்திய வழிபாட்டை முடித்துக்கொண்டு தியானத்தில் அமர்ந்தால் தியானம் நிலைத்து, நினைத்த பயன்-திருவடிப்பேரானந்தம் கிடைப்ப தற்கு இமயச்சாரல் மிக ஏற்றதாகும். தொடக்கத்தில் துன்ப மாகத்தோன்றினாலும், பழக்கத்தால் முடிவிலா இன்பத்தை நாம் அடைய அது பெரிதும் உதவுகிறது. உடல் உறுதிப் பட்டுச் சிந்தை கலையாமல் ஒருவழிப்பட அங்குள்ள சூழ் நிலை பெரிதும் உதவுகிறது. பழக்கத்தால் உடல் எந்த வருத்தத்தையும் பொருட்படுத்தாது தாங்கும் சக்தி பெறு கிறது. அத்தோடு அங்கு நிறைந்துள்ள பெரிய மகான் களுடைய தரிசனமும், நல்வினை துணைசெய்ய அவர்கள் கூட்டுறவும், அவர்கள் வாய்மொழி உபதேசமும், எல்லா நன்மைகளும் நமக்கு அங்கே எளிதில் கிடைக்கும். அப் பெரியோர் இமய வரையைக் கடந்து மற்ற இடங்களுக்கு அதிகம் வரமாட்டார்கள் ; வர அஞ்சுவரென்றே சொல்ல லாம். ‘ தம் தவவொழுக்கம் மற்ற இடங்களில் கெட்டுப் போகலாம் ; சமவெளிப் பிரதேசங்களில் உள்ள சீதோஷ்ண ஸ்திதியே தங்களுடைய மன உறுதியைச் சோதித்துவிடக் கூடும் ’ என்று கருதுகின்றனர். அப் பெரியோர் தரிசனம் விரும்பி வேண்டுவோர் அவர்கள் இருக்குமிடம் சென்று சமயம் பார்த்து அவர் அருள்பெற்று மகிழலாம்.

யாத்திரைத் தூண்டுகோல்

இந்த நினைவு, முன் இரண்டொருமுறை இமய அடிவார மாகிய அரித்துவாரம், இமய நடுவிலமைந்த கேதாரம்

முதலிய மாபெருந் தலங்களுக்குச் சென்று கண்டு வந்திருந்தமையால், தருமையாதீனம் 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களே இதுபோன்ற இமய யாத்திரையை மேற்கொள்ளத் தூண்டுவதாக அமைந்தது. அதிலும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னே பனி படர் கேதாரத்தில் கேதாரநாதரின் பாதாரவிந்த தரிசனம், அங்குக் கூட்டம் கூட்டமாக வரும் அடியார்கள் காட்சி, இமயத்தின் அமைதியான சூழ்நிலே, குருமகாசந்நிதானத்தின் சிந்தை ஒருமைப்பாட்டுக்கு உதவின. இவ்விதம் கண்ட பலனை அடிக்கடி சென்று பெருக்கிக்கோள்ளவேண்டும் என்ற அவாவும் பெருகி வருகிறது.

தருமையில் தவம் பெருக்கிஞலும், ஆட்சிப்போறுப்பு ஒருசில சமயங்களில் அலேப்பு உண்டாக்கித் திருவுளத்தில் குறைபாட்டைத் தோற்றுவிக்கிறது. அக்காலங்களி லெல்லாம் குருமகாசந்நிதானம் பெருமானுக்கு அருச்சனைகளும், அபிஷேக ஆராதனைகளும் பெருந்திட்டத்திற் செய்து சமாதானம் உண்டுபண்ணிக் கோள்வார்கள். தம்மைச் சார்ந்தோரும் அதன் பலனை அடையவும் உதவுவார்கள். அவையும் அவர்கள் நிறைவுள்ளத்திற்குப் போதுமானதாக இல்லே. தாம்கோண்ட குறிக்கோள் தவறிவிடுமோ என்ற அச்சமும் இருக்கும்போலும். அடிக்கடி பல பெருந்தலங்களுக்கும் சென்று வழிபாடாற்றி வருவார்கள்.

எப்போழுதும் சிந்தையிலே சிவபெருமானைத் தேக்கி, சைவத் திருமுறைகள் முழங்கச் செய்து, தம் ஞானத்தவம் கலேயாதவாறு-தவத்துக்கு இடையூறு உண்டாகாவண்ணம் காத்துக் கோள்வார்கள். ஞானியர் சிந்தை ஞானத் தேட்டையையே விரும்பும். அதில் சிறிது இடையீடு

ஏற்பட்டாலும் மனம் வருந்தித் தவநிலை பெருக்கும் வழியும் இடமும் காலமும் பார்த்திருக்கும். எப்பொழுதெப்பொழுது எங்கெங்கு வாய்ப்புண்டோ அங்கங்கும் சென்று மேனிலை பெருக்கிக் கொள்வார்கள். அந்தப் பெருக்கம்காண ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுள்ளம் திருவருள் தூண்டுதலால் ஸ்ரீகாசி யாத்திரை, கங்காஸ்நானம், இமய ஞானத்தவபூமியில் ஒருசில நாட்களாவது வாசம் இவை நாடி எழும்.

தமிழ் நாட்டில் பாடல் பெற்ற பதிகள் பலவற்றையும் கண்டு தரிசித்துத் திருமுறைப் பாராயணம் செய்து மகிழ்ந்தது அத்திருவுள்ளம். அதில் கொங்குநாட்டுத் தலயாத்திரை நிகழாமல் தங்கியிருந்தது. அதனை இவ்வாண்டு மனநிறைகாதலோடு செய்து முடித்துத் தருமைக்குத் திரும்ப வரும் வழியிலே பசுபதிநாதம் தரிசனம் காணத் திருவுளம் திட்டமிட்டது. ஊர் வந்ததும் மிக விரைவிலே அதனை முடித்துக்கொள்ள வேண்டும் என்ற உறுதிப்பாடும் பிறந்தது.

" பாருரு வாய பிறப்பற வேண்டும்
பத்திமை யும்பெற வேண்டும்
சீருரு வாய சிவபெரு மானே
செங்கம லமலர் போல
ஆருரு லாயவென் ஆரமு தேயுன்
அடியவர் தொகை நடுவே
ஓருரு வாயநின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக்கொண் டருளே. "

—திருவாசகம்.

ஸ்ரீ காசி யாத்திரை

கங்கா தீர்த்தம்

நாள் குறிக்கப்பட்டது. இடையில் சில நாட்களே இருந்தன. தம்மைச் சார்ந்தவரும் உய்யவேண்டுமென்ற பெருங்கருணைத் திருவுளத்தால் வைத்தீசுவரன்கோவில் பணியாளர் சிலரும், மற்றும் பல அடியார்களும் ஸ்ரீகாசி சென்று கங்காஸ்நானம் செய்ய உத்தரவு இட்டார்கள். கங்கைத் தீர்த்தம் கொண்டுவர வேண்டும் என்றும் திருவுள்ளம் : இதற்குமுன் கொண்டுவந்த தீர்த்தமெல்லாம் பல கும்பாபிஷேகங்களிலும் விசேஷ அபிஷேகங்களிலும் செலவாகிவிட்டதனுலும், இனி ஆதீன ஆலயங்கள் பல வற்றிற்குக் கும்பாபிஷேகம் பண்ணத்தக்கநிலையில் இருப்ப தனுலும், ஆதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்குக் கோடி அர்ச்சனைப் பூர்த்தி சமீபத்தில் கொண்டாட இருப்பத னுலும், அதில் விசேஷ அபிஷேகத்துக்குக் கங்கா தீர்த்தம் தேவைப்பட்டதனுலும் இந்த அருளாணை பிறந்தது. பணியாளர்களும் அடியார்களும் ஆணையைச் சிரமேல் தாங்கிப் புறப்பட்டனர்.

யாத்திரைத் தொடக்கம்

பிறகு குருமகாசந்நிதானத்தில் 'நாமும் சென்ருல் என்ன ? ஸ்ரீகாசி தரிசனமும், கங்கா ஸ்நானமும், தீர்த்தத் திருத்தொண்டும் நாமும் புரிந்து மீளலாமே' என்று திருவுளம் கொண்டார்கள். சென்னை சென்று சென்னையிலிருந்து இரயிலில் கல்கத்தா வழியே ஸ்ரீகாசி செல்ல வேண்டுமென்பது திட்டம். 20-3-58 அன்று தருமையை விட்டுப் புறப்பட்டுச் சென்னை சேர்ந்தார்கள்.

மதுரைக்கு அருளாணை பிறந்தது. சிவதரும பாஸ்கரர் சிவஸ்ரீ. ம க. சுந்தரேச பட்டர் அவர்கள் தாமும் மற்றும் சில அடியார்களுடன் விரைந்தார். உடன் செல்லும் புண்ணிய வாய்ப்பு அடியேனுக்கும் வாய்த்தது.

சென்னையில் வழிபாடு

சென்னை சேர்ந்த மறுநாட் காலையில் மயிலாப்பூர், திருவொற்றியூர் ஆலயங்களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபட்டார்கள். மயிலை, திருவொற்றியூர் தரிசனம் முடித்து வந்தவுடன் மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானம் பிரதம பட்டர், சிவதரும பாஸ்கரர், சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டரவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்படி காசி யாத்திரைக்குத் தன் உறவினர் சிவஸ்ரீ சோக்குப்பட்டர் அவர்களையும், நண்பர் திரு. நாராயண சேட்டியார் அவர்களையும் அழைத்து வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது ; பாராணையாயிற்று.

சென்னையில் சிந்தனை

சிவஸ்ரீ பட்டர் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை சோக்கலிங்கப்ரசாதத்துடன் கண்டார்கள். சமயப் பிரசாரம் செய்வதற்காக சென்னையில் எல்லா வசதிகளோடும் கூடிய இக்கட்டிடத்தை நிறுவியிருப்பது குறித்துப் பாராட்டினார்கள். இங்குச் செய்துவரும் தொண்டு செய்தித்தாள்கள் மூலம் பரவி நாட்டின் பல பகுதிகளிலும் பயன்பெருக்குகிறது. தமிழ்நாட்டில் கட்சிகளின் பெயரால், சமய மாறுபாடாகப் பலரும் பேசி மக்கள் மனம் குழம்பி வருகிற இக் காலத்தில் இதுவோரு சிறந்த - காலத் தேவையை நிறைவு செய்யக்கூடிய - தொண்டு என்று பாராட்டினார்கள்.

"இன்று காலை மயிலாப்பூர், திருவொற்றியூர் ஆலய வழிபாடுகள் நடைபெற்றன. நம்முடைய சமயாசாரியர்கள் இந்த இரண்டு ஆலயங்களிலும் திருவருள் துணைநிற்க அற்புதங்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள். ஒன்று தனதுரை அவனுரையாகக் கொள்ளும் சம்பந்தர் செய்துகாட்டிய படைப்புத் தொழில், மற்றொன்று சாருந்தவத்துச் சங்கிலியார் திருமணம். இந்த நிகழ்ச்சிகள் ஆலயத்தினுட் சென்றதும் சேக்கிழார் பிடித்துக் காட்டிய படமாகவே மனத்திரையில் காட்சியளிக்கின்றன. இந்தச் சிந்தனைகள் மீதூர அம்மையப்பர் வழிபாடுகள் நிகழ்ந்தன. இன்றும் அங்கே அம்மையும் அப்பனும் எழுந்தருளி மக்கள் வேண்டுவார் வேண்டுவதைக் கற்பகமாய் வழங்கி வருகிறார்கள்.

அதிகாலையிலும் திரளான மக்கள் ஆணும் பெண்ணுமாக - பலதிறப்பட்டவர்களும் வழிபாடு செய்து போதல் ஒரு தனிச் சிறப்பு. சந்நிதிகளில் மக்கள் மனங் குளிர நின்று வழிபாடு செய்கிறார்கள்; அதிலும் சிலர் வலம் வரும் பொழுது ஊர்ச் செய்தி, வீண செய்தி பேசிப் பொழுது கழிப்பதையும் கண்டு மனம் கனிந்தது. பலர் அன்பு மேலீட்டால் வாழ்த்துப் பாடல்களையும், திருமுறைகளையும் சொல்லி உருவேற்றிச்செல்வதையும் கண்டோம். நாகரிகம் மிக்க இந்த மாபெருநகரிலே பக்தி குறைந்துவிடவில்லை. ஆனாலும் அந்தச் சிலரும் கோவில் வழிபாட்டுக்கு வந்து திருமுன் நின்று தோத்திரம் சொல்லி மனமுருகிநின்றாலும் வலம் வரும் பொழுது வீண் பேச்சில் ஈடுபடாது நற்சிந்தனையில் மனம் பதியவில்லையே என்பது வருத்தந்தான்.

ஒற்றியூர் வழிபாட்டிலும் இதே நிகழ்ச்சிகள் காணப்பட்டன. இங்கு தரிசனம் முடிந்து தொலைதூரம் வரும்

பொழுது திருவொற்றியூரில் பட்டினத்து அடிகள் திருவடி முத்தியின்பத்தில் திளைத்துநிற்கும் ஆலயம் கடற்கரையில் இருக்கிறதென்பது நினைவுக்குவந்தது. மக்களை இடித் துரைத்து நல்வழி சேர்க்கவேண்டுமென்ற கருணை அப்பர் சுவாமிகளுக்கும், பட்டினத்து அடிகளுக்கும் நிரம்பஉண்டு. மற்ற ஆசாரிய மூர்த்திகளும் உபதேசங்கள் வழங்கியிருந் தாலும் இடித்துச் சுட்டிக்காட்டி வழிப்படுத்தும் திறம் அப்பர் சுவாமிகள், பட்டினத்து அடிகள் பாடல்களில் பல காணக்கிடக்கின்றன. '' சொல்நிலை சுருங்கினல்லது நின் னியல் அறிவோர் யார் இருநிலத்தே '' என்று ஒரு கேள்வியின் வாயிலாக அறிவுரை வழங்குகிறார்கள் பட்டினத்தடிகள். சமயநிலையிலேயும்கூட ஆண்டவ னுடைய சிறப்பியல்புகளைப்பற்றி வெறும் பேச்சுக்கள் பல பலரும் பேசுவார்கள். கண்ணீரும் பெருக்குவர். ஆனால் அங்கே சொல் சுருங்கியநிலை - பேச்சற்ற மௌனநிலை காணுதல் இல்லை. அந்த மௌனநிலை அடையாதவரையில் உய்வும் தொலைவில்தான் நிற்கும். பேச்சிலே சிந்தனை கலையவும் கூடும். அன்பு நெறி நிற்பார்க்கே இப்படியேனில், வீண்பேச்சுப் பேசிப் பொழுது போக்குவோரைப்பற்றி என்னசொல்லவியலும் ? அவர்களை விட ஆலய வழிபாட்டில் ஈடுபடுவோர் ஓரளவு நல்வழியில் திருந்தியவர்களாகக் கொள்ளலாம். அப்படி வருவோரும் அந்த நல்ல புனிதமான இடத்தில் கிடைத்த வாய்ப்பை வீணாக்காமல் சந்நிதிகளில் நின்று வழிபடும் பொழுதும், வலம்வரும் பொழுதும் சிந்தனை மாறாது வழிபட்டுப் பயன் பெருக்கிக்கொள்ளுதல் சிறப்பாகும்.

ஆலய கோபுர தரிசனம் கண்ட இடத்திலிருந்தே நம் முடைய மனம் இறைவனிடம் ஈடுபட்டதாக வருதல்

வேண்டும் என்று பெரியோர்கள் விதிவகுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். உலகப் பரபரப்புப் பெருகியிருக்கும் இன்றும், இதுபோன்ற பெரு நகரங்களில் வயிற்றுப் பிழைப்புக்கருதி மக்கள் திரளாகவந்து குடியேறியிருத் தலால் பெரியோர்கள் வகுத்துக் கொடுத்திருக்கும் கட்டுத் திட்டங்கள் முழுவதையும் கையாள முடியாவிட்டாலும் முக்கியமாகச் செய்ய வேண்டிய சிலவற்றையேனும் கைவிடத்தேவையில்லை. நாகரிகத்தின்பேரால் அவைகளை நழுவவிடின் கடமை தவறியவர்கள் ஆகிவிடுவோம்.

அப்பர் சுவாமிகள், மக்கள் கடமைகளில் தலையாயது ஆண்டவனுடைய வழிபாட்டுக் கடமை செய்திருத்தலே; அப்படிச் செய்வோரைப் பெருமானும் தாங்கி உறு துணையாக நிற்பன் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆண்டவன் உமைக்கு நல்லவன். நமக்கும் நல்லவன். மண்ணில் பிறப்பெடுத்த நாம் என்றோ ஒருநாள் அதை விட்டுச் செல்லத்தான் போகிறோம். அந்த நிகழ்ச்சியை உயிர் போவதாக - ஆவி பிரிவதாக நாம் பெயரிட்டு அழைக்கிறோம். அப்பிரிவு ஏற்படுவதன்முன் நம்முடைய உரை தளர்ந்து தடுமாறுகிறது. உடலிற் பரவிப் பிணித்து நின்ற உயிர் நீங்கப்போகிறதேயென்ற நினைப்பால் உடலும் நடுங்குகின்றது. அப்படி ஆவி பிரிதல் நிகழுமுன் ஆண்டவனை வழிபடுங்கள். பெருமான் நமக்கு நல்லவன் ; நம்மை நல்வழிப்படுத்தித் திருத்தும் துணைவன். உடலில் உயிர் நின்று ஆட்சி செலுத்தும் காலத்தும் உடனிருந்து ஐம்பூதங்கள் அல்லல்செய்து ஆட்டிவைக்கின்றன. அக் காலத்திலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் வல்லவாறு சிவாயநமவென்று பரவுமின் என்கிறார்கள். பணிமின், மனம் அலைப்புறுவண்ணம் பணிவாரோடே விரவுமின் என்கிறார்கள். விரவாரை விடுமின் என்கிறார்கள். உலகியல்

வாழ்க்கையில் தொல்லைகள் மெத்தவுண்டு. அதிலே ஊறிக் காலம்கழியும். "எனக்குப் பொழுதுவிடிந்தால் இரவு உறக்கம் வரும்வரையிலும் ஓய்வு ஒழிவின்றி வேலை இருந்துகொண்டே யிருக்கிறது. சொப்பனத்திலும்கூட உலகியல் வேலையில் கஞக் கண்டுகொண்டிருக்கிறேன். கடவுட் சிந்தனை செய்வதற்குச் சிறிதுகூட நேரம் கிடைக்க வில்லை" என்று பெருமைப்படுவாரும் உண்டு. அவர் களுக்கும் உபதேசம் இருக்கிறது. ஏலுமாறு வணங்கி நின்று ஏத்துமின். உலகியல் வாழ்வு பெருகுவதில் நமக்கு ஆராத துன்பம் நிறைந்துகொண்டேவரும். மனம் நிறைவு காண வழியில்லை. அதற்கு அப்பரடிகள் 'போக்கம் பேசிப் பொழுது கழியாதே துக்கம் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ' - என்று அழைக்கிறார்கள். நற்சிந்தனை இல்லாது காலம் கழிந்தால் இன்னொரு காலத்தில் 'ஓம்பினேன் கூட்டைவாளா ஒற்றியூருடையகோவே' என்று வருந்தச்செய்யும். ஆகையால் ஏலுமாறு வணங்கிநின்று ஏத்துமின். பயன்? வெம்மையான வினைக்கடல் நீங்கலாம். நீர் செம்மையாய சிவகதி சேரலாம். நாள்தோறும் சிந்தனை நன்று; நம்வினை போயறும்; என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம். 'இல்லறத்தார்களே! இப்படி நல்லதிருக்க நாள் வீணே கழித்தால் உறுதுணை நமக்கார்? எமன் வந்து நம்மை அழைக்கும்பொழுது, ஏழைகாள்! இதனை விட்டுச் செய்யலாவது என்' என்ற கேள்வியின் மூலம் விளக்கமும் சொல்லிவைத்திருக்கிறார்கள்.

இப்படி நம் ஆசாரியப் பெருமக்கள் மிக எளிதாக - இயன்றவரையில் அவன் நாமா சொல்லி வழிபட்டாலே போதும். பெரும்பயன் கிடைக்கும் என்று கூறியிருக்கிறார் களே! அதைக்கூடச்செய்யாத, செய்வகை தெரியாதமக்கள் பலரும் வீணே காலத்தைக் கழிக்கிறார்களே - உலகம்

வாழும் நல்வாழ்விலே தானே மக்கள் எல்லோருடைய நல் வாழ்வும் அமைந்து கிடக்கிறது ? நாள் முழுவதிலும் உள்ள நேரத்தில் ஒரு சில விநாடியாவது அவரவரும் அவரவர் (சமயங்களில் வழிபடும்) வழிபடு தெய்வத்தைச் சிந்தனை செய்யவேண்டும். அதற்கு ஒரு தூண்டுகோலாகவே இந்த நிலையம் இங்கு நின்று தொண்டுசெய்துவருகிறது. பேரு வெள்ளத்தில் ஒரு சிறு துளிபோல இந்தத் தொண்டு அமைந்திருந்தாலும் இதன் விளைவாகச் சிறுசிறு துளிகள் பெருகிப் பெரும் பலனை அளிக்குமென்ற உறுதி நமக்கு இருக்கிறது. திருவருள் துணையும் நமக்கு உண்டு. ' ஆற்ருெழுக்காக அது காட்டும் வழியிலே நின்று தொண்டு செய்யத் துணைசெய்யுமாக ' என்பதுதான் நம்முடைய சதாகாலப் பிரார்த்தனையாகும் '' என்று மிகக் கனிவோடு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருவுளம் பற்றினுர்கள். பல அன்பர்களும் வந்து கண்டு வணக்கம் தெரிவித்துச் சென்ருர்கள்.

கல்கத்தா வந்தோம்

வழி நெடுகிலும் சிந்தனை சிவசிந்தனையாக, பேச்சு எல்லாம் ஞானப் பேச்சாகக் கழிந்தன.

இரண்டு இரவு; ஒன்றரை பகல். கல்கத்தா வந்தோம்.

ஸ்ரீ காளிகட்டம்

வழக்கம்போல அன்று மாலை காளிகோயில் தரிசனம் செய்து மீண்டோம். ஸ்ரீ காளிக்குச் சண்டி, பயிரவி என்ற வேறு நாமங்களும் அங்குச் சொல்லி வழிபடுகிருர்கள். திருவுரு நான்கு திருக்கரங்களை உடையது. கத்தி, கபாலம்,

அபயம், வரதம். குண்டலம்-பிரேத குண்டலம். தலைமாலை அணிந்திருக்கிறாள். பிரேதக் கரங்கள் கோர்த்த ஆடை. நாக்கு வெளியே துருத்திக்கொண்டிருக்கிறது. கண் விழி சற்று வெளியே பிதுங்கிக்கொண்டிருக்கிறது. கோலம் நிருத்த கோலம். அதிலும் பரமசிவன் மேல் நின்றாடும் திருக்கோலம். ஒரு கால் பரமசிவன் மார்பின் மீதும், மற்றொருகால் ஒரு தொடையின் மீதும் நின்று ஆடும் காட்சி. முகமெல்லாம் சிந்துரமும் வெண்ணெயும் குழைத்துப் பூசப்பட்டிருக்கின்றன. நரபலியும் ஒருகாலத்தில் இங்கே நடைபெற்றது. இப்போது எருமைக்கடா, ஆடு, கோழி - பலியிடப்படுகின்றன. மது நிவேதனமும் உண்டு. மக்கள் பக்தி பரவச நிலையில் வந்து வழிபடுகின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டம் அதிகம். இத்தடவை நாங்கள் கல்கத்தா வந்தடைந்தது ஒரு ஞாயிற்றுக் கிழமையில்.

இது சாக்தேயத்தின் தலைநகரம். அவர்கள் ஐதிகத்தின்படி தேவியினுடைய திருவுரு அமைந்து விளங்குகிறது. இங்கு வழிபாட்டுக்கு வருவோர் சிலர் தங்கத்தாலோ வெள்ளியாலோ ஊசி வைத்துக்கொண்டு, தம்முடைய உறுப்புக்களில் குத்தி அதனால் விளையும் ஒரு சொட்டு இரத்தத்தையேனும் ஸ்ரீ காளியின் திருவடிகளில் அர்ப்பணிப்பதும் உண்டு. இந்த இரத்ததானம் இங்கே மிக்க சிறப்புடையது. இதனால் காரியசித்தி நிகழும் என்று நம்பப்படுகிறது.

புராண வரலாறு

தட்சப்பிரஜாபதி பெரிய யாகம் வளர்த்தான். அதில் அவிர்ப்பாகம் பெற்றுக்கொள்ள எல்லாத் தேவர்களுக்கும்

அழைப்பு விடுத்திருந்தான். அப்படிச் செய்வது அத்தேவர் களுக்கு உரிய மரியாதையை வழங்குவதாக யாக நியதி. பரமசிவனுக்கு மட்டிலும் அழைப்பு இல்லை. அப்போழுது தேவி தாட்சாயணி - தட்சனுடைய மகள். தனக்கு அழைப்பில்லாத நிலையில் பெருமான் அந்த யாகத்திற்குச் செல்ல உள்ளம் இல்லை. தாட்சாயணி தன் தந்தையிடம் உள்ள அன்பினுல் யாகத்திற்குத் தானும் பரமசிவனும் செல்லவேண்டுமென்று கூறினுள். பெருமான் அதை விரும்பவில்லை. அம்பிகை தனியே தட்சயாகத்திற்குச் சென்றனர். சிவபெருமான், நந்தியம்பெருமானைத் துணை அனுப்பினுர். யாகவாசலிலேயே தக்க மதிப்பில்லை. தன்னு லல்லவோ தன் நாயகர்க்கு இந்த அவமானம் விளைந்தது என்றெண்ணி தாட்சாயணி உயிர் நீத்தாள். பரமசிவன் சின மிகுதியால் வீரபத்திரன் தோன்றினுர்.

தட்சப்பிரஜாபதி தலையிழந்தான். சூரியன் பற்களை இழந்தான். சந்திரன் தேய்க்கப்பட்டான். தேவர்கள் பலர்க்கும் தோல்லைகள் பல விளைந்தனர்.*

தாட்சாயணியின் மந்திர உடலைத் தோளில் சுமந்து கோண்டு பரமசிவன் உன்மத்த நிலையில் அலையலானுர்.

---

*"எச்சன்னிணைத்தலை கோண்டார் பகன்கண் கோண்டார்
இரவிகளிலோருவன் பல்லிறுத்துக் கோண்டார்
மேச்சன் வியாத்திரன் தலையும் வேருக் கோண்டார்
விறலங்கிக் கரம் கோண்டார் வேள்விகாத்து
உச்சநமன் தாளறுத்தார் சந்திரனை உதைத்தார்
உணர்வில்லாத் தக்கன்றன் வேள்வி யேல்லாம்
அச்சமேழ அழித்துக் கோண்டருளும் சேய்தார்
அடியேனை ஆட்கோண்ட அமலர்தாமே."

—அப்பர் சுவாமிகள் (6-96-9)

இதைப் பார்த்தார் விஷ்ணு. இவ்வாறு அலைந்து திரிந்தால் எவ்வாருகுமோ என்றெண்ணிய அவர் தம் சக்கரப் படையை விடுத்தார். அது அம்மையின் உடலை ஐம்பது துண்டுகளாக வெட்டியது. அப்பகுதிகள் விழுந்த இடங் தோறும் சிறந்த சக்தி ஆலயங்களாக விளங்குகின்றன. அவற்றுள் இடது கால் இரண்டாம் விரல் விழுந்த இடமே ஸ்ரீ காளிகட்டம். நேபாளத்திலுள்ள குஹ்யேஸ்வரி (குஹ்ய பாகம்), வத்சலேஸ்வரி (மத்யபாகம்), ஜயவாகேஸ்வரி (முகபாகம்) மூர்த்தங்களும் அவ்வப்பாகங்கள் விழுந்த இடங்கள்தாம். இது க்ஷேத்திர வரலாறு.

மூர்த்தி

சண்ட சம்ஹாரம் செய்தபின், தேவிக்கு ஓர் வெறி யாட்டம் விளைந்தது. சண்டனைச் சம்ஹரித்த போர்வெறி மாருமல், போர்க்களத்திலிருந்த வீரர்களது தலைகளை மாலையாகவும், பிரேதங்களை குண்டலங்களாகவும், பிரேத கரங்களை ஆடையாகவும் கொண்டு வீர நிருத்தம் புரிந் தாள். இந்த நிருத்தத்தை உலகங்களால் தாங்கமுடிய வில்லை. பிரும்ம விஷ்ணுக்களும் இந்திராதி தேவர்களும் வந்து வேண்டினர் தாங்கமுடியாத நிருத்தத்தை நிறுத்தி விடவேண்டுமென்று. தேவியின் செவிகளில் எதுவுமே விழவில்லை. கடைசியாகப் பரமசிவனையே சென்று கூறும்படி அனைவரும் வேண்டிக்கொண்டனர். பரம சிவன் சென்று உலகங்களால் தாங்கமுடியாத இந்த வீர நிருத்தத்தை நிறுத்திவிட வேண்டுமென்று கூறினுர். சம்ஹார நடன வீராவேசத்திலிருக்கும் தேவியின் காது களில் இதுவும் விழவில்லை. பரமசிவன் கீழே படுத்து விட்டார். தேவியும் ஆவேசத்தில் அவர் திருமேனியில் ஏறி ஆடலானுள். உலகம் உய்ந்தது. தன்னுணர்வு

வந்ததும் தேவி நாதனின் திருமேனியில் ஏறி ஆடுவதைக் கண்டு நாணினுள். அதே நேரத்தில் வருந்தினுள். அதற்குப் பரிகாரமாகத் தன் கையால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டாள். அதற்குமேல் தேவி எதுவும் செய்து கொண்டுவிடலாகாதென்பது ஆண்டவன் ஆணை. தேவாதி தேவர்களும் வந்து அத்திருக்கோலத்தைத் தரிசிக்கலானுர் கள். தேவி அத்திருக்கோலத்தோடேயே இன்றும் காட்சி வழங்கிவருகின்ருள். அது சிவசக்தியாக அமைந்தது.

வழிபாடு

சிவராத்திரி, நவராத்திரி விசேஷம். ஒரிஸ்ஸா, வங்காளம் பக்கத்துச் சைவத்துக்கு மதுமாமிசம் விலக்கு இல்லை. அவற்றை நிவேதனம்செய்து சிறப்பாக விழாக் கொண்டாடுவதும் குறிப்பிடற்குரியவை. இதே மூர்த்தியை சிவராத்திரியில் பரமசிவனுகவும், நவராத்திரியில் சக்தி யாகவும் விசேஷமாகக்கொண்டாடி வழிபட்டுவருகிருர்கள்.

கல்கத்தாவில் பரபரப்பு

நாங்கள் கல்கத்தா சென்ற நாள் ஞாயிற்றுக்கிழமை என்று முன்னே சொல்லப்பட்டிருக்கிறது. கல்கத்தா, தொழிற்சாலைகள் நிறைந்த நகரமல்லவா? மக்கள் சாரி சாரியாக விரைந்து கொண்டிருந்தார்கள். தத்தம் தகுதிக் கேற்ற சிறந்த உடைகளோடு திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தனர். பரபரப்பு அவர்கள் முகத்தில், நடை யில் எல்லாம். ஐயோ பாவம்! வாரம் முழுதும் வேலை செய்கின்ற அவர்களுக்கு - வாரத்துக்கு ஒருநாளில்கூட நிம்மதி இல்லையா என்று நினைத்துக் கொண்டேன் நான். அதோடு மாநாடு போலிருக்கிறது; அதற்குச் செல்லும்

தொழிலாளர்கள் போலும் இவ்வனைவரும், என்று எண்ணி யிருந்தேன் நான். விரைந்து சென்று கொண்டிருந்த அந்தக் கூட்டம் எல்லாம் ஸ்ரீ காளி கட்டம் இருக்கும் திக்கு நோக்கியே சென்றது. என்ன ஆச்சரியம்! பெரும் பகுதி மக்களும் ஸ்ரீ காளியை வழிபடச் சென்றனர். ஆனந்தமாக நெற்றியில் குங்குமக் கீற்றோடு எல்லோரும் திரும்பிக் கொண்டிருந்தனர். நான்நினைத்தது தவருயிற்று. வங்காள நாட்டின் அரசியல் வேகம் உலகம் அறிந்த ஒன்ருகும். தொழில் வளத்திலும், தொழிற் கிளர்ச்சி அடிப்படையிலும், மொழி அடிப்படையிலும் முக்கிய இடம் வகிக்கும் இந்தியக் குடிமக்கள் வாழும் இடமல்லவா வங்காளம்! சிறந்த செயல் வீரர்களும், சுதந்திர இயக்கத் தின் ஆதி கர்த்தாக்களும். ஸி. ஆர். தாஸ், நேதாஜி, சரத் சந்திரர், பக்கிம் சந்திரர், தாகூர், விவேகானந்தர் போன்ற பெருமக்கள் சமீப காலத்திலேயே கூட சிறந்து விளங்கிய நாடாயிற்றே; ஆதலின் சாரிசாரியாக, ஆயிரம் ஆயிரமாகத் *திரண்டு திரண்டு செல்லும் மக்களைக் கண்டதும் நான் இப்படி நினைத்ததற்குக் காரணமே இந்த அடிப்படைதான். ஆனல் அரசியல் உத்வேகத்தோடு மத பக்தியும் செறிந்தவர்கள் அந்த மக்கள் என்ற உண்மை அப்போதுதான் விளங்கிற்று.

---

* "சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனே
நம்பி யினித்தான் நல்காயே." —திருவாசகம்,

தரிசன முடித்துக்கொண்டு வரும் வழியில் ஜைனர் கோவில்களில் பக்தர் கூட்டம். மற்றமற்ற மத சம்பந்த பட்ட ஆலயங்களிலும் மக்கள் திரண்டு திரண்டு வழிபட்டு மனமுருகி நிற்கும் மாட்சியைக் கண்டவாறே திரும்பிக் கொண்டிருந்தோம். ஹூக்ளி நதியின் கரையோரமாக புகைவண்டி நிலயத்துக்கு வரும் வழியில் மேலும் அரிய காட்சி. தேவியை அலங்கரித்து உலாவரும்படிச் செய்து கொண்டிருந்தனர். ஆண், பெண், குழந்தை அனைவருமாக தெய்வ சாந்நித்தியத்தில் ஈடுபட்டு வருவது கண்ணுக்கு நல்ல காட்சி; நெஞ்சுக்கும் நல்லதாயிருந்தது. தொழில் அரசியற் கிளர்ச்சிகளில் பெயர்போன வங்காளம் தெய்வ பக்தியிலும் பின்னிடவில்லை யென்பதைக் கண்கூடாகக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

'ரசக்ரீடை'


புகைவண்டி நிலயத்துக்கு எதிர்த்தாற்போல் ஹூக்ளி நதிக்கரையில் ஒரு வீடு. மாடிக்கட்டிடம். மாடியிலே ஆணும் பெண்ணுமாகப் பெரியோரும் குழந்தைகளு மாகக் கூட்டமாய்க் கூடியிருந்தனர். 'ஞாயிற்றுக் கிழமையானதால் ஏதாவது விருந்துபசாரம் நடக்குமோ; அதற்காக அவர்கள் அங்கு வந்து கூடியிருக்கிறார்களோ' என்ற எண்ணம் எனக்குண்டாயிற்று. மாலை மணி நான்கிருக்கும். மத்தளம் முழங்க, சலங்கைகள் ஒலிக்க, ஆடல் பாடல்கள் காதில் விழுந்தன. விருந்து முடிந்து கேளிக்கைத் தொடக்கம்போலும் என்று எண்ணியது என் மனம். நானும் ஹௌரா ஸ்டேஷன் மாடியில் நின்று அந்த வேடிக்கையைப் பார்க்கத் தொடங்கினேன். எதிர் மாடியில் உள்ள ஜன்னல் வழியாக உள்ளே நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எனக்குத் தெளிவாகத்

ஸ்ரீ காசி குமாரசுவாமி மடத்தில்



சாது சமாராதனை

ஸ்ரீ காசி குமாரசுவாமி மடத்தில்



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைக் கோலுவிருத்தி வழிபடல்

தெரியவந்தன. ஆண்களும், பெண்களும் கைகோர்த்துக் கொண்டு சுற்றிச் சுற்றி ஆடி வந்தனர். ஒவ்வொரு பாட்டு முடிவிலும் சந்தோஷ ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். அடுத்தமுறை குழந்தைகள் ஆடினர். இப்படியே தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தன. வங்காள மொழியிலே பாடல்கள் காதுக்கினிமையாக ஆட்டத்துக்கு விறுவிறுப்புக் கொடுப்பனவாக அமைந்தன. நேரம் ஆகஆக ஆட்டமும் விறுவிறுப்புக் கொண்டதாய் இருந்தது. ஆங்கில நாட்டு நடன முறைகளை வங்காளிகளும் பின்பற்றி இருக்கிறார்களென்ற சந்தேகம் எனக்கு உண்டாயிற்று. ஆனால் அங்குக் கூடியிருந்த அத்தனைபேர் முகத்திலும் மதச் சின்னங்கள் பொலிவுற்று விளங்கின. நல்ல அமைதியும் ஆனந்தமும் குடிகொண்டு விளங்கின. அப்படி இருக்க, அது வெறும் பொழுதுபோக்குக் கேளிக்கையாக இருக்குமா என்ற சந்தேகமும் தோன்றியது. பக்கத்திலிருந்த கீழைப் பாகிஸ்தானி - வங்காளி - ஒருவர் அதைக்கண்டு அநுபவித்து உருக்கமாகப் பாடல்களை முணுமுணுத்து வந்தார்.

ஆங்கிலத்தில் 'தாங்களும் வங்காளிதானே? அந்தக் கேளிக்கையில் சேர்ந்து கொள்ளலாமே; ஒருக்கால் அறிமுகம் இல்லாத நிலையில் தனியே இங்கு இருக்கிறீர்கள்போலும்' என்று பேச்சைத் தொடங்கினேன். அவர் என் அறியாமைகண்டு வருந்திப் '' பாஷை புரியாத - நாட்டு நாகரிகம் தெரியாதநிலையில் இப்படிப் பேசுகிறீர்கள். அங்கே நடைபெறுவது சிறந்த பக்திப் பாடல்கள்; பரவச ஆட்டங்கள். அறிமுகமானவர்களாக இருக்கவேண்டும் என்பதில்லை. அதன் சுவை தெரிந்து மகிழக்கூடியவர்களாக இருந்தாலே யாரும் உள்ளே செல்லலாம். ஆட்டத்

திலும் கலந்துகொள்ளலாம். இதை எங்கள் நாட்டில் 'ராசக்ரீடை' என்று சொல்லுவோம். பலமணி நேரம் பக்திப் பெருக்கோடு இந்நாட்டு மக்கள் இதனை நடத்து வார்கள். இன்று ஞாயிறு. ஓய்வு அதிகம். நல்ல பொழுதாக அவர்கள் கழிக்கிறார்கள். எனக்கும் அதில் கலந்துகொள்ள ஆவல் அதிகம்தான். நான் கீழைப் பாகிஸ்தானிலிருந்து இப்போதுதான் வந்தேன். இன்னும் சிறிது நேரத்தில் இரயிலில் புறப்படுவதாக இருக்கிறேன். நான் இராமேசுவரமும் வந்திருக்கிறேன். உங்கள் நாட்டில் இப்படியொரு ஆனந்தப் பொழுதுபோக்கை எங்கும் கண்டேனில்லை. அங்கே மொழிவேற்றுமைப் பிரசாரமும் சமய எதிர்ப்புப் பிரசாரமும் தீவிரமாக நடந்துவருகின்றன வாமே. ஐயோ பாவம்! அண்மையில் கிடைத்த சுதந் திரத்தினால் ஏற்படக்கூடிய முழுப்பலனையும் வேற்றுமை உணர்வால் கெடுத்துக்கொள்ளக் கூடாதே. ஒற்றுமையாக நின்று உருவாக்கவேண்டிய திட்டங்கள் பல இருக் கின்றனவே. தாயைப் பிரிந்த நாங்கள்தாம் வருந்து கின்றோம். தாய்நாட்டிலே உள்ள நீங்களாவது உலக நாடுகளில் மேலானவர்களாக ஆகிவிடவேண்டாமா? அதற்கு உழைப்பதற்கு எவ்வளவு நேரம் செலவிட்டாலும் நமக்குப் போதாதே. இப்படி வேற்றுமை பெருக்கிப் பழைய நிலையில் நாட்டைத் துண்டாடி வேற்றவன் விழி களுக்கு விருந்தளிப்பானேன்?'' என்று வருந்திப் பேசிக் கொண்டே போனார். நாமொன்று நினைத்துக் கேட்க, அவருடைய நாட்டுப்பற்று, மொழிப்பற்று, கடவுட்பற்று மிகுதியினாலே, தவறாக வந்த சில செய்திகளை வைத்துக் கொண்டு நம் நாட்டு மக்களைப்பற்றித் தவறான முடிவுக்கு வந்துவிட்டாரே என்று வருந்தினேன். அதை அவரிடம் அப்படியே சொன்னேன்.

''உங்களைப் பார்த்தால் படித்தவராக - விஷயம் தெரிந்தவராகத் தோன்றுகிறது. ஆனால் எங்கள் நாட்டை நன்றாக இன்னும் புரிந்துகொள்ளவில்லை. நாடு பொதுவாக உலக மதிப்பில் உன்னதநிலையில் விளங்க, நாங்கள் செய்யும் தொண்டு ஆட்சியில் உள்ளவர்களுக்குத் தெரியாமல் இருக்கமுடியாது. சுதந்திரப்போரில் முன்னணியில் நின்றோர் எங்கள் தியாகம் எத்தகைத்து என்பதையும் தெரிந்திருப்பர். நாடு உயர நடத்தும் திட்டங்களில் - திட்டங்கள் போடுவதில் தென்னாட்டார் முன்னணியில் நின்று விளங்கி வருகிறார்கள். இது உலகறிந்த செய்தி. இன்று காசியில் கங்கைக்கு இட்டிருக்கும் பாலம் ஒரு தென்னாட்டு அறிவியல் மேதையின் சின்னமாக விளங்குகிறது. இஃதல்லாது 'மொழி - தாய்மொழிப்பற்று அந்தந்த நாட்டில் மிகுந்திருக்கவேண்டும். மக்கள் தாய்ப்பாசம் உடையவர்களாக, தாய் மொழிப்பாசம் உடையவர்களாக, தாய்நாட்டுப் பாசம் உடையவர்களாக இருத்தல்வேண்டும். இந்த மூன்று வகையிலும் சிறப்பாக இருப்பதால் ஒன்றையொன்று குறைத்துவிட்டதாக இருக்கக்கூடாது. அததற்கும்உரிய இடம், உரிய மதிப்புக்கொடுத்து பேணிக் கொண்டாடுதல் வேண்டும். இதில் இம்மியளவும் விட்டுக் கொடுத்தல் கூடாது' என்பதே எங்கள் குறிக்கோள்'' என்றேன்.

''ஐயா! நீங்கள் சமர்த்தர். பேச்சிலும் அது தொனிக்கிறது. மதச் சார்பில் நான் சொல்லியதற்கு மறுமொழி இல்லையே!'' என்றார். ''எங்கள் நாடு உயர் தத்துவங்களாகிய இந்தியத் தத்துவ சாஸ்திரங்களை உலகத்துக்கு இன்றும் போதித்துவருகிறது. அங்கே பக்தி அடிப்படை அருமையாக - உறுதியாக இடப்பட்டிருக்கிறது. அடக்கமே

உருவாக வாழ, அதேபோல ஆண்டவன் வழிபாட்டிலும் அமைதியே நிறைவாக வழிபட எங்கள் பேரியோர் வழி வகுத்து வைத்திருக்கிறுர்கள். எந்தக்காரியத்தையும் வேளி ஆர்ப்பாட்டமாக நாங்கள் செய்வது கிடையாது. அடக்க மாக, ஆனுல் உறுதியாக எங்கள் வழிபாடுகள் நிகழும். சிந்தையை ஒருக்கி அதிலே சிவத்தை விளேப்போம். ஆனந்தம் பெருக்குவோம். அதில் வெளிப்படையாக நிகழும் ஆடல் பாடல்கள் இருக்கமாட்டா '' என்றேன். மேலும் '' இங்கே பக்தி பரவச நிலேயில் ஆடல் பாடல்கள் நிகழ்வதை நான் குறைகூறவில்லே. எங்கள் சமயாசாரியர்களும ஆடியும் பாடியும் தன்வயமிழந்து அவன்வயமாக நின்று வழிபடும் முறையையும் சோல்லி வைத்திருக்கின்ருர்கள். ஆனுல் அவையேல்லாம் உள் ளோளி பெருக்கும் காலத்தில் ஒய்ந்து நிற்கும். இந்த நிலேயில் எங்கள் மக்கள் பக்தி சேலுத்துவதைப் புறக் கண்ணுல் கண்டு முடிவுசெய்வது இயலாது '' என்று சோன்னேன்.

அதற்கு அவர் '' நான் ஓர் வியாபாரி. எனக்கு இப்படி ஆராய்ச்சிசெய்து மக்கள்நிலே தெரிந்துகோள்வதற்குப் போதிய வாய்ப்பில்லே. வேறும் செய்தித் தாள்களேயே நம்பிப் பேசியிருக்கிறேன். எங்கள் நாட்டுப் பழக்கவழக் கங்கள் அங்கு இல்லாததாலே ஒருக்கால் அப்படியும் இருக் குமோ என்று பேசிவிட்டேன். வங்காளம் மோழிப் பற்றில் முன்னணியில் நிற்பது. தாய்மோழிக்கேயன்றி வேறு எம் மோழிக்கும் அது முதலிடம் அளிப்பதில்லே. பாமரனும், வேற்றுமோழி தேரிந்தாலும், தாய்மோழியே பேசு வான். கருத்து ஒத்தாலும் கலந்து பேச வாய்ப்பில்லாத தால் இப்படியான எண்ணங்கள் நமக்குள் வளர்ந்துவிட இடமாகிறது. நன்றி '' என்ருர்.

ஸ்ரீ காசி மடம் ஏற்பாடும் உபசாரமும்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் காசி யாத்திரைக்கு எழுந்தருளும் செய்தி திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்களுக்கு அறிவிக்கப்பெற்றிருந்தது. செய்தி தெரிந்தவுடன் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் ஸ்ரீகாசியில் உள்ள ஸ்ரீ குமாரசாமி மடத்து ஏஜண்டுக்கு உத்தரவுகள் பிறப்பித்திருந்தார்கள். வழக்கம்போல் ஹௌராவிலிருந்தே ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை எதிர்கொண்டு வரவேற்று அழைத்துச் செல்லும் பொறுப்போடு ஸ்ரீ குமாரசாமி மடம் கணக்கர் (Accountant) திரு. சுப்பிரமணியப் பிள்ளை வந்திருந்தார். ஹௌராமெயில் ஸ்டேஷனைவந்தடைந்ததும் திரு. சுப்பிர மணியப்பிள்ளை ரயிலிலேயே கண்டு வணங்கி வரவேற்றார். கல்கத்தாவிலும் உடனிருந்து எல்லா வசதிகளும் செய்து கொடுத்ததோடு எங்களோடு ஸ்ரீ காசிக்கும் உடன் வந்தார். நாங்கள் வந்த வண்டி பெனாரஸ் கண்டோன்மெண்டிற்கு 10-45 க்கு வந்துசேர்ந்தது.

அங்கு ஸ்ரீகாசி மடத்து (ஸ்ரீ குமாரசாமிமடம்) ஏஜண்ட் திரு. கல்யாணசுந்தரம் பிள்ளை வந்து வரவேற்றார். பிர்மஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரிகளும் வந்திருந்தார். அது ஒரு நல்ல சோமவாரதினம். கல்யாணசுந்தரம் பிள்ளை ஒவ் வொரு சோமவார நாளன்றும் மௌன உபவாச விரதம் இருப்பார். அந்த நல்ல விரத நாளிலே ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை வரவேற்று உபசரிக்கும் பெருவாய்ப்பு தனக்குக் கிடைத்ததாக எண்ணி மகிழ்வுற்றார்.

ஸ்ரீ குமாரசாமிமடத்துக்கு வந்ததும் வழக்கம்போல ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைக் கொலுவிலிருத்தி வணங் கிப் பிரசாதங்கள் பெற்றுக்கொண்டார்கள். நல்ல கூட்டமும்

வந்திருந்தது. காசியில் உள்ள பிரபல வழக்கறிஞரும் தொழிலதிபருமான திரு. P. M. வீரப்பன் அவர்களும் வந்திருந்தார்கள். மாகேஸ்வரபூஜையும் சிறப்பாக நடை பெற்றது. நகர மடத்திலிருந்தும் மரியாதைகள் அனுப்பி யிருந்தார்கள்.

அன்றையநாளிலிருந்து காசியில் தங்கிய எல்லா நாட் களிலும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து உபசரிப்பிலே நாங்கள் எல்லோரும் தங்கியிருந்தோம். இவ்வளவும் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுடைய குருபக்தியின் விளைவாகக் கிடைக்கப்பெற்றன.

அன்று மாலை கங்காஸ்நானஞ்செய்து கேதார கட்டத்தி லுள்ள ஸ்ரீ கேதாரேஸ்வரர் வழிபாடும் செய்துகொண்டோம். மறுநாட்காலை தொடங்கி ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் கங்காஸ்நானமும் ஸ்ரீ கேதாரேஸ்வரர் வழி பாடும் செய்யத் தவறுவதில்லை.

ஸ்ரீ குமாரசாமி மடம் தொண்டு

தமிழ் நாட்டில் பல இடங்களிலும் அன்னதானமும், கல்விதானத்திட்டங்களும், பரிசுத்திட்டங்களும், திருமுறை முழக்கமும்,கட்டிடத்திருப்பணித்திட்டங்களும்அமைத்திருப் பது போலவே வடநாடுகளிலும், ஸ்ரீ காசிமடம் செய்து வருகிறது.

கட்டிடத் திருப்பணி

ஸ்ரீகாசியிலுள்ள ஸ்ரீகுமாரசுவாமி மடத்துக்குச் சொந்த மான கட்டிடங்கள் பலவும் திருத்தப்பட்டு கட்டப்பட்டு

வருகின்றன. மிகப்பழய கட்டிடங்கள்இடிக்கப்பட்டுப் புதிய முறையில் நவீன வசதிகளோடு கட்டப்பெறுகின்றன. இதனுல் பார்வையாவதோடு வருமானமும் பெருக வசதியாகிறது. ஸ்ரீகுமாரசுவாமி மடம் பிரதான கட்டிடத்திலும் மிகப் பழயபகுதிகள்காலத்தால் கிலமானவற்றைப்பிரித்துஎடுத்து விட்டுப் புதிதாக வசதிகள் பொருந்தக் கட்டப்பட்டிருக்கின்றன. முன்முறை சென்றுகண்ட காலத்தில் இருந்ததை விட இப்பொழுது மேலும் பல திருத்தங்களும் புதிய கட்டிடங்களும் எழுப்பப் பெற்றிருப்பதை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் பார்வையிட்டு மகிழ்ந்தார்கள். நல்ல ஆட்சியின் அறிகுறிகள் அங்கே ஒவ்வொன்றிலும் காணப் படுகின்றன. ஸ்ரீ காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் ஆட்சி ஏற்றபிறகு இங்குப்பலலக்ஷக்கணக்கான ருபாய் செலவில் சிக்கனமாகவும், அழகாகவும் பல சீர் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. நல்லதொரு திட்டத்தில் வருஷா வருஷமும் காரியங்கள் செய்து வருவது பாராட்டக்கூடிய முறையில் அமைந்திருப்பதாகவும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளம்.

ஸ்ரீ காசியில் தருமங்கள்

ஸ்ரீ குமாரசுவாமி மடத்தில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் அன்னம்பாலிப்பு, அவர்கள் நினைவாக மார்கழி ஆனி, புரட்டாசி மாத அன்னதானங்கள், மகாத்மா காந்தி அடிகள் நினைவு அன்னதானம், ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம், தை மாதத்தில் இந்தியக் குடியரசுதின அன்னதானம், திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் நினைவு அன்னதானங்கள், தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மாசிமாத அன்னதானம், கமலை ஞானப்பிரகாசர் நினைவு,

கச்சியப்ப சுவாமிகள் நினைவு, திருமூலர் நினைவு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் நினைவு, கோச்செங்கட் சோழன் நினைவு, காரைக்கால் அம்மையார், இசைஞானியார், திருநீலகண்ட நாயனர், நன்பாட்டுப் புலவர், மும்மையால் உலகாண்ட மூர்த்தி முதலிய அருட் பெரியோர்கள் பலர் நினைவாக அன்னம்பாலிப்புக்களும், ஸ்ரீ கேதாரீஸ்வரர் ஆலயத்தில் நவராத்திரியில் விஜயதசமி அன்று அன்னதான மும், செய்ய பல லக்ஷக்கணக்கான தோகை மூலதனம் வைத்து நடத்தி வருகிறார்கள்.

ஞானதானம்

வடநாட்டிலும் சைவ சித்தாந்தக் கோள்கைகளைப் பற்றியும் திருமுறைகளைப் பற்றியும் சொற்பொழிவுகள் செய்ய நிதித் திட்டங்கள் அமைத்திருக்கிறார்கள். அதன் படியே ஸ்ரீ மாளவியாஜி பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார், ஸ்ரீ காசி ஹிந்து சர்வகலாசாலைகளிலும் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த போதனைப் பிரிவு உண்டாக்கி அதன் பரிபாலனத்திற்காக ரு 96,000மும், கல்கத்தா சர்வகலாசாலையில் தமிழ்ப்பரிசு அளிக்க நிதியும் அளித்துள்ளார்கள்.

ஸ்ரீ காசி யாத்திரை


பழுத்த தமிழ்ப்புலவர் ஸ்ரீ காசி யாத்திரை செல்ல நிதித் திட்டம் அமைத்துள்ளார்கள். இதுவல்லாது பலரையும் ஸ்ரீ காசிக்குச் சென்றுவர உதவிநிதி அவ்வப்போதும் அளித்து வருகிறார்கள்.

ஸ்ரீ காசியில்



ஸ்ரீ விஸ்வேஸ்வரர் (பாலபிஷேகம்)

ஸ்ரீ காசியில்



பாற்கடலில் பாற்கடலீந்தபிரான் (ஸ்ரீ விஸ்வேஸ்வரர்)

புகலிடம்

தென்னாட்டிலிருந்து ஸ்ரீ காசியாத்திரை செல்வோருக்கு ஒரு தாயகமாக, திக்கற்று நிற்கும் தமிழர்களுக்கு ஸ்ரீ காசியில் புகலிடமாக ஸ்ரீ குமாரசுவாமி மடம் இருந்து தொண்டாற்றி வருகிறது.

நித்தியப்படியிலும் பல பிராமணர்களுக்கும் மற்றையோருக்கும் நடுப்பகல் உணவும், இரவுணவாக ரொட்டி, சப்பாத்தியும் வழங்கிவருகிறது. பொதுவாக அடியார்களுக்கு ஆதரவு காட்டி ஸ்ரீ காசியில் தங்க வசதி அளித்து வருகிறது.

ஆணை பிறந்தது !

ஸ்ரீ காசிக்குவந்த அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அங்கு எழுந்தருளியிருக்கும் செய்தி கேட்டு அந்நகர முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாக இருந்து பணிபுரிந்துவரும் ஸ்ரீ கேசவபிரசாத் என்னும் அன்பர் ஸ்ரீ குமாரசாமி மடத்துக்குவந்தார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைக் கண்டு வணக்கம் தெரிவித்துக்கொண்டார். பொதுவாக ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைப்போன்ற சாதுக்கள் தரிசனம் தன்னையொத்த அரசியல் அதிகாரிகளுக்குப் பெரிய உயிர்த் துணையாக அமைவதாகவும் சொன்னார். பல பெரிய க்ஷேத்திரங்களைப்பற்றியும் பேச்சுவந்தது. காசிமகாத்மியம், பதரி கேதாரயாத்திரைச் சிறப்பு, கயிலாய யாத்திரை, நேபாலயாத்திரை முதலிய பெரும் யாத்திரைகளைப்பற்றியும் பேச்சுவந்தது. தன்னுடைய உத்தியோக நிலையில் தான் நேரே அந்த க்ஷேத்திரங்களுக்குப் போக முடியாவிட்டாலும் போவோருக்குத் தன்னாலான உதவிபுரிவதாகச்சொல்லி மகிழ்ந்தார்.

அவர் எப்படி இந்த யாத்திரைகளுக்கு உதவமுடியும் என்ற எண்ணம் எங்களுக்கு வந்தது. பிற்பாடு நேபால யாத்திரைக்கு இது பெரிய உதவியாகும் என்று நாங்கள் எண்ணவில்லை. நல்ல பேச்சாகக் கொஞ்சநேரம் பேசியிருந்துவிட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு போனார் ஸ்ரீ பிரசாத்.

அப்போதே நேபாலம் செல்லவேண்டுமென்ற எண்ணம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் உள்ளத்தில் உதித்தது. ஆணையும் பிறந்தது.

லக்ஷார்ச்சனை

செவ்வாய்க்கிழமை அன்று கேதாரேஸ்வரர்க்கு ஏகதின லட்சார்ச்சனை, கார்த்திகேயருக்கு ஷண்முகார்ச்சனை. அம்பிகைக்கு சஹஸ்ரநாமார்ச்சனை நடந்தன. அப்பக்கத்து மக்கள் திரள்திரளாக வந்து தாம் முன்பு இதேபோல, கண்டிராத அர்ச்சனைகளைக் கண்டு இன்புற்றனர்.

விசுவநாதர் அபிஷேகம்

மறுநாள் ஸ்ரீ காசிவிசுவநாதர்க்குப் பெரிய அபிஷேக ஆராதனைகள் நடந்தன. பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரானைப் பாற்கடலில் எழுந்தருளச்செய்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் வழிபட்டார்கள். ஸ்ரீ விசுவநாதர் தொட்டி நிறைந்து ததும்பி வழிந்து ஒடியது பால். இப்படியாக அபிஷேகத்திரவியங்கள் நிறையக் குவிக்கப்பட்டிருந்தன. எல்லா அபிஷேகமும் முடிந்து நாங்கள் ஸ்ரீ குமாரசாமி மடத்துக்குத் திரும்ப வரும்போது பிற்பகல் சுமார் 2 மணி இருக்கும்.

பிரயாகை

[1] ஸிதாஸிதே ஸரிதே யத்ர ஸங்கதே
தத்ராப்லுதாஸோ திவ முத் பதந்தி ।
யே வை தன்வாம் விஸ்ரு ஜந்தி தீராஸ்
தே ஜனாஸோ அமிர்தத்வம் பஜந்தே ॥

(ரிக்வேதபரிசிஷ்டம்)

வெண்மையான கங்கை, கருப்பான யமுனை என்ற இரு நதிகள் எங்கு சேருகின்றதோ அங்கு ஸ்நானம் செய்தவர் ஸ்வர்க்கத்தை அடைவர். அங்கு சரீரத்தைவிட்ட ஜனங்கள் மோக்ஷமடைவர் என்று கூறப்பட்டிருக்கிறது.

[2] இமம் மே கங்கே யமுனே ஸரஸ்வதி
சுதுத்ரி ஸ்தோமம் ஸசதா பருஷ்ணியா ।

(யஜுர்வேத அகமர்ஷண சூக்தம்)

கங்கா, யமுனா, ஸரஸ்வதி, சுதுத்ரி என்ற புண்ணிய நதிகளே! நீங்கள் என்னுடைய இந்த பாபக்குவியலை நீக்கி என்னைத் தூய்மையுடையவனாகச் செய்யவேண்டும்.

[3] அஷ்டா ஸப்ததிம் பரதோ தௌஷ்யந்திர்யமுனாமநு ।
கங்காயாம் வ்ருத்ரக்னே பத்னாத் பஞ்ச பஞ்சாசதம்
ஹயான் ॥

(ஐத்ரேய பிராமணம் அத் 39. கண் 9.)

---

[1] सिताऽसिते सरिते यत्र संगथे तत्राप्लुतासो दिवमुत्पतन्ति
ये वै तन्वां विसृजन्ति धीरास्ते जनासोऽमृतत्वं भजन्ते

[2] "इमं मे गङ्गे यमुने सरस्वति शुतुद्रि स्तोमं स च ता परुष्णिया"

[3] अष्टासप्ततिं भरतो दौष्यन्तिर्यमुनामनु ।
गङ्गायां वृत्रघ्नेऽबध्नात् पञ्चपञ्चाशतं हयान् ॥

துஷ்யந்தன் குமாரன் பரதன் யமுனாநதிக்கரையில் எழுபத்தெட்டு அசுவமேத யாகங்களையும் கங்கைக்கரையில் ஐம்பத்தைந்து யாகங்களையும் செய்தான்.

மேலும் ரிக்வேதம் எட்டாவது அஷ்டகத்தில் प्रसुव आपो महिमानमुत्तमम् என்று தொடங்கி इमं मे गङ्गे यमुने என்பது வரையில் கங்கை முதலிய நதிகளையும் தீர்த்தத்தின் பெருமையும் கூறப்பட்டிருக்கின்றன. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் கும்பமேளா என்ற உற்சவம் சிறந்தது. பாரத தேசத்திலுள்ள பலதிறப்பட்டோரும் பல லக்ஷக்கணக்கில் இதிற் கலந்து தீர்த்தமாடிப் புண்ணியம் பெருக்குகின்றார்கள்.

இவ்விதம் வேதகாலம் தொடங்கியே சிறப்புற்று விளங்கும் பிரயாகைக்கு, புதன்கிழமை அதிகாலையில் புறப்பட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் சென்று, திரிவேணி சங்கமத்தில் தீர்த்தமாடித் தீர்த்த மெடுத்துக் கொண்டு காசிக்குத் திரும்ப எழுந்தருளினார்கள்.

சாது சமாராதனை

வெள்ளிக்கிழமை ஸ்ரீ காசியிலுள்ள எல்லா அகாடாக்களிலுமுள்ள சாதுக்களுக்கு அழைப்புக்களனுப்பி விருந்து நடந்தது. நல்ல உயர்ந்த சாதுக்கள், தவசிரேஷ்டர்கள். அகாடாக்களில் (மடங்களில்) இருந்து விளங்குகின்றார்கள். இந்துசமயப் பிரிவுகள் எல்லாவற்றையும் சேர்ந்த பெரியோர்கள் அவரவரும் அவரவருக்கேற்பட்ட அகாடாவில் தங்கி யிருக்கிறார்கள். காபாலிகர்கள், பாசுபத மதத்தார், அத்வைதிகள், சைதன்ய மதத்தைச் சார்ந்தவர்கள், வல்லபர்வழி நிற்பவர்கள், இப்படியாகப் பலப்பல

வழிகளிலும் நின்று ஆன்ம அநுபவம் பெருக்கும் பெரியார் கள் அங்கங்கும் உண்டு. அந்த நல்ல பெரியோர்கள் விருந்தேற்கக் குமாரசாமி மடத்துக்குக் குறித்த காலத்தில் வந்து சேர்ந்தார்கள்.

ஒருநாளைக்கு ஒருமுறை உணவு ஏற்பார்கள் அவர்கள். அதுவும் அந்த நாட்டு முறையில் அமைந்ததாக இருக்கும். பூரி, டால், கீர், கச்சோடி, சூடி, லட்டு இப்படியாகப் பலதரப்பட்டவை. எல்லாம் நல்ல நெய்யில் கைதேர்ந்த பணியாளர்களைக்கொண்டு செய்திருத்தல் வேண்டும். அநுபவம் மிக்கவர்கள் இருந்து உபசரித்தல் வேண்டும். பந்தியில் அமர்வது ஒரு குறிப்பிட்ட தகுதிமுறையில், அவரவர் தவமேன்மைக்கு ஏற்றவாறு இடம் அமைத்து அமர்கின்றார்கள். உணவு வகைகள் அவரவரும் போது மேன்று சொல்லுமளவுக்குப் படைக்கப்படல் வேண்டும். ஒரு சிறுகுறை கண்டாலும் அவர்களுக்குக் கோபம் மிக உண்டாகும். ஆகவே சிறு குறைபாட்டுக்கும் இட மில்லாது மனம் உவந்து மனதில் அன்புகொண்டு அளிக்கப் படும் விருந்துகளை மட்டிலும் அவர்களும் மகிழ்ச்சியோடு ஏற்று ஆசி வழங்கிச் செல்வார்கள்.

அவசரம் இல்லாமல் கைகால் சுத்தி செய்துகொண்டு ஆசனத்தில் அமர்ந்து உணவுகொள்ளும் காட்சி காணத் தெவிட்டாத ஒன்று. தொடக்கத்தில் எல்லோருமாகச் சேர்ந்து நாமபஜனை செய்துவிட்டுச் சில உபநிஷதப் பகுதி களையும் சொல்லிப் பிறகுதான் உணவுக்கலனில் கைவைப் பார்கள். அப்படி அவர்கள் உணவு ஏற்கும்பொழுதும் இங்கொருவர் அங்கொருவராகத் தொடர்ந்து வேத உப நிஷத வாக்கியங்களையும் சிறந்த தோத்திரங்களையும்

சொல்லிக்கொண்டே யிருப்பர். மற்றையோர் உணவு கொள்வர்.

'படே சுந்தரமூர்த்தி ஹை!'

இந்த சாதுக்கள் விருந்து நடக்கும்போது, ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வந்து எல்லோருக்கும் பரிவாக உபசாரம் செய்தார்கள். பாஷை புரியாவிட்டாலும், மலர்ச்சி இருந்தபடியால் திருப்தியாக அவர்கள் விருந்தேற்றார்கள். "படே சுந்தர்மூர்த்திஹை! படே தவ சிரேஷ்ட்!"என்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைப்பார்த்து அவர்களுக்குள் பேசி மகிழ்ந்தார்கள். இப்படி நல்ல பெரியவர்கள் தங்களுக்கு விருந்து அளிக்கப்பெறும் வாய்ப்பு ஏற்பட்டதுபற்றிப் பெருமகிழ்வு கொண்டு ஆண்டவனுடைய அருள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குத் திருவருட் பதிவாக நின்று துணை செய்வது தங்களுக்குப் பெருமை யாக இருப்பதாகவும், தங்களுடைய தவம் இதுபோன்ற பெரியோர்களின் கூட்டுறவால் மிகு பலன் அளிக்குமென்று நம்புவதாகவும் சொல்லி விடை பெற்றுச் சென்றார்கள். அன்று அங்குக் கண்ட காட்சி சிவலோகக் காட்சியாகப் பெருமையோடு எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்று.

தகுதிப்பாடு

நல்ல புண்ணிய வசமிருந்தாலொழிய அப்படிப்பட்ட சிறந்த தவசீலர்களைக் காண்டலும் அரிதேயாகும். இந்தத் திருக்கூட்டத்திலே எல்லோரும் எளிதிற் கலந்துவிட முடியாது. நைஷ்டிக பிரமசரியமும், பெரிய படிப்பும், ஒழுக்கமும், சாது சேர்க்கையும், தொண்டு செய்யும் மனப் பண்பும் நிறைந்தவர்கள். பெரிய சாதுக்களிடம் உரிய

முறையில் உபதேசம் பெற்றுத் தவம் பெருக்கி, தவப்பெருமையினுலே சாதுமஹாராஜாவாக இருந்தவர், மண்டலேசுவரர் மஹாமண்டலேசுவரர் என்ற பெருமை அடைந்து உயர்பதவி பெறுதல் வேண்டும். துவராடை உடுத்ததாலோ, மற்ற புறத்தோற்றங்களாலோ யாரும் அந்தத் திருக்கூட்டத்தில் சேர்ந்துவிட முடியாது ஏற்றுக் கோள்ளப்பட மாட்டார்கள். குறிப்பிட்ட நியதி வழியிலே செல்லக்கூடியவர்கள்தான் அதில் சேர முடியும். பொது வாக வடநாட்டு மக்கள் சந்நியாசிகளை - துறவிகளைத் தங்கள் குடும்பப் பெரியோர்களாக - கடவுட் பிரதிநிதி களாகக் கருதி விரும்பி வணங்கி உபசரிக்கும் பண்பாடு உடையவர்கள். துறவிகள் மனம் கோணுது அவர்கள் வேண்டியவற்றை உடனே சேய்துகோடுத்து ஆசிபேறு கிருர்கள். ஆணும் பேண்ணும் துறவிகளைத் தங்களில் ஒருவராக வேற்றுமைகாட்டாது ஏற்றுக் கோள்ளுகிருர்கள்.

ஸ்ரீ காசி - புரானப் பகுதி

ஸ்ரீ காசி வாரணுசி, மகாஸ்மசானம் என்ற பல பெயர் கள் வழங்கப்படுகிறது. சிவசூலவடிவில் அமைந்தது. முன் யுகங்களில் தங்கமயமாயிருந்தது. கலியில் மண்ணும் கல்லுமாகி விட்டது.

தீர்த்தங்கள்

கங்கையைத்தவிர, பிஷக்மோஹன், அகஸ்தியகுண்டம், ஞானவாவி, அமிர்தகுண்டம், தன்வந்திரி தீர்த்தம், நாக குண்டம் முதலிய சிறந்த தீர்த்தங்களும் இந்நகரில் உண்டு. பேய், பிசாசு நீக்கம் கருதி மக்கள் பிஷக்மோஹனில் தீர்த்தமாடுவர். அது மணிகர்ணிகா கட்டத்துக்குப்பக்கத்தில்

அமைந்தது. காசியிலுள்ள பலரும் எப்போழுதும் விரும்பி இங்கு வருவார்கள். அமிர்தகுண்டம்-நோய் நீக்கத்துக்குத் தீர்த்தமாடுமிடம். தன்வந்திரி தீர்த்தம் - இந்தத் தீர்த்தத்திலிருந்து எடுக்கப்படும் நீர் கைகண்ட மருந்து. வயிறு முட்டக் குடித்து நோய் நீக்கம் பெறுகிறார்கள். நாக தீர்த்தம் - வருஷத்துக்கோரு மேளா நடைபெறுகிறது; மிக விசேஷமானது. அங்கே விஷ நீக்கம் கருதிச் சென்று பலனடைகிறார்கள்.

ஆலயங்கள்

க்ஷேத்திர விசேஷமாக விசுவேஸ்வரம், பிந்துமாதவம், அமிர்தேஸ்வரம், இரத்னேஸ்வரம், விருத்தகாலேஸ்வரம், சித்ராங்கதேஸ்வரம், நீலகண்டேஸ்வரம், ஹரம்பாபேஸ்வரம் போன்ற பல பெருந்தலங்களும் காசியில் உள்ளன. பொதுவாகச் சிவசக்தி பேதங்கள் எல்லாவற்றிற்கும் ஸ்ரீ காசியில் ஆலயங்கள் அமைந்திருக்கின்றன என்று அறிஞர் கூறுவர். காசியிலேயே உள்ளவர்க்கு இந்த விசேஷ பலன்கள் தெரியவரும். வெளியிலிருந்து வருவோர்க்கு இப்பெருமைகள் தெரிவதற்கில்லை.


புராண வரலாறு

காசி க்ஷேத்திரத்தில் பல சிவாலயங்கள் இருப்பினும் முத்தேஸ்வரர், இரத்தினேசர், ஒங்காரேஸ்வரர், விசுவேசர், விருத்தகாலேசுவரர், கேதாரேசுவரர் முதலிய் முப்பத்தாறு லிங்கங்கள் மிகப்பெருமை மிக்கவை.

அமுதேசர்

முன்னைய யுகத்தில் சனாரு என்ற முனிவன் இருந்தான். அவனுக்கு உவசம்பினி என்ற மகன் உண்டு.

பிரயாகையில் திருமஞ்சனம்



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் சிவதர்மபாஸ்கர சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டர் அவர்களும்

பிரயாகையில்



அனுஷ்டானம்

யாககாரியங்களுக்காகக் காட்டில் சென்று சமித்துப் பொறுக்கிவரச் சென்ற உவசம்பினி ஒருநாள் பாம்பு கடித்து இறந்தான். அப்பிணத்தை எரிப்பதற்காகத் தூக்கிச் சென்று ஓரிடத்திலிட்டு தகன காரியங்களைச் செய்ய முயன்றான் முனிவன். அந்த இடத்திலிட்டவுடன் உவசம்பினி உயிர்பெற்றெழுந்தான். முனிவனுக்கு வியப் பாக இருந்தது. அந்த இடத்தில் ஏதோவொரு விசேஷம் இருக்கவேண்டுமென்று நினைத்தான். அப்படி அவன் நின்றிருக்கையில் பெண் எறும்பு ஒன்று தன் கணவன் (ஆண் எறும்பு) இறந்ததை எடுத்து வந்து இவன் மகன் கிடத்தப்பட்ட இடத்தில் போட்டது. உடனே ஆணெறும்பு உயிர்பெற்றெழுந்தது. ஆணும் பெண்ணும் மிக்க மகிழ்ச்சியுடன் அப்புறம் ஓடிவிட்டன. அந்த மண்ணில் இறந்தவர் உயிர் பெற்றெழும் மகிமை ஏதோ இருக்கிறதென்றெண்ணிக் கைவைத்துச் சிறிது மண்ணை அள்ளினான். இவன் கையில் ஏதோ ஒன்று தட்டுப் பட்டது. இன்னும் சிறிது தோண்டிப் பார்த்ததும் அது ஒரு சிவலிங்கத் திருமேனியாக எழுந்தருளியிருப்பதைக் கண்டான். அதனை எடுத்துப் பிரதிஷ்டை செய்து வழி பட்டான். அதுவே அமுதேச லிங்கம்.

அவிமுக்தம்

சிவபெருமானே காசியில் ஒரு சிவலிங்கம் அமைத் தார். அது அவிமுக்தம் என்னும் பெயரை உடையது.

இரத்தினேஸ்வரர்

பார்வதியின் திருமணத்திற்காக ஏராளமான இரத்தினங் களை எடுத்துவந்தான். மலை அரசன் அவைகளை ஓரிடத்தில்

குவித்து வைத்தான். அது அப்படியே ஒரு சிவலிங்கத் திருமேனியாகக் காட்சியளித்தது. அதனை இரத்தினேஸ் வரராக வழிபட்டு அவன் அகன்றான். சம்பத்து விரும்பு வோர் இம்மூர்த்தியை நினைந்து வழிபாடு செய்வார்கள்.

ஓங்காரேஸ்வரர்

இவ்விலிங்கம் பிரம்மாவினால் பிரதிஷ்டை செய்து வழி படப்பட்டது. இத்திருக்கோயில் திருச்சுற்றில் தவளை ஒன்று வசித்து வந்தது. அது பெருமானுக்கு நாடோறும் இடும் நைவேதனத்தை உண்டுவந்தது. ஒருநாள் அவ்வித மாக நைவேத்தியப் பொருளை அது உண்ணும்போது காக்கை யொன்று அதனைப்பற்றி யெடுத்துச்சென்று தின்று விட்டது. பெருமானுக்கு நைவேத்தியமாக இடும் பொருளை இத் தவளை தின்ற அபசாரத்தினால் காகம் அதனை விழுங் கியது. பெருமானை வலம்வந்த நன்மையினால் மறு பிறப்பில் காசியில் மலர்மாலை கட்டுவோன் மகளாகப் பிறந்து மாதவி எனப் பெயர் பெற்றது அத்தவளை. மாதவி நல்ல அழகி. ஆடல் பாடல்களில் ஆற்றல் மிக்கவள். முற்பிறப்பின் உணர்வு தோன்ற அவள் ஓங்காரேஸ்வரப் பெருமானை வழிபட்டு அவர் திருமுன்னர் ஆடல் பாடல் புரிந்து வந்தாள். இப்படியே சிவபுண்ணியம் பெருக்கி ஒரு வைகாசி மாதம் சதுர்த்தசி திதியில் ஓங்காரேஸ்வரர் திருவடி சேர்ந்தாள்.

பஞ்சநத வரலாறு (பஞ்சகங்கா)

வேதசிர முனிவனுக்கும் தேவகன்னிகை சுசிக்கும் பெண்ணொன்று பிறந்தது. அழகுடன் வளர்ந்து பருவ மடைந்தது. தருமன் என்பவன் அவளைப் பலாத்காரம்

லைச்செய்து புணர்ந்தான். அவள் அதனால் கோபமுற்று அவனை நதியாகப் போமாறு சபித்தாள். அதற்கு எதிராக அவனும் அவளைப் பாறையாகப் போமாறு சபித்தான். அவன் தருமாநதம் என்ற பெயரில் ஆறுகப்பெருகி ஓடினான். இந்தச்செய்தியை, அவள் தந்தை வேதசிர முனிவன் ஞானதிருஷ்டியால் உணர்ந்து வெறுங்கல்லாகப் போகாமல் அவள் சந்திரகாந்தக்கல்லாகப் போகுமாறு அருள் செய்தான். அந்த சந்திரகாந்தக் கல்லானது சந்திரனுடைய ஒளியினால் உருகி நதியாகப் பெருகி தூதபாவை எனும் பெயரிய ஆறுக ஓடியது. அதுவும், தருமாநதமும், கங்கையும், யமுனையும் கிரணையும் சேருமிடம் பஞ்சநதமெனப் பெயர் பெறும். காசியிலுள்ள முக்கியமான கட்டங்கள் ஐந்தனுள் இதுவுமொன்று.

கேதாரகட்டம்

மாந்தாதா ஒரு பேரரசன். அவன் நாடோறும் இமயத்திலுள்ள கேதாரநாதனைச் சென்று கண்டு வழிபாடுகள் செய்து பிறகு உண்ணும் நியதி உடையவன். நீண்டகாலம் இவ்வாறே செய்துவந்து முதுமையடைந்தான். முன் போன்று அவன் கேதாரத்திற்குச் சென்று வருவது இயலாததாயிருந்தது. சில நாட்கள் அவன் பட்டினிகிடக்கவும் நேர்ந்தது. தவசீலர்கள் பலர் அவனைக்காண வந்தனர். அவன் தன் நியமம் தவறித் தவிக்கும் தனது நிலையை எடுத்து முனிவர்களிடம் தெரிவித்துக்கொண்டான். முனிவர்களும் தம்முட்கலந்து ஒரு முடிவு சொன்னார்கள். 'அவன் கேதாரம் செல்ல வேண்டுமென்பதில்லை. கேதாரநாதரை இடைவிடாது சிந்தனைசெய்து வருவதோடு சிவனடியாரோருவருக்காவது சூரியன் மறையுமுன் உணவிட வேண்டும். அவர் உண்டுவிட்டுச் செல்லும் பரிகலசேடத்தை

இவன் உண்ண வேண்டும். கேதாரநாதர் சிந்தனையும் அந்த பரிகல சேடமும் அவனை உய்விக்கும். கவலை வேண்டாம்,' என்று ஆறுதல் சொல்லிச் சென்றனர். அன்றிலிருந்து அவன் அவ்வண்ணமே செய்து வருவானாயினான்.

ஒருநாள் ஒருசோதனை. அன்று மாலைப் பொழுது ஏறஏற அடியார் ஒருவரும் கிடைத்திலர். அமுதுபடைத்து. அடியவர் வருகையை எதிர்நோக்கியிருந்தான். அந்திமயங்கும் நேரம். அடியவரொருவர் வந்தார். ''படைத்திருக்கும் அமுதை ஒருகூறு உனக்கும் ஒருகூறு எனக்குமாக இடுக; நான் கங்கையில் நீராடி வருவேன்'' என்று சொல்லிச் சென்றார். அப்படியே அவன் படைத்த கலத்தில் இருந்த அன்னத்தின் மீது ஒரு கோடிட்டு வைத்தான். சென்ற அடியவர் மீண்டும் வரவில்லை. மனம் வருந்தினான். மூப்பும் பசியும், மன வருத்தமும் அவனை வாட்ட அவன் அப்படியே உறங்கி விட்டான். அவனுடைய கனவில் அவனை யாரோ தட்டி எழுப்பி 'நீ உணவருந்தலாமே' என்று கூறியதுபோல இருந்தது. அவன் எழுந்து சென்று பார்த்தபோது அந்த அன்னம் கல்லாகச் சமைந்திருப்பதைக் கண்டான். மனம் அயர்ந்தான். 'அடியவர் அபசாரம் நேருமே என் செய்வது' என்று கவன்றான். அசரீரியாகப் பெருமான், 'அன்பனே! கவலற்க; நாமே இப்பொழுது அன்னருபமாக அந்த இடத்தில் அமர்ந்துள்ளோம். கேதாரக் காட்சியை இங்கு நீ கண்டு உய்யலாம்' என்று கூறினார். அதே நிலையில் இப்பொழுதும் பெருமான் இங்கு எழுந்தருளிக் காட்சி அளிக்கிறார். மாந்தாதா அப்பெருமானை வழிபட்டுக் கேதார நாதன் பாதாரவிந்தத்தை அடைந்தான்.

இராஜேந்திர கற்பத்தில் வசிஷ்டருடைய குருவான இரணியகற்பன் என்னும் பாசுபதாசிரியன் இமயத்திலுள்ள

கேதாரத்தில் முத்தியடைந்தான். வசிஷ்டனும் வயோதிக நிலையிலிருந்தான். ஆண்டுதோறும் கேதாரஞ்சென்று வழிபடும் வழக்கம் வாய்க்கப்பெற்றவன். வயது முதிர்ந்த நிலையில் அங்குச்செல்ல இயலாது மனம் வருந்தினான். அந் நிலையில் இரணியகற்பன் கேதாரத்தில் முத்தியடைந்த செய்திஅவனுக்கு எட்டிற்று. தானும் அங்குச்சென்று இறக்கவேண்டுமென்று எண்ணினான். ஆனால் அவன் உடல் நிலை அதற்கு இடந்தரவில்லை. வருத்தமுற்றான். பெருமானை வேண்டினான். பெருமானும் அவன் கனவில் தோன்றி காசி கேதாரகட்டத்தில் தான் எழுந்தருளியுள்ளதாகவும் அங்கு வந்து விரும்பியவண்ணம் முத்தியெய்தலாமென்றும் கூறியருளினார். தன்னோடுவரும் அடியவர்கள் அனைவருக்கும் அவ்வண்ணமே முத்தியளிக்கவேண்டுமென்று முனிவன் வேண்டினான். 'அப்படியேயாகுக' என இறைவனும் அருள்புரிந்தான். வசிஷ்டன் தன்னடியார்களுடன் அகமகிழ்வோடு இங்குவந்து தரிசித்து வீடுபேறடைந்தான்.

கங்கையில் கேதாரகட்டத்தில் நீராடி கேதாரகட்டத்திலுள்ள கேதாரநாதரை வழிபட்டால் அவர்களுக்கு இம்மையில் அன்னபூரணியின் பூரண அருளும் மறுமையில் திருவடிப்பேறும் கிட்டும். அங்கு வரமுடியாதவர்களுக்கும் அவனை நினைத்தாலே முன்கூறிய பலன் கிடைக்குமென்று தல புராணம் தெரிவிக்கிறது.

இக்கேதாரநாதராலயம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஆதிக்கத்தில் செம்மையாகப் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. தென்னாட்டு முறையில் காலங்களும், ஏறுபடிகளும் அமைத்து, அதற்கும் திட்டம் அமைத்து நடத்தி வருகிறார்கள்.

விந்துமாதவன்

காசியில் அக்கினிவிந்து என்னும் மறையவன் திருமாலைக்குறித்துத் தவம் செய்தான். அதற்கு மகிழ்ந்த பெருமான் அவனுக்குக் காட்சிகொடுத்து வேண்டும் வரம் அளித்தார். அவன் கேட்ட வரங்களில் ஒன்ருக இன்றும் அவர் விந்துமாதவர் என்னும் பெயர்பெற்று அடியார்களுக்கு அருள் வழங்கிவருகிருர். இது விஷ்ணுவாலயம்.

வியாசகாசி

வியாசர் ஒரு சிறந்த வைணவ பக்தர். உலகில் யார் பிரம்மம் என்ற சர்ச்சை நடந்துவந்தது. அதில் விஸ்வ நாதப்பெருமான் சந்நிதியில் திருமாலே பிரம்மம் என்று கைதூக்கி அறுதியிட்டுக் கூறினுர் வியாசர். விஸ்வநாதர் அதனைக் கேட்டு வெகுளாது புன் சிரிப்புடன் இருந்தார். ஆனுல் நந்தியம்பெருமான் சினங்கொண்டு வியாசரை நோக்கி 'தூக்கிய கரமும் தூஷித்த நாவும் அப்படியே அசைவற்றிருக்க' என்று சபித்தார். இந்த நிகழ்ச்சியைக் கேட்டு விஷ்ணு, வியாசர்முன் தோன்றி 'உம்முடைய அறியாத் தன்மையால் என்ன அபசாரம் செய்துவிட்டீர். என்னையும் கெடுத்து உம்மையுமல்லவா கெடுத்துக்கொண்டீர்! "வான மேத்த யான் வைகுந்த வாழ்வு பெற்றதுவும், ஞான நான் முகன் சத்தியவுலகம் நண்ணியதும் ஏனை விண்ணவர் தத்தம் வாழ்க்கை யெய்தியதும், ஆனுயர்த்தவனருட்குறி யருச்சனைப் பயனுல் அன்ருே! ஆகவே நீரும் பஞ்சாட்சர உபதேசம் பெற்று உய்வீராக" என்று கூறித் தாமே பஞ்சாக்ஷர மந்திரோபதேசத்தையும் செய்து வைத்து சிவ பூசையும் எழுந்தருளிக்கொடுத்தார். அதுமுதல் முனிவருடைய கையும் நாவும் முன்போல ஆகிவிட்டன. வியாசர் தம்பெயரால் இலிங்கம் ஒன்று ஸ்தாபித்து வழிபட்டுவந்தார்.

முத்திமண்டபத்தில் அமர்ந்து காசியில் இன்னின்னவை செய்யலாகாது என்று தருமோபதேசம் செய்துவந்தார். பெருமான் அவரன்பைச் சோதிக்க நினைத்தார். வியாச ருடைய சீடர்கள் தங்களுக்காகவும், தங்கள்குருவுக்காகவும் பிச்சையெடுத்துவரச் சென்றவர்களுக்கு அன்று பிச்சையே கிடைக்கவில்லை. அவர்கள் வருந்தித் திரும்பி வந்து தங்களுடைய குருவிடம் தெரிவித்துக்கொண்டார்கள். மறுநாளும் அதேபோன்றே எங்கும் பிச்சை அகப்பட வில்லை. இதனைக்கேட்ட முனிவன் கடுங் கோபங்கொண்டு 'இந்தக் காசிமாநகரை விட்டு வித்தை, செல்வம், மோட்சம் ஆகிய மூன்றும் மூன்றுதலைமுறைகட்கு நீங்கு வதாக' என்று சபித்தான்.

பிறகு, உமாதேவியார் பெருமானுடைய ஆணைப்படி வியாசரையும் அவருடைய மாணுக்கர்களையும் விருந்து உண்ண வரவேண்டுமென்று அழைத்தாள். வியாசரும் அதனையேற்று விருந்துண்ணச் சென்றார். விருந்து படைக்கப்பட்டது. முனிவரும் மற்றையோரும் அமர்ந் தார்கள் உமையம்மையார் முனிவரை நோக்கி 'முனிவ! எனக்குச் சில ஐயங்கள் உண்டு. அவற்றைத் தெளிவிக்க வேண்டுமென்று' கேட்டாள். 'அப்படியேயாகட்டும்' என்றார் முனிவர்.

முதற்கேள்வி :- பெண்களுக்குச் செம்மையான தருமம் யாது ?

விடை :- கணவர் விரும்பியதைச் செய்தல்.

இரண்டாவது கேள்வி :- எல்லாருக்குமுரிய பொது தர்மம் எது ?

பதில் :- அஞ்சத்தக்க சொற்களைச் சொல்லாமை, கோபங் கொள்ளாமை, தானம், தவம், கிருபை, துணிவு கொண்டு பேசுதல், பொருமையில்லாமல் தன்னுயிரைப் போல் மன்னுயிரைக் காத்தல்.

அந்த அடியார் கூட்டத்தில் வேதியராக வந்திருந்த பெருமான் வியாசரை நோக்கி 'இவற்றுள் ஒன்றுவது உன்னிடமுண்டா? உண்டாயின் சாபம் கூறிய காரணம் யாது?' என வினவினார். மேலும் 'இவைபோன்றவற்றை நினையாமல் சாபம் விடுவானாகில்' செல்லுதற்கரிய அச் சாபம் சபித்தோனிடமே திரும்பிவந்து, பலனைக் கொடுக்கு மென்று கூறினார். இப்படிப்பட்டவர்கள் காசியிலிருத்த லாகாது! ஸ்ரீ காசியைவிட்டு நீங்குக' எனவும் பணித்தார். முனிவர் பிறருக்குப் போதித்த அவ்வொழுக்கங்கள் தம்மிட மில்லாமல் போயினவே என வருந்தித் திருவடியில் வீழ்ந்து வணங்கினார். 'உம்முடைய தரிசனமில்லாது நானெப்படி உயிர்வாழமுடியும்; அருளுக' எனவேண்டினார்.

பெருமான் திருவுளம் இரங்கித் தம்மை அஷ்டமி சதுர்த்தசி, இவ்விரு திதிகளில் மட்டும் வழிபட்டுப்போமாறு பணித்தார். வியாசர் ஸ்ரீ காசியைவிட்டு நீங்கி அக்கினி திக்கில் (தென்கிழக்கில்) சென்று அமர்ந்து தவம் பெருக்கி வருகிறார். அவருக்குக் காட்சி நல்கும் திருவுள்ளத்தோடு பிரானும் பிராட்டியும் அங்கு எழுந்தருளியிருக்கிறார்கள். அதற்கு வியாசகாசி என்று பெயர்.

அன்னபூரணாஷ்டமி

ஸ்ரீ காசியில் தங்கியிருந்த காலத்தில் கங்கை அறுபத் துநான்கு கட்ட தரிசனம். முக்கியமான கட்டங்களில் ஸ்நா னம் முதலியன முறையாக நடைபெற்றன. ஸ்ரீராமநவமிக்கு



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் உடன் சென்ரோரும்



ஸ்ரீ கேதாரேஸ்வரர் பால் அபிஷேகம்

முதல்நாள் அன்னபூரணுஷ்டமி என்ற விழா ஸ்ரீ காசியில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அன்று பல லட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும் அன்ன பூரணுதேவி ஆலயத்துக்குச் சென்று வழிபடுகிருர்கள். திருமணமாகாத பெண்கள் அங்கே நாள் முழுவதும் தங்கித் தோத்திர பாராயணம் செய்கிருர்கள். அதன் விளைவாக அவர்கள் விரைவில் திருமணம் முடிக்கப் பெறு வார்கள் என்ற நம்பிக்கை பரவியிருக்கிறது. ஸ்ரீராமநவமி யன்றும் கங்கா ஸ்நானமும், விசுவேசர் தரிசனமும் மிகச் சிறந்ததாக அம்மக்கள் செய்து மகிழ்கின்ருர்கள்.

'ராம் நாம் சத்யஹே'

ஸ்ரீகாசியில் மரணம், காசி எல்லையில் மரணம், கங்கைக் கரையில் தகனம். இது இந்துக்கள் எல்லோரும் மோட்ச சாதனமாகக் கருதிச் செய்து வருவன. பெரும்பாலும் ஸ்ரீகாசி நகரத்தின் சுற்றுப் புறத்தில் இறப்போரின் சடலங்கள் எல்லாம் ஸ்ரீகாசிக்கு ஆள் மூலமும், படகு முதலியவற்றின் மூலமும் எடுத்துவரப்பட்டுக்கங்கைக்கரை யில் மணிகர்ணிகாகட்டம் அல்லது அரிச்சந்திர கட்டத்தில் வைத்து நெருப்பில் இடப்படுகின்றன. பிணங்களைத் தூக்கிச் செல்வோர் உயிரோடு உலவும் மக்களுக்கு ஓர் அறிவுரை வழங்குகிருர்கள். 'ராம் நாம் சத்யஹே' என்பதுதான் அந்த உபதேசம். உலகம் அநித்தியம், உல கத்தில் காணப்படும் எல்லாப் பொருள்களும் அநித்தியம். நாம் வசிக்கும் இந்தச் சரீரம் அநித்தியம். கடவுள் நாமம் ஒன்று மட்டுமே நித்தியம். இராமன்-இங்கே கடவுளினுடைய பொதுப்பெயராக வழங்கப்படுவது. ஆகவே நம்முடைய உயிர் இந்தக் கூட்டில் வாழும் காலத்தில் இயன்றமட்டும்

கடவுள் நாமாவளிகளை உச்சரித்து உய்யவேண்டும் என்பது அந்த உபதேசத்தின் உட்பொருளாகும். *

பிரயாண அநுமதிச் சீட்டு (Pass-port)

ஸ்ரீகாசி சென்ற அன்றே, கேசவபிரசாத் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைத்தரிசித்துப் பேசிக்கொண்டிருந்த பொழுது நேபாலம் கயிலையாத்திரை போன்ற பெரிய யாத்திரைகளுக்குத் தன்னாலான உதவிகளைச்செய்துவருவதாகச் சொன்னார் அல்லவா? உத்தியோக நிலையில் அவர் செய்யக்கூடியது பெரிய உதவிதான். நேபால யாத்திரை போவோர் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டிடம் ' யாத்திரீகர் நன்னடத்தை உள்ளவர்; அவர் ஒரு பாரதநாட்டுக்குடி ' என்று நற்சாட்சிப் பத்திரம் பெறுதல் வேண்டும். அதனடிப்படையில் வருமானவரி ஒன்றும் பாக்கி இல்லை என்றும் சான்றுப்பத்திரம்பெறுதல்வேண்டும். புகைப்படம் வேண்டும். அந்தப் புகைப்படத்தில் யாத்திரை செல்வோர் கையெழுத்திட்டு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் முத்திரையும் அவருடைய மேலொப்பமும் வேண்டும். இவை யல்லாது சுகாதாரச் சான்றுப் பத்திரங்களும்

---

* " ஒம்பினேன் கூட்டைவாளா உள்ளத்தோர்
கொடுமைவைத்துக்
காம்பிலா முழைபோலக் கருதிற்றே
முகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த் தேரைபோலப் பலபல
நினைக்கின்றேனை
ஒம்பிநீ யுய்யக்கொள்ளா யொற்றியூ
ருடையகோவே. "

தேவைப்படும். இப்படிச் சான்றுகள் பெறுவதில் கேசவப் பிரசாத்தினுடைய உதவி அவருடைய நற்சான்று மூலம் கிடைப்பதாகும். அடியார்களிடம் ஈடுபாடும் கடவுள் பக்தியும் உள்ளவராகவே, அடியார்களாக உள்ள பெரு மக்கள் நேபால கயிலாயயாத்திரை செல்வதாக இருந்தால் நற்சான்று வழங்குவதில் உற்சாகத்தோடு உதவி செய் கிருர். தென்னுட்டுப் பெரிய மஹந்த் (மதகுரு) வந்திருப் பவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும் என்று எண்ணி அவர்களுடைய திருவுளம் பணித்தபடி எல்லாம் குறைவின்றி நிறைவுறத் தன்னுலான எல்லா உதவிகளேயும் தயக்கமின்றிச் செய்து கொடுத்தார். இரண்டோரு நாட் களில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தோடு செல்வதாக இருந்த அத்தனேப் பேருக்கும் பிரயாண அனுமதிச் சீட்டுகள் மிக எளிதில் பெறவாய்ப்பாயிற்று.

செல்லும் வழிகள்

ரெக்சோலிலிருந்து பாரதநாட்டிலுள்ளோர் மலேப் பாதை வழியே செல்ல வழியுண்டு. இரண்டோரு வருஷங் களுக்குமுன் இந்தியப் படையைச் சேர்ந்த இஞ்சினீயர்கள் மிகுந்த திறமையுடன் அந்தப் பாதையைச் செப்பனிட்டு எல்லா வாகனங்களும் எளிதிற் செல்லும்படியாக அமைத்துக் கொடுத்திருக்கிருர்கள். அதற்கு உலகப் பாராட்டும் கிடைத்திருக்கிறது. ஆனுலும் இமயமலேப் பகுதிகள் வேறும் கல்லால் ஆனவையல்ல; கற்பகுதி பல நூற்றுக்கணக்கான அடிகளுக்குக் கீழே இருந்தாலும் மேற்புறம் கல்லும் மண்ணும் கலந்ததாகவே பெரும்பாலும் இருக்கும்.

மலைச்சரிவினூடே வளைந்து வளைந்து மலையையோட்டியே பல சிகரங்களையும் சுற்றி வளைத்துக்கொண்டு அப்பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. கீழே பல நூற்றுக் கணக்கான அடி ஆழமுள்ள பள்ளப்பகுதியோ அல்லது மலையாறோ. இப்புறம் பல ஆயிரக்கணக்கான அடி உயரமுள்ள மலைப் பகுதியும் அடர்ந்த காடும் உயர்ந்த சிகரங்களும் நம் முன்னே காட்சியளிக்கும். பாதையமைத்து இரண்டோரு வருஷங்களேயானாலும் அதன் வழியே பல லாரிகளும், பஸ்களும் செல்கின்றன. நேபால நாட்டுக்குத் தேவையான பொருள்கள் பாரதத்திலிருந்தும், நேபாலம் திபேத்திலிருந்தும் விற்கவேண்டிய பொருள்கள் பாரதத்துக்கும் எடுத்துச் செல்லுவதற்கு நல்லதோரு பாட்டை அது. ஆனாலும் இமயப் பகுதியில் அவ்வப்போது பெய்யும் பெருமழையினால் அடிக்கடி மலைச் சரிவுகள் ஏற்படுவதுண்டு. பல பகுதிகள் அடைபட்டுப் பலநாட்கள் போக்குவரத்தில்லாமல் இருப்பதும் உண்டு. அதுவுமல்லாமல் அந்த மலைப்பாதையில் ஓட்டிப் பழகிய காரோட்டிகளுக்கு மட்டும்தான் அவ்வழியே கார்களை ஓட்டிச்செல்லமுடியும். அவர்களுக்குங்கூட மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வைத்திய சோதனை. கண் பார்வை, காது கேட்டறியும் சக்தி, உடல் நிலை இவை சரியாக இருக்கின்றனவா என்ற வைத்ய பரிசோதனை செய்து நல்ல நிலையில் இருப்பதாகக் கண்டாலொழிய அநுமதி கிடையாது. தனிப்பட்டோர் கார் மூலமாக அங்குச் செல்ல விரும்புவோர் இந்திய அரசாங்கத்தின் மூலம் அநுமதி பெற்றுச் செல்லுதல் வேண்டும். இப்படிச் செல்வதும்கூடப் பலமணி நேரம் ஒரு வழிப்பாட்டையில் நின்று நின்று செல்லவேண்டிவரும்.

இத் தொல்லைகள் ஒழிய, பீஹார் தலைநகரான பாட்னாவிலிருந்து விமான மூலமாக மிக எளிதில் ஒரு மணி

நேரத்திற்குள் நேபாலத் தலைநகரான கட்மண்டு சென்று விட முடிகிறது. அங்கே நாம் வரும் செய்தியை யாரேனும் ஒருவர்க்கறிவித்துவிட்டால், அவர்கள் விமான நிலயத்துக்குக் கார் எடுத்துவந்து நம்மையழைத்துப்போகிறார்கள். இப்போது அங்குப் பல பெரிய ஹோட்டல்கள் உள்ளன, அப்படி யாரையேனும் அங்குத் தெரியாவிட்டாலும் அவர்களுக்கு முன்கூட்டியே செய்தி தெரிவித்துவிட்டால் தங்களுடைய மனிதர்களை அனுப்பி அழைத்துச்செல்கின்றார்கள். வாய்ப்பாகப் பிற வசதிகளும் அவர்கள் செய்து கொடுக்கிறார்கள். செய்துகொள்ளக்கூடியவர்கள், இந்தியத் தூதுவராலயத்தின் மூலம் இங்கிருந்தே ஏற்பாடு செய்து போனால், அந்தநாட்டில் நமக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்துகொள்ளலாம்.

விமானப் பிரயாணம் - சில செய்திகள்

விமானப் போக்குவரத்தில் எந்த இடத்திலிருந்து எந்தப் பகுதிக்குப் போகவேண்டியிருந்தாலும், விமானக் காரியாலயம் மூலம் எந்த இடத்திலும் செய்தி தெரிந்து, பிரயாணச் சீட்டுக்கள் பெறலாம். அப்படிச் சீட்டுக்கொடுப்பதற்கு முன் அங்குள்ளவர்கள் எந்த ஊரிலிருந்து எந்த ஊருக்குப் போகவேண்டுமோ அதற்குத் தொலைபேசியின் மூலம் தெரிந்துகொண்டு பிரயாணச் சீட்டுக்களைக் குறிப்பிட்ட தேதியில் வழங்கிவிடுகிறார்கள். அப்படி வழங்குவதில் போவதற்கும் அதே வழியில் திரும்பவதற்கும்கூட இங்கேயே (Return-tickets) அளித்துவிடுகிறார்கள். தொலைபேசியில் பேசும் செலவு பிரயாணச்சீட்டுபெறுவோர் ஏற்றுக்கொண்டால் இது மிகஎளிதில் நடைபெறக்கூடியது தான். எங்கள் பிரயாணத் திட்டம் ஸ்ரீ காசியிலிருந்து

புறப்பட்டு 'ஜெஸிடி' சென்று அங்கிருந்து 12 ஜோதிர் லிங்கங்களுள் ஒன்றுன வைத்யநாதத்தைத் தரிசித்துக் கொண்டு பாட்னுவந்து. அங்கிருந்து கட்மண்டுவுக்குச் செல்லுவது. இப்பிரயாணத்தில் பாட்னுவிலிருந்து கட் மண்டுவுக்கு விமானம் மூலமும் மற்றவைகளை ரயில் மூலமும் செல்வது என்பது திட்டம். அதற்கு பாட்னுவி லிருந்து கட்மண்டுவுக்குச் சென்று திரும்பிவர விமானப் பிரயாணச் சீட்டு ஸ்ரீகாசியிலேயே வாங்கிவிட முடியு மென்று தெரிந்தது. ஏப்ரல் மாதம் 1-ம் தேதி பாட்னுவி லிருந்து கட்மண்டுவுக்குச் செல்லப் பிரயாணவசதி இருக்கிறதென்று தெரிந்து அதன்படியே சீட்டு வாங்கிக் கொண்டோம். எங்களுக்கு அந்தக் குறிப்பிட்ட தேதிக்கு முன்பே சென்று தரிசனம் முடித்து ஸ்ரீகாசிக்குத் திரும்ப வந்து இன்னும் சில க்ஷேத்திரங்களைத் தரிசிக்க வேண்டு மென்ற எண்ணமிருந்தது.

வெளிநாட்டவர்

இப்பொழுது பாரதநாடு சுதந்திரம் அடைந்தபிறகு நம்முடைய சுதந்திர ஆட்சி உலக அரசியல் அமைப்புக் களில் ஜனநாயகக் குடியரசாக அமைத்துக்கொண்டிருப் பதால் இந்தப்புதுவித அமைப்பின்கீழ் அரசியல் எவ்விதம் நடைபெறுகிறது என்று தெரிந்துகொள்வதற்கும், உலக ஆதிக்கப் போராட்டத்தில் ஒட்டியும் ஒட்டாமலும் நின்று, அதன் விளைவாகக் குறுகிய காலஅளவில் பல பெரிய திட்டங்கள் அமைத்து எல்லா வகையாலும் முன்னேறி வருவதைக் காணவும், அத்தோடு நம்முடைய பழைய பண்பாடுகள் இன்றும் காக்கப்படும் அருமையையும், சரித்திர பூர்வமான பெருமைகளையும், கலைப்பெருமை

களையும், உயர்தத்துவப் பண்பாட்டினையும் நேரில் கண்டு களித்து இவற்ருல் ஏதேனும் தாங்களும் பயன் பெருக்கிக்கொள்ளலாம் என்ற ஆசையோடும், அரசியல் உறவு நோக்கங்களோடும் பலப்பல தேசத்தவரும், நாடு சுற்றும் நோக்கோடு பெருமளவில் வந்துகொண்டேயிருக் கிருர்கள். எந்த ஒரு தேசத்தில் இப்படி வரும் யாத்திரிகர் எண்ணிக்கை அதிகமாகிறதோ அது உயர்ந்தநாடு என்று உலக அரங்கில் மதிப்புண்டு. அந்தப்பெருமை இப்போது நமக்கு நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வருகிறது.

நம் நாட்டைவிட மேலைநாட்டவர் போதுவாக வாழ்க்கை வசதிகள் பல போருந்தப்பெற்றவர்கள். காலத்தைக் கணக் கிட்டுச் சிறுசேதமும் இல்லாமல் அதனையோட்டி வாழ்க்கை நடத்துபவர்கள். முன்கூட்டியே நமது நாட்டில் எந்தெந்தப் பகுதிக்கு எந்தெந்த நாட்களிற் செல்வதென்று திட்டம் வகுத்துக்கோண்டு அதற்கு அவரவர் தூதுவராலயத்தின் மூலம் ஏற்பாடுகள் செய்துகோண்டு வருகிருர்கள். அத் தூதுவராலயத்தின் அதிகாரிகள் நமது நாட்டிலுள்ள பிரயாண வசதிகளில் எதையெதை வரும் யாத்திரிகர்கள் விரும்புகிருர்களோ அததற்கும் முன்னேற்பாடுகள்செய்து வைத்துவிடுகிருர்கள். உதாரணமாக ஸ்ரீ காசியைப்பார்க்க இன்ன தேதியில் இன்னரயிலில் அல்லது இத்தனை மணிக்கு வரும் விமானத்தில் வந்து இறங்குவார்கள். அதற்கு முன்னேற்பாடாக அந்தந்த நிலைய அதிகாரிகளுக்கும் செய்தி அறிவித்துப் பிரயாண வசதிகள் செய்துவைக்கப் பட்டிருக்கின்றனவா என்று தேரிந்து வைத்திருக்கிருர்கள். பேரும்பாலும் வேளிநாட்டார் விமானமூலம் செல்லக்கூடிய இடங்களுக்கு அதனையே பயன்படுத்திக் கோள்கிருர்கள். விரைவு, வசதி இரண்டும் அதில் இருக்கிறது.

இந்தக்காரணங்களால் விமானமூலம் யாத்திரை செய்வதற்குப்பலநாட்களுக்கு முன்னமேயே திட்டம்போட்டுச்சென்ருலொழியக் குறிப்பிட்ட தேதியில் நமக்கு வசதி கிடைக்கக்கூடும் என்று நிச்சமாய்ச் சொல்லவியலாது. ஆகவேதான் முன்னேயே சொல்லியபடி எந்தக் குறிப்பிட்ட தேதியில் விமான வசதி கட்மண்டுவுக்குச் செல்லக் கிடைத்ததோ அதுவரை தாமதிக்கவேண்டி யிருந்தது. மேலே சொன்னபடி பிரயாணச் சீட்டுக்கள் பாட்ஞுவிலிருந்து 1-4-58 ல் புறப்படுவதற்குத் தரப்பட்டன. கட்மண்டுவிலிருந்து திரும்பி வருவதற்குத் தேதி குறிக்க மறுத்து, அதனைக் கட்மண்டுவிலே தெரிந்துகொள்ளும்படித் தெரிவித்து விட்டனர். அதற்கிணங்கியே நாங்கள் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டோம். பிறகு வைத்யநாத தரிசனம் முடித்துக்கொண்டு, பாட்ஞுவில் வந்து விமானம் ஏறுவதாகத் திட்டம் செய்துகொண்டோம். விரிவு பின்னேவரும்.

சுங்கச் சோதனை

குறித்த நேரத்தில் பாட்ஞு விமானநிலையம் வந்தோம். அங்கே நமது பாரதநாட்டுச் சுங்கச் சோதனை அதிகாரிகள் இருக்கிருர்கள். நாம் கொண்டுபோகும் எல்லாப் பொருள்களுக்கும் பொதுவாகக் காமிரா, துப்பாக்கி, ஆபரணங்கள், புத்தாடைகள் மற்ற சாமான்களின் எண்ணிக்கை விவரம் கொடுக்கவேண்டும். அதற்குக் குறிப்பிட்டதொரு நமுனுவில் கையெழுத்திட்டு உறுதிசெய்தல் வேண்டும். நாம் முன்னே பெற்றுவைத்திருக்கும் வருமான வரி, நற்சான்றுப் பத்திரங்கள் முதலியவற்றையும் அவர்கள் பார்ப்பார்கள். கையிருப்புப் பணம் எவ்வளவு என்பதையும் அறிவிக்கவேண்டும். அவர்கள் விரும்பினுல் நம்முடைய

பெட்டி படுக்கை முதலியவற்றைக்கூடச் சோதனையிட்டுத் தீர்வார்கள். இவ்வளவு வேலை இருப்பதனுல் விமானம் புறப்படுவதற்கு 2 மணி முன்னுலேயே சென்றுவிடுதல் நலம். இந்தச் சோதனையில் ஒரு சிறு சந்தேகம் இருந்தாலும் அவர்கள் நம்பிரயாணத்தை நிறுத்திவிடலாம். அதற்கு இடம் நேராதவகை நாம் ஏற்பாடாக இருத்தல் வேண்டும். 3 மணிக்குப் புறப்படும் விமானத்தைப் பிடிப்பதற்கு நாங்கள் 1·30மணிக்கே நிலையத்துக்குச்சென்றுவிட்டோம். சுங்க அதிகாரிகளின் சோதனை, சாமான்களை எடையிடல், பட்டியல் எடுத்தல் முதலிய எல்லாம் விரைவில் முடிந்தன. எல்லோரும் நல்ல சுறுசுறுப்புடன் வேலைசெய்துங்கூட, விமானம் புறப்படுவதற்கு 15 நிமிஷங்களுக்குமுன்தான் பிரயாணிகளின் சாமான்கள் ஏற்றப்பட்டன. பிரயாணிகள் ஏறவேண்டிய விமானம்பற்றிய அறிவிப்பும் தரப்பட்டது. குறித்த காலத்தில் விமானமும் புறப்பட்டது.

சுந்தரர் துணைகொண்டு சேரர் கயிலைக்கு மிக எளிதிற் சென்றதுபோல, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் குருவருளுக்குப் பாத்திரமாக நாங்களும் அவர்கள் துணைகொண்டு, அந்தத்துணை எங்களை ஈர்த்துச்செல்ல, கட்மண்டுவுக்கு விமானமூலம் சென்றடைந்தோம். பாட்னுவில் மாலை மூன்று மணியளவில் புறப்படும் ஆகாய விமானம் ஒரு மணி நேரத்தில் கட்மண்டு விமான நிலையத்தில் வந்து இறங்கி விடுகிறது.

பாட்னுவில் விமானத்தில் ஏறியவுடன் நகர எல்லையாக ஓடும் கங்கைப் பேருநதி அதில் கலக்கும் கண்டகி இவற்றைக் கண்டு தரிசித்துக்கொண்டோம். மேலே செல்லச் செல்ல நமது நாட்டு எல்லை இமய அடிவரையாக நமக்குத் தெரிகிறது. நல்ல பசிய சோலைகளும் மலையடுக்குச்

சிகரங்களும் காடுகளும் மலையருவிகளுமாகப் பலப் பலவும் நமக்குக் காட்சியளித்துக்கொண்டே நம்மை வர வேற்கின்றன. ஒரு சைவத் திருநாட்டைக் காணப்போ கிறோம். பசுபதிநாதரைத் தரிசிக்கப்போகிறோம். உயர் ஞானபூமியில் உலவப்போகிறோம். எவரெஸ்டும் கெஞ்செஞ் சிங்காவும் தவளகிரியுமாகப் பனி மூடிய கோடுமுடிகளைத் தூரத்தே காணப்போகிறோம். நம்முடைய நிறைபுண்ணியப் பலனும் ஆண்டவனுடைய அருளும், குருவருளும் யாரும் பெறாத பெரும்பேறு நமக்கு அளிக்கின்றன என்ற உள்ளக் கிளர்ச்சி உவகை ஊட்டியது. பாட்னாவிலிருந்து புறப்படும் போழுது பெரும் புழுக்கமும் சோர்வும் கூட இருக்கும்.

பாட்னாப் பிரதேசம் கோடைக்காலத்தில் மிகுந்த வெப் பத்தையும் குளிர்காலத்தில் மிகுந்த குளிரையும் மழைக் காலத்தில் பெருமழையையும் காற்றுக்காலத்தில் பெரிய காற்றையும் கோடுத்து மக்களை வாட்டும். ஆனால் அந்த இராஜ்யத்திலேயே பிறந்து வளர்ந்து பழகியவர்களுக்கு அது பழக்கமாகிவிடுகிறது. அவர்களுக்கும்கூட இந்த நான்கு பருவங்களிலும் மிகக் கடுமையான நாட்களில் துன்பம் மிகத்தெரியும். ஆனால் நேபால எல்லையை எட்டி யதும் இமயமலைச் சரிவின் மேலே செல்லச்செல்ல வெப்ப நிலை குறைந்துகோண்டேவருகிறது.

கட்மண்டுக் காட்சி

கட்மண்டு, தோலைவில் இப்போது நமக்குத்தேரிகிறது. சுற்றிலும் பசுஞ்சோலையும் விளைநிலமும் சூழ்ந்த ஓர் ஆலய விமானம் நமக்குக் காட்சியளிக்கிறது. நாம் அதைப் பார்க்குமுன்னே அதிலிருந்து இரண்டு கண்கள் நம்மை ஊடுருவிப் பார்க்கின்றன. இதல்லாது பண்பட்ட நிலமும்

சிறிய நகரமும் நம் கண்முன்னே காட்சியளிக்கின்றன. கட்மண்டு விமான நிலையத்தில் இறங்கும்போழுது இவை இரண்டும் நம் பார்வையிலிருந்து மறைந்துவிடுகின்றன அங்கே எதிர்நோக்கிய கண்கள் யாருடையவை? எதற்காக அப்படி ஒரு காவல்? என்ற எண்ணக் கிளர்ச்சிகள் அறிவுள்ள ஒவ்வோருவருக்கும் வேலே கோடுத்துக் கோண்டே வரும்.

பழைய கார்!

நிலையத்தைவிட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் நேபாலநாட்டின் தலைநகரான கட்மண்டுவிலமைந்த பசுபதி நாதரை அந்த நாட்டின் உயிரான காவற் கடவுளைக் காண வருகின்றூர்கள். பேரியவர்களுக்குரிய சிறப்புக்களோடு அவர்களை வரவேற்று உபசரித்தல் வேண்டும் என்று ஸ்ரீ காசியிலிருந்தே அன்பர் ஒருவர் பசுபதிநாதாலயத்தில் வாசுகி பூஜை சேய்யும் பூசகருக்குச் சேய்தி அறிவித்திருந் தார்போலும்.

மிகப் பழைய கார் ஒன்று விமான நிலையத்தில் வந்து காத்திருந்தது. இதுவல்லாது பல புத்தம் புதிய கார்களும் காத்திருந்தன. எங்களோடு அமேரிக்கநாட்டு மக்கள் பலர் அந்த விமானத்தில் வந்தார்கள். அப்படி விமானத்தில் வந்தவர்களை எதிர்கோண்டு வரவேற்க அமேரிக்கத் தூதுவ ராலயத்தின் அதிகாரிகள்பலரும் அந்நிலையத்தில் காத்திருந் தார்கள். விமானத்தைவிட்டு நாங்கள் இறங்கியதும் எங்களுக்கும் அப்படி ஒரு வசதியான கார் வந்திருக்கும் என்ற நம்பிக்கையில் வேளிவந்தோம். நேபால சுங்க அதிகாரிகள் விமான நிலையத்தில் எங்களைப் பிடித்துக் கோண்டார்கள். பாட்ஞுவில் எழுதிக்கோடுத்ததுபோல

இவர்களுக்கும் விவரங்கள்பலவும் கொடுத்து, நல்லவர்கள், இந்தியப்பிரஜைகள் என்ற நற்சான்றுப் பத்திரங்களையும் காட்டி அவர்கள் அநுமதியின்பேரில் வெளிவந்தோம்.

விமானக்கூடவாசலில்....

விமானக்கூட வாசலில் இடுப்பில் பட்டுடுத்திச் சட்டை அணிந்து போர்வை போர்த்தித் தலையில் முண்டாசுடன் ஒருவர் எங்களை வரவேற்றார். அவர்தான் வாசுகி பூஜை செய்யும் பண்டா. ஸ்ரீ காசியிலிருந்து வருவதாக அறிவிக்கப்பட்ட மஹந்த் தாங்கள்தானே ! என்று ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தை இந்தியில் கேட்டார். உடன்வந்த ஸ்ரீ காசி மடம் ஏஜண்ட் திரு. கல்யாணசுந்தரம் பிள்ளை கார் வந்துளதா என்றார். எல்லாம் சித்தம். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை வரவேற்கக் காரும் வந்துள்ளது ; பசுபதிநாதர் தரிசன ஏற்பாடும் தங்குவதற்கு வசதியும் செய்துள்ளேன். எல்லாம் சரியாகத் திட்டம் செய்துள்ளேன் என்றார்.

'பசுபதிநாதர் தரிசனம் காண எங்களுக்கு அவா அதிகம் இருக்கிறது. விரைவில் இருப்பிடம் சென்று குளித்து முழுகி ஆலயம் செல்லுதல் வேண்டும். எங்களுக்காக வந்திருக்கும் காரை எடுத்துவாரும்' என்றோம். விமான இரைச்சலோடு போட்டிபோட்டுக்கொண்டு பழைய கார் ஒன்று வந்துநின்றது. 'இதில் சாமான்களையேற்றி விட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்துக்குள்ள காரை எடுத்து வாருங்கள்' என்றோம். 'சாமான்களை இங்கு யாராவது பார்த்துக்கொள்ளட்டும். முதலில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அழைத்துச்சென்று இருப்பிடத்தில் விட்டு விட்டுப் பின் அடுத்தமுறை பொருள்களை எடுத்துச் செல்லலாம்' என்றார். 'அதோ புதியகார்கள் நிற்கின்றனவே,

ஒன்றைத் திட்டம் செய்துவாரும்' என்றேம். 'அது இயலாது'. இந்த நாட்டில் வாடகைக்கு வரக்கூடிய நல்ல கார்களில் நான் கொண்டுவந்திருப்பதும் ஒன்று. அவை யெல்லாம் தூதுவராலயத்தினின்று வந்திருப்பவை. நமக்கு அது உதவாது' என்று சொல்லிவிட்டார். எப்படியோ எல்லாச் சாமான்களையும் அதில் ஏற்றிவிட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தோடு இரண்டொருவரை ஏற்றி மற்றையோர் நடந்துசெல்ல முடிவு செய்தோம். ஆனுல், சாலைவழியாகச் சென்ருலும் பசுபதிநாதர் ஆலயம் மூன்றுகல் தொலைவுக்குமேல் இருக்கும். அப்படிச்சுற்றி வருகிறது. நடந்து சென்ருலோ ஒரு கல் தொலைவுக்கு மேல் இராது. நடப்பதும் நமக்குத் துன்பம் தரத்தக்கதாக இல்லை. அப்படி நடந்து சென்று நாங்கள் இருப்பிடத்தை அடைவதற்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் வந்த கார் அவ்விடத்தை அடைவதற்கும் பொருத்தமாக இருந்தது.

" வேறு இடம் இல்லையா ? "

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தங்குவதற்காகத் திட்டம் செய்யப்பட்டிருந்த இடம் மிக மோசமாக இருந்தது. அங்கே ஒருவிதத் தீய நாற்றம். வெளிச்சமும் காற்றும் கூடப் போதாது. அந்தத் தெரு அமைப்பும் நமது பக்கத்தில் உள்ள சுகாதாரக் குறைவான தெருக்களைவிட மோசமான நிலையில் இருந்தது. அந்தச் சூழ்நிலையில் அங்கே காலெடுத்து வைக்கவும் எங்களுக்கே கூசிற்று. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் புனிதத் திருவடி அங்கே எப்படி நாள்கணக்கில் இருக்க முடியும் என்ற கவலையும் எங்களை வாட்டியது. "ஐயா! இதைவிடச் சிறந்த இடம் வேருென்றும் இல்லையா" என்று அவரைக்

கேட்டோம். "என்னால் செய்யக்கூடிய சிறந்த ஏற்பாட்டைத்தான் நான் செய்திருக்கிறேன். இதற்குமேல் என்னலாவது ஒன்றும் இல்லை" என்றார். என்ன செய்வதென்றே எங்களுக்குப் புரியவில்லை. கல்யாணசுந்தரம் பிள்ளை முன் ஒருமுறை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகளுடன் பசுபதிநாதர் தரிசனத்துக்கு வந்திருக்கிறார். கோவில் தலைமைப் பூசகர் ராவல் ஸ்ரீ சுப்ரமண்யபட் அவர்கள் உபசரிப்பில் தங்கியிருக்கிறார். அந்த நினைவில் அந்தப் பெரியவரிடம் சென்று வசதி செய்துவரலாமென்ற நோக்கத்தோடு விரைந்து சென்றார். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் கார்நின்ற இடத்திலேயே இருந்தார்கள். அவர்களோடு மதுரை சிவஸ்ரீ ம. க. சுந்தரேசபட்டர் அவர்களும் பிறரும் இருந்தார்கள்.

ராவல் ஸ்ரீசுப்ரமண்யபட் சிறந்த படிப்பாளி; ஒழுக்கம் மிக்கவர் ; அமைதியே உருவானவர் ; வயது முதிர்ந்த அநுபவசாலி. அவரிடம் அந்நாட்டுமக்கள் மிகுந்த மரியாதை காட்டுகிறார்கள். அவர் சொல்வதையெல்லாம் உத்தரவு, உத்தரவு என்று சொல்லி மெதுவாகப் பதில் சொல்லி, பேசி முடிந்ததும் அவருடைய பாதங்களைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு உத்தரவு பெற்றுச் செல்கிறார்கள். அது வரையில் அவர்கள் ஒரு சிறு தொலைவில் நின்று அவர் சொல்வதைக் கேட்கிறார்கள். அவரும். மிகத் தாழ்ந்த குரலில் மெதுவாக வார்த்தை வார்த்தையாக எண்ணி எண்ணிப் பேசக்கூடியவர். மிக அருகில் உள்ளவர்கள் - பழக்கப்படாதவர்கள் - அவர் கூறுவதைப் புரிந்துக்கொள்வது அருமையே. முன்னே பழக்க மில்லாதவர்கள் அவரிடம் செய்தி சொல்லி பதில் கேட்டுப் புரிந்து கொள்வது மிகவும் கஷ்டம்.

நாம் கேட்பதற்கு உடனே பதில் சொல்லாமல் தாமதித்தே பதில்கள் வரும். இதனாலெல்லாம் புதிதாகப் போவோர் ராவலைப்பற்றித் தப்பெண்ணம் கொள்ளவும் கூடும். அவர் எவ்வளவு பொறுமைசாலியோ அவ்வளவு பொறுமை உடையவர்கள் அப்பெரியாரிடம் உள்ள உயர் குணங் களைப் பாராட்ட முடியும். உயர்ந்த கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். நல்ல பக்திமான். சிவ பூசையிற் சிறந்தவர். சங்கர மதத்தில் ஆழ்ந்த பற்றுதல் உடையவர். ஆதிசங்கரர் பெயர் கேட்டால் அவர் தலை தானே தாழும். பசுபதிநாதரைவிட மேலான தெய்வம் வேறில்லையென்று அழுந்திய நம்பிக்கை உள்ளவர். மூர்த்தியைத் தொட்டு அபிஷேகம் செய்யும் உரிமை உள்ளவர், உதவியாக நாலு பூசகர்கள் உள்ளனர். இருந்தாலும் ராவல் இல்லாமல் பூசை வழிபாடுகள் செய்ய முடியாது. மற்றையோர் தீபாராதனை, அர்ச்சனை மட்டும் செய்யலாம். பெருமானைத் தொட்டுப் பூசிக்க ராவல் வராத நாட்களில் அவரது அனுமதி பெற்றே செய்ய முடியும். அந்த நாட்டு மன்னன் சிறந்த சிவபக்தன். கோரக்நாதர் துணை! பசுபதிநாதர் துணை யென்று அந்தத் திருவடிகளையே நம்பியவன். மாதம் ஒருமுறையேனும் பசுபதிநாதர் தரிசனத்துக்கு வரத் தவறுவதில்லை. அப்படி அவன் வந்தால் உடனிருந்து பூசை செய்து பிரசாதம் கொடுப்பது பிரதம பூசகரான ராவல்தான். மற்றையோர் உதவியாக அமைய முடியுமே ஒழிய, அரசனுக்கு ஆசி சொல்லிப் பிரசாதம் வழங்கு வதென்பது முடியாது. அவ்வளவு பெருமைமிக்கவர். ஒரு வருஷத்துக்குச் சராசரி நேபால ரூபாயில் 1½ லட்ச மும் - பாரத ரூபாய்க்குக் கிட்டத்தட்ட 1 லட்ச ரூபாயும் பெறக்கூடிய பாக்கியம் பெற்றவர். ஆகையால் அவர்

பணத்திற்காகவோ அல்லது உலகியல் பெருமைக்காகவோ எதையும் செய்ய உடன்படமாட்டார். கடவுளைத் தவிர வேறு யாருக்கும் தொண்டு செய்ய வேண்டிய கடமை அவருக்கில்லை. அத்தகைய இயற்கையும் அவர்க்கில்லை. அவர் கன்னடியர். 'அடிக' என்னும் (Adiga) பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். ராவல் சுப்ரமண்யபட், அடிக என்ற பட்டம் பெற்றவர்.

"வரட்டுமே!"

அந்தப் பெரியார் உபசரிப்பில், முன்முறை வந்த பொழுது ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும், கல்யாணசுந்தரம் பிள்ளையும் தங்கி யிருந்திருக்கிறார்கள். அந்த நினைவோடு திரு. பிள்ளை ராவல் வீட்டுக்குச் சென்றார். பசுபதி நாதத்தை யொட்டியிருந்த அவர் வீட்டுக்குச் சென்று வந்த காரியத்தைச் சொல்லி வணக்கம் புரிந்தார். ராவல் இயற்கையாக அமைந்த குணநலத்தோடு, சாவதானமாகச் சிறிது நேரம் கழித்துப் 'பெரியவர்கள் வந்திருக்கிறார்களா? வரட்டுமே' என்றார். வேறொன்றும் சொல்லவில்லை.

எப்படியோ இறங்கிறோம்!

எங்களுக்கிருந்த அவதியில் எப்படியாவது நல்ல ஓரிடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைச் சேர்த்துவிட வேண்டுமென்ற ஒரு நினைப்பு இருந்தது. அத்தோடு அவசர புத்தியுள்ள நான் பெருமைமிக்க நமது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் இங்கே வந்திருக்கிறார்களே, அவர்களுடைய அருமை தெரியாத ஓரிடத்தில் அழைத்துவர வேண்டியிருக்கிறதே. மிகப் பழகியவர்போலப் பிள்ளையவர்கள் இந்த ராவல் வீட்டிற்கு அழைத்து வருகிறாரே;

வாட்டுமென்று சொன்னவர் வரவேற்பில் உற்சாகம் காட்டிப் பரபரப்பாக ஒன்றும் சொல்லவில்லையே. நமது பிள்ளையவர்களை அவர் நன்ருகத் தெரிந்துகொண்டிருக் கிருரோ என்னவோ என்ற எண்ணம்கூட எனக்கு எழுந்தது. 'ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளோடு வந்தவர் தாங்கள்; அது ராவலுக்கு நினைவிருக்குமா' என்று சொல்லி வைத்தேன். அவரும் சென்ற ஆண்டு ஸ்ரீலஸ்ரீ சுவாமிக ளுடன் தான் வந்து ராவல்வீட்டில் தங்கியிருந்த செய்தியை நினைவூட்டினுர். ஆம் என்ருர் சாஸ்திரியார். அதற்குப் பிறகாவது அந்தப் பெரியவர் எழுந்துவந்து ஏற்பாடுகள் செய்வதாகத் தோன்றவில்லை. எங்கள் கடமை முடிந்த தாக ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் நடுத்தெருவில் தங்க வசதியில்லாத ஓரிடத்தில் மிக இழிந்த அந்தத் தீய நாற்றத்தில் இருப்பவர்களை வேறு எங்காவது ஓரிடத்தில் அமர்த்திவிடவேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் காரைத் திருப்பி ராவல் வீட்டுக்குக் கொண்டுவந்து இறக்கினேம். ராவல் தங்கியிருந்த மாடியில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதான மும் எழுந்தருளினுர்கள். அப்போதும் சாஸ்திரிகள் கல கலப்பாகப் பேசவில்லை. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத் தைக் கண்டதும் வணங்கிவிட்டுக் கீழே இறங்கி வந்து விட்டார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் இவைகளை ஒன்றும் பாராட்டாது இந்த வசதி ஏற்பட்டதே போதும் என்ற குறிப்போடு, திருமஞ்சனத்துக்கும் ஆலய வழிபாட் டிற்கும் எழுந்தருளிவிட்டார்கள்.

மர்மம்

நானும் திரு. பிள்ளையவர்களும் சற்றுப் பின்தங்கி விட்டோம். கீழே இறங்கிவந்தோம். சாஸ்திரிகள் தம் வீட்டின் முன்னுல் இருந்த சிறு கோவில் முன்றிலில்

இருந்து சிலரோடு பேசிக்கோண்டிருந்தார். அது நேபால பாஷையில் இருந்ததால் புரியவில்லே. அதிலும் சாந்த குணம் படைத்த அவர் மிக மேதுவாக எதிரே நின்றவரிடம் சோல்லிய சேய்தி என்ன என்பது புரிந்துகோள்ளக் கூட வில்லே. சிறிது நேரத்துக்கேல்லாம் இந்தியில் அவருடைய சுபாவமான தாழ்ந்த குரலில் திரு. பிள்ளேயிடம் ஏதோ சில சோல்லிவந்தார். நடுநடுவில் நான் புரிந்துகோள்ள முடிந்தது. தங்கள் பிள்ளே ஸ்ரீ காசியில் கூடப் படித்தவர் - சரி - அப்படியே யாகட்டும் - சந்தோஷம் - நன்றி - வணக்கங்கள் - இவைமட்டுமே. திரு. பிள்ளே என்னேப் பார்த்து ‘ தாங்கள் சற்று இருங்கள் வருகிறேன் ’ என்று சோல்லிப் புறப்பட்டார். ராவலோடு பேசி நின்றவர்களில் வயதான ஒருவரும் அவரோடு புறப்பட்டார். என்னுடனும் அந்த சாஸ்திரிகள் இரண்டோரு வார்த்தை இந்தியில் பேசினர். நான் யார் ? என் பேயரேன்ன ? ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்திநிடம் எனக்கு என்ன பணி ? - என்பவை. எனக்குத் தேரிந்த இரண்டோரு இந்தி வார்த்தைகளேக் கோண்டு பதில்கூறிவைத்தேன். வேறு ஒன்றும்பேச்சில்லே.

பிள்ளேயும் ராவலும் பேசியது அவர்களுடைய குடும்ப நலனேப் பற்றியதாகவும் அன்று மாலே பசுபதிநாதர் வழிபாட்டைக் குறித்ததாகவும் இருக்குமேன எண்ணிப் பிள்ளேயவர்களுக்காகக் காத்துநின்றேன். இதற்குள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளியாகி ஒருமணி நேரத்துக்குமேல் இருக்கும். நேரமாகிறதே. நாமும் சேன்று பக்கத்திலுள்ள நதியில் நீராடி வழிபாட்டுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்துடன் வர வேண்டாமா? பிள்ளேயவர்களேக் காணுேமே ’ என்று நினேத்து வருந்தினேன். பசுபதிநாதர் ஆலயம் அமைந்திருக்கும் இடத்துக்குத் தேவபட்டம் (தேவபட்டணம்)

என்று பெயர். அப்பெயருக்கு ஏற்பக் கோவிலும் வீடு களும் ஒன்றையொன்று தழுவியேநிற்கும். கோவிலுக்குள் பிராகாரங்களிலேயே வீடுகள் உள்ளன. எனக்கு இந்தியோ நேப்பாலியோ தெரியாத நிலையில் ராவலிடம் விசேஷமாக எதுவும் பேச முடியவில்லை. அப்படியே எனக்குத் தெரிந்த பாஷையில் கேட்டாலும் அவரது மறு மொழியைப் புரிந்து கொள்ளக்கூடிய பொறுமையும் இல்லை. ஆற்றலும் இல்லை. பிள்ளை இப்படி நம்மிடம் ஒன்றும் சொல்லாமல் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் இருப் பிடத்துக்குச் சென்றிருப்பாரோ. நம்மை மட்டும் இங்கிருக்கச் செய்துவிட்டாரே. நாமும் ஏன் செல்லக் கூடாது என்பனபோன்ற எண்ணங்களுடன் இருக்கும் போது பிள்ளையவர்கள் இரண்டொரு ஆட்களுடன் வந்தார். மாடியிலிருந்த சாமான்களைக் கீழே இறக்கினார். 'வாருங் கள் நாமும் போவோம்' என்றார். எனக்கு எல்லாம் புதிராக இருந்தது. 'எங்குச் செல்கிறோம்! எதற்காகச் செல்கிறோம்! இப்பெரியார் நம்மை யனுமதிக்கவில்லையா!' என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனேன். 'நேரமாகிறது, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வந்துவிடப் போகிறார்கள். அங்கு வந்து பிற கூறுவேன்' என்று அவசரப்படுத்தி அழைத்துச் சென்றார். சிறிது தொலைவு சென்றதும் மற்றொரு கோவிலை அடுத்துள்ள ஓர் வீட்டில் இரண்டாவது மாடியில் எங்கள் சாமான்கள் சேர்ப்பிக்கப் பட்டன.

இந்த இடந்தான் நமக்கு இப்போது திட்டமாயிருக் கிறது. இங்கே எல்லாம் வசதியாக இருக்கும். ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்துக்கு எவ்விதக் குறைவுமில்லாமல் தங்க வசதியாக உள்ள இடம். ஆகவே அவர்கள் வரும் வரையில் தாங்கள், இங்கே இருங்கள். நான் சென்று

அவர்களை அழைத்து வருகிறேன்' என்று சொல்லிப் பிள்ளை வெளியே சென்றுவிட்டார். இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எனக்கு வியப்பூட்டுவனவாக, கதைகளில் நிகழும் மர்மச் செய்திகளாகக் காட்டின.

திகைப்பு

மாடியிலிருந்து பார்த்தேன். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் திருமஞ்சன முடித்து அருகிலுள்ள இராஜ ராஜேஸ்வர ஆலயத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்ததைக் கண்டேன். இருப்புக் கொள்ளவில்லை எனக்கு. ஆனால் புது இடத்தில் கொண்டுவந்த எல்லாச் சாமான் களையும் போட்டுவிட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தினிடம் சென்று அறிவிக்கத் தைரியமும் இல்லை. கயிலை யாத்திரை செல்வோர் எழுதிவைத்திருக்கும் சில யாத்திரைப் புத்தகங்களைப் படித்திருக்கிறேன். மலைநாட்டவர்கள் பொல்லாதவர்கள். நாகரிகம் தெரியாதவர்கள். சிறந்த பொருள்கள் ஏதேனுமிருந்தால் எடுத்துச் சென்று விடுவார்கள் என்று, இப்போது எங்களுக்குத் திட்டம் செய்யப் பெற்றிருக்கும் வீட்டில் பெண்களும் குழந்தை களும் இருப்பினும், யாருடைய வீடு அது, அதில் போட்டுச் செல்லலாமா என்று எண்ணினேன். பிள்ளை வந்ததும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்றெண்ணினேன். இப்படி எல்லாவற்றையும் மூடி வைத்து நம்மைத் திகைக்க வைக்கிறாரே. அவரைக் கடுமையாகக் கேட்டுவிட வேண்டுமென்ற எண்ணம் துடித்துக் கொண்டிருந்தது.

தெளிவு

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அழைத்துக்கொண்டு பிள்ளை சற்றைக்கெல்லாம் வந்தார். அவராகவே என்னை யழைத்து ' இதுவும் ஒரு பூசகர் வீடுதான். பசுபதிநாதரைப்

பூசை செய்யும் ஐவருள் இவரும் ஒருவர். பெயர் அனந்த பத்மநாப அடிக என்பது. ராவலுக்கு மிகவும் நெருக்க மாக வேண்டியவர். நல்ல, பண்பாடுள்ள இளைஞர். அவருடைய குடும்பத்தினரும் கீழே முதல் மாடியில்தான் இருக்கிறார்கள். உயர்குணம் படைத்த நல்ல குடும்பம் இது. அதிதி உபசரணையில் ஆர்வம் அதிகம் உடைய வர்கள், முன்னே இவர்களைப்பற்றி அதிகம் தெரியா விட்டாலும் ராவல் சொல்லியிருக்கிறார். எல்லாம் வசதி யாகவே நடக்கும், கவலை வேண்டாம் ' என்றார்.

மற்றொரு பெரிய சந்தேகம் ஒன்றும் என்னுள் இருந்தது. ' ராவலைப்பற்றி மிக உயர்வாகப் பேசினீர்கள். வந்தவர்களை உரிய மரியாதைகளோடு வரவேற்கவும், நல்ல பேச்சுக்கூடப் பேசவும் தெரியவில்லையே. அதற்குக்கூடப் பஞ்சமா ' என்றேன். ' மன்னிக்கவும், தாங்கள் தவறாகப் புரிந்துகொண்டீர்கள். ராவல் பெரியோர் களுக்குள்ள எல்லா நற்குணங்களும் பண்புகளுமிக்கவர். அப்படிக் குறைவாக எண்ணுதல் தவறு ' என்றார். என் கோபம் தணிந்தபாடில்லை. ' அவ்வளவு பண்பாடு தெரிந் தவர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைக் கண்டவுடன் கைகூப்பி வணங்கிவிட்டுக் கீழே வந்துவிட்டாரே. வந்த வரை வரவேற்கும் பண்பு இங்கு இப்படித்தானா. அவ்வளவு உயர்ந்த நாகரீகம் எங்கும் காணமுடியாது ' என்றேன். ' மறுபடியும் அவசர முடிவு உங்களுடையது. விஷயம் முழுவதையும் சொன்னால் நம் செய்கை குறித்து நாம்தாம் வருந்தவேண்டி வரும் ' என்று எச்சரித்தார். ' அப்படியாயின் என்ன செய்தி ' என்று கேட்டேன். ' ராவலிடம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் நேபாலத்தில் எழுந்தருளியிருக்கும் செய்தி தெரிவித்ததுமே மகிழ்ச்சி மிகக் கொண்டார். எனினும் அவர் குடும்ப நிலையில்

இப்போதுள்ள நிலையில் இவ்வளவு உயர்ந்த பெரிய சாதுவை (மகானை)த்தான் ஏற்று உபசரித்து வழிபாடு செய்வித்து அனுப்ப முடியவில்லையே என்ற வருத்தம் அவரை வாட்டி வருகிறது. வயதிலும், அனுபவத்திலும் அறிவிலும் பெரியவராக இருந்தாலும், தன்னுடைய ஒரே மகன் நோய்வாய்ப்பட்டு எமனோடு போராடும் நேரத்தில் வந்தவர்களை எப்படி உபசரிக்க முடியும் ? அவர் மனம் இடம் கொடுக்க முடியுமா? அறிவுதான் வேலை செய்யுமா. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் தன் வீட்டில் தங்கியிருக்கும்போது ஏதாவது விபரீத நிகழ்ச்சி ஏற்பட்டு விட்டால் அதனால் பெரியோர்க்குக் கொடுத்த வாக்கும் பிழைக்குமே. அவர்கள் மனம் வருந்த நேருமே. இந்தச் சூழ்நிலையில் வந்த பெரியவர்களை உபசரிப்பது எப்படி ? நல்ல குணப் பண்பாடுடைய வர். பெரியோர் பெருமையறிந்து எல்லாம் முறையாக நடக்கவேண்டுமே என்ற கவலைதான் அவரைப் பேச வியலாமற்செய்தது.

அந்தச்சமயம் அவர்க்குப் பத்மநாப அடிகளின் நினைவு வந்தது. ஆட்களை யழைத்து அடிகளுக்கு ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தின் பெருமை சொல்லி, அவர் வீட்டில் மிக வசதியாகத் தங்க ஏற்பாடு செய்யும்படிச் சொல்லி அனுப்பியிருந்தார். அடிகளும் பெருமகிழ்ச்சி கொண்டு வீட்டுப்பகுதியில் சிறந்த ஒன்றை ஒழித்துக் கொடுத்து, தன் வீட்டில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் தங்குவது பெரும் பாக்கியம் என்று கருதினார். ஆண்டவனுக்குச் செய்யும் உபசாரத்தைவிட அடியார்க்குச் செய்வது பெரிது என்ற உணர்வோடு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை வரவேற்கச் சிலவினாடிகளில் ஏற்பாடுகள் செய்துவிட்டார்.


தன்னுடைய இரங்கத்தக்க நிலையை என்பால் கூறி, அடிகளின் வீட்டு ஏற்பாட்டைச் சொல்லி, திருமஞ்சனம் ஆகி வருவதற்குள் சாமான்களை யெல்லாம் அடிக வீட்டுக்கு அனுப்பிவிட்டால் திருவுள்ளம் வருந்தாவாறு செய்யலாம் என்று ராவல் கூறி, ஆட்களையும் அனுப்பி உதவிபுரிந்தார்.

ராவலின் ஒரே மகன் காசி இந்து சர்வகலாசாலையில் B. Sc., யில் முதல்வராகத் தேர்ந்து, M. B. B. S. பாட்னு சர்வகலாசாலையில் முதல்வராகத் தேர்ந்தவர், தந்தையாரைப் போன்றே குணநலம் வாய்ந்தவர். திருமணமும் ஆகியிருக்கிறது. அழகான நல்ல தோற்றம் உடையவர். பேச்சில் கவர்ச்சியும், நல்ல தொழில் பெருக்கமும் உடையவர். இவ்வளவு சிறந்த தன் மகன் அப்பொழுதோ அல்லது சிறிது நேரத்துக்குள்ளாகவோ இறந்துவிடக் கூடுமோ என்ற அச்சமும் துன்பமும் தந்தையை வாட்டுவது இயல்புதானே. அந்த நிலையிலும் அவர் நன்ருகச் சிந்தித்து இவ்வளவு சிறந்த ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருப்பது பாராட்டத்தக்க செயலல்லவா? அவர் மகன் கபஜுரத்தால் வருந்துகிருர். உச்சவரம்பாக 105° க்குமேல் காய்கிறது. பசுபதிநாதருடைய அருளும், வந்திருக்கும் மஹாசாதுவின் ஆசியும் என்மகனைக் காத்து இந்த வயோதிக நிலையில் தனக்கு ஆறுதல் அளிக்க வேண்டும். இந்த மஹாபுருஷரிடம் சமயம் பார்த்துச் செய்தி சொல்லி எனக்கும் என் மகனுக்கும் அவர்களுடைய பூரண ஆசியும் பெற்றுத்தருதல்வேண்டும்; என் மகன் பிழைத்திருந்தால் நாளைக் காலையில் நான் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்துக்குப் பசுபதிநாதருடைய தரிசனம் சிறப்பாக நடத்தி வைக்கிறேன். அதற்கு ஆண்டவன் எனக்கு அருள்புரிய வேண்டும்' என்று வருந்தி என்னிடம் சொல்லியனுப்பி

யிருக்கிறுர். இவ்வளவு நல்ல மனிதரைக்காண்பது அரிது அல்லவா ? என்று முடித்தார்.

'முதலிலேயே இந்த ஏற்பாட்டை அவர்சேய்துகோடுத் திருந்தால் இவ்வளவு நினைவுகளுக்கு இடம் கோடுக்கா தல்லவா ?' என்றேன். அதற்கும் பதில் ராவல் சேர்த்துச் சோல்லிவிட்டார். பேரியவர்கள் எங்கோ ஓரிடத்தில் நின் றிருக்கலாமா ? அவர்களே முதலில் வந்து அமரச்சேய்து, விரைவில் வேறு வசதியான ஏற்பாடு சேய்துவிடவேண்டு மேன்ற எண்ணத்தால் முதலில் தன் வீட்டில் வந்து இறங்கிச் சாமான்களே வைத்துச் சேல்வதற்கு ஏற்பாடு சேய்து, அதனிடையில் சிந்தித்து இதைவிட மேலான வசதியுள்ள இடத்துக்கு அனுப்பிவைத்தார். தானிருக்கும் இடத்தில் மகான் ஒருவர் வந்து வசதியில்லாது வருந்து கிறுர்கள் என்றசேய்தி முதலில் அவர்க்குவருத்தம்தந்தது'' என்ருர். எல்லாம் என் அறியாமையால் எனக்கு வந்த துன்பந்தான்.

பிறகு பசுபதிநாதருக்கு எவ்வேப்போழுது வழிபாடுகள் நிகழும், தரிசனத்துக்குச் சேல்லலாம் என்று விசாரித்து மாலேயில் தீபாராதனேமட்டும் உண்டு. தரிசனம் சேய்யலாம், மற்றபடி காலே 8-30க்குதோடங்கி 11-30வரை அபிஷேக மும் பிறகு 2 மணிவரை ஆராதனேகளும் நடைபேறும் என்று தேரிந்துகோண்டோம். இந்நிலேயில் ராவலுக்கு எந்த விதமான துன்பமும் நேராது ஆண்டவனருளால் அவர் மகன் பிழைத்தேழவேண்டும், நல்லவர் மனம் வருந்தக் கூடாது. அவர் வந்திருந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்து வழிபாட்டை நிறைவேற்றித்தருதல் சிறப்பாகும். அவரில் லாத வழிபாடு சிறப்பாக இராதேன்ற முடிவுக்கு வந்தேன்.



பாக்நதியில் திருமஞ்சனம்

நேபாலத்தில்



ஸ்ரீ பசுபதிநாதர் வழிபாட்டுக்கு எழுந்தருளல்

அடிக வீட்டில் !

சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு சிறு பையன் - ஏழெட்டு வயதிருக்கும் - ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தினிடம் வந்து வணக்கம் தெரிவித்துக்கொண்டான். மற்றொரு பெரியவரும் வந்து சேர்ந்தார். அவரும் வணக்கம் புரிந்துவிட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தினிடம் அமர்ந்தார். அந்தப் பையனும் உட்கார்ந்தான். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் உன் பெயர் என்ன என்று கேட்டார்கள். 'ஸ்ரீதர்' என்று பதில் வந்தது. அழகாகவும் சுறுசுறுப்பாகவும் காணப் பட்டான். 'நான் ஒரு தோத்திரம் வடமொழியில் உத்தர வானுல் சொல்லுகிறேன்; அநுமதி வேண்டும்' என்ருன். சொல்லும்படி உத்தரவாயிற்று. கணீரென்ற குரலில் மிக அழகாக சிவ தோத்திரமொன்றை வடமொழியில் இசையோடு சொல்லி முடித்தான். பெரியவர் தான் அனந்த பத்மநாப அடிகவினுடைய தந்தையென்றும் கோகரணத் தில் ஆண்டவனைப் பூசைசெய்யும் குலத்தில் வந்தவ ரென்றும் தெரிவித்துக்கொண்டார். அந்தச் சிறுவன் ஓர் ஏழை, அநாதை என்றும், தானும் தன் மனைவியும் மகன் வீட்டுக்கு வந்திருப்பதாகவும் தெரிவித்துக் கொண்டார். சற்று நேரத்துக்கெல்லாம் அடிகவும் வந்து சேர்ந்தார். நேபால நாட்டு அரசியல் அமைப்பு, புனித க்ஷேத்திரங்களின் மகிமைகள் முதலிய எல்லாவற்றையும் சுருக்கமாக அழகான இந்தியில் சொல்லிக்கொண்டே வந்தார். பிள்ளையவர்கள் மொழிபெயர்ப்பாளராக அமர்ந்து விளக்கம் செய்துவந்தார்கள். அடிக நடுநடுவே வேத உபநிஷத் வாக்கியங்கள் புராண இதிகாச மேற்கோள்கள் காட்டி விளக்கமும் செய்தார். சிவஸ்ரீ பட்டர் அவர் களும் இடையிடையில் ஆகம சாஸ்திர விளக்கங்களைப் பேசத் தொடங்கினர்கள்.

இப்படி நல்ல சுவையான பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது மாடிப்படி அடியில் பெண்குரல் ஒன்று கேட்டது. யார் காதிலும் அது விழவில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு பெண்மணி அங்கு வந்தார்.

அடிகவிடம் கன்னடத்தில் மிக இனிமையாக இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லிவிட்டுக் கீழே சென்றுவிட்டார். அவர்தான் திருமதி அடிக. அடிகவும் கீழே சென்று பலகார வகைகள், பால் முதலியவற்றை மேலே எடுத்து வந்தார். அந்தப் பெண்ணும் உடன்வந்து நின்றார். எல்லாவற்றையும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருமுன் வைத்து வணங்கி ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் உடன் வந்த பணிவிடை நடராஜனை யழைத்து எல்லோருக்கும் எடுத்துப் பரிமாற உத்தரவாயிற்று. அவனும் முன்வந்தான். அவர்கள் அதற்கு இடம் கொடுப்பதாயில்லை. அடிகவே எல்லார்க்கும் எடுத்துப் படைத்து மகிழ்ந்தார்.

வாங்மதி ஸ்நானம்

மறுநாள் அதிகாலையில் நாங்கள் எல்லோரும் பசுபதிநாதர் ஆலயத்துக்கு முன்னால் ஓடும் வாங்மதி நதியில் ஸ்நானம் செய்தோம். தண்ணீர் மிகக் குறைவாக இருந்தாலும் தெளிவாக - ஆனால் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. காலை வைத்தவுடன் விறைக்கும் குளிர் மிகுதியாகக் காணப்பட்டது. இரண்டொருவர் முதலில் இறங்கிக் குளிப்பதற்கு அஞ்சினாலும் மனத்தில் தைரியம் கொண்டு இறங்கிக் குளித்தார்கள். அப்படிக் குளித்தெழுந்து சுமார் அரைமணி நேரம் வரையிலும் நம்முடைய உறுப்புக்கள் சுவாதீனத்துக்கு வருவதில்லை. அவ்வளவு கடுங்குளிர்

நீராக இருந்தது. குளித்து அனுஷ்டானுதிகளை முடித்துக் கொண்டு பசுபதிநாதரைத் தரிசனம் செய்ய மேலே சென்றோம். பெரிய கூட்டம். ஆணும் பெண்ணுமாக - சந்நிதி முன்னிலையில் அடித்து நெருக்கிக்கொண்டு தோத்திரம் செய்து நின்றிருந்தார்கள். அழகான வடமொழித் தோத்திரங்கள் சொற்சோர்வின்றிச் சொல்லிப் பாடிப் பக்திபரவச நிலையில் அவர்கள் நிற்பது கண்கொள்ளாத காட்சி. காலை 4 மணிமுதல் மேலைச்சந்நிதி - அதாவது மேற்கு நோக்கிய திருமுக தரிசனம் அளிக்கப்படுகிறது.

உட்கோவிலமைப்பு

அந்தச் சந்நிதியில்தான் பெரிய நந்தி ஒன்று மேல் நோக்கிய முகத்தோடு அமைந்திருக்கிறது. மேலே பொன்முலாமிட்டுத் தங்கமயமான அந்த நந்தி படுத்திருப்பது கம்பீரமாக அழகாகக் காட்சியளிக்கிறது.

பசுபதிநாதருடைய கர்ப்பக் கிரகம் நான்கு வாயில்களை உடையது. வெளிச்சுற்று ஒன்றுண்டு. இரண்டாவது திருச்சுற்றில் மேலைச் சந்நிதி நீங்கலாக மற்ற மூன்று புறங்களிலும் சுற்றி வரலாம். அதற்குள்ளே கர்ப்பக்கிரக அமைப்பாகப் பசுபதிநாதர் எழுந்தருளியிருக்கிறார். மேலைச் சந்நிதியில் ஒருபுறம் அந்தநாட்டு அரசியும் மற்றொரு புறம் அரசனுமாக மிக அழகிய வேலைப்பாடமைந்த செப்பு உருவங்கள் கும்பிட்டநிலையில் அமைந்துள்ளன.

எதிரே நின்ற கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார் நந்தி. கோயில் மரத்தால் அமைக்கப்பட்டது. மலையாளத்துக் கோவில்களைப் போல அடுக்கு நிலைகள் அமைந்ததாக விமானம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த விமான

வாரியைத் தாங்கிநிற்கும் சட்டங்களில் அழகிய புராண இதிகாச ஐதிகச் சிற்ப வேலேகள் உள்ளன. கூரை முழுவதும் பொன்வேயப்பட்டிருக்கிறது. சுற்றிலுமுள்ள அடைப்பு வெள்ளித்தகடு வேய்ந்து மிகமிக நுட்பமான கோடி வேலேப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சுவாமி கர்ப்பக்கிரக விதானம் வெள்ளித் தகடு பதித்து அதிலும் மிகக் கைதேர்ந்த அழகிய வேலேப்பாடுகள் செய்து விடப்பட்டிருக்கின்றன.

சந்நிதியில் புழங்கப்படும் பாத்திரங்கள் முதலிய உபகரணங்களும் வெள்ளியாலானவை. பெருமானுடைய ஐந்து திருமுகங்களுக்கும் தங்கக்கிரீடங்களும், சாப்பாப ரணங்களும், குடைகளும், விலே மதிப்பு அதிகமுள்ள திருவாபரணங்களும் சார்த்தப்பட்டிருக்கின்றன. திருவாச கத்தில் உடம்பெல்லாம் கண்ணுய், உள்ளந்தாள் முதல் உச்சிவரை நெஞ்சாய்க் கண்டு உருகவேண்டு மேன்று மணிவாசகப் பெருமான் வேண்டுதல் போலப் பஞ்சமுகத்தோடு கூடிய அந்தத் திருமேனியைக் காணு தறகு நம் உடம்பெல்லாம் கண்ணுய் இல்லேயே என்ற ஏக்கம் நமக்குண்டாகிறது. அவ்வளவு அழகிய திருவுருவம். ஐந்து திருமுகங்களே உடையவனுகப் பெருமான் எழுந்தருளியிருக்கிருன். ஈசானம் (ஊர்த்துவ முகம்), நீங்கலாகமற்றைய முகங்கள் இலிங்கத்திருவுருவில் வேலேப்பாடுசெய்து விடப்பட்டிருக்கின்றன. ஈசானமுகம் மறைவாக இருக்கிறது. நான்கு திசைகளேயும் நோக்கி யனவாக நான்கு திருமுகங்களும் அமைக்கப்பட்டிருக் கின்றன. அதற்குப் போதுவான பாமர விளக்கமோன்று அங்கே சோல்லப்படுகிறது. அது முன்னே சோல்லப் பட்டிருக்கிறது. இந்தச் சுந்தரத் திருக்கோலத்தைக்

கண்ணுற் கண்டு மீண்டும் இருப்பிடம் செல்லவேண்டுமே, இங்கேயே இதனைத் தரிசித்துக்கொண்டேயிருத்தலாகாதா? அந்த நல்ல புண்ணிய வாய்ப்புக் கிட்டாதா என்ற மனக் கவலையும் உண்டாகிறது, அங்கேயும் மணிவாசகம்,

"வழங்குகின்றாய்க்குன் னருளாரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேனென்
விதியின்மையால்"

என்ற பகுதி நம் கவலையைப் போக்குகிறது. இந்தச் சிறு நேரத்துக்குள் நம்முடைய சிந்தனை இப்பேரின்பத்தில் திளைக்காமல், இனி வரப்போகும் ஏதோ ஒரு காலத்தை நினைந்து வருந்துகிறதே என்று திரும்பிவிடுகிறது. இப்படியே மாறிமாறி கவலையும் களிப்புமாக எங்களிற் பெரும்பாலோருடைய தரிசனம் முடித்துக் கொண்டு இருப்பிடம் வந்து சேர்ந்தோம்.

ஆலய அமைப்பு

பசுபதிநாதராலயம் வாங்மதி (பாக்மதி) - சரஸ்வதிநதி மேல் கரையில் அமைந்திருக்கிறது. வடக்கிலிருந்து தென்முகமாக ஆறு ஓடுகிறது. பசுபதிநாதர் திருச்சுற்றில் பல மூர்த்தங்கள் அமைந்து விளங்குகின்றன. கால பயிரவர் மிகுந்த உக்கிரமாக எழுந்தருளியிருக்கிறார். நல்ல தைரியசாலிகளும் பயப்படக்கூடியதாக பசுபதிநாதருடைய தென்முகத் திருவாயிலுக்கு முன்னால் உள்ள திருமண்டபத்தில் மேற்கு நோக்கி நின்றகோலத்தில் காட்சி வழங்குகின்றார். ஆடு, கோழி பலி உண்டு, வடக்கு நோக்கிய திருவாயிலுக்கு முன்னே திரிசூலமும் அதிற் கட்டப்பட்ட தமருகமும் அமைக்கப்பட்டுள்ளன. அவை இரண்டுக்கும் தங்கமுலாம் பூசப்பட்டுள்ளது. சுமார் 25 அடி - 30 அடி உயரமுள்ள திரிசூலமாகவும், அதற்

கேற்ற அளவுள்ள ஒரு தமருகமாகவும் அவை உள்ளன. ஈசானத்தில் வாசுகிநாதர் எழுந்தருளி விளங்குகிருர். கீழை வாசலே அடுத்து பாலகண்டீர பாலாஜி (பாற்கடல் பள்ளி கொண்ட பெருமாள்) எழுந்தருளி உள்ளார். புராண அறை, பஜனேமண்டபங்கள் முதலிய பல மண்டபங்களும் இருக்கின்றன. பல சாதுக்களும், அன்பர்களும் கூடிப் புராண படனம் செய்கின்றனர். நித்திய புராணபடனம் செய்பவர் ஒருவர். பஜனே செய்வோர் நாலேந்துபேர் உண்டு. மேளம் முதலிய வாத்திய மண்டபமும் உண்டு.

குஹ்யேஸ்வரி

காலேச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு சக்தி ஆலயங்களுள் சிறப்பானதும் நேபாலநாட்டினர் மிகுதியாகச் சென்று வழிபடுவதுமான குஹ்யேஸ்வரி ஆலய தரிசனம் செய்யமுற்பட்டோம். மலேயில் உயரஏறிச்சேல்லவேண்டும். அரசர்களும் மற்றையோரும் செல்லவேண்டியிருப்பதால் அழகாக அகலமான படிக்கட்டுகளும் கைப்பிடிச்சுவரும் கட்டி விடப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கும் தண்ணீர்க் குழாய்கள் அமைத்து மக்களுக்கு வசதி செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது. இருபுறமும் அடர்ந்த சோலே நம் களேப்பை மாற்றுகிறது. இந்த அழகிய சூழ்நிலேயில் மிக அருமையான தேவிசந்நிதிக்குச் செல்கிருேம் என்ற ஆசை நம்மை உந்திக்கொண்டு போகிறது. ஒருகல் தொலேவு இருக்கலாம், நடுவில் கோரக்கர் (கோரட்சகர்) ஆலயம் இருக்கிறது. வடநாட்டில் எல்லோரும் சென்று திருமேனி தொட்டு வழிபாடு செய்வது போலப் பசுபதி நாதர், கோரக்கர் ஆலயங்களில் திருமேனி தீண்டுதல் முடியாது. குறிப்பிட்ட பூசகர்களேத் தவிர மற்றையோர்

எவரையும் கர்ப்பக்கிரக அமைப்பில் உள்ளே விட மாட்டார்கள். சந்நிதி திறந்திருக்கும்போது ஆலயங்களைப் புகைப்படம் எடுக்கவும் விடமாட்டார்கள். கூர்க்கக் காவலாளிகள் விழிப்புடன் காத்து வருகிறார்கள். கோரக்கர் சந்நிதி தாண்டி குஹ்யேஸ்வரியின் ஆலயம் சென்றடைந்தோம்.

பசுபதிநாதராலயம் வாங்மதியின் மேல்கரையில் அமைந்திருக்கிறது. குஹ்யேஸ்வரி ஆலயத்தில் மேலே விமான அமைப்புக் கிடையாது. திறந்த வெளிதான். இருந்தாலும் சுற்றிலும் அடைப்பு சுமார் 10அடி உயரமுள்ளதாக மரத்தால் அமைத்து மேலே தகடு வேயப்பட்டிருக்கிறது. நான்கு மூலைகளிலிருந்தும் நான்கு பெரும்பாம்புகள் சீறியெழுந்து மேலே மண்டப அமைப்பாகப் பின்னிக்கொண்டு தலையை நான்கு புறங்களிலும் நீட்டி விழிப்புடன் பார்த்திருப்பதுபோல வேலைப்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. குஹ்யேஸ்வரி சந்நிதியில் நேபாலிகள் பூசை செய்து வருகிறார்கள். இங்கே எருமை, ஆடு, கோழி முதலியன பலியிடுதலும் உண்டு. மதுவர்க்கங்களும் நைவேதனம் உண்டு. ஒருகாலத்தில் நரபலியும் நடந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. அக்காலத்தில் பூட்டானியர் (Butani) இக்கோவிலைப் பூசித்தனர். சங்கரர் காலத்திலிருந்து பூட்டானியரை அகற்றிவிட்டு நேபாலிகள் பூசைசெய்து வருகின்றனர். சுற்றிலும் திண்ணையிட்டு நடுவில் முற்றம்போல உள்ள இடத்தில் குஹ்யேஸ்வரி எழுந்தருளியிருக்கிறாள்.

குஹ்யேஸ்வரிஅருகில் பயிரவர் பிரதிஷ்டை உள்ளது. பைரவர் அருவநிலையில் உள்ளார். ஸ்ரீ சக்ரமேருப் பிரஸ்தாரமாக ஸ்ரீதேவி விளங்குகிறாள். அதன் நடுவில் அஷ்ட

தளபத்மமாக மூர்த்தம் அமைக்கப்பட்டிருக்கிறது. (முக்கோணவரைவுப் பகுதியில்) ஒரு கை நுழையக்கூடியதான துளையிடப்பட்டிருக்கிறது. அதன்மேலே தாமரை அரும்பு போன்ற ஒன்று செய்துவைத்து அந்தத் துளை மூடப்பட்டிருக்கிறது. தாமரை யரும்பின் தலைப்பக்கத்தில் முக்கோணம் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கு எல்லோரும் தேவியின் பிரதிஷ்டையைத் தொட்டுப் பூசை செய்யலாம். பலரும் அப்படி வழிபட்டபிறகு நடுவிலுள்ள அரும்புப் பகுதியில் தலைதாழ்த்தி அதில் வைத்து வணங்குகிறார்கள். பிறகு துளையை முடியிருக்கும் பகுதியை எடுத்துவிட்டுத் துளையில் கையைவிட்டு அதிலுள்ள தீர்த்தத்தை எடுத்துத் தலையில் தெளித்துக்கொள்ளுகிறார்கள். சிறிது உட்கொள்ளவும் செய்கிறார்கள். அதுதான் முக்கியமான பிரசாதமாகக் கொள்ளப்படுகிறது. அந்தச் சந்நிதியில் ஏதாவதொன்றை விரும்பிப் பிரார்த்தனை செய்துகொண்டு அம்பிகையின் தோத்திரங்களான லலிதா திரிசதி, ஸப்தசதி, முதலியவற்றுள் ஏதாவதொன்றைப் பக்தி சிரத்தையோடு பாராயணம் செய்துவந்தால் நினைத்த காரியம் குறிப்பிட்ட ஒரு சில நாட்களில் கைகூடிவிடும் என்றும் நம்புகிறார்கள். அப்படியே பலரும் அந்த மேடைகளில் உட்கார்ந்து பாராயணம் செய்துகொண்டிருத்தலையும் கண்டோம். அவ்வளவு சிறந்த அம்பிகை தரிசனம் வேறெங்கும் கிடைப்பது அரிது. இதுபற்றிய புராண விரிவு கல்கத்தா காளியைக் குறித்துச் சொல்லியிருப்பதில் அடங்கியிருக்கிறது. இதுபோலவே பசுபதிநாதாலயத்துக்கு மிக அண்மையில் வத்ஸலேஸ்வரி ஆலயமும், கட்மண்டு நகருக்கு அண்மையில் ஜயவாஹேசுவரி ஆலயமும் விளங்குகின்றன. இந்தத் தரிசனத்தை முடித்துக்கொண்டு மீண்டும் பசுபதிநாதத்துக்குச் சென்றோம்.



நந்தியும் ஸ்ரீ பசுபதிநாதர் மேற்குத் திருவாயிலும்



ஸ்ரீ பசுபதிநாதர் (போன்ற உருவ அமைப்பு)

நாங்கள் சென்றகாலத்தில் ராவல் சுப்ரமண்ய சாஸ்திரியும் மற்ற நால்வரும் ஆக ஐந்து பூசகர்கள் ஐந்து முகத்துக்கும் நின்று வழிபாடாற்றிக் கொண்டிருந்தார்கள். அது அபிஷேக நேரம்.

குருவருள் !

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைக் கண்டவுடன் ராவல் சுப்ரமண்ய சாஸ்திரிக்கு மகிழ்ச்சி மிக உண்டாயிற்று. அன்று காலையில் பசுபதிநாதர் தரிசனம் முடிந்ததும் அவருடைய வேண்டுகோட்படி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமே ராவல் வீட்டில் அவருடைய மகனைப் பார்ப்பதற்கு எழுந்தருளினார்கள். ராவலும் மிக்க மலர்ச்சியோடு வரவேற்றுத் தம்முடைய பூசையறைக்கு அழைத்துச் சென்றார். அவருடைய பூசையறையும் பசுபதிநாதம் போலவே அமைந்திருக்கிறது. வெள்ளியில் நல்லவிமானம் அமைத்து அதிற் பெருமானை வீற்றிருக்கச்செய்து பரவி வருகிறார். பின் நோய்வாய்ப்பட்டிருந்த தன் புதல்வரைப் பற்றி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தினிடம் விண்ணப்பித்துக்கொண்டார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவடி பட்ட மாத்திரத்தில் 105°க்கு மேல்வரம்பில் நின்ற உடற்காய்ச்சல் நிலை குறைந்துவிட்டதாகக் கூறி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாற்றலைப் போற்றிய சாஸ்திரியார், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருக்கண் பார்வைக்கும் தம் புதல்வன் ஆளாக வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திலும் அவ்வண்ணமே இசைந்து அவர் புதல்வர் படுத்திருக்கும் அறைக்கு எழுந்தருளினார்கள். படுக்கையிலிருந்து எழமுடியாத நிலையிலே கை கூப்பி வணங்கினார் சாஸ்திரியாரின் பிள்ளை. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஸ்ரீ சொக்கநாதர்

சேவடி நினைந்து திருநீற்றையெடுத்து அவர்நெற்றியிலிட்டு அருள்பாலித்தார்கள்.

இருப்பிடத்துக்கு மீண்டபின், ராவலுடைய புதல்வரின் உடல்நிலையில் இன்னும் சிறிது குணம் ஏற்பட்டிருப்ப தாகச் செய்திவந்தது.

பசுபதிநாதர் வழிபாடு

அபிஷேக ஆராதனைக்காக இரண்டாம் முறையாக பசுபதிநாதர் சந்நிதிக்குச் சென்றதும், ராவல் முன்னையினும் மிக்க மலர்ச்சியோடு அபிஷேக ஆராதனைகளைச் செய்து முடித்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் கொடுத்த பொன்னுடையையும் சார்த்தி வழிபாடாற்றினர்.

ஏகமுக ருத்ராட்சம்

பிரசாதம்கொடுக்கும்பொழுது, பெருமான்மீது சார்த்தப் பட்டிருக்கும் திருவாபரணங்களில் முக்கியமானவற்றை எங்களுக்கு எடுத்துக்காட்டினர். எல்லாவற்றையும்விட ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைக் கவர்ந்தது ஏகமுக ருத்ராட்சம் ஒன்றேயாகும். அது வேப்பங்கொட்டை யளவுக்குச் சுமார் ஒரு அங்குல நீளத்துக்கு நீண்டிருந்தது. ஒரே ஒரு கோடு அதில் இருக்கிறது. உருவில் அது மிகச் சிறியதாக இருந்தாலும் கிடைப்பது அருமையினும் அருமை. அது சிவபரம்பொருள் ஏகனாகி நிற்கும் தத்துவத்தை உணர்த்துவதாகவும், சர்வ மங்களத் தையும், பெருமான் திருவடிப்பேற்றையும் அளிக்கவல்ல தென்றும், அந்த ஒரு ருத்ராட்சம் எந்த இடத்தில் இருக் கிறதோ அங்குக் குறைவேதும் இல்லாது நிறைவுற்று

விளங்கும் என்றும் சொன்னார். அதன் மதிப்பு சுமார் 14 லட்சம் இந்திய ரூபாய்களென்றும், அந்த அளவு பணம் கொடுப்பதாக இருந்தாலும் அத்தகைய ஏகமுக ருத்ராட்சம் கிடைப்பதுஅரிதென்றும், பெருமானுக்கு இங்குள்ளதுபோல இந்நாட்டு மன்னனிடம் ஒன்று இருப்பதாகவும், அரச நகைகளில் இது முக்கியமானதென்றும், அரசனாக இருப்பவன் அதனை அகலாதணிந்துகொண்டிருப்பானென்றும் ராவல் எங்களுக்கு எடுத்துச் சொன்னார்.

அதிதி உபசாரம்!

காலை வழிபாடுகளை முடித்துக்கொண்டு அடிகள் வீட்டுக்கு வந்துசேர்ந்தோம். காலை 10-30 மணி இருக்கலாம். அறுசுவை உணவு நம் நாட்டு முறையில் தயார்செய்து வைத்திருந்தார்கள். பரிமாறுதற்கு அம்மையாரே வந்துவிட்டார்கள். பணிவிடையாளர் பரிமாறட்டுமே என்றோம். கேட்கவில்லை. ஒரு பெரிய மகாசாதுவுக்குத் தான் படைக்கக்கூடிய பெருவாய்ப்புக் கிடைத்ததேயென்ற பெரு மகிழ்ச்சிகொண்டு அவ்வம்மையாரே படைத்தனர். மேலும் அடிகள் வீட்டில் சிராத்ததினமாகிய அன்று ஒரு பெரிய மகான் அதிதி உபசரணைக்குக் கிடைத்ததுபற்றி அந்தக் குடும்பத்தாரனைவருமே மகிழ்ச்சிகொண்டனர். அன்று உணவுக்குப்பின் கட்மண்டு நகரைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டோம்.

கட்மண்டுவில்....

கட்மண்டுவில் அரசன் அரண்மனை, பல ராணுக்களின் அரண்மனைகள், பாலகண்டீர பாலாஜி, 21 நீரூற்றுக்கள், ராணி திருக்குளம், கட்மண்டு பெயர்க்காரணமான காஷ்ட மண்டபம், அங்குள்ள விநாயகர் ஆலயம் முதலிய எல்லா

வற்றையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு, ராஜு ஜங்-பகதூரின் சிலை முதலியவற்றையும் பார்த்த பிறகு தேவ பட்டம் வந்து சேர்ந்தோம். கட்மண்டு நகரில் நாங்கள் சுற்றிவரும்பொழுது விமானக் காரியாலயத்துக்கும் சென்று எங்களுக்கு விரைவில் பாரதம் திரும்பப் பிரயாணவசதி எந்தத் தேதியில் அமையக்கூடும் என்று கேட்டுத் தெரிந்துகொண்டோம். மறுநாளே வசதி யிருப்பதாகவும், அது தவறினுல் பிறகு மேற்கொண்டு சிலநாட்கள் செல்லு மென்றும் செய்திகிடைத்தது. மறுநாள் விட்டால் அதிகநாள் தள்ளிப்போவதாக இருந்தபடியால், மறுநாளே திரும்புவ தென முடிவுக்குவந்து பதிவும் செய்துகொண்டோம். பாட்ஞு விலிருந்து ஸ்ரீகாசிக்கு அப்படியேசெல்வதற்குவசதிசெய்து தரவேண்டுமென்றும் இங்கே சொல்லிப் பதிவுசெய்யச் செய் தோம். பிரயாணச்சீட்டு தாங்கள் கொடுப்பதற்கில்லையென் றும் ஆனுல் பாட்ஞுவிலிருந்து ஸ்ரீகாசிசெல்லுவதற்கு இடம் இருந்தால் வசதிசெய்து கொடுக்கும்படிப் பாட்ஞுவுக்குச் செய்தி அனுப்புவதாகவும் சொன்ஞர்கள். அப்படியே உடனே சொல்லிவிட்டார்கள். இந்த ஏற்பாடுகளைச் செய்து கொண்டு தேவபட்டம் திரும்பினேம். மாலைக்கடன்களை முடித்துப் பசுபதிநாதர் தரிசனம் செய்துகொண்டு ராவல் வீட்டிற்கு நானும் பிள்ளையவர்களும் மீண்டும் சென்ருேம். அவருடைய குமாரர் உடல்நிலை குறித்து விசாரித்துவிட்டு, க்ஷேத்திர மகிமை, ஸ்தல மகிமைகள் தெரியச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். ராவல் மகிழ்ச்சி யோடு எங்களுக்கு ‘நேபால மகாத்மியம்’ என்ற புத்தகத் தையும் அளித்துச் சில விளக்கங்களும் கூறினுர்.

ராவலுடன்

“பௌத்தர் திருவவதாரம் செய்தபிறகு இந்த நாட்டு மக்களின் வைதிக மத உணர்வு கெட்டு எல்லோரும்

பௌத்தர்கள் ஆனர்கள். சைவ வைணவ சக்திப் பிரபாவம் உள்ள ஆலயங்களிலும் கூடப் பௌத்தமதாசாரப்படி வழிபாடு நடைபெறுவதாயிற்று. சாக்கியம் மிக மேலோங்கி நின்றது. ஆனல் பௌத்தருடைய காலத்திற்குப் பிறகு அதன் அஹிம்சா தத்துவங்கள் மறைந்து, பூட்டானி யருடைய மதுமாமிச வெறிநிறைந்த பூசைகள், வழிபாடு கள் மிகுதி ஆயின. நரபலி முதலிய எல்லாக் கொடுமை களும் நிறைந்து நின்றன. பூட்டானியர்களைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். இப்பொழுதுங்கூட அவர்கள் நரமாமிசம் உண்பதாகச் சொல்லப்படுகிறது. வயிறு பசித்தால் எதிரே உள்ளது தன்னுடைய மகவாயினும் அதனையும் அடித்துண்ணும் அருளாளர்கள் அவர்கள். சைவமும் கெட்டுச் சாக்கியமும் கெட்டது.

சமய வெற்றி

சங்கரர் திருவவதாரம் செய்து திக்விஜயம் பண்ணிக் கொண்டு இந்த நேபால நாட்டிற்கு வந்துசேர்ந்தார். அவர் சென்ற இடத்திலெல்லாம் சைவமத நிர்த்தாரணம் செய்து மக்களை நல்வழிப்படுத்தி அத்வைத சித்தாந்தம் உலகில் சிறக்கப் பிரசாரம் செய்துவந்தார். ஆங்காங்கும் மூடிக் கிடந்த பல ஆலயங்களுக்கும் சென்று வழிபட்டு, பழய வைதிக சமயத்தைப் பின்பற்றி நடந்துவரும்படி மக்களைப் பணித்து வந்தார். பௌத்தம் வலுத்து இந்து ஆலயங்கள் மூடப்பட்டுக் கிடந்தாலும், சங்கரர் வந்து சேர்ந்ததும், ஆலயங்களில் உள்ள சந்நிதிகள் எல்லாம் தாமே திறந்து கொண்டன. பக்திபரவசமாகத் தோத்திரம் சொல்லி வழி பட்டு மேலே செல்வது வழக்கம்.

இங்கும் பசுபதிநாதர் தரிசனத்துக்காக இவ்வாலயத் திற்கு எழுந்தருளினர். ஆலய மணிவாயில் திறக்கப்பட

வில்லை. "பசுபதிநாதா! ஏனிந்தச் சோதனை? நீரும் நேற்றுவரை உமக்கிட்ட மதுமாமிச வர்க்கங்களை உண்டதனால் மயக்கத்தில் ஆழ்ந்து உறங்குகின்றீரா? உமது அடியவன் திருவாயிலில் காத்து நிற்பது உமக்குத் தெரியவில்லையா?" என்று சொல்லித் தோத்திரித்து நின்றார். கதவுகள் திறந்தன. உள்ளே சென்றார். பெருமானை வழிபட்டார். அதுவரை பாரஸ்நாதராக எழுந்தருளியுள்ள மூர்த்தி தரையில் மிக்க ஆழத்தில் அமைந்திருந்தபடியால் அதனை அப்படியே வைத்து முடிபோட்டு ஆலயம்கட்டி இப்போதுள்ள பஞ்சமுகப் பசுபதிநாதரை சக்தி ஆகமத்தின் படிப் பிரதிஷ்டை செய்து, சிறப்பு வழிபாடுகள் நடத்தி, மக்களையும் நன்னெறிப்படுத்தி சிவ விஷ்ணு ஆலயங்களில் பலியும், மது மாமிசப் படைப்பும் அறவே நிறுத்தும்படிப் பணித்தார். அத்தோடு பூஜா முறைகளையும் திருத்தி வைதிக சம்பிரதாயமாக அமைத்தார். அன்று தொட்டு இன்றுவரை அவ்வாறே நடந்து வருகிறது" என்று கூறி முடித்தார்.

பூஜை முறை

பூஜை செய்யும் காலத்தில் பூசகர்கள் இடுப்பில் பட்டுடுத்தி மேலே கம்பளிச் சட்டை போட்டு அதற்குமேல் குறுக்குமாறாக மேல் வேட்டி போட்டு இடுப்பில் சுற்றிக் கட்டிக் கொள்வார்கள். இடுப்பிலே ஒரு சுற்று வேட்டி, தலையிலே ஒரு குல்லா. மேலே போட்டிருக்கும் கம்பளி இரத்தச் சிவப்பாக இருக்கும். குல்லா காவி நிறத்தில் இருக்கும். பூசகர்களுக்கு வேண்டிய ருத்திராக்ஷம், விபூதி, சந்தனம் முதலியவையும் அணிந்து பார்ப்ப தற்குச் சந்நியாசக் கோலமாகக் காட்சியளிப்பார்கள்.

அபிஷேகம் செய்யும்போது ஒரு சிறு கைக் குழந்தைக்கு நீராட்டுவதுபோலச் சிறு கெண்டியில் அபிஷேக திரவியங்களை எடுத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக ஆர அமர நிறுத்தி நிறுத்திச் செய்கிறார்கள். அலங்கார காலத்தில் பெருமானைக் காண்பதைவிட அபிஷேக காலத்தில் பெருமானுடைய கோலம் ஆபரணங்கள் இல்லாத நிலையிலேயே மிக அழகாகக் காட்சியளிக்கிறது.

நித்தியப்படி ஏறுபடி

காலை 4 மணிக்கு மேற்குவாசல் திறந்து வைக்கப்படும். 9 மணி ஸ்நபன பூஜாரம்பம். மணி 9-30 லிருந்து 11-30 வரை உருத்ராபிஷேகம், பஞ்சாமிர்தாபிஷேகம். 12 மணிக்குப் பூர்ணகலசாபிஷேகம். மணி 12 லிருந்து 12-30 க்குள் அலங்காரம். மணி 12-30 லிருந்து 2 மணி சிரசில் (ஊர்த்துவமுகத்தில்) சந்தனம் அப்பி ஸ்ரீ சக்ரமிட்டுக் கடுக ஸஹஸ்ரநாமார்ச்சனை, 2 மணிக்கு நைவேத்தியம் - தூத்பேடா, கேசர்பாத், அவல், வாழைப்பழம். 2-30 மணிக்குச் சாதம், பருப்பு, பாயசம், கறி நைவேத்தியம். 3 மணிக்குச் சோடசோபசாரம், தீபாராதனை, கதவு அடைப்பு ; மாலை 6 மணிக்குக் கதவு திறந்து ஆரத்தி. காலை 4 மணி முதல் 9 மணிவரையில் நேபால பிராமணர்கள் கதவு திறந்துவைத்துப் பூஜா உபகரணங்கள் சேகரம் செய்வார்கள்.


அன்பர்கள் அப்போழுதிருந்தே ஏராளமாக வந்து தரிசனம் முடித்துக்கொண்டு அவரவர் வேலைக்கும் விரைந்துசெல்வர். பெருமானுடைய கால தரிசனம் விரும்புவோரும், பிரார்த்தனைக்காரர்களும் 8-30 மணியிலிருந்தே வந்து கூடுவர். 9 மணிக்கு நான்கு

திருவாயில்களும் திறக்கப்படும். அந்தநேரத்தில் ஐந்து பூசகர்களும் வந்து சேருவர். நேபால பிராமணர் அப் பொழுதும் அவர்களுக்கு உதவியாகத் தொலைவில் நிற்பர். பிற்பகலில் திருக்காப்பிட்டு மாலை தரிசனத்துக்குக் கதவு திறக்கும்போது, பூசகர் ஐவரில் ஒருவர் ஆரத்தி (தீபாராதனை) செய்ய வருவார். அந்த நேரத்திலும் நான்கு வாயில்களும் திறந்திருக்கும். இரவு 8 மணிக்கு மறுபடியும் காப்பிடப்படும்.

மாத பௌர்ணமி, சிவராத்திரி, தனுர்மாத பூஜை, ஆவணி ஜைனே பூர்ணிமா, பவித்திரோற்சவம் முதலிய ஏறுபடிகளும் உண்டு. பௌர்ணமி யன்று இரவு 9 மணி முதல் 12 மணி வரை வழிபாடுகள் நடைபெறும். நெய், பால், சர்க்கரை பஞ்சாமிர்தம் - ஐந்தைந்து மணு, நம் நாட்டு அளவுக்கு 5 கல அரிசி வடியல். தெற்கு நோக்கிய திருமுகத்துக் கெதிரே யிடப்பட்டிருக்கும் தாமிரப் பதிவில் அன்னம் கொட்டி நைவேதனம், பஞ்சபட்ச பரமான்னமும் (பாவாடை) உண்டு. இரவு 1 மணிக்கு பூசை முடியும். மகாசிவராத்திரிக் காலத்தில் 4 காலமும் பௌர்ணமி பூசைத் திட்டத்தில் வழிபாடுகள் நடைபெறும். தனுர் மாதத்தில் இரவு 12 மணிக்கு வழிபாடுகள் தொடங்கிச் சூரியோதய காலத்துக்கு முன்னே முடியும்.

வாங்மதி நதிக்கரை

வாங்மதிநதிக்கரையில் நூற்றுக் கணக்கான சிறுசிறு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பலப்பல அரசர்களும் அவரவர் நினைவாகப் பல பிரதிஷ்டைகள் செய்திருக் கிறார்கள். பசுபதிநாதர் ஆலய முன்புறம் வாங்மதி நதிக்



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் ஸ்ரீ பசுபதிநாதர் தரிசனம் முடித்துத் திரும்புதல்



தேவபட்டன்

கரையில் இராஜராஜேசுவரி கோயில்வரை நீள இருகரைகளிலும் படிகள் கட்டப்பெற்றுள்ளன. மேல் கரையில் சிறுசிறு மேடைகள்.

பாவக் கழிவு

பசுபதிநாதர் சந்நிதியில் இரண்டு மேடைகள் உள்ளன. ஒன்று அரச பதவியிலுள்ளவர் இறந்துவிட்டால் தகனம் செய்வதற்கு. மற்றது மந்திரி (ராணு) பதவியிலுள்ளவர் தகனத்துக்கு. தெற்கே இரண்டு பாலங்கள். இவற்றைத் தாண்டி இவைபோலவே தகன மேடைகள் உள்ளன. காசியைப்போலவே இங்கும் பிணங்கள் எரிந்துகொண்டேயிருக்கும். ஒன்று எரிந்து சாம்பலானதும் மற்ருென்று அவ்விடத்துக்குக் காத்து நிற்கும். காசி முத்திநகரம்; அங்கு இறத்தல் முத்தி கொடுக்கும் என்று பலரும் நம்புவதுபோல, இங்கு பக்தர்கள் தாங்கள் இறக்கும் தறுவாயில் தங்கள் பாதங்கள் வாங்மதிநதியில் தோயுமாறு இடச் செய்து, கூட்டைவிட்டு உயிர் பறந்த பின், அங்கே கரையிலுள்ள மேடையிலிட்டுத் தகனம் செய்யப்படுகிருர்கள். இதனுல் தங்களுடைய பாவங்கள் வாங்மதிநதி ஸ்பரிசத்தால் கழுவப்பட்டு அந்த ஆன்மா முத்தி அடைவதாக நம்புகிருர்கள்.

தீர்த்தங்கள்

சுற்றிலும் அடர்ந்த காடும் நடுவில் ஆறும், இரு கரைகளிலும் பெரிய சிறிய ஆலயங்களுமாக அமைந்து விளங்கும் அவ்விடத்தில் சுடலே அமைந்து இருப்பதையும் எப்பொழுதும் அங்கே தகனகாரியம் நடந்துகொண்டிருப்பதையும் கண்டால்,

" கோயில் சுடுகாடு கோல்புலித்தோல் நல்லாடை
நாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி "

என்ற திருவாசகப் பகுதி நம்மனோர்க்கு நினைவுவருகிறது. கோயிலும் சுடுகாடும் அடுத்தடுத்து விளங்குவது கோயிலே சுடுகாடாகவும், கோடிய காடு அடுத்திருப்பதனாலே அங்குள்ள புலித்தோலே நல்லாடையாகவும், உள்ளே தனக்கோர் தாயும் தந்தையும் இல்லாமல் தானே உலக பிதாவாக, உலக மாதாவாக, உலக காரணனாக விற்றிருக்கும் பெருமான் தாயுமிலி தந்தையிலி தான் தனியனுமாகவும் இப்படி இங்கே திருவாசக விளக்கத்தைக் காணலாம்.

புராண வரலாறு

நாடு காண்டல்

கட்மண்டுப் பகுதி ஒரு காலத்தில் பெரிய ஏரியாக இருந்தது. விஷ்ணு தேசோத்தாரணம் செய்யும் நோக்கத்தோடு இங்குத் தன்னுடைய சக்கரப்படையை யேவி மலையில் இரண்டு பிளவுகள் உண்டுபண்ணினார். அதன் வழியே இந்தப் பள்ளத்தாக்குப் பிரதேசத்தின் ஏரி நீர் வடிந்து தரைப்பகுதி வெளிப்பட்டது. மரம், சேடி அடர்ந்து வனமாகவும் ஆயிற்று. வாங்மதி, விஷ்ணுமதி, ருத்ரமதி என்ற மூன்று அழகிய ஆறுகள் ஒடுவனவாயின.

ஜோதி தரிசனம்

இந்தப்பகுதி தவ வாழ்க்கைக்கு மிக உகந்ததாக இருந்தபடியால் நேவா என்னும் மஹரிஷி இங்கே வந்து

தங்கித் தவம் செய்து வந்தார். ஒருநாளிரவு சொப் பனத்தில் ஒரு பெரிய ஜோதி தரிசனம் கண்டார். அது என்ன, எதற்காக அப்படிக் காட்சிதந்தது, அது எங்குளது என்று அவரால் உணர்ந்துகொள்ள முடியவில்லை.

அவருடைய பாற்பசுவொன்று ஒவ்வொருநாளும் மாலை மேய்ச்சலிலிருந்து திரும்பி வந்தால் பால் கொடுப்பதில்லை. மடியில் பாலும் இருப்பதில்லை. அதன் காரணம் அவருக்கு விளங்காதிருந்தது. ஒருநாள் பகற்பொழுதில் அந்தப்பசு ஓரிடத்தில் நின்று தானாகவே தன் மடியிலிருந்து பாலைப் பொழிந்து கொண்டிருப்பதைக் கண்டார். வேகமாக அந்த இடத்தின் விசேஷத்தைக்காண ஓடிச்சென்றார். * பசு அப் புறம் அகன்றதும் அந்த இடத்தில் ஒரு ஜோதி வெளிப் பட்டுப் பூமிக்குள் சென்று மறைந்துவிட்டது. சொப்பனத் திற்கண்ட ஜோதியைக் கண்ணெதிரே இங்கே கண்டுவிட்ட படியால் ஆண்டவன் தனக்கு ஜோதி தரிசனம் காட்டி அருள்புரிந்த கருணையை நினைத்து ஆடிப்பாடி மகிழ்ந்தார். 'பெருமானே! நீர் இங்கு எப்பொழுதும் ஜோதிவடிவினனாக எழுந்தருளியிருந்து என்போன்ற மக்களுக்கு அருள்புரிய

---

* மாலையில் வந்த மாட்டு மடியில் பால் இல்லை என்பதைக் கண்ட முனிவன் மாட்டைக் கட்டி வைத்துவிட்டதாகவும், மறுநாள் பகற்பொழுதில் பால் பொழியாமல் இருந்தபடியால், பெருமான் கனவில் தோன்றி 'அன்பனே! உன் பசு முற் பிறவியில் காமதேனுவாக இருந்தமையால் பூர்வஜன்மவாசனை யோடு என்மேல் பாலபிஷேகம் செய்தது' என்று கூறிய தாகவும், மறுநாள் மாட்டை அவிழ்த்துவிட்டதாகவும், அது ஓரிடத்தே நின்று பால் பொழிய, அவ்விடத்தைப் பெருமான் உறையும் இடமாகக் கண்டு பூசித்ததாகவும் இவ் வரலாறு சிறிது வேறுபட்டு வழங்குவதுமுண்டு.

வேண்டு ' மென்று வேண்டினுர். ' அப்படியே ஆகுக ' என்று அசரீரி பிறந்தது.

பாரஸ்நாதர்

அந்த இடத்தில் நேவா முனிவர் பாதரசத்தைக் கொண்டு ஒரு இலிங்கம் ஸ்தாபித்தார். நம்முடைய கணக்குப்படி 10½ அங்குல உயரமுடையதாக அது இருந்தது. பெருமானுடைய அந்தத் திருமேனியில் எந்த உலோகத்தைக்கொண்டு தொட்டாலும் அது பொன் ணுயிற்று. அதனுல் பாரஸ்நாதர் என்ற திருநாமத்தோடு பெருமான் எழுந்தருளியிருந்தார். தவமுனிவர் பலர் இங்குவந்து தரிசித்து யாக காரியங்களுக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுச்சென்ருர்கள். ஏதேனும் ஒரு உலோகத்தால் தொட்டுப் பொன் பெற்ருர்கள்.

நேவாபாலம்

நேவா முனிவர் இங்கு இருந்து தவம் பெருக்கியதால் ' நேவா பாலம் ' என்று பெயர்பெற்றது. காலப்போக்கில் அது நேபாலம் என்று திரிந்து வழங்கலாயிற்று. (நேவ= நேவமுனிவரால் உண்டாக்கப்பெற்ற; பாலம் = அமைப்பு, பரிபாலனம்).

காஷ்ட மண்டபம்

கற்பக விருட்சம் இந்தப் பெருமானை வந்து தவருது வழிபடும் நியமம் உடையது. அது அப்படி வந்து வழி படும் ஒருநாளில், பெருமானைத் தரிசிப்பதற்கு அங்குவந்த மரத் தச்சன் ஒருவன் அதனைக் கண்டு கொண்டான்.

இந்த விருட்சத்தைக்கொண்டு ஒரு நகரமே செய்யலாம் என்று அவன் திட்டமிட்டான். அவன் திட்டம் உருவாவதற்குமுன் விருட்சம் மறைந்துவிட்டது. மறுநாள் அதே வேளைக்கு வருமென்று காத்திருந்தான். கற்பக விருட்சம் வந்தது. பூசைசெய்து திரும்பும்பொழுது அதன் கால்களை இறுகப் பற்றிக்கொண்டான். 'ஏனப்பா என் கால்களைப் பிடித்தாய்? நேரமாகிறது. நான் தேவலோகம் செல்ல வேண்டுமே. இந்திரன் கோபிப்பானே' என்றது. 'உன்னை விடமுடியாது. இங்கே உன்னைக்கொண்டு ஒருநகரம் நிர்மாணிக்கப்போகிறேன். அரண்மனைகளும், கோவில்களும் உண்டாக்கவேண்டும். உன்னைக்கொண்டுதான் அந்நகரம் உண்டாக்கப்படவேண்டும். அந்நகரம் தேவநகரமாக விளங்கும். ஆகவே உன்னை விடமுடியாது' என்றான்.

கற்பக விருட்சம் தான் ஒரு நற்பணிக்குப் பயன்படுவதை நினைத்து மகிழ்ந்தாலும், தன் அரசனிடம் சென்று அநுமதிபெற்று மறுநாள் வருவதாகச் சொல்லிச் சென்றது. மறுநாள் வந்த கற்பக விருட்சம் பசுபதிநாதரை வணங்கி, 'ஒரு நல்ல பெரிய தெய்வபட்டணம் அமைவதற்கு நான் பயன்படப் போகிறேன். பெருமானே! என்றும் உன்னருள் எனக்கு வேண்டும். அந்த நகரம் செழித்து உன்னருளால் நிலைக்க வேண்டும்' என்று வணங்கிப்போற்றியது. அப்படி அந்த மரத்தைக்கொண்டு அவன் கட்டிய முதல் வேலை ஒரு கணேசராலயம். பிறகு பல ஆலயங்களையும் அரசன் தங்க அரண்மனையையும் அத்தச்சன் கட்டினான். அதோடு கற்பக விருட்சம் விதித்த நிபந்தனையின்படி, அந்நகருக்குக் 'காஷ்ட மண்டபம்' என்ற பெயரையுமிட்டான். அன்று தொட்டு இன்றுவரை காஷ்ட மண்டபம் என்ற பெயரோடு

இந்நகர் விளங்கி வருகிறது. காலப்போக்கில் பல ஊர்ப் பெயர்களும்மாறிவந்திருப்பதுபோலக் காஷ்ட மண்டபமும் கட்மண்டாக வழங்கப்படுகிறது.

வாசுகி வழிபாடு

பெருமானுக்கு அந்த நாட்டரசன் நீலசிகாமணி யொன்று சார்த்தி வழிபட்டான். அஷ்ட நாகங்களில் ஒருவனுன வாசுகி, பசுபதிநாதரை நாள் தவருது வழிபடும் நியமம் உடையவன். அப்படி வழிபட்டு வருங்காலத்தில் அந்த நீலமணியைக் கண்டான். விரும்பினுன். எடுத்துக் கோண்டு போய்விட்டான். மறுநாட் காலே பூசை செய்ய வந்த பூசகர் திடுக்கிட்டார். நீலமணியைக் காணுத செய்தியை அரசனிடம் தேரிவித்தார். அரசனே பூசக ரையே சந்தேகப்பட்டான். பூசகர் பெருமானிடம் வந்து குறையிரந்தார். பெருமானே! உன்னடியவனுக்குச் சோதனே ஏன்? என்று அழுதார்.

பூசகரின் சோப்பனத்தில் ' இன்றிரவு பூசைகளேல்லாம் முடிந்தபின் ஒளிந்திருந்து காண்பாயாக' என்று அருளாணே பிறந்தது. அவ்வண்ணமே அன்றிரவில் பூசைகளேல்லாம் முடிந்தபிறகு ஒளிந்திருந்தார் அப் பூசகர். நள்ளிரவில் ஒரு இரைச்சல் கேட்டது. வாசுகி (பாம்பரசன்) வந்து பெருமானேப் பணிந்து தன் வாயிலிருந்து நீலமணியைப் பெருமான் திருமுடியின்மேல் சார்த்திப் பணிந்தான். பூசை முடிந்ததும் மீண்டும் எடுத்துக்கோண்டு சென்று விட்டான். இந்த வாசுகியிடமிருந்து எப்படி இந்நீல மணியைப் பேறுவது என்று பூசகர் யோசித்துக் கடைசியில் வாசுகியைக் குறித்தே தவம் புரிவதேன்ற முடிவுக்கு வந்தார். வாசுகியும் தவமுடிவில் எதிர்ப்பட்டு என்ன

வரம் வேண்டுமென்று கேட்டான். நடந்தவைகளைச் சொல்லி வழிபட்டு நீலமணியை வேண்டினார் பூசகர். 'பதிலுதவியாக நீ என்ன செய்வாய்' என்று வாசுகி கேட்ட போது 'உன்னையும் நீ வழிபடும் இப்பெருமானோடுசேர்த்துப் பூசிப்போம்' என்று பூசகர் கூறினார். வாசுகியும் நீல மணியைத் தந்து மறைந்தான். அதுமுதற்கொண்டு வாசுகி பூசையும் இங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படு கிறது. ஈசானமுக வழிபாட்டில் வாசுகி பூசை செய்வதாக இன்றும் கொள்ளப்படுகிறது.

இந்த வரலாற்றின் பிற்பகுதி வேறுவிதமாகவும் வழங்குவதுண்டு. நீலமணி வாசுகியின்பால் இருக்கிற தென்று ஞானதிருஷ்டியால் அறிந்த பூசகர் வாசுகியைத் தவமிருந்து வரவழைத்து, நிபந்தனையின்பேரில் நீலமணி யைப்பெற்றுச் சார்த்தி வாசுகி பூசைக்கு ஏற்பாடு புரிந்தார் என்பதே அது. வாசுகி பிரதிஷ்டைசெய்த தனி இலிங்கமும் இருக்கிறது.

ஸ்லேஷ்மாந்தகவனம்

கந்தர் அவதாரத்துக்குக் காரணமாக இருந்த தாரகாசுர வதத்தின்போது, பெருமான் வீரியம் சிதறி விழுந்ததால் இதற்கு சிலேஷ்மாந்தகவனம் என்று பெயர். விழுந்த இடத்திலேயே அது ஜோதிவடிவமாக நிலத்துக்குள் சென்றது. அந்த ஜோதியே நேவா முனிவர்க்குக் காட்சி தந்தது என்பது புராண ஐதிகம்.

கண்டகிநதி உற்பத்தியாகுமிடத்திலிருந்து கங்கையிற் கலக்குமிடம் வரை உள்ள பகுதிக்குச் சிலேஷ்மாந்தகவனம் என்று பெயர். சிலேஷ்மம்=மலம் - பாவம்; பாவத்தைப் போக்குவது என்பது பொருள்.

தீர்த்தங்களும், மூர்த்திகளும்

கார்க்கோடகமடு, சம்பாநதி, சயிலகங்கை, திரிசூல கங்கை, மீனசக்ரமடு, ருத்ரமதி விஷ்ணுமதி. வாங்மதி முதலிய 41 தீர்த்தங்கள் உள்ளன. இவை விசேஷமானவை. சுற்றுப்புறத்தில் கோகர்ண க்ஷேத்திரம், கெளரிசிகரம், பசுபாச விமோசனம், பிரஹலாத தபோவனம் பிருகு தபோவனம், யோககுண்டம் ராவண தபோபூமி, வால்மீகி யக்ஞபூமி, வாசுகி க்ஷேத்ரம், சிவபுரி, முதலிய 38 இடங்கள் மிகவும் புனிதமானவை. மூர்த்திகளில் அகத்தீஸ்வரர், அந்தர், கணேசர், கோகர்ணேஸ்வரர், சண்டேஸ்வரர், பசுபதிநாதர், பைரவர், சோமேஸ்வரர் முதலிய 39 மூர்த்தங்கள் சிறப்புடையவை. சக்திகளில் காளிகா, குஹ்யேஸ்வரி, சண்டேஸ்வரி, ஜெயவாஹேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, வத்சலேஸ்வரி முதலிய 12 தேவி ஆலயங்கள் மிக்க சிறப்புடையவை. அவற்றுள் ஜெயவாகேஸ்வரி முகமாகவும், வத்சலேஸ்வரி மத்யபாகமாகவும், குஹ்யேஸ்வரி குஹ்ய பாகமாகவும் உள்ள பெருமை மிக்கவையென்று முன்னே சொல்லப்பட்டிருக்கிறது.

சேமிப்பு

ஜெயவாகேஸ்வரிக்குப் பிரார்த்தனைகள் மிக உண்டு. அங்குப் பக்தர்கள் செலுத்தும் காணிக்கைகளில் ரூபாய் நாணயங்களைத் தவிர, தங்கம், வெள்ளியாக வருபவை மாதம் ஒருமுறை பரிசீலனை செய்யப்படுகிறது. அதனைப் பசுபதிநாதர் ஆலய மேற்றட்டில் அப்படியே கட்டிப்போடப்படுவதாகவும், ஆலய உபயோகத்துக்கு வேண்டியபோது எடுத்துக்கொள்ளப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. இப்படிப் பல லட்சக்கணக்கான ரூபாய்

பேறுமானமுள்ள வேள்ளியும் தங்கமும் அங்கே போட்டு வைத்திருப்பதாகவும் சோல்லப்படுகிறது. பசுபதிநாத ராலயத்தில் கூர்க்கவீரர்கள் எப்போதும் விழிப்புடன் காத்து வருகிருர்கள். ஜேயவாகேசுவரி ஆலயத்தி லிருந்து உபயமாகவரும் வேள்ளி தங்கத்தைப் பரிசீலனே சேய்யும் குழுவில் ராவலும் ஒருவர். அவர் இருந்து பார்வையிட்டுப் பசுபதிநாதராலயத்துக்குக் கோண்டுசேல்ல வேண்டிய போறுப்பு உள்ளவர். அன்றிரவு ராவலேச் சேன்று கண்டபோழுது அவர் இச்சேய்திகளேச் சோன்ஞர்.

பஞ்சமுகப்பிரம்மம்

சிவம்

சைவம் மிகப்பழைய சமயம். அதை அனுஷ்டிப்பவர் சைவர் எனப்படுவர். அச்சமயத் தேய்வம் பரமசிவம், முழுமுதல்வன். சர்வலோக காரணன், சச்சிதானந்த சோருபன் என்றேல்லாம் வழங்கப்படும். சிவம் பேரோளி, சேவ்வோளி, மங்களம் என்று போருள்படும். அத்தோடு எல்லாப் போருள்களும் மகாப்பிரளய காலத் திலே அவன் சக்தியுள் அடங்கும். அந்தப் பராசக்தியை அவன் தன்னுள் அடக்கிக்கோள்கிருன். அதாவது எல்லா வற்றையும் சக்தி வாயிலாகத் தன்னுள் ஒடுக்கிக்கோள் கிருன். அப்படி ஒடுக்கிக் கோள்வது சர்வ சம்ஹாரம் எனப்படும். அவ்விதமாக எது சர்வ சம்ஹாரம் சேய்ய வல்லதோ அதுவே உலக காரணமாக இருக்கிறது என்று சோல்லுகின்றன நம்முடைய சாஸ்திரங்கள். ''அந்தம் ஆதி என்மனுர் புலவர்.'' அது ஆனந்தவடிவாய்ச் சுயம்பிர காசமாய் நின்று ஒளிவிடும்.

சக்தி

அதனுடைய சக்தியே பராசக்தி எனப்படும். அப் பராசக்தி பரமசிவனுடைய ஞான குணமாகும். சூரியன் குணி; சூரிய ஒளி குணம். இதுபோல சிவம் ஞான குணி; சக்தி குணம். இயல்பாகவே பரமசிவம் சத்தும் சித்தும் (ஞானம்) ஆனந்தமுமாய் எப்போழுதும் ஒரேபடித்தாய் நிற்பதாய்த் தானே சுயம்பிரகாசமாய்ச் சர்வஞ்ஞுத்துவம், அநாதிபோதம், சுதந்திரம் முதலிய எண் குணங்கள் உடையதாய்த் திகழும்.

அருள்

ஆன்மாக்கள் மீது வைக்கும் பரம கருணையே பராசக்தி யாகி அருள்பாலிப்பது. அதனுடைய சந்நிதியில் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோபாவம், அனுக்ரகம் என்னும் ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன. இந்த ஐந் தொழிற்கும் ஏதுவாய் நின்று இயக்கும் சக்தி ஆதி அல்லது திரோதாயிசக்தி எனப்படும். பதியும் திரோதாயிசக்தியும், சூரியனும் கிரணமும்போல. சூரியனுடைய சந்நிதியில் தாமரை அரும்பி, மலர்ந்து, உலர்ந்து போவதுபோல் இந்தப் பரமபதியினுடைய சந்நிதி மாத்திரையில் ஆக்கல், காத்தல், அழித்தல் எனும் மூன்றும் நடைபெறுகின்றன. எல்லாம் சந்நிதி விசேஷந்தான். தாமரை அரும்பி மலர்ந்து குவிதலாகிய மாறுபாடுகள் சூரியன் சந்நிதியில் நடக்கிறது. அம்மாறுபாடு சூரியனுக்கில்லை. அதேபோல மேலே சோல்லப்பட்ட தோழில்கள் பராசக்தியின் சந்நிதி விசேஷத் தால் நடைபெறுவன. திரோதாயி சக்தி ஆன்ம மலத்தை நீக்கிச் சிவத்தை அளிக்க விரும்பும்போழுது இச்சாசக்தி யாகிறது. அதன் போருட்டுச் செய்யவேண்டிய நடைமுறை

களை அறியும்போழுது அது ஞானசக்தியாகிறது. நடைமுறை அனுஷ்டானத்தில் கிரியையாகத் தோழிற்படுதற்குக் காரணம் கிரியாசக்தியாகும்.

ஐந்தொழில்

ஆதிசக்தி ஐந்தோழில் செய்யும்போழுது ஆரணி, ஜனனி, ரோதயித்ரி என்று மூன்று சக்தியாக வைத்தேண்ணப்படும். அம்மூன்றும் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், மகேசுவரன், சதாசிவன் என்ற ஐந்து கர்த்தாக்களை அதிஷ்டித்து நின்று படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தோழில்களைச் செய்யும். சிவசக்தி இந்த ஐந்து கர்த்தாக்களிலும் நின்று தோழிற்படுவதால் அவை சிவவடிவங்கள் என்று சோல்லப்படும். ஆனால் சிவசக்தி (ஆதி) தோழிற்படுமிடங்களாக அவை அமைந்து விளங்குவதால், அவை அதிஷ்டான வடிவங்கள் என்று கூற வேண்டும். அரசனது ஆணையாகிய சக்தி அதிகாரிகள் பலரிடத்தும் நின்று தோழிலுக்கு ஏற்ற காரியப் பேயர் பேற்றுத் தோழில் (அரசியல்) நடத்துவது போல சிவசக்தியின் பிரபாவமாக இவ்வைந்து மூர்த்தங்களும் நின்று தோழில் புரிகின்றன.

வடிவம்

பரமசிவம் நாமருப பேதமற்றதாக இருக்கிறது. ஆனாலும் அது ஆன்மாக்களிடத்தே வைத்திருக்கும் தயாவால் உருவங்கோண்டு அருளும். அவை உண்மை வடிவங்களும், தியானம் பூஜை, முதலியவற்றின் போருட்டுக் கோள்ளப்படும் கற்பித வடிவங்களுமாகும்.

சிவனிடம் மலமாயை கன்மங்கள் முனைந்து நில்லா. ஆனால் சக்தியின் அதிஷ்டானமாக வருபவற்றால் பாசம் தோழிற்படும். அயனும் அரியும் பிருகிருதி முற்பட்ட வராதலால் சகலவர்க்கத்துள் அதிகாரம் பேற்றவர் களேன்று எண்ணப்படுவர். உருத்திர மூர்த்திக்குப் பிரகிருதி சம்பந்தம் இல்லாது பிரளயாகல முத்தராய்ச் சிவவடிவு எய்தி நிற்பவராக எண்ணப்படுவார். சதா சிவம், மகேசுவரர் ஈசுவரசாதாக்கிய நிலையினர். ஆகையால் சுதந்திரவடிவமாகி அதிகார போகருபம் உடையவராவர். தாமரையின் காரியப்பாடு சூரியனின் கிரணசம்பந்தத்தால் நிகழ்வதுபோலப் பஞ்சகிருத்திய முறையும் சிவசக்தி சம்பந்தத்தால் நிகழ்வதாகும். முதல்வன் உயிர்களின் போருட்டு உமாமகேசுவரர், தட்சிணாமூர்த்தி சபாபதி முதலிய 25 வடிவங்களையும், அவற்றுள்ளும் பல பேதங்களையும் கோண்ட வடிவங் களில் நின்று அருள்சேய்வான். ஒவ்வோர் காலத்து ஒவ்வோர் காரணம் பற்றி அப்படி ஏற்கப்படும். இந்த 25 மூர்த்தங்களும் மகேசுவர மூர்த்தங்கள் என்று கோள்ளப்படும்.

இனி, பரமசிவன் அருவத்திருமேனி, உருவத் திருமேனி, அருவுருவத்திருமேனி இப்படியே மூன்று திரு மேனியும், ஞானத்திருமேனியும்கோண்டு அருள்புரிகிறார்.

அருவம்

இவற்றுள் அருவம் அழியாததாய், எல்லா ஆன்மாக் களுக்கும் காண்டற்கரிதாய், இன்பசோருபமாய், அறியா தார் சேன்று கூடுதற்கு அரிதாய், வழிபடுவோர் சேன்று போருந்தும் இடமாகிய முத்திப் போருளாய்ச், சர்வவியாபகி யாய், அனுக்ரக கிருத்தியத்தைச்சேய்கின்ற சதாசிவனுக்கு

மேலாய், பராசக்திக்குக் காரணமாய் இருக்கும் உண்மைப் பொருள்.

" பந்தமாகிய மலவிருளகற்றும்,
பரிதியாயுள பல்லுயிர்க்குயிராய்
அந்தமாதிகள்அளப்பரு மோளியாய்
அமலமாகும் அவ்வருவேனும் உருவம் "

அருவ சொரூபங்கள்

பரமசிவம், திரோபவன், இச்சிதா, நாதா, கர்த்தா, அநாசிருத தேவர், அநாதர், அனந்தர், வியோமரூபர், காரண வியாபகர், வியாபகர் அம்சம் ஆடகேசுவரர், கூஷ்மாண்டர், காலாக்நி ருத்ர தேவர், ஆதார சக்தி, அநந்த தேவர் ஆகிய பதினைந்து மூர்த்திகள் அருவ சொரூபிகளாவர்.

அருவசக்தி: நிஷ்கள சிவத்தின்அம்சமாய்ப், பராசத்தி தோன்றும். பராசக்தியின் அம்சமாய்ப் பேத்தத்தில் வியாபித்திருப்பது ஆதிசக்தி. ஆதிசக்தியின் அம்சமாய் வடிவைப் பிரேரிப்பது இச்சாசக்தி. இச்சாசக்தியின் அம்சமாய் அறிவை உண்டாக்குவது ஞானசக்தி. ஞானத்தின் அம்சமாய்ப் பஞ்சகிருத்தியங்களை உண்டாக்குவது கிரியாசக்தி. இவ்வைந்தும் சிவபெருமானிடமிருந்து தோன்றிய நிஷ்கள சக்திகளாவர்.

சிவ சாதாக்கியம்

இந்த சக்திகளிலிருந்து சிவசதாக்கியங்கள் தோன்றின. சிவசாதாக்கியம் = எப்போழுதும் புகழப்படுவது, நாமரூபாதிகள் இல்லாத சுத்தசிவம்; நாமம் உடையவராய் அன்பர்களால் புகழப்படுவது. பராசத்தியின் அம்சமாய் உள்ள சாந்தியதீதை அனுக்ரகம் செய்யுநிமித்தம் சிவ சாதாக்கியம் தோன்றும். இந்தச் சிவசாதாக்கியம் என்னும்

தத்துவம் சதாசிவமேன்னும் மூர்த்தியுடன் போருந்திய குணம் ஈசானம். அதன் ரூபம் பரைக்கு மேலானதாய் அதிசூக்குமமாய், ஆகாயத்தில் தோன்றுகின்ற மின்னல் அனையதாக அருபமாய், எங்கும் வியாபித்துள்ளதாய், தியானத்தால் அறியப்படுவதாய் லயஸ்தானமாயிருக்கும்.

அமூர்த்தி சாதாக்கியம்

சாந்தியேன்னும் பேயரை உடைய ஆதிசக்தியின் அம்சமாய் அமூர்த்தி சாதாக்கியம் தோன்றும். ஆதிசக்தி அருபி. அதனின்றும் தோன்றிய சாதாக்கியம் அமூர்த்தி சாதாக்கியம். அமூர்த்தி சாதாக்கியம் என்னும் தத்துவமும் ஈசன் என்னும் மூர்த்தியும் போருந்திய குணம் *சத்தியோ ஜாதம். அதன் ரூபம் கலைகளுக்கு அப்பாற்பட்டதாய் தூணுகாரமான லிங்கமாய், கோடி சூரியப்பிரகாசமுள்ளதாய் இலிங்கத்தின் நடுவே வடிவு கற்பித்திருக்கும் திவ்விய லிங்கமேன்றும் மூலஸ்தம்பமேன்றும் சோல்லப்படும். இந்த இலிங்கத்திலே சிருஷ்டி காலத்தில் தோற்றமும் சம்ஹார காலத்தில் ஒடுக்கமும் உண்டாவது.

மூர்த்தி சாதாக்கியம்

வித்தை யேன்னும் பேயரை உடைய இச்சாசக்தியின் அம்சமாக மூர்த்தி சாதாக்கியம் தோன்றும். இச்சாசக்தி சுத்தமான கலையைப் போருந்துதலால் அதினின்றும் தோன்றிய இதற்கு மூர்த்தி என்று பேயர் போருந்தியது. மூர்த்தி சாதாக்கியமேன்னும் தத்துவமும், பிரமேசன் என்னும் மூர்த்தியும் போருந்திய குணம் வாமதேவம்.

---

* சாதாக்கிய விளக்கங்கள் ' சிவபூசை விளக்கம் ' எனும் நூலை அடியோற்றியவை.

இச்சாதாக்கியம் கலேயோடு கூடியதும் உருவம் உடையதுமாய் இருக்கும். இது பிரளய காமாக்கினிபோல் திவ்ய லிங்காகிருதியாய் மேற்பாகத்தில் கிருபை பொருந்திய ஒரு திருமுகமும், முச்சுடர்களேயும் நடத்துகின்ற மூன்று திருக்கண்களும், எல்லா அவயவங்களும், மான் மழு வரதம் அபயம் தாங்கிய நான்கு திருக்கரங்களும் உடையதாய் இலிங்க மூர்த்தியென்று பெயர் பெற்று விளங்கும்.

கர்த்ரு சாதாக்கியம்

பிரதிஷ்டாகலே யென்னும் பெயரை உடைய ஞான சக்தியின் அம்சமாகக் கர்த்ரு சாதாக்கியம் தோன்றும். கர்த்ரு சாதாக்கியம் என்னும் தத்துவமும், ஈசுவரன் என்னும் மூர்த்தியும் பொருந்திய குணம் அகோரம். இந்தச் சாதாக்கியம் ஸ்படிகம் போன்ற ஒளி உடையதாய் திவ்ய லிங்கமாய் மிக்க தயையோடுகூடியதாய், நடுவில் சங்கார காரகஞகிய ஈசுவரன் என்னும் மூர்த்தி உடையதாய், நான்கு திருமுகங்களேயும், எட்டுத் திருக்கரங்களேயும், பன்னிரண்டு கண்களேயும், இரண்டு திருவடிகளேயும் உடையதாய் வலது கரங்களில் சூலம், மழு, வாள் அபயமும், இடது கரங்களில் பாசம், மணி, பாம்பு, வரதம் என்ற நான்கும் உடையதாய் எல்லா லட்சணங்களும் பொருந்தியதாய் இருக்கும். இது ஞானலிங்கம் *.

கர்மசாதாக்கியம்

நிவிர்த்தி என்னும் பெயரிய இச்சாசக்தியின் அம்சமாய் இது தோன்றும். இத்தத்துவமும்ஈசானன் எனும் மூர்த்தியும்

* "நாலு கோலாமவர் தம்முக மாவன" - அப்பர்.

பொருந்திய குணம் தத்புருஷம். சிவபெருமான் ஆன்மாக்களுடைய தியான பாவனையின் நிமித்தமாக நிஷ்களசகள திருவுருக்கொண்ட நிலை ஆவுடையாளுடன்கூடிய லிங்கம். "நிஷ்களந்தான் அன்பால் நினைந்து அர்ச்சிக்க சகல நிட்களமானுன் நிமலனே" - சைவசமயநேறி.

சகளநிஷ்களம் - சதாசிவரூபம்

இந்தச் சகளநிஷ்கள மூர்த்தியாகிய சதாசிவர் ஐந்து முகங்களும், பதினைந்து கணகளும், பத்துத் திருக்கரங்களும், இரண்டு திருவடிகளும் ஆக முப்பத்திரண்டு லட்சணங்களோடு கூடியவராய்த் திகழ்வர். ஐந்து திருமுகம்; ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம். ஈசானம் - மேல் நோக்கியது. தத்புருஷம் - கிழக்கு நோக்கியது. அகோரம் - தெற்கு நோக்கியது. வாமதேவம் - வடக்கு நோக்கியது. சத்யோஜாதம் - மேற்கு நோக்கியது. இப்படியாக எழுந்தருளும் சதாசிவமூர்த்தி ருபாருப மூர்த்தியேன வழங்கப்படுகிருர். இந்த மூர்த்தி பளிங்கு நிறமாகிய சுத்த சாத்விக குணத்தில் பொருந்தியவர். சுதந்திரரும், சுகத்துக்கும், ஞானத்துக்கும் இடமாய் உள்ளவரும், யோகிகட்கும் அவ்வடிவோடு சேன்று ஞானேபதேசம் சேய்பவரும் தாமேன்பதை உணர்த்தி நிற்கிருர். ஐந்து நிறங்களை உடைய ஐந்து முகங்களைக் கொண்டவரும் பஞ்ச கிருத்தியங்களைச் சேய்பவரும், பஞ்ச கர்த்தாக்களை அதிஷ்டித்து நிற்பவரும், தாம் என்பதை உணர்த்துவதற்காக பிர்மா, விஷ்ணு, ருத்திரரை அதிஷ்டிக்கும் பீடத்தையும், அதற்குக் காரணமான மகேசுவரனை அதிஷ்டிக்கும் கல்வ பத்திரத்தையும், உடைய பிருதிவி தத்துவமுதல் சிவதத்துவம் இறுதியாக உள்ளதாகிய மந்திர சிம்மாசனத்தின்மீது மேலே சோன்ன

32 லட்சணங்களோடும் சதாசிவமூர்த்தி எழுந்தருளி யிருக்கிறுர். பஞ்சமூர்த்தி பேதங்களைத் தழுவிப் பஞ்ச கிருத்தியத்தைச் செய்யும் பரமசிவனுடைய சுத்த குணங் களாகிய ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்ற ஐந்தும் கர்ம சாதாக்கியராகிய சதாசிவ மூர்த்திக்குத் திருமுகங்களாக உள்ளன.

ஐந்துமுகங்கள் - அமைப்பு

ஈசானமுகம் அழகாயும், தெளிவாயும் சிறுபிள்ளை முகம் போன்றும் பளிங்கு நிறமாய் ஈசான திசையைப் பார்த்து மேனேக்கியதாயுமிருக்கும்.

தத்புருஷமுகம் யெளவனப் பருவத்தை உடையதாய் கோங்கம்பூ நிறங்கொண்டதாய்க் கம்பீரமுடையதாய் சுமுக மாய்க் கிழக்கு நோக்கியதாயிருக்கும்.

அகோர முகம் தொங்கிய தாடியை உடையதாய், வெளிப்பட்ட கோரப்பற்களை உடையதாய், கண்டவர்கள் பயங்கொள்ளத் தக்கதாய், மிகக்கரியநிறத்ததாய், விருத்தர் முகம் போன்றதாய், உதடு துடித்துக் கொண்டிருப்பதாய், சந்திரனைச் சிரோ பூஷணமாக உடையதாய், பிரகாசிக்கும் கேசத்தை உடையதாய், பூரண காளைப் பருவத்துடன் புருவம் நெறித்தல் உடையதாய் செம்மையும் வட்டமுமான மூன்று கண்களை உடையதாய், யாராலும் வெற்றிகொள்ள முடியாததான தோற்றம் உடையதாய் வலத் தோளின் மேல் தெற்கு நோக்கியிருக்கும்.

வாமதேவமுகம் பார்வதி முகம் போன்று ஆபரணங் களை உடையதாய், வெட்சிப்பூ நிறத்ததாய், கருமையான

சுருண்ட கூந்தலால் பிரகாசிப்பதாய், யாவரையும் கவரக் கூடியதாய், மூன்று நேத்திரங்களுடன் கூடியதாய், சந்திரா பரணத்தால் பிரகாசிப்பதாய், விளையாட்டுடன் கூடிய கோடி போன்ற புருவத்துடன் கூடியதாய் இடத்தோளின் மீது வடக்கு நோக்கியதாய் இருக்கும்.

சத்யோஜாதமுகம் இராஜ லட்சணங்களுடன் கூடிய அரசர் முகம் போன்றதாய்ச் சந்திரனுக்குச் சமானமான வெண்ணிறம் உடையதாய், சந்திரனைச் சிரோபூஷணமாக அணிந்திருத்தலால் விரும்பத் தக்கதாய், தியானத்தால் அசைவற்ற கண்களை உடையதாய்ப் பிடரியில் மேற்கு நோக்கியதாய் இருக்கும்.

வர்ணபேதம்

மேலும் அந்தச் சதாசிவ மூர்த்தி ஈசானத்தில் ஸ்படிக நிறத்தை உடையவராயும், உலக காரணராயும், மூன்று கண்களை உடையவராயும், ஞானச் சந்திரனைச் சடையில் தரித்தவராய்ம், அழகும் எடுப்பான தோற்றமும் உள்ளவராயும், சூலத்தையும் அபயத்தையும் தரித்த கைகளை உடையவராகவும் ; கிழக்கில் போன்னிறமுடைய வராயும், பீதாம்பரம் உபவீதம் தரித்தவராயும், மாதுளங் கனி ருத்ராட்ச மாலிகை போருந்திய கைகளை உடைய வராகவும், சிரசில் இளம்பிறையைத் தரித்தவராகவும் ; அகோரம் தேற்கில் மூன்று கண்களையும் திருமுடியில் சந்திரனையும், சர்ப்பத்தையும் குண்டலங்கள் போருந்திய காதையும், சேம்பட்டை நிறமான புருவம், மீசை, தாடி, கேசம், பல் இவைகள் போருந்திய உக்கிர முகத்தையும் உடையவராயும், மண்டையோடு, பாம்பு, தேள் இவைகளை ஆபரணங்களாக உடையவராயும், வலத்திருக்கரங்களில்,

சூலம், பரசு. வாள், தண்டம் என்னும் இவைகளையும், இடத்திருக்கரங்களில் கத்வாங்கம், கபாலம், பரிசை, பாசம் இவைகளைத் தரித்தவராயும், சத்துருக்களை அழிப்பவராயும் மேகம்போன்ற நிறமுடையவராயும், இஷ்டசித்திகளைக்கொடுப்பவராயும்; வாமதேவம் (வடக்கில்) சிவப்பு நிறத்தவராகவும், நறுமணம் வீசும் மாலை, ஆடைகள், பூணூல் தரித்தவராகவும், வாள் பரிசை யேந்திய கையராகவும்; சத்யோஜாதம் (மேற்கில்) வெண்மை நிறமுள்ளவராகவும், வெண்மையான மாலை, சந்தனம், ஆபரணம், வஸ்திரம் தரித்தவராகவும், மூன்று கண்கள் உடையவராகவும், அபய வரதக் கையராகவும், சாந்த சொரூபியாகவும், சந்திரனை அணிந்தவராகவும், பால வடிவினராகவும் கூறப்படுகிறது.

மந்திரரூபம்

சதாசிவமூர்த்தம், பஞ்சபிரமமூர்த்தம் என்று சொல்லப் படும். அது ஆன்மாக்கள் செய்த கர்ம பலன்களை யறிந்து இரட்சிக்கும் குணமாகிய மந்திரமாகையால் மந்திர ரூபம், ஞானசக்தியின் வித்யாதேகம் என்றெல்லாம் சொல்லப் படும். அதனுடைய ஐந்து முகங்களினின்றும் நமக்கு வேத ஆகமங்கள் கிடைத்திருக்கின்றன. தத்புருஷ முகத்திலிருந்து ருக்வேதமும், அகோர முகத்திலிருந்து யஜுர் வேதமும், வாமதேவத்திலிருந்து சாமமும், சத்யோஜாதத்திலிருந்து அதர்வணமும், ஈசானத்திலிருந்து ஆகமங்களும் நமக்குக் கிடைத்தன. மேலும் அந்த ஐந்து முகத்திலும் மேற்கு முகத்தில் பிரமனும், வடக்கில் விஷ்ணுவும், தேற்கில் உருத்திரனும், கிழக்கில் விந்துவும், ஈசானத்தில் நாதமும் இருப்பதாக ஆகமங்கள் அருளு கின்றன. மேலும் இந்த சொருபம் சத்தியோஜாதத்தில் அ,

வாமதேவத்தில் உ, அகோரத்தில் ம ஆக ஓங்கார சோருபமாகவும் (பிரணவ சோருபமாகவும்) கோள்ளப் படுகிறது.

ஐந்தொழில்

அத்தோடு பஞ்ச கிருத்திய குணங்களாக ஈசானம் எல்லா உலகங்களையும் அனுக்ரகம் செய்யும் ஐசுவரிய குணத்தோடு கூடியதாகவும், எல்லா மார்க்கத்துக்கும் மேலான இடத்தில் இருப்பதாகவும், தத்புருஷம் ஆன்மாக் களுடைய சரீரங்களை அதிட்டிக்கச்செய்து ஞானத்தைப் பிரகாசிக்கச்செய்து மலத்தை நீக்குவதாகவும், அகோரம் ஞானமாகிய சிவசோருபம், கோரமாகிய மலத்திற்கு விரோதியாய் நின்று அதைக் குறைப்பதாகவும், வாம தேவம் ஆன்மாக்களுடைய கர்மத்துக்கு ஈடான தனு, கரண, புவன, போகங்களைக் கோடுத்து வாழ்க்கையில் தருமம் முதலியவற்றை அநுபவிக்கச் செய்யும் கிருபை யாகவும், சத்தியோஜாதம் இச்சாசக்தியினுல் சகலருக்கும் பிரளயாகலர்க்கும் சரீரங்களைக் கோடுத்து விஞ்ஞானகல ருக்கு வைந்தவ சரீரத்தையும் கோடுக்கும் தோழிலின் வேகத்தை உடையதாயும் இப்படி ஐந்து திருமுகங்களும் ஐந்து தோழில்கள் செய்து ஆன்மாக்களை உய்விக்கும் அருளிப்பாடுடையன. சதாசிவமூர்த்தி, ரூபாரூபமூர்த்தி எனப்படுகிறது. ரூபம், ரூபாரூபம், தியானசித்தி உடைய வர்களுக்கு வழிபட சாத்தியமாகும்.

ரூபம் - சகளம்

ஆகவே அத்தியானம் நிலைக்கப் பல உருவத் திருமேனிகளைக் கோண்டு சிவபெருமான் நம்மைக்

காத்தருள்கின்றுன். ரூபாரூப மூர்த்தியாகிய சதாசிவ மூர்த்தியின் ஒவ்வோரு முகத்தினின்றும் ஐயைந்து மூர்த் தங்களாக இருபத்தைந்து மூர்த்தங்கள் உருவத்திருமேனி கோண்டு எல்லோரையும் ஆளுகின்றன.

ஊர்த்துவ முகத்திலிருந்து சோமாஸ்கந்தர், நடேசர், விருஷபாரூடர், சந்திரசேகரர், கல்யாணசுந்தரர் ஆகிய மூர்த்தங்களும்; தத்புருஷ முகத்திலிருந்து பிட்சாடனர், காமாரி, காலாரி, ஜலந்த்ராரி, திரிபுராரி ஆகிய மூர்த்தங் களும்; அகோரத்திலிருந்து கஜாரி, வீரபத்திரர், தட்சிணு மூர்த்தி, கிராதர், விஷாசனர், ஆகிய மூர்த்தங்களும்; வாமதேவத்திலிருந்து கங்காளர், சக்ரதானர், விக்னப் பிரசாதர் (தசமுகானுக்ரகர்), சண்டேசானுக்ரகர், ஏக பாதர் ஆகிய மூர்த்தங்களும்; சத்யோசாதத் திலிருந்து லிங்கோற்பவர் சுகாசீனர், உமா மகேஸ்வரர், ஆபதுத் தாரணர் (அரியர்த்தர், அர்த்தநாரீஸ்வரர்) ஆகிய மூர்த்தங் களும் உருவத்திருமேனி கோண்டன. இந்த இருபத் தைந்து மூர்த்தங்களும் துஷ்டநிக்கிர சிஷ்ட பரிபாலஞர்த்த மாகத் தோன்றி அருள் புரிவன.

''உருவருள் குணங்களோடும் உணர்வருள் உருவிற்ருேன்றும்
கருமமும் அருள் அரன்றன் கரசரணுதி சாங்கம்
தருமருள் உபாங்கமேல்லாம் தானருள் தனக்கோன் றின்றி
அருளுரு உயிருக் கேன்றே ஆக்குவனசிந்த னன்றே''

இவை மகேசுவர மூர்த்தங்கள் என்றும் கூறப்படும்.

சிவலிங்க வகைகள்

இனிச் சைவர்கள் பெரும்பாலும் ஆன்மார்த்த நிலே யிலும், பரார்த்த நிலேயிலும் சிவலிங்கத் திருமேனியை

எழுந்தருளப்பண்ணி வழிபடுவர். சிவலிங்கத்திருமேனியில் அருவத்திருமேனி (பீடமும் சிவலிங்கமுமாய் விளங்குவது), உருவத்திருமேனி கை கால் முதலிய அவயவங்கள் விளங்கக் கூடியதான மேலே கடைசியாகச் சொல்லப்பட்ட 25 திருமேனிகள், அருவுருவத் திருமேனி சதாசிவத் திருமேனி என்ற மூன்றுவகை மூர்த்தங்களில் ஏதாவ தொன்றை வைத்தே வழிபாடுசெய்வார்கள்.

இப்பொழுது இங்கே சொல்லவந்தது அருவுருவ மூர்த்தியைப்பற்றி. நேபாலப் பசுபதிநாதர் கண்ணுக்குப் புலனுகக்கூடிய நான்கு முகங்களேயும், புலனுகாத ஈசான முகத்தையும்கொண்ட இலிங்கத் திருமேனிஉடையவர். இது மேலே சொல்லப்பட்ட அருவுருவ மூர்த்தியாகிய சதா சிவத்தை உட்கொண்டது.

பஞ்சமுகப் பிரம்மம்

அதன் அமைப்பு ரூபாரூப லிங்கத் திருமேனியின் இலக்கணமாகும். அதனை மறைஞானசம்பந்த நாயஞர் அருளிச்செய்த சைவ சமயநெறி,

> " விளங்கின் முகமே வியத்தாவ் வியத்த
> மிலிங்கம் தனிலென்றே யெண் " (120)

என்றுரைக்கின்றது.

" வியத்தம் - எல்லா உறுப்புக்களும் வெளிப் பட்டிருப்பது. அவ்வியத்தம்-அவை வெளிப்படாதிருப்பது. வியத்தாவ்வியத்தம் - சில உறுப்புக்கள் வெளிப்பட்டும் மற்றவை வெளிப்படாமலும் இருப்பது. வியத்தாவ்வியத்த லிங்கம் செய்யுமிடத்து உருத்திர பாகத்தை மூன்று

கூருகப் பிரித்து நடுக் கூற்றில் ஒருமுகமேனும் மூன்று முகமேனும் நான்கு முகமேனும் செய்க. மேற்கூற்றிலே திருமுடியும், கீழ்க்கூற்றிலே கழுத்தும் தோள்முலே மட்டும் செய்க. கீழுள்ள கைகள் செய்யலாகாது. முகம் ஒன்ருயின் வியாதியை நீக்கும்; மூன்ருயின் சாந்தியைப் பண்ணும் ; நான்காயின் சுகத்தைக் கொடுக்கும் ; இரண்டா யினும் ஐந்தாயினும் அரிட்டம் கொடுக்கும் ''.

மூர்த்தியும் மூர்த்திமானும்

மேலே சொல்லியபடி சகல சுகங்களேயும் ஆன்மாக் களுக்குக் கொடுத்து உய்விக்கும் திருமேனியாகப் பசுபதி நாதர் எழுந்தருளி இருக்கிருர். *சிவபெருமானுக்குப் பிருதிவி, அக்னி, இயமன், சூரியன், சந்திரன், அப்பு, வாயு, ஆகாசம் என்ற எட்டு சரீரங்கள் உண்டு.இவைகள் மூர்த்திகள். இவற்றிற்கு அதிபதியாக முறையே சர்வன், பசுபதி, உக்ரன், ருத்ரன், பவன், மகாதேவன், மகேஸ் வரன், பீமன், இவ்வெட்டும் மூர்த்தீஸ்வரர்கள் என்றும் ஆகமங்கள் எடுத்தியம்புகின்றன.

---

*இருநிலனுய்த் தீயாகி நீரு மாகி
இயமான ஞயெறியுங் காற்றுமாகி,
அருநிலைய திங்களாய் ஞாயி ருகி,
ஆகாச மாயட்ட மூர்த்தியாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்,
பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி,
நெருநிலையாய் இன்ருகி நாளே யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே. —அப்பர்.

பசுபதி

மேலே கண்ட அஷ்ட மூர்த்திகளிலும் அக்கினிக்கு அதிபதியாக உள்ளவர் பசுபதி. அந்தப் பசுபதி ஆன்ம நாயகன், (பசு=ஆன்மா; பதி=தலைவன்) நமது சாத்திரங்கள் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை வற்புறுத்துகின்றன. அம்மூன்றும் நித்திய வஸ்துக்கள்; அழிவில்லாதவை. ஆனாலும் பசு பதியையோ அல்லது பாசத்தையோ சார்ந்து நிற்கும் என்றும், பதி தனித்து நின்று ஆன்மாவை ஆட்கொள்ளும் என்றும், இந்தப் பதியைக் காணமுடியாதபடி * பசுவை மறைத்து நிற்பது பாச மென்றும், பதியினுடைய கருணைப் பெருக்கத்தாலும், பசுவினுடைய இடையருத முயற்சியினாலும் பாசத்தைவிட்டு நீங்கிப் பதியை அடையமுடியுமென்றும், அந்த நிலையில் அதுவும் பதித்தன்மையை அடைந்து விடுவதாகவும், ஆனாலும் எப்பொழுதேனும் சிறுவழுவுதல் ஏற்பட்டாலும் பாசம் அப்போது அதனைக் கவ்விக் கொள்ளுமென்றும், அதற்கு இடம் கொடுக்காதபடி இடையீடில்லாத சிவோகம் பாவனை நமக்கு எப்பொழுதும் நிலைத்தல் வேண்டும் என்றும் ஞான சாஸ்திரங்கள் அருளுகின்றன.

காருண்யம்

ஆன்மநாயகனாக விளங்கும் பெருமானிடம் இந்தப் பாசம் சென்று பற்றும் சக்தி உடையதல்ல. ஆகவே

---

*என்னை அறிவேன்ரான் என்அறிவில் ஆனந்தந்
தன்னைச் சிவமென்ரான் சந்தமும்—என்னைஉன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்ரான் இம்மூன்றும்
ஆராய்ந் தவர்முத்த ராம்.

அது எப்போழுதும் சுயம்பிரகாசமாய்ச் சர்வவல்லமை உடையதாய் நின்று விளங்கும் அதனுடைய காருண்ய மிகுதியினுலே ஆன்மாக்களை ஈடேற்றும் விருப்ப முடையது. ஆன்மா அவ்வப்போழுதும் செய்யும் கர்மாக் களின் விளைவாக ஏற்படக் கூடிய பாவ புண்ணியங் களுக்குத் தக்கபடி சரீரங்களைக் கோடுத்துக்[1] கர்மக் கழிவுக்காக அவைகளை அநுபவிக்கச் செய்து சுத்தப் படுத்தித் தன்னுள் சேர்த்துக்கோள்ளும்.

அவரவர் கர்ம வலிமைக்குத் தகுந்தபடி அவ்வப் போழுதும் சிவபரம்போருள் உருவத் திருமேனியோடு தடுத்தாட்கோண்டு உய்விக்கும். அதுவே குருவாக நின்று அருள் செய்யும் முறை. அப்படி ஆன்மாக்களைத் தடுத்து ஆண்டு நல்வழிப்படுத்தித் தம்முடைய திருவடிப் பேரானந்தத்தை - சிவஞானத்தை அருளிச்செய்யும். இதுவே அப்பரம்போருள் நமக்கு அருளிச்செய்யும் பேரிய உபகாரமாகும்.[2]

உலககாரணன்

பசுபதியே உலக காரணன். பஞ்சகிருத்தியங்கள் புரிய வல்லவன். போதுவாகச் சம்ஹார காரணுக

---

[1] எடுத்தஉடற் கேய்ந்தகன்மம் எப்போதும் ஊட்டும்
விடுத்துவிட்டோம் என்பர் விழலர்—விடுத்த
ததுவன்றே ஐந்துமலம் ஆருறும் நீத்த
இதுவன்ரே யாம்துறவேன் பேம்.

[2] பாசஞ் சடம்உயிரோ தாஞகப் பற்றறியா(து)
ஈசன் இரண்டும் இணைத்தாட்டிப்—பூசலேன்றுஞ்
சேய்பவனே தானே திரும்பிஅருள் சேய்யாமல்
உய்பவர்கள் உண்டோ உரை.

உள்ளவன் எவனோ அவனே ஐந்தொழில் புரிய வல்லவன் என்று நம்முடைய சாஸ்திரங்கள் முழங்குகின்றன. சர்வ சம்ஹாரகாலத்தில் எல்லா உலகங்களையும் தன்னுள் ஒடுக்கிக் கொள்கின்ருன் என்பதனாலேயே அவன் சர்வன் என்றும், அதேபோல மீண்டும் உலக உற்பத்திசெய்து அதில் பிரமன் முதல் புழு வரையில் உள்ள எல்லாப் பசு வர்க்கங்களையும் ஆக்கிக் காத்துவருவதனாலே பசுபதி என்றும் பெயர் பெறுகின்ருன் என்று ருத்ரத்திலும், "யதோவா இமானி பூதானி ஜாயந்தே யேந, ஜாதானி ஜீவந்தி யத்பிரயந்த்யபி ஸம்விஸந்தி - எதனிடத்திலிருந்து சிதசித் பொருள்கள் தோன்றினவோ, எதனால் உண்டான பொருள்கள் ஸ்திரம் பெறுகின்றனவோ, எதை யாவும் பின்பு சேன்றடைகின்றனவோ, அதையே விரும்புங்கள். அஃதே பிரமம்" என்கிறது தைத்திரீய உபநிஷத். இலிங்க புராணத்தில் இறைவனுடைய பிருதிவி என்பது தொடங்கிய எட்டு சரீரங்களில் வன்னி என்ற சரீரந் தாங்கியவன் பசுபதி என்றும், வாயுசம்ஹிதையில், பசுபதியென்ற மூர்த்தி பசுக்களாகிய ஆன்மாக்கள் தனனை அணுகமுடியாது தடுத்துநிற்கும் பாசங்களை நாசம் செய்ய வல்லது என்றும், மஹாபாரதம் துரோண பர்வததில், 'எல்லார்க்கும் மூலகாரணமா (வேரா) கவும், ஆன்ம ரட்சகனாகவும், அவைகளோடு கூடி இன்புறுவோனாகவும், பசுக்களுக்குப் பதியாகவும் இருப்பதால் பசுபதி என்ற பெயர் பெறுகிருன் என்றும், இப்படியாகவே பல நூல்களும் பெருமான் பதியாக, பரமபதியாக விளங்கும் மேன்மையை எடுத்து இயம்புகின்றன. இவ்வுலகங்களுக்கு யாதும் கலக்கம் நேரிடாவண்ணம் காக்கும் சேது இந்தப் பரமான்மா (பசுபதி)-சாந்தோக்கியோபநிஷத். இந்தப் பெருமானுடைய உதவியின்றிப் பிரும்ம விஷ்ணு ருத்ரர்களாலும்

எக்காரியமும் செய்ய இயலாது. பெருமானுடைய உதவி களை எல்லோரும் வேண்டுதற்குக் காரணம் அவன் சர்வ வல்லமையுடையவனுக இருத்தலும் மற்றவர் அசக்தர் களாக இருத்தலுமே ஆகும்.

பயன்

பெருமான் இந்த நிலையில் நேபாலத்தில் எழுந்தருளி யிருந்து எல்லா உயிர்களையும் காத்து அருள்வழங்கி நிற்கிருன். தென்னுடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்ற முழக்கத்தின் திருவுருவாகப் பெருமான் அங்கே எழுந்தருளியிருக்கிருன். உலகப்பகுதிகள் எல்லா வற்றிலும் அவனுடைய கருணைப் பெருவெள்ளம் பெருகி நின்று காத்துவருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக எல்லாத் திசைகளையும் பார்க்கும் திருமுகங்கள் நான்கும், அருவநிலையில் ஒருமுகமும் ஆக ஐந்து திருமுகங்கள் கொண்டு விளங்குகிருன். இதே போன்ற திருவுரு தமிழ் நாட்டில் திருவக்கரை என்னும் தலத்தில் அமைந்திருக் கிறது. கருணையே வடிவான பெருமானுடைய அருள் நம்மனேரை உய்விக்கும். அதில் நம்முடைய சிந்தனை நிலைக்க நாம் நிலைத்த பயன் உடையவராவோம்.

பூசகர் தகுதி

அநந்த பத்மநாப அடிகவிடம் இரண்டாநாள் இரவு பேசிக்கொண்டிருக்கும்போது நேபால நாட்டிலுள்ள இக் கோவிலுக்குத் தாங்கள் எப்படிப் பூசகராக வந்து சேர்ந் தீர்கள் ? வட கன்னட நாட்டுத் திருக்கோகர்ணத்திலிருந்து இங்குவரக் காரணம் என்ன ? அங்கே உங்களுக்கு பூசை முறை இருப்பதாகத் தெரிகிறதே என்று பொழுதுபோக் காகச் சில கேள்விகளைக் கேட்டுவைத்தேன்.

அடிக:- உண்மைதான். வடகன்னட நாட்டில் பிராமண வகுப்பில் எங்களுக்கு நல்ல மதிப்புண்டு. நாங்கள் தமிழில் வழங்கும் அடிகள் என்ற சிறப்புப்பெயரைப்பெற்று வாழ்கிறோம். பட், சாஸ்திரிகள் என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. எங்கள் குடும்பம் படித்த குடும்பம். சங்கரர் இந் நாட்டுக்கு வருமுன் பசுபதிநாதருக்கு நரபலி, மது மாமிசம் முதலியன் படைத்து வழிபாடுகள் செய்து வந்தார்கள் என்பதை நேற்று உங்களுக்குச் சொன்னேன் அல்லவா ?

சங்கரர் வருவதற்கு முன்னர், இந்நாட்டில் சந்நியாசிகள் பெருமானைப் பூசித்து வந்தனர். இங்கு பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்று சாதிப் பிரிவினைகள் இருந்து வருகின்றன. எல்லோரும் மது மாமிசம் அருந்தக் கூடியவர்கள். ஆகார விஷயத்தில் இங்கு அதிக வேற்றுமை கிடையாது. பெருமானுக்குப் பலியிடுதலும் மதுமாமிச நைவேதனமும் கூடாவென்று சங்கரர் நிறுத்திவிட்டார். அந்தப் பழக்க வழக்கங்களுடைய இந்த நாட்டுப் பிராமணர்கள் பெருமானைத் தொட்டுப் பூசித்தல் அநுசிதம் என்று அப்போதிருந்த அரசனிடம் எடுத்துச்சொல்லிச் சுத்த சைவர்களாயுள்ள பிராமணர்கள் தாம் பூசைசெய்ய யோக்கியதை உடையவர்கள் என்பதையும் அரசனுக்குத் தெரிவித்தார்.

அப்படிச் சுத்த சைவர்களாக உள்ளவர்கள் எங்கிருந்து கிடைப்பார்கள் என்று கேட்ட அரசனுக்கு, விந்தியப் பிரதேசத்தின் தெற்குப்பகுதியில் உள்ள பிராமண வகுப்பார் நெறியிற் சிறந்தவராகவும் (ஸ்மார்த்த வைஷ்ணவர்கள்) சைவர்களாகவும் இருப்பார்கள். அங்கிருந்து படித்த நல்ல அறிஞர்களை ஒழுக்கத்திற் சிறந்தவர்களைப்

போறுக்கியெடுத்துப் பூசைக்கு வைத்துக் கொள்ளலாம், என்று அவர் ஒரு திட்டமும் வகுத்துக்கொடுத்தார். முதலில் கன்னடப் பிரதேசத்தில் உள்ளவர்களில் தேர்ந் தெடுக்கலாம். அங்கே கிடைக்காவிட்டால் அடுத்துத் தமிழ் நாட்டில் உள்ளவர்களில் தேர்ந்தெடுக்கலாம். அதுவும் பொருந்தாவிட்டால் ஆந்திர நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கலாம். இந்த மூன்றிலும் இதற்குப் பொருத்த மாக யாரும் கிடைக்காவிட்டாலும் விந்தியத்திற்குத் தெற்குப் பகுதியிலுள்ள எந்த நாட்டு வைதிகப் பிராமண குலத்திலுள்ளவர்களிலும் பொருத்தமானவரை எடுக்கலாம்.

தீக்ஷை

அதற்கு ஒரு தேர்வு வைத்து அவர்களுடைய அறிவின் திறத்தைச் சோதித்தல் வேண்டும். இந்த நாட்டு இராஜகுருவின் முன்னிலையில் அந்தத் தேர்வு நடை பெறுதல் வேண்டும். அதில் தேர்வோருக்குப் பாசுபதா ஸ்திர மந்திர உபதேசம் செய்தல் வேண்டும். அப்படி உபதேசம் செய்வதற்குமுன் மூன்று நாட்கள் அவர்களை உபவாசத்தில் இருத்தித் தீட்சாக்கிரமங்கள் எல்லாம் செய்து முடித்துப் பிறகு பாசுபதாஸ்திர மந்திர உபதேசம் செய் வித்துப் பூசகராக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

பரம்பரை பாத்தியம்

இப்படிப் பசுபதிநாதர்க்கு ஐந்து முகத்துக்கும் ஐவர் நின்று வழிபடுதல் வேண்டும். ஐவருள் ஒருவர் பிரதம ஆசாரியராக இருத்தல் வேண்டும். இராஜகுரு முன்னிலை யில்நடத்தப்படும் தேர்வில் அந்தப் பிரதம ஆசாரியரும் இருக்கவும், அவருடைய சொல்லுக்கு மதிப்பளிக்கவும்

வேண்டும். வருகிற பூசகர்களுக்குப் பரம்பரை பாத்தியம் எதுவும் இருத்தல் கூடாது.

நியமம்

அப்படிப் பூசை செய்து வருகிறவர்கள் நியமம் தவருத வாழ்க்கை உடையவர்களாய் நித்திய வழி பாடுகளுக்குத் தவருது செல்லக் கூடியவர்களாய் இருத்தல்வேண்டும். அவர்கள் ஏதேனும் ஒருநாள் ஏதோவொரு காரணத்தால் பூசைக்குச் செல்லாமல் இருந்தால், மற்றநால்வரும் பூசையை முடிக்கலாம். பூசைக்குச் செல்லமுடியாது தங்கியவர், மறுநாள் க்ஷவரம் செய்துகொண்டு ஆயிரத்தெட்டு சாவித்திரி - காயத்ரி ஜெபம் செய்து அன்று முழுவதிலும் உபவாசம் இருந்து பூசைக்குச் செல்லுதல்வேண்டும், என்று சங்கரர் ஏற்பாடு செய்துவைத்திருக்கிருர்.

தவறினுல்....

அதன்படியே இதுவரை நடந்து வருகிறது. நவீன காலத்தில் செய்தித் தாள்கள் வசதியாக இருப்பதால் அவற்றின் மூலம் தேவைப்பட்டால், பூசகர்களுக்காக விளம்பரம் செய்வார்கள். அதன்மூலம் மனுக்கள் கோரி வாங்கி, இப்போது தேர்வு நடத்தப்படுகிறது. ஆசார்யாள் திட்டப்படிப் பூசைக்குச் செல்லுவதில் ஏதாவது தவறு ஏற்பட்டு அதற்குச் செய்யவேண்டிய பரிகாரங்களைச்செய்து கொள்ளாமல் வழிபட வந்துவிட்டால், அது நிகழ்ந்த ஒரு வாரத்துக்குள், அபசாரம் செய்தவர் உயிரிழக்க நேரிடு கிறது அல்லது வேறு ஏதாவது ஒரு பெரிய அசம்பா விதமான துன்பம் ஏற்பட்டு நாட்டைவிட்டு அகன்றுவிடும்

நிலை ஏற்பட்டுவிடுகிறது. இது கண்கூடு. எனக்கு நிச்சயமாகத் தெரிந்த ஒன்றை அதிலும் சமீபத்தில் நிகழ்ந்து கண்ட ஒன்றைத்தான் இப்போது சொல்கிறேன்.

வருமானம்

இந்தக் காரணங்களால் பூசகர்கள் ஒழுக்கம் குன்றுது' விதிக்கப்பட்ட நியமங்களில் தவறுது. எல்லாவற்றையும் பயபக்தியோடு செய்து வருகிறோம். ஆண்டவனுடைய அருள் எங்களுக்கு நிறைவாக உண்டு. அருளியலில் அரசனும் வணங்கும் வாழ்வும், உலகியலில் நல்ல வருவாய் உள்ள தொழிலுமாக இது அமைந்திருக்கிறது. எங்கள் பிரதம பூசகருக்கு (ராவலுக்கு) ஒரு வருஷத்துக்குப் 10 ஆயிரம் சேர் நெல் வரக்கூடிய நிலமும், குடியிருக்க எல்லா வசதிகளும் நிறைந்த வீடும் ஆட்களும் எல்லாம் ஏற்பாடாகக் கிடைத்து வருகின்றன '' என்று கூறி முடித்தார்.

சேமிப்பு

'' அவருக்கு அப்படியானுல் தங்களைப் போன்ருர்க்கு எப்படியோ '' என்றேன். '' எங்களுக்கும் நல்ல வசதி உண்டு. சாதாரணமாக ஆண்டோன்றுக்கு பாரத ருபாய் 5000 வருவாய் வரக்கூடிய நிலமும், பிற சோத்துக்களும் விடப்பட்டிருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு உத்தேசமாக என்னுடைய எல்லாச் செலவுகளும் போக 2000, 3000 என்னுடைய ஊரில் உள்ளவர்களுக்கனுப்பி வருகிறேன். நாங்கள் இப்படிப் பணம் அனுப்புவதற்கு அரசாங்கமும் உதவுகிறது. நாணயமாற்றில் எங்களுக்குச் சிலசலுகைகள் உண்டு. அங்கு அனுப்பப்படும் தோகைகளை என்னுடைய மிக நெருங்கிய உறவினர் ஒருவர் எனக்காகச் சேமித்து வைக்கிருர் ' - என்று விடையளித்தார்.

சிவராத்திரி

இப்போதுள்ள ஆட்சி அமைப்பு ஏற்படுவதற்கு முன் சிவராத்திரிக்கு மட்டிலும் வெளிநாடுகளிலிருந்து இந்துக்கள் பலரும் வருவதற்கு அநுமதி இருந்தது. அந்த மாதம் முழுவதும் இந்துக்கள் தங்கியிருக்கலாம். அப்படித் தங்குவதற்குள்ள எல்லாச்சேலவும் அரசாங்கத்தினுடையது. அப்போழுதேல்லாம் ரேக்சோலிலிருந்து எல்லோரும் மலேவழியே துன்பப்பட்டு நடந்து வருதல் வேண்டும். பல சந்நியாசிகள் பல பேரியோர்கள் மற்றும் கிரஹஸ்தர்களும் கூட நல்ல கடுங் குளிரில் துன்புற்று வந்து சேர்வார்கள். இடையில் சிலர் பனியில் விறைத்து இறந்து போதலும் உண்டு. பிறகு அதில் ஒரு மாற்றம். சிவராத்திரி மூன்று நாட்களுக்குத் தரிசிக்க வருவோர்க்கு அநுமதிச்சீட்டு வழங்குவதேன்றும், அந்த சீட்டுப் பேற்று வருவோர்க்கு அரசாங்கத்தில் எல்லா வசதிகளும் சேய்து தருவதேன்றும் திட்டமாயிற்று. அந்தக் காலத்தில் வருஷம் முழுவதிலும் இந்துக்கள் அல்லாதார் யாரும் வரமுடியாது எனலாம். வருவதாக இருந்தால் இந்திய அரசாங்கத்தின் உதவியோடு நேபால அரசாங்கத்தில் அநுமதி பேற்றுவரவேண்டும். சில வியாபாரிகளுக்குமட்டும் அந்தச் சலுகை கிடைத்து வந்தது. ஜனநாயக ஆட்சி இந்த நாட்டில் வந்த பிறகு வருஷம் முழுவதும் நுழைவு அநுமதிச்சீட்டு (Pass Port) பேற்றுவரலாம். அப்படியே பலரும் வந்துகோண்டிருக்கிருர்கள்.

அடிகளின் அன்பு

நாங்கள் தேன்ஞட்டவர்களாகவே தேன்ஞட்டிலிருந்து யாரும் இங்கே வந்தால் அவர்களேக் கண்டதும் எங்களே அறியாமல் எங்களுக்கு அன்பு

வைத்தியநாதத்தில்



காளி எழுந்திருத்து



ஸ்ரீ கிருஷ்ணர் கோவில்

பெருகுவது இயல்பே. இருந்தாலும் இதுபோன்ற மகான்கள் தென்னாட்டிலிருந்து இங்கு வருதலும் எங்கள் உபசரணையில் தங்குதலும் நாங்கள் செய்த பாக்கியப்பேறே. அதிலும் எனக்கும் என் குடும்பத் தார்க்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை இந்தச் சிறிய வீட்டில் வரவேற்று உபசரிக்கும் வாய்ப்புக் கிடைத்தது பசுபதிநாதர் அருளென்றே கருதுகிறோம். இந்த மகானை இன்னும் சிறிதுநாள் இங்கே வைத்திருந்து உபசரிக்க வாய்ப் பில்லையேயென்பதுதான் எங்கள் வருத்தம். கிருஹஸ்தன் செய்யவேண்டிய கடமைகளுள் இதுவும் ஒன்று. அந்தக் கடமை இப்போது எனக்கு நிறைவேறியது. இந்த மஹா சாதுவின் அனுக்ரகம் எங்களுக்கு என்றும் இருத்தல் வேண்டுமென்பதே என் பிரார்த்தனை. அவர்களைச் சார்ந்த நல்லோராகிய உங்களையும் இங்கே வரவேற்பது நல்ல வாய்ப்பாகும். என்னை - என குடும்பத்தாரை என்றும் தொலை தூரத்திலுள்ள நீங்கள் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். எங்களுக்கு இப்படி ஏதோவொரு காலத்தில் ஒரு வாய்ப்பு ஏற்படுகிறபடியால் இந்த நிகழ்ச்சி நினைவில் நிலைத்து நிற்கும். திருவருளால் மீண்டும் நாம் எல்லோரும் இங்கே சந்திக்கும் வாய்ப்பும், உறவாடும் வாய்ப்பும் கிடைத் தல் வேண்டும், என்பது என் மனமார்ந்த பிரார்த்தனை. மீண்டும் கூடுதற்கு விட்டுப் பிரிகிறோம். பசுபதிநாதரருள் உங்களுக்குத் துணைபுரியுமாக. நல்லன எல்லாம் பெற்று வாழ்வீர்களாக' என்று ஆசியோடு விடைதந்தார். அங்கி ருந்து புறப்பட்டுக் காசிக்குவிமானமூலம் வந்துசேர்ந்தோம்.

காசியில் சிந்தனை

காசியில் - அதிகாலையில் கங்காஸ்நானம், கேதாரேஸ் வரர் வழிபாடுசெய்து குமாரசாமி மடத்துக்கு எழுந்தருளி

யானதும் உடன் வந்த சென்னை சமய பிரசார நிலையத் திருமுறை ஆசிரியர் சங்கீதபூஷணம் - தேவார இசைமணி - திரு. பி. சுவாமிநாதன் திருமுறைப் பாராயணம் செய்வது வழக்கம். ஒருநாள் தோடக்கப்பாடலாக அப்பர் சுவாமிகள் அருளிச்செய்த 'ஈன்றாளுமாய் எனக்கேந்தையுமாய்' என்ற பாசுரம் அவரால் பாடப்பட்டது. அப்போழுது அங்கே சிவதரும பாஸ்கரர் சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டரும், பிரும்மஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரியாரும் உடனிருந்தார் கள். பாராயணம் முடிந்ததும், பதிகச் சிந்தனை அன்று மிக உருக்கமாக அமைந்தது.

அடைக்கலம்

"அடியவர்கள் மனத்துள் என்றும் அகலாது வீற்றிருப் பான் நம் இறைவன். அவன் அவர்களுடைய மனத் துள்ளே நிறைந்து நிற்கிற நிலையில். அவர்களுக்குத் தோன்றாத்துணையாய் இருந்து உதவிசெய்கிறான். உல கியல் நிலையில் [1] தாயாகவும், தந்தையாகவும் துணைவராக வும் நமக்குத் தோன்றும் அவர்கள், நம்மைப் போலவே தோன்றி அழியும் தன்மை உடையவராகவே இருக் கிறார்கள். அவர்களைப் போலில்லாமல் எப்போழுதும் [2] ஈன்

---

[1] மாதா பிதாச்சுற்றம் என்று மயங்கினையே
நீதான் தனுவாகி நின்றனையே—ஈதேல்லாம்
போய்யேன் றறிந்தனையே பூரணா னந்தவெள்ளம்
மெய்யேன் றறிந்தனையே மேய். — சிவபோகசாரம்.

[2] தாயர் மகவருத்தஞ் சற்றுந் தரியார்கள்
ஆயவினைக் கீடா அமைத்தாலும்—காயம்
பரிக்குந் துயரமேல்லாம் பார்க்கஉனக் கேன்றும்
தரிக்குமோ சோக்கநா தா. — சோக்கநாதவேண்பா.

ருளுமாய்த் தந்தையுமாய் உடன் தோன்றினராய் நீங்காது நின்று அருள் புரிகிறுன் அவன். அவனுடைய அருள் என்னை விட்டு நீங்காது உடனிருந்து அவனுடைய திருவடி நினைவை என்னுள்ளே இயக்கி வருவதை நான் இப்போது கண்டேன். அவனுடைய திருவடியைக் கை தோழ எனக்கு நல்லதுணையாக நமசிவாய மந்திரத்தைக் கைக் கோண்டு அதுவே எனக்கு அடைக்கலமாக - துணையாக இருந்து காத்ததைக் கண்டேன் ''.

சிவகதி வேண்டும்

கல்லிற்கட்டிக் கடலில் என்னையிட்டபோது சுற்றிலும் கடல் சூழ்ந்து நின்ற காலத்தும் அவனுடைய திருவடி எனக்குத் துணையாயிருந்து கரையேற்றிவிட்டது. ஆகையால் அவனே விரும்பி என்னுள்ளத்தைக் கோயிலாகக் கோண்டிருக்கிறுன். அவன் அப்படி என்னுள்ளே இருப்பதனுல் எந்தத் துன்பமும் என்னைவந்து அடையாது. வினைகளும் போயோழியும். எமபயமும் இல்லை. அவனுடைய அடியேனுகிய எனக்கு இனி அரியதாவதும் உண்டோ ? இல்லை. இப்பேறு நமக்கு நிலைக்க வேண்டுமானுல், சித்தத்தை ஒருவழிப்படுத்தி அவன் திருவடிச் சிந்தனை - திருநாமச் சிந்தனை - இடையருது செய்து இருத்தல் வேண்டும். அவனுடைய திருவடிச் சிந்தனை எனக்குக் கருவிலேயே வாய்த்த திரு. பின்னே அறிவுதேரிந்த காலத்திலிருந்தும் அதனைப் பயின்றேன். அவன் அருள் உடன் தோன்றினராய் முன்னிற்கச் சிவாயநமவென்று நீறணியும் பேறுபெற்றேன். பாதிரிப்புலியூரரனே ! எனக்குச் சிவகதி தருதல்வேண்டும்.

அமணர்கள் சமயத்தில் அழுந்தி வழி தேரியாது நின்ற காலத்தில், வழியும் காட்டி என்னை ஆட்கோண்டான்.

முத்தி தரக்கூடிய அந்தத் திருவடிகளே புகல் என்று வந்தடைந்தேன். ஆகையால் எனக்கு இனிப் பிறவா நெறியளித்து ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி * ஏதேனும் பிறப்பு இருக்குமானாலும், என் மனத்திலே உனதடி வழுவாதிருக்க வரம் தருதல் வேண்டும். புழுவாக இழிந்த பிறப்புப் பிறக்க நேரினும் எனக்கு இவ்வரத்தை அருள் செய்தல் வேண்டும். தொழுவார்களுக்கிரங்கி வேண்டுவார் வேண்டுவதை அளிக்கும் அருள்வள்ளால் எனக்கு இதை அருளல் வேண்டும்.

அஞ்சுவது யாதொன்றும் இல்லை

நெஞ்சே! எப்பொழுதும் நமக்கு உறுதியான துணை திருவடி என்பதைக் கண்டோம். உற்பாதங்கள் ஏற்பட்டு எல்லா உலகங்களும் திசைகெட்டு மாறினாலும், உறுதியான பற்றுக் கோடாக அந்தத் திருவடி நின்று துணைபுரியும். அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை. என்பது அந்தப் பதிகத்தின் சாரமாகும். இதனுள் அப்பர் அடிகள் ஐந்தெழுத்துத் துணைநிற்பதால் சிவகதிவேண்டும், பிறவாமைவேண்டும், மீண்டும் பிறந்தால் திருவடி மறவாமை வேண்டுமென்று மூன்று வரங்கள் கேட்டிருக்கிறார்கள். காரைக்காலம்மையாரும் இதை இப்படியே தம்முடைய வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார்கள்.

---

* ஈண்டுமெனை ஆண்டிலையேல் என்வினைக்கீ டாயானே
வேண்டும் பவங்களில்நீ விட்டாலும் - பூண்டருளால்
அங்கங்கே என்னோ டனனியமாய் என்னுருவில்
தங்கியருள் சோக்கநா தா. — சோக்கநாதவெண்பா.

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை
யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போதுன் னடியின்கீழ் இருக்க வென்றார்."

ஆனந்தமலை

மாணிக்கவாசகப் பேருமான் திருவாசகத்திலும், இக் கருத்தை விளக்கியருள்கின்றார்கள். என் சிந்தனை நினக் கேன்றேயாக்கினேன். எனது கண்ணிரண்டாலும் நின் திருவடிமலர்களைக் காணும் - கண்டு வழிபடும் பேறு பெற்றேன். என்னுடைய வழிபாடும் அத்திருவடிகட்கே உரியன. என்னுடைய வார்த்தை உன் திருவடி பரவும் மணி வார்த்தைக்கே யாக்கி வைத்தேன். என்னுடைய ஐம்புலன்கள் ஆரா இயற்கை உடையவை. எவ்வளவு கண்டாலும் கண்ணுக்கு அமைதி இல்லை. எவ்வளவு கேட்டாலும் காதுக்கு அமைதி இல்லை. அதுபோலவே எவ்வளவு உண்டாலும், நுகர்ந்தாலும், உற்றாலும் திருப்தியும் நிறைவும் இல்லை. இத்தகைய என் ஐம் புலன்களும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிவதாக நீ என் உள்ளே புகுந்தாய். உருத் தேரியாக் காலத்தே என் உள் புகுந்தாய். அது ஒரு விச்சைதான். நீ அமுதக் கடலாய் உள்ளாய். அருள் நிதி தரவரும் ஆனந்த மலையாய் உள்ளாய். என்ன வியப்பு. ஒன்றுக்கும் பற்றாத எனக்கு உன்னைத் தந்தாய். இரண்டு மிலித்தனியனேனுக்கு இது பேறற்கரிய பேருகும். என்று திருச்சதகத்தில் அருளியிருக்கிறார்கள்.

அப்பரடிகளின் அன்பு வேளியீடும், மணிவாசகப் பேருமானின் அன்புவேளியீடும் ஒன்றாகவே உள்ளன

அதுமட்டும் இல்லை. ‘கற்றுணைப் பூட்டி ஓர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணை யாவது நமச்சிவாயவே’ என்று பாடியருளிய அடிகள் ‘சுற்றுய் அலைகடல் முடினும் கண்டேன் புகல்’ என்று அஞ்சேழுத்தே துணையாய்க் கல்லைத் தேப்பமாக்கி மிதக்கவிட்டருளிய அருளிப்பாட்டை அறிவிக்கின்ருர்கள். இதே அநுபவம் மணிவாசகப் பேருமான் சிந்தனையிலும் உருவாகியிருக்கிறது.

பேரிய கடல், துன்பம் தரும் கடல். தனியாளாக அக்கடலில் அடியேன் கிடந்து தோல்லை யுறுகின்றேன். பேரிய பேரிய அலைகள் - துன்ப அலைகள் எற்றி எற்றி என்னைத் தள்ளுகின்றன. பற்றிக்கோள்ள எனக்கு ஒரு போருளும் இல்லை. ஆழ்ந்து ஆழ்ந்து மிதக்கின்றேன். இங்நேரத்தில் காற்றுவேறு சுழன்றடிக்கிறது. இனிய கனியை யோத்த மோழியையும் பவளத்தை யோத்த நிறத்தையும் உடைய வாய்படைத்தோர் வடிவில் அக் காற்று என்னைக் கலங்க அடிக்கிறது. இதுவும் போதா தேன்று காமம் என்னும் பேரிய சுருமீன் வாயைப் பிளந்து கோண்டு என்னைக் கதுவ வருகின்றது. அதன் வாய்ப் பட்டு உய்வது இனி என்னே என்று கிடக்கின்றேன் அடியேன். இங்நேரத்தே உற்ருர், ஊர், பேர், கற்ருர், ஈன்ருள், எந்தை, உடன் தோன்றினர் முதலிய உலகியல் துணை எனக்குப் பயன்பட வில்லை. அஞ்சேழுத்தே புணையுமாய்த் துணையுமாய் உதவுகிறது. ஆதியும் அந்தமும் இல்லாத கரையை அந்த அஞ் சேழுத்துப் புணையே எனக்குக் காட்டியது. நான் மூர்க்கன் எனினும், முனைவன் எனக்கு இந்தப் பேருந் துணையாய் நிற்கிருன்’ என்று உருகுகின்ருர்கள். ‘அலை கடல் மூடினும் கண்டேன் புகல்’ என்பதன் விளக்கந்தான் ‘அஞ்சேழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனே’ என்பது.

மனக்கோயில்

'என் மனத்தின் உள்ளிருக்க ஏன்ருன்', 'விரும்பியேன் னுள்ளத் திருந்தான்' என்ற அப்பரடிகளது அநுபவ மோழியை "......அன்பமைத்துச் சீரார் பேருந்துறையான் என்னுடைய சிந்தையே ஊராகக் கோண்டான் உவந்து" என்ற மணிவாசகத்தோடு ஒப்பிட்டு, நினைப்பவர் மனம் கோயிலாக் கோள்ளும் நீர்மையை உணரலாகும்.

அருள்வழி நிற்போம்

அஞ்சேழுத்தின் துணைகோண்டு அப்பரடிகள் உவர்க் கடல் நீந்திஞர்என்று சரித்திரம் சோன்னுலும், அது பிறவிப் பேருங்கடல் நீந்தத் துணை செய்தது என்றே கோள்ள வேண்டும். அதுபோலவே, சேரமான்பேருமாள் நாயனுர் அஃறிணையாகிய குதிரையின் காதில் அஞ்சேழுத்தை ஓதிய வுடன், அது அவரைக் கயிலைக்குத் தாங்கிச் சேல்லும் வலிமை பேற்றது. சிந்திப்பவர்க்குத் துணையாகி எல்லா இன்பங்களையும் தரவல்லது பேருமானுடைய அஞ் சேழுத்து. அதனை விதிப்படி ஓதி, உணர்ந்து, அருள்வழி நிற்போமாக.

> "வாயிலே வைக்கு மளவில் மருந்தாகித்
> தீய பிறவிநோய் தீர்க்குமே ......"

என்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருவுளம் பற்றி ஞர்கள்.

பிறவிக்கடல்

'ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் இப்போழுது சோல்லிய வற்றுள் ஸ்ரீபஞ்சாட்சரம் அப்பர் சுவாமிகளுக்குப் புணையாக

நின்று உதவிக் கடலினின்றும் கரை சேர்த்தது. அதுவும் அமணர்களால் கல்லிற் கட்டிக் கடலிலிடப்பட்ட நிலேயில் அந்தக் கல்லே மிதவையாக சுவாமிகளேக் கரைசேர்த்து விட்டது. அது அசேதனப் போருள். இயற்கையில் தண்ணீர்க்குள் அமிழ்ந்து போகவேண்டிய ஒன்று தன்னியற்கை கெட்டு மிதவையாக ஆனது அந்த ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் மகிமையினுல்தான். பேரியவர்கள் 'சம்சாரம் சாகரம் துக்கம்' என்று சோல்லி வைத்திருக் கிருர்கள். பந்தபாசங்களோடு கூடிய இவ்வாழ்வு (பிறவி) ஒரு பெருங்கடல்தானே. அதனேத் தாண்டுவதற்கு நமக்கு உறுதுணே ஐந்தெழுத்தே என்பதை மெய்ப்பிக்க அப்பர் சுவாமிகளின் வாழ்க்கையில் பெருமான் நடத்திக்காட்டி யிருக்கிருன்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடிசேரா தார்"

உவர்க்கடலில் ஏதோவோரு உயிர் விழுந்து அலேப்புண்டு இறக்கும். அதே உயிர் மீண்டும் அக்கடலில் மறுபிறவி யிலும் விழும் என்று சோல்வதற்கில்லே. ஆனுல் பிறவிக் கடல் தன்னுள் விழுந்தோரனேவரையும்துன்புறுத்தி மாய்ப்ப தோடு, பலபல பிறவிகளிலும் தன்னுள் அமுந்து மாறும், இதேநிலேயில் துன்புறுமாறும் செய்யும். இப்பிறவிப் பேருங்கடலில் வீழ்கின்ற உயிர்களுக்குச் சிறந்த தெப்ப மாக நின்று உதவி முத்திக்கரையில் சேர்த்துப் பேரானந்தப் பேருவாழ்வு தரவல்லது ஐந்தெழுத்தேயாகும். அக் கரையிற் சேர்ந்தோர் மீண்டும் இப்பெருங்கடலில் வந்து சேரார். ஆகவே அதனேப் பற்றுக்கோடாகக் கோண்டு இடைவிடாது சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்தித்த லாகிய தியானம் கடல் கடைந்து அமிர்தம் எடுப்பது

போன்றது. அமிர்தம் எப்படி அமர வாழ்வுதர வல்லதோ அதேபோல இடைவிடாச் சிந்தனையாகிய கடைதலினுல் சிவஞானுக்னி நமக்கு வெளிப்படும். அவ்வக்கினி வெளிப் படவே பாசம் நம்மைவிட்டு நீங்கும். அந்தப் பாசம் சிவஞானத்தால் தகிக்கப்படும் என்று கைவல்யோபநிஷதம் கூறுகிறது. *

இவ்வாறு பிறவிப் பெருங்கடலுக்குப் பஞ்சாட்சரம் தெப்பமாக அமைவதுமல்லாமல், அந்த மகாமந்திரத்தை உருவேற்றுவதால் இந்த கர்ம சரீரத்தைப் போக்கிப் பிறவாநெறி காட்டி உய்விக்கிறது. திருவடிப்பேருகிய குறிக்கோள் கிட்டும்படியும் அருளுகிறது. உய்ந்தவரா வோம்' என்ருர்கள் சிவதர்ம பாஸ்கர சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டர் அவர்கள்.

ஐந்தெழுத்து

இவ்வளவையும் கேட்டிருந்த சூரியநாராயண சாஸ் திரிகள் வேத உபநிஷத்துக்களிலிருந்து மேலும் அரிய சில கருத்துக்களை யெடுத்துச் சொன்ஞர்கள். 'இந்த பஞ்சாட்சர மந்திரத்தைப் பிரணவத்தோடு கூட்டி உச்சரித்தல் மிகச் சிறந்தது. பிரணவமும் ஐந்தெழுத்தும் ஒவ்வொன்றும் தனித்தனியேயும் ஈஸ்வரனுகவே அவ னுடைய சொரூபத்தையும், பஞ்ச கிருத்திய வல்லமை களையும், எண்குணங்களையும் எடுத்து இயம்புவனவாயும் அமைந்திருக்கின்றன. பிரணவம் மூலமந்திரம். நேற்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் தரிசித்துவந்த விநாயகப் பெருமான் பிரணவ சொருபி. ஆகவே அதனை முழுமுதல்

---

* " த்யான நிர்மதனுப்யாசாத் பாசந்தஹதி பண்டித: "

என்றுகூடச் சொல்லுவதுண்டு. 'சர்வ தேவர்களுக்கும் இதுவே காரணஸ்தானம்' என்னும் பொருள்பட 'ஸர்வ தேவ வேதயோனி:' என்றும் 'ஏகாக்ஷரம் பரப்பிரமம:' இவ்வட்சரமாகிய ஓங்காரம் பரப்பிரம்ம சொருபமாவது என்றும், அதர்வசிகோபநிஷதம் சொல்லுகிறது. பிரணவம் அகார உகார மகாரமேன்னும் மூன்று எழுத்துக்களால் வியஷ்டிப் பிரணவம் என்றும், ஓம் என்ற நிலையில் சமஷ்டிப் பிரணவம் என்றும் சுருதிகள் சொல்லுகின்றன. 'அகார உகாரோ மகார இதி, தானேகத் சம்பவத். ததேத தோமிதி' - அகாரம உகாரம் மகாரம் இவைகளை ஒன்று சேர்த்தலால் பிரணவம் உண்டாகிறது.' என்று நாராய ணோப நிஷதம் கூறுகிறது. அந்த மூன்று எழுத்துக்களும் பிரம்ம விஷ்ணு ருத்ரர்களையும், ரிக், யஜுர், சாம வேதங் களையும், உணர்த்துகின்றன. அகாரம் சிருஷ்டி; உகாரம் ஸ்திதி; மகாரம் சம்ஹாரம். பிரணவம் உச்சரிக்கும்பொழுது நாதமாயும், எழுதும்போது விந்துவாயும், ஆகின்றது. ரிக்வேதத்தின் முதலிலே உள்ள 'அக்னி மீளே' என்னும் மந்திரத்தின் முதல் எழுத்தான அகாரமும், மத்தியிலுள்ள 'யோனிஸ்சமுத்ரோபந்து' 'என்னும் மந்திரத்தின் மத்தியில் உள்ள உகாரமும், அந்த வேதமுடிவில்' 'சமாநம்வரம்' என்னும் மந்திரத்தின் முடிவிலுள்ள மகாரமும் சேர்ந்து ஓம் என்னும் பிரணவம்ஆயிற்று. இதனுல் வேதப்பொரு ளாய் நிற்பது பிரணவப் பொருள் என்று சொல்லலாம். யஜுர் வேதத்தில் 'நமசிவாய ச' என்னும் மந்திரத்திற்கு முன்னும் பின்னும் பிரணவத்தைச் சொல்லிப் போற்று கிறது. பஞ்சாட்சரம், யஜுர் வேதத்தில் ஸ்ரீ போதாயன சாகையில் 4-வது காண்டமாகிய சத ருத்ரத்தின் நடுவில் ஐந்தாவது பிரஸ்னத்தில் ''நம: ஸோமாய ச ருத்ராயச'' என்னும் அநுவாகத்தின் மத்தியில் '' நம சிவாயச '' என்று

இலங்குகின்றது. "மிக்க இழிவுடையவனுயிருப்பினும் (சண் டாளன்) சிவ என்னும் ஓசையை உச்சரிக்கின் அவனேடு உரையாடுக; அவனேடு உடனுறைக; அவனேடு கலந் துண்ணுக" என்னும் போருள்பட "அபி வாயஸ் சண்டாள: சிவ இதி வாசம் வதேத். தேன சகஸம் வதேத் - தேன சகஸம் வசேத் - தேன சகபும்ஜீத" என்று முண்டகோபநிஷதம் கூறுகின்றது. இந்தச் சிறந்த போருளை அநுஷ்டானத்தில் கோண்டுவரவேண்டுமேன்று இவ்வளவு கனிவோடு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எடுத்துச் சோல்லியது எனக்கு மகிழ்ச்சி யளிக்கிறது. பேரியோர் சேர்க்கையால் - அவர்களோடு உரையாடுதலால் சத்விஷயங்கள் பல விளங்குகின்றன" என்று கூறி முடித்தார்.

பிரணவம்

முடிவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 'வேத நான்கினும் மெய்ப்போருளாவது நாதன்நாமம் நமசிவாய வே' என்று சம்பந்தப்பெருமானுர் அருளிச் செய்திருக் கின்ருர்கள். தாங்கள் சோல்லியபடி வடமோழி வேதங் களின் உட்போருளாய்ப் பிரணவம் விளங்குகிறது என்ற அதே கருத்து எங்களுடைய திராவிட வேதமாகிய திரு முறைகளின், உட்போருளும் ஓம் என்ற பிரணவத்தின் உட்போருளாய் அமைந்ததேன்றே கோள்கின்ருேம்; சம்பந்தப்பெருமானுரின் முதற் பாசுரமாகிய தோடுடைய சேவியன் - 'முதலேழுத்து' ஓகாரமும், பன்னிரண்டாம் திருமுறையின் கடைசிச் சோல்லாகிய 'உலகேலாம்' என்பதன் மகாரமும் அந்தப் பன்னிரண்டு தேய்வத் திரு முறைகளும் ஓங்காரத்தின் உட்போருளாய் நின்று பேருமா னுடைய புகழ்பரப்பி அவன் திருவடிப்பேற்றை அளிக்க

வல்லன என்று காட்டுவனவாக விளங்குகின்றன. ‘சண்டாளனுயினும் சிவநாமஒலி செய்வானுயின் அவனோடு உறவாடுக’ என்று சொல்லிய அதே கருத்து ‘ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைக்கரந் தார்க் கன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே’ என்று அப்பரடிகளும், ‘சிவ என்னும் மொழியைக் கொடிய சண்டாளன் செப்பிடினும் அவனுடன் உறைக, அவனோடு கலந்து பேசுக, அவனோடருகிருந்து உண்ணுக என்னும், உவமையில் சுருதிப் பொருள்’ என்று சிவஞானமுனிவரும் உரைத்திருக்கிருர்கள். இது மிகவும் ஒத்திருக்கிறது. அதேபோல ‘வேதத்துக்குப் பிரணவமே காரணஸ்தானம்’ என்று சொல்லி யிருப்பதுபோல ‘ஓமெனும் பதமதனில் வேதமாதி உற்பவிக்கும், ஆல வித்தின் உதிக்குமாபோல்’ என்று சிவதருமோத்திரத்தில் கருத்து ஒற்றுமை காணப்படுகிறது. அருட்பெரியார்கள் பேரறிஞர்களுடைய கருத்து இப்படியே ஒத்த கருத்தாக - ஒத்த சொல்லாகவே அமையும்’ என்று அருளிச் செய் தார்கள்.

வஜ்ர சூர்ணம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ காசியில் எழுந்தருளியிருக்கும் செய்தி கேட்டு வடநாட்டவர் சிலரும், தமிழ் நாட்டினர் பலரும் வந்து கண்டு வணங்கிச் சென்ருர்கள். அவர்களில் ஒருவர் தென்னுட்டவர். மாயூரத்திற்கு மிக அண்மையில் உள்ள ஊரவர். அவர் தந்தையார் காலத்தில் உத்யோக நிலையில் வடநாடு சென்ற அவர் குடும்பம், இப்பொழுது ஸ்ரீ காசியிலேயே தங்கிவிட்டது. இவர் லைஃப் இன்ஷியூரன்ஸ் கார்ப்போ ரேஷனில் ஒரு அதிகாரி. தென்னுட்டிலிருந்து தங்கள்

குடும்பம் இங்கு வந்து இரண்டு தலைமுறைகள் ஆன போதிலும், தங்கள் நாட்டுப் பழைய பழக்கவழக்கங்களைக் கைவிடாது பின்பற்றிவருவதாகவும் சொல்லிக்கொண்டார். பிறகு நாட்டின் நிலை, அரசியல், மதம், மொழி முதலியன பற்றிப் பேச்சுக்கள் நடைபெற்றன. அவற்றில் ஒரு சுவையான செய்தி.

ஒரு கட்டிடம். விரைவில் முடித்துவிடத் திட்டம். வேகமாக நடந்து வந்தது பாதியில் நின்றுவிட்டது. மேலதிகாரி அதைப் பார்வையிட வந்தார். இந்த வேலையை மேற்பார்ப்பவர் இது நின்றுவிட்டபடியால் வேறிடத்தில் நடக்கும் வேலைக்குப் போய்விட்டார். மேலதிகாரிக்கு வேலை நின்ற காரணம் விளக்குவோர் யாரும் அங்கில்லை. அங்கிருந்தே, ' அவசரமாக நடக்க வேண்டிய அந்த வேலை நின்ற காரணமும், மேற்பார்ப்பவர் தாம் வந்தபொழுது அங்கில்லாததற்குச் சமாதானமும் ' கோரி உத்திரவு பிறப்பித்தார். பதில் வந்தது. அதில் வஜ்ரசூர்ணம் இல்லாமையால் வேலைநிறுத்தவேண்டி வந்த தாகவும், வேறு இதேபோல முக்யமான வேலையைத் தாம் பார்க்கச் சென்றிருந்ததாகவும் எழுதப்பட்டிருந்தது.

வஜ்ரசூர்ணம் என்றால் என்ன? அது எங்குகிடைக்கும்? என்றபிரச்னைதலைமைக்காரியாலயத்தில்கிளம்பியது. அதில் ஒரு அறிஞர் நம்முடைய பண்டைய கட்டிடக் கலையில் ஒரு சிறந்த மூலிகைகள் கலந்த கலவைப் பொருளாக இருக்கலாம் என்று விளக்கம் சொன்னார். உடனே வட மொழி வல்லுநர் ஒருவரிடம் விளக்கம் கேட்கப்பெற்றது. அவரும் ' சூரணம் என்று வருவதால் பெரும்பாலும் அது மருந்துச் சரக்காக இருக்கும். மருத்துவர்களைக் கேட்க வேண்டும் ' என்று சொல்லிவிட்டார். மருத்துவ

வல்லுநர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அது ஆயுர் வேத முறையில் அமைந்ததாக இருக்கும் என்று பதில் வந்தது. அம்முறை அறிந்தவர்களையும் கேட்டார்கள். ‘ பலர் பலவித சூரணங்களைச் செய்துவைத்துக்கொண்டு அவரவர் மனங்கொண்டபடி சில சமயங்களில் பெயரிட்டு விடுகிருர்கள். ஆகவே வியாதி என்ன என்று தெரிந்தால் அதற்கேற்ற மருந்து இன்னதென்று கண்டு விளக்கம் தரலாம் ’ என்று சொன்னுர்கள்.

இதற்குள் பல மாதங்கள் ஓடிவிட்டன. அதிகாரி பொறுமையிழந்தார். ‘ அறிவுகெட்டவர்களே ! அவசரம் புரியவில்லையா ? யாருக்காவது நோய் கண்டிருந்தால் அவர்களை விலக்கிவிட்டு நல்லவர்களைக்கொண்டு வேலை உடனே தொடங்கவேண்டியதுதானே. அப்படிச் செய்து தெரிவித்துக்கொள்ளவும். அவசரம் ’ என்று உத்தரவு போயிற்று. கீழதிகாரி மறுபடியும் ‘ வேலை நின்ற காரணம் வஜ்ரசூரணம் இல்லாததால் என்று எழுதியிருந்தேனே அதற்குப் பரிகாரம் ஒன்றும் இல்லாமல் வேலையை எப்படித் தொடங்கிச்செய்வது ? அது மிக்க இன்றியமை யாத தேவையான பொருளாயிற்றே. அது வந்தவுடன் அரைக்கணமும் தாமதமில்லாமல் வேலை தொடங்கி விடுகிறேன் ’ என்று பதில் எழுதிவிட்டார்.

‘ நீர் சொல்வது விளங்கவில்லை. புரியக்கூடிய வார்த்தைகளைக்கொண்டு எழுதவும் ’ என்று உத்தரவு. “ சிமேன்ட் (cement) இல்லை. உடனே அனுப்பவும் ” என்று பதில் தந்தி. பிறகு சிமேண்ட் அவசரமாக அனுப்பப்பட்டு வேலை விரைவில் முடிக்கப்பெற்றது.

காரியாலயத்தில் இருப்போர் எல்லோரும் வஜ்ரசூர்ணம் என்பது சிமேன்டைக் குறிக்கக் கையாளப்பட்ட வார்த்தை என்பதை அப்போதுதான் புரிந்துகொண்டனர்.

வழக்கத்தில் இல்லாத பழைய சொற்களையோ, அன்றித்தங்கள்மனம் போனவாறு சொற்களைக் கூட்டியோ கையாளுவதால் காலதாமதத்தையும் வீணான கலக்கத்தையும் விளைக்கின்றது என்ற உண்மையை வஜ்ரசூர்ணம் என்ற இந்தி வார்த்தை எங்களுக்கு நினைவூட்டியது.

விமானத்தில்

நேபாலத்திலிருந்து ஸ்ரீ காசிக்குத் திரும்ப விமானத்தில் வந்துகொண்டிருந்தோம். விமானத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளிய ஆசனத்துக்கு முன் வரிசையில் அமெரிக்கர் ஒருவர் அமர்ந்திருந்தார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அவர் திரும்பித் திரும்பி உற்று நோக்கிப் பார்ப்பதும் திரும்ப நேரே பார்ப்பதுமாக இருந்தார். அவர் அருகில் கல்யாணசுந்தரம் பிள்ளை அமர்ந்திருந்தார். அவரிடம் ஆங்கிலத்தில் ''இந்தப் பெரியவரை நான் படம் பிடிக்கலாமா? வண்ணப்படம் எடுக்க காமிரா வைத்திருக்கிறேன். அனுமதிப்பீர்களா'' என்றார். பிள்ளை என்னைக் கேட்டுச் செய்யும்படி சொன்னார். என்னை அணுகி முன்மாதிரியே கேட்டார். ''அவர்களைப் படம் பிடிப்பதனால் உங்களுக்கென்ன பயன்? இம்மாதிரி இந்திய நாட்டில் உள்ளோர் சந்நியாசிகளாக உலவி வருகிறார்கள் என்று அப் படத்தைக் காட்டி எங்களைப் பற்றி உங்கள் நாட்டில் விமர்சனம் செய்யவா?'' என்று கேட்டேன். ''மன்னிக்கவும். நான் அமெரிக்கத் தொழிலதிபர்களில் ஒருவன். அங்கே எனக்கு வருவாய் அதிகம்

கிடைக்க வழியிருந்தும் மன நிம்மதி இல்லை. அதிலும் ஓயாத உழைப்பு அதிகம். ஆகவே 2, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை விடுதலைபெற்று உலகம் சுற்றி ஓய்வு பெற்றுக்கொள்வது வழக்கம். இந்தத் தடவை இந்தியா முதலிய கீழை நாடுகளைக் காணவந்திருக்கிறேன். இரண்டு மூன்று நாட்களுக்குமுன் ஸ்ரீ காசி வந்திருந்தேன். இப்பொழுது கல்கத்தா சென்று அங்கு இரண்டோருநாள் தங்கிவிட்டு ஜப்பான் வழியாக எங்கள் ஊர் சேன்றடைவ தாகத் திட்டம். இந்தியாவில் இதுபோன்ற பெரியோர்களைக் கண்டால் என் மனதில் ஒரு நல்ல உணர்ச்சி உண்டா கிறது. ஆகவே அவர்களைப் படம் எடுத்துவைத்து எங்கள் நாட்டிலும் பார்த்து மன அமைதிபெறலாம் என்பது என் விருப்பம். அனுமதிப்பார்களா?'' என்றார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் உத்தரவுபெற்று அவரும் படம் எடுத்துச்சென்றார்.

டம் டம்

மீண்டும் சிலநாள் ஸ்ரீ காசியில் தங்கிவிட்டு விமான மூலமாகவே கல்கத்தா வழியில் சென்னை திரும்பினோம். கல்கத்தா டம்டம் விமான நிலையம் உலகப் பெரு நிலையங் களுள் ஒன்று. அங்கு இரவு பகல் எந்நேரமும் விமானம் வந்துகோண்டும் புறப்பட்டுக்கோண்டும் இருக்கும். உலக நாட்டவர் அத்தனைபேரும் கீழைநாடுகளுக்குச் சேல்ல அது சிறந்த வழி. பேரிய பேரிய விமானங்களும் வந்து இறங்க இந்தியாவில் உள்ள மிகப் பேரிய விமானக்கூடம் அது.

இங்கிருந்து இரவு புறப்படும் விமானத்தில் சென்னைக் குப் புறப்பட்டோம். நாங்கள் வந்தது Sky Master

வைத்தியநாததாமில்



தீர்த்தக்கிணறு

ஸ்ரீ வைத்தியநாதத்தில்



வழிபாடு முடிந்து திரும்பும் காட்சி

ரகத்தைச் சேர்ந்தது. பெரிய விமானம். சுமார் 45 பேர்கள் வரை தங்கலாம். விமான சிப்பந்திகள் உள்பட 50, 52 பேர் அதில் பிரயாணம் செய்யலாம். ஒரு லாரியில் ஏற்றக்கூடியதற்கு அதிகமாக சாமான்கள், தபால்கள் அதில் ஏற்றப்படுகின்றன.

எங்களுக்கு ஒத்த வரிசையில் இரு ஆந்திரர் வந்து அமர்ந்தார்கள். அதில் ஒருவர் அமேரிக்கா முதலிய மேலைநாடுகளுக்குச் சென்றவர். மற்றவர் அன்றுதான் விமானத்தில் முதன் முதலில் வருபவராகத் தெரிந்தது. புதிதாக வருபவருக்கு அங்கு இருந்த ஏற்பாடுகள் புதுமையாகத் தோன்றின. ஆனல் அவர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்துடன் வந்த நாங்கள் ஒரு கூஜா, இரண்டு சோம்புகள் கையில் எடுத்து வருவதைக்கண்டு பரிகாசமாக இந்தப் பெரியவர்கள் நடுக்கடலில் சென்ருலும் சோம்பில் தண்ணீர் கொண்டுபோகாமல் இருக்க மாட்டார்கள் என்று ஆங்கிலத்தில் அவர் நண்பரிடம் சொல்லிச் சிரித்தார். அது என் உணர்ச்சியைத் தூண்டியது. 'இவ்வளவு நாகரீகம் மிக்க தாங்கள் இதுவரை விமானத்தைக் கண்டதுகூட இல்லைபோலும். இப்படி உலகமே தெரியாத தாங்கள் பிறர் நடைமுறைபற்றி விமர்சனம் செய்ய முற்பட்டது ஆச்சரியமே' என்று சொல்லிவிட என்நாக்குத் துடித்தது. ஆனல் விமானத்தில் மிக உயர்ந்த நாகரிகத்தவர் பிரயாணம் செய்வதாக ஏற்பாடுகள் செய்துவைத்திருக்கிருர்கள். அங்கே நாம் இப்படிப் பேசினல் மேலே அநாகரிகமாக வார்த்தை வளரும், அம்மாதிரி செய்து நம்முடைய பண்பாட்டைப்பற்றிப் பிறர் குறைகூற இடம் தரவேண்டாம் என்று அடங்கி இருந்து விட்டேன்,

நாக்பூர் விமான நிலையத்துக்கு 2-15 க்கு வந்து சேர்ந்துவிடுகிறது விமானம்: அங்கே இந்தியாவின் நான்கு திசைகளிலிருந்தும்வரும் தபால்களைப் பிரித்து அவற்றைச் செல்லவேண்டிய இடங்களுக்கு விமானங்களில் ஏற்றுவார்கள். அதற்காகச் சுமார் 1-30 மணி நேரம் அவகாசமிருக்கிறது. பிரயாணிகள் விமானத்தைவிட்டு இறங்கி ஒய்வு எடுத்துக்கொண்டு விமானம் புறப்படும் முன் அறிக்கை தெரிந்து ஏறிக்கொள்வது வழக்கம். அதன்படி எல்லோரும் இறங்கினோம். களைப்பாறிவிட்டு விமானத்தில் குறித்த காலத்திலும் ஏறினோம். அப்பொழுது அந்த ஆந்திரப் பெருமக்கள் இருவர் இருந்த இடத்தில் ஆங்கிலேயர் ஒருவர் ஒரு ஆசனத்தில் அமர்ந்திருந்தார். இதனைக்கண்ட அவர்களில் புதிதாகப் பிரயாணம்செய்பவர், ஆங்கிலேயரிடம் அவர் (ஆங்கிலேயர்) இருக்குமிடத்தில் தன் நண்பர் அமர்ந்து வந்ததாகவும், அதைக் காலிசெய்து கொடுக்கவேண்டுமென்றும் கேட்டார். அதற்கு ஆங்கிலேயர் பதிலும் சொல்லவில்லை; அசைந்தும் கொடுக்கவில்லை. ஆந்திரப் பிரமுகருக்குக் கோபம்வந்தது. திட்டினார். அதையும் ஆங்கில கனவான் பொருள்செய்யவில்லை. விமானம் புறப்படும் நேரம் வந்தது. எல்லோரும் அதற்குள் அமர்ந்துவிடவேண்டும். ஆகவே நண்பர்கள் பிரிந்து தனித்தனி வரிசையில் அமரவேண்டியதாயிற்று. ' இப்படித்தான் இந்த வெள்ளையர்கள் ஆக்ரமிப்புச் செய்து வருகிறார்கள். அநியாயக்காரர்கள் " என்றெல்லாம் கோபமாகப் பேசினார் ஆந்திரர். அதற்கும் வெள்ளையர் பதில் சொல்லவில்லை. விமான அட்டெண்டரிடம் போய்ப் புகார் சொன்னார் ஆந்திரர். அதற்கு அவர் ' நீங்கள் அந்த இடத்தில் முன் அமர்ந்து வந்ததற்கு அடையாளமாக ஏதாவது விட்டுச் சென்றிருந்தால்தான் நான் அவரை

வேறிடம் செல்லச் செய்யமுடியும். இல்லாவிட்டால் நான் எப்படிச் சொல்லமுடியும். இங்கு வருவோர் எல்லாம் நல்ல தகுந்த கனவான்களே. ஆகையால் நாங்கள் அதில் வேறுபாடு காணமுடியாது என்று சொல்லவேண்டியிருக்கிறது. மன்னிக்கவும்.' என்று கையை விரித்துவிட்டார். பிறகு நெடுநேரம்வரையிலும் அயர்ந்து தானுகத் தூங்கிப் போகும்வரை ஆந்திரர் வாய் முணுமுணுத்துக்கொண்டே வந்தது.

தருமை வந்தோம்

ஆன்ம ஞானமும் இன்பக் காட்சிகளும் பெருக்கிக் கொண்டதுபோல உலக அறிவாலும் உயர்ந்து வந்தடைந்தோம் சென்னையை.

அங்குச் சிறிது நேரம் தங்கியிருந்துவிட்டு பகல் 2 மணிக்குத் தருமை வந்துசேர்ந்தோம்.

எங்கள் உள்ளங்கள் இந்த இன்ப அனுபவங்களை எங்களுக்கு வழங்கிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவடிகளை வாழ்த்தி நன்றிப் பெருக்கான வணக்கங்களையும் செலுத்துகின்றன. வாழ்க பசுபதிநாதர் திருவருள்.

வாழ்க எங்கள் குருநாதரின் திருவடி.

வாழ்க உலகெலாம்.

வைத்தியநாத்தாம்

அனைத்துயிர்க்கும் பாசம் அறுத்துமுத்தி கூட்ட
மனத்துயரஞ் செய்தல் மருந்தோ — மனத்துயரம்
செய்யாமல் தீர்மருந்து சித்தா அறிந்திலையோ
ஐயாஎன் சோக்கநா தா.

30—4—58இல் ஸ்ரீ காசியைவிட்டுப் புறப்பட்டு வைத்யதிநாத் தாம் தரிசனத்திற்குச்சென்றோம். (வைத்தியநாத் - வைத்தியநாதர் ; தாம் - க்ஷேத்திரம், கோயில். வைத்தியநாதர் க்ஷேத்திரம், காசி, முகல்சராய், பக்சார், பாட்னு, ஜேசிடி வந்து ஜேசிடியிலிருந்து வைத்தியநாத் தாமிற்குத் தனிப்பிரிவு. ஜேசிடியிலிருந்து வைத்தியநாத்தாம் சுமார் நான்குகல் தொலைவிற்குள்ளாகத்தான் இருக்கும். முக்கால் மணிக்கு ஒருமுறை ஜேசிடியிலிருந்து இரயில் விடப்படுகிறது. சாலை வழியும் வசதியாக இருக்கிறது.

சாதாரண நாட்களிலும்கூட ஏராளமான மக்கள் அங்கு வந்து தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்திக் கொள்கிறார்கள். ஸ்தலத்திற்குப் பெயர் வைத்தியநாத் தாம். ஆனல் ஊருக்குப் பெயர் தேவகார். அதாவது தேவகிருகம். தேவதேவன் வசிக்கும் அதாவது எழுந்தருளியிருக்கும் பெருங்கோயில். மூர்த்தி மிகச் சிறிய அளவில் மூன்று அங்குல உயரத்தில் இருக்கிறது. கோயில் மிகப் பெரியது. சுவாமி வைத்தியநாதர் (பைத்தியநாதர் என்று அங்கு வழங்குகிறார்கள்). அம்பிகை பார்வதி. (பார்பதி என்றும் வழங்குகிறார்கள்).

ஊர் பிகார் இராஜ்யத்தில் ஒரு தனி ஜில்லாவின் தலைநகரம். ஆனாலும் வடநாட்டு முறையில் அமைந்து தெருக்கள் பெரும்பாலும் அகலமாக இல்லை.

ஆலய விமானம்

சுவாமிகோயில் அம்மன் கோயில் விமானங்கள் அளவில் பேரியதாயும் உயரம் சுமார் 150 அடி உள்ள தாகவும் இருக்கின்றன. சுவாமி விமான ஸ்தூபியிலிருந்து அம்மன் ஸ்தூபிக்குச் சிகப்பு, பச்சை, மஞ்சள் நிறங்களி லுள்ள அகலமான நாடாக்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பார்க்க அழகாக இருக்கும். அது பிராத்தனைக்காரர்கள் நிறைவேற்றிக்கோள்ளும் பிராத்தனைகளுள் ஒன்று.

பிரார்த்தனை

எல்லா நோய் நீக்கத்திற்கும் பிரார்த்தனை செய்து வந்து காணிக்கைகளும் ஏராளமாகச் செலுத்துகிறார்கள். கோயிலிலேயே சில நாள் வந்து தங்கி விரத முடித்து பிரார்த்தனை செய்து கோள்ளுவதும் உண்டு. மண்டபங் களில் ஆணும் பெண்ணுமாகப் பலர் குடும்பங்களோடு வந்து பேட்டி படுக்கைகளையும் வைத்துக் கோண்டு தங்கி யிருப்பதையும் காணலாம்.

கும்பிடுதண்டம்

பக்தர்கள் அங்குள்ள மகிமை மிக்க பார்வதி குண்டில் (பார்வதி தீர்த்தம்) எண்ணேய்வைத்துக்கோண்டு ஸ்நானம் செய்து, ஈர ஆடையோடு, கும்பிடுதண்டம் அங்கப்பிரதக்ஷி ணம் முதலியன செய்துகோண்டே கோவிலுக்குப் போகி றார்கள். கோவிலுக்கும் தீர்த்தத்திற்கும் உத்தேசம் ஒரு கல் தோலைவு இருக்கும். கோவிலிலும் அவர்கள் இந்த நிலையிலேயே வலம் வந்து வேண்டுதலை முடித்துக் கோள்கிறார்கள்.

தங்குமிடம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அங்கு எழுந்தருளியது ஒரு சாதாரண நாளில். இரயில் நிலயத்திலேயே யாத்ரீகர்கள் தங்குவதற்கு மிக்க வசதியுடன் மூன்று அறைகள் இருக்கின்றன. வாடகைக்குக் கிடைக்கும். ஊருக்குள்ளும் பல சத்திரங்களும் மடங்களும் உண்டு. அவற்றிலும் வாடகைக்கு இடவசதி செய்து கொள்ளலாம். தென்னுட்டிலிருந்து போவோர்க்கு அந்நாட்டுச் சத்திரங்களும் மடங்களும் அவ்வளவு வசதியாக இராது. இரயிலடியிலேயே தங்குவதுதான் நலமாக இருக்கும். அப்படியே இரயிலடியில் தங்க ஏற்பாடாயிற்று. பார்வதிகுண்டம் திருமஞ்சனமாயிற்று. கோவிலுக்கும் எழுந்தருளியானுர்கள். பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யத் திட்டமாயிற்று.

காவடி

அபிஷேக சாமான்கள் நைவேத்தியப் பொருள்கள் இவற்றை அங்குக் காவடி கட்டி எடுத்துச்செல்வதென்ற முறையும் இருக்கிறது. சங்கல்பம் செய்துகொண்டபிறகு தாமே காவடி எடுத்துச்செல்ல இயலாதவர்களுக்குக் காவடி எடுக்கப் பல கூலிகளும் இருக்கிறுர்கள்.

நாங்கள் காலை 9 மணிக்குக் கோவிலுக்குள் சென்றோம். சுமார் 5000 பக்தர்களுக்குமேல் அங்குக் கூட்டம் இருந்தது. ஒருவர்மேல் ஒருவர் இடித்துக்கொண்டுதான் கோவிலுக்குள் செல்லவேண்டியதாகவும் இருந்தது. சந்நிதிக்கு மூன்று திருவாயில்கள் இருக்கின்றன.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்காகத் தனி ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். பெருமான் சந்நிதியில் நின்று வழிபாடாற்றியிருந்த மக்கள் அவரவர் வழிபாடு முடிந்ததும் அவர்களை வெளியேற்றிவிட்டு வெளியில் இருந்து வருவோரைச் சிறிதுநேரம் தேக்கிவைத்து ஒரு வாசலை மட்டும் திறந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும் உடன் வந்தோரும் தனியாக இருந்து வழிபட வசதி செய்து கொடுத்தார்கள். பெருமானைச்சுற்றி சுமார் 7, 8 பண்டாக்கள் இருந்து அபிஷேக ஆராதனைகளை மிக விரைவில் நடத்தினர். வெளியில் இருந்த கூட்டம் பொறுமை இழந்தது. காவலரைத் தள்ளிக்கொண்டு உள்ளே பெருங்கூட்டம் நுழைந்துவிட்டது. பெருமானை வழிபடத் தொடங்கி 5 நிமிடங்கள்கூட ஆகவில்லை.

பெருங்கூட்டம் வந்து எங்கள் தலையிலும் அபிஷேக சாமான்களைப் போட்டுவிட்டனர். அதற்குள் ஒருவாறு வழிபாடு முடிந்ததாக எண்ணிக்கொண்டு வெளியே வர வேண்டியதாயிற்று. அவ்வளவு பெருங்கூட்டம்.

மக்களார்வமும், நம்பிக்கையும், பக்தி உணர்ச்சியும் பெருக்கெடுத்தோடுவதை அங்கே காணலாம். மிகப்பெரிய பணம் படைத்தவர்களிலிருந்து மிகத் தாழ்ந்த ஏழைகள் வரை பெருமான் சந்நிதியில் எல்லோரும் ஒன்றுக ஒரு இனமாக (பக்தர் திருக்கூட்டம்) அடித்து மோதிக்கொண்டு வந்து வழிபடும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. அவ்வளவு பெரிய கூட்டத்தில் பெருமான் திருமேனியைக் கண்ணுல் காண்பதும் முடியாது. அடியார் அடியார் அடியார் வழிபாடு என்று சொல்வோமே அந்த நிலையில் அங்கே உள்ளே சென்று கண்டவரைக் கண்டவரைக் கண்டவராக வெளியேற வேண்டியதுதான்.

காலையில் 5 மணிக்குத் திறக்கப்படும் திருவாயில்கள் இரவு 9 மணிவரை திறந்தே இருக்கும். நாங்கள் செல்வதற்கு இரண்டு மூன்று நாட்களுக்குமுன் ஸ்ரீ ராமநவமி நடந்திருக்கிறது. சில லக்ஷக்கணக்கான மக்கள் அன்று வந்து வழிபட்டிருக்கிறார்கள். அந்த நாட்டில் திருமாலுக்குகந்த நாட்களில் சிவ பெருமானுக்கும் வழிபாடுகள் செய்கிறார்கள். சைவ வைணவ வேறுபாடுகள் அங்கு அதிகம் காணமுடியாது.

ஆனால் அங்குச் சைவர்கள் மாமிச உணவு ஏற்போராகவும் வைணவர்கள் மரக்கறி உணவுகளை ஏற்போராகவும் கொள்ளப்படுகிறார்கள். மகாத்மா காந்தி குறிப்பிடும் “ நான் ஓர் வைஷ்ணவன் ” இந்தக்கருத்தில் அமைந்தது தான்.

ஒரு வழியாக வழிபாடுகளை முடித்துக்கொண்டு இருப்பிடத்திற்கு வந்துசேர்ந்தோம். அந்த ஊரில் பார்வதி குண்டத்திலிருந்து ஆலயம் சென்று திரும்பி வரும்வரை வழியெல்லாம் மக்களுக்கு (அங்கப்பிரதக்ஷணம் கும்பிடு தண்டம் முதலியன செய்வோர்) சிறு இடையூறுமன்னியில் செல்லவேண்டியிருக்கிறது.


பண்டாக்கள் வரும் யாத்ரிகர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கிறார்கள். கோவிலின் புனித நிலைக்கு ஏதாவது இடையூறுகள் நேருமானால் உயிரையும் கொடுத்துக் காக்கும் உறுதியுடையவர்கள் அந்தப் பண்டாக்கள்.

வைத்தியநாதத்தில்



ஸ்ரீ வைத்தியநாதர் விமானம்

நேபால்



ROYAL ARMS OF NEPAL

அரசாங்கக்கோடி

புராணம்

இராவண வழிபாடு

குபேரன் நல்ல சிவபக்தன். அவனுடைய சகோதரனுன இராவணன் தானும் சிவவழிபாடு செய்ய நினைத்தான். அவனுடைய தாயினிடம் சென்று சிவபூசை செய்யும் வழியைக் கேட்டான். அவன், ‘ பெருமானைக் குறித்துத் தவம் இருந்து அவரிடமிருந்தே இலிங்கத் திருவுருப் பெற்று வழிபடுதல் சிறப்பாகும். அப்படியே செய்க ’ என்று சொன்னுன். இத்தலத்தில் வந்து கடுந்தவம் இருந்தான். சோதனையும் வலுவாக இருந்தது. பெருமானுடைய தரிசனம் தனக்குக் கிடைக்காத காரணத்தால் தன்னையே பலியிட்டுக்கொள்ள நினைத்தான். அதன்படியே, யாக குண்டத்தில் ஒவ்வொரு தலையாக அரிந்து இட்டான். ஒன்பது தலைகள் இடப்பட்டுவிட்டன. பத்தாவது தலையையும் அரிந்திடக் கத்தி கழுத்தில் பதிந்தது. பெருமான் காட்சி தந்தார். ‘ உன்னுடைய உறுதியைச் சோதித்தோம். வெற்றி கண்டாய். உனக்கு வேண்டிய வரம் கேட்டுக்கோள் ’ என்று உத்திரவாயிற்று. ‘‘ பெருமானே உம்மை நான் என்றும் மறவாவரம் வேண்டும். வழிபட இலிங்கத் திருமேனி ஒன்று அருளல் வேண்டும். உலகில் எல்லோர்க்கும் மேலாக வலிமை மிக்கவனுக வாழ வேண்டும். அருள் செய்யவேண்டும் ’’ என்று கேட்டுக்கோண்டான். ‘ அவ்வாறே ஆகுக ’ என அருளினுர். பெற்ற இலிங்கத் திருமேனியை இலங்கையில் வைத்து வழிபட நினைத்தான்.

வாள்வரம்

திருமால், அதனுல் ஏற்படும் விபரீத விளைவுகளை எண்ணி, இராவணன் முன் தோன்றினுர். ‘ அசடனே !

பெருமானிடம் உனக்கு வேண்டியவற்றைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளத்தெரியவில்லையே ; அவருடைய வாள் வலிமை மிக்கதாயிற்றே? அதனையும் பெறவேண்டாமா? அது சித்திக்க நீ முயலுவாயாக ' என்று சொன்னார். அவனுக்குப் போர்செய்து வெற்றி காண்பதிலுள்ள ஆசையைத் தூண்டுவதாக அது அமைந்தது. தன் கையில் இருந்த புனிதமான இலிங்கத் திருமேனியை அங்கே வைத்துவிட்டு மீண்டும் தவம் செய்தான். வேண்டும் வரம் பெற்றான்.

முன்வைத்த இலிங்கத் திருமேனியை எடுத்துச் செல்ல முயன்றான். ஆனால் அது அந்த இடத்தைவிட்டுப் பெயராமல் அங்கேயே வேரூன்றி விட்டது. அசைத்தும் எடுக்க முடியவில்லை. இவன் திருமுடியில் கைவைத்து அசைக்க அசைக்க அது கீழே அழுந்தியது. பூமிக்குள் போய்விட்டது. கைக் கட்டை விரலால் அந்த இடத்தில் பள்ளம் செய்து கீழே உள்ள மூர்த்தியை எடுக்க முயன்றான். பெருமான் ஜோதி தரிசனம் காட்டி அசரீரியாக நின்று ' உன் முயற்சி பயன் தராது. இங்கேயே இனி நாம் எழுந்தருளியிருப்போம் செல்க ' என அருளினார். அந்த நிலையில் இன்றும் பெருமான் தரையோடு தரையாக திருமுடி மட்டும் சிறிது தெரியக்கூடிய அளவில் எழுந்தருளியிருக்கிறார்.

இந்த க்ஷேத்திரம்தான் பரேய்லி வைத்தியநாதம் என்பது. அக்காலத்தில் இது பெருங்காடாக இருந்தது. இப்பொழுதும் சிறிது தொலைவு வடக்கே சென்றால் காட்டுப்பகுதி யிருக்கின்றது. பழங்காலக் குடிமக்கள் " சாந்தால் " (Santal) சாதியினரும் அங்கு இருக்கிறார்கள். இப்பகுதிக்குப் " பரேய்லி " என வழங்கி

வந்தார்கள். இது அந்தக் கோவில் பூஜகரான ஒரு பண்டாவின்மூலம் அறிந்த செய்தி.

அவனுக்குப் பழைய நிலையில் பத்துத் தலைகளும் பொருந்துவதாக அருள்பாலித்தார். இராவணனது ஒன் பது தலைகளும் அவனுக்கு மீண்டும் கிடைக்க அருள் பாலித்தமையால் பெருமான் ஸ்ரீ வைத்தியநாதர் என்று திருப்பெயர் பெற்ருர்.

உபநிஷதத்தில்

இப்பொழுதும் பெருமான் உடல் நோய் தீர்க்கும் வைத்தியராக, உயிர் நோய் தீர்க்கும் மருத்துவராக அங்கே காட்சி அளிக்கிருர். பெருமான் பவ ஒளஷதீஸ்வரனுக - பிறவிப் பிணிதீர்க்கும் அருமருந்தாக அங்கே எழுந்தருளி யிருக்கிருன். நமது நாட்டிலுள்ள இவ்வாதீனப் பெருங் கோயில், வைத்தீசுவரன்கோயில்என்னும் திருப்புள்ளிருக்கு வேளூர்த் தல நினைவும் அங்கே வந்தது.

"நைதக்ம் ஸேதுமஹோராத்ரே தரதோ ந ஜரா ந ம்ருத்யுர் ந ஸோகோ ந ஸுக்ருதம் ந துஷ்க்ருதம் | ஸர்வே பாப்மா நோதோ நிவர்த்தந்தே பஹதபாப்மாஹ்யே ஷ ப்ரஹ்மலோகஸ்தஸ்மாத்வா ஏதக்ம் ஸேதும் தீர்த் வாந்தஸ்ஸந்நந்தோ பவதி வித்தஸ்ஸந்ந வித்தோ பவத்யு பதா பீஸந்நுபதாபீபவதி தஸ்மாத்வா ஏதக்ம் ஸேதும் தீர்த்வாபிநக்தமஹரே வாபிநிஷ்பத்யதே ஸக்ருத் விபாதோ ஹ்யே வைஷ ப்ரஹ்மலோக: |"

"அந்தச் (திருச்சிற்றம்பல) சேதுவைப் பகல் இரவேனும், ஜரையேனும், மரணமேனும், சோகமேனும், நன்மையேனும், தீமையேனும் கடப்பதில்லை. பாவிகளெல்லாம் அங்கிருந்து மீண்டுவிடுவர். இந்தப் பிரமலோகம் பாவத்தினின்று நீங்கியதன்றோ ; அதனாற் குருடாயுள்ளோன் இந்தச் சேதுவைக் கடந்து குருடு நீங்கப் பெறுவன் ; காயமுற்றோன் காயம் நீங்கப்பெறுவன் ; ஆகலின், இந்தச் சேதுவைக் கடந்தபோது இரவானது பகலாகின்றது ; பிரமலோகம் (யாவர்க்கும்) ஒரே முறையிற் பிரகாசிப்பது" என்றது சாந்தோக்கியம் (அ. ப. க. உ.)

திருமுறையில்

"சிற்றம்பலமேய நீறார்சடையானை நித்தல் ஏத்துவார் தீராநோயெல்லாம் தீர்தல் திண்ணமே; சேணார் வாழ் தில்லைச் சிற்றம்பலமேத்த மாணா நோயெல்லாம் வாளாமாயுமே" என்று ஆளுடைய பிள்ளையும் "வானவர்க்கு மருந்தாகிப் பிணிதீர்க்கும் அணியானே; மந்திரமும், தந்திரமும், மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்; 'தோற்றநிலை இறுதிப் பொருளாய் வந்த மருந்து அவன்' என்று ஆளுடைய அரசும் இப்படியே மற்ற சமயாசாரியர்களும் சொல்லி இருக்கிறார்கள். அவனை வைத்தியநாதனாக, நமக்குற்ற பிறவிப் பெருநோய் தீர்க்கும் அருமருந்தாகக் கண்டு நமக்கு உபதேசங்கள் வழங்குகிறார்கள்.

சிவஞான முனிவர் வாக்கில்

சிவஞான சுவாமிகள், நோய் தங்கியிருக்கும் இடம், அதன் அமைதி, அதனைப் போக்கும் வைத்தியன், அவனைச் சார்ந்து பரிகாரம் காணும் முறை இவற்றைச் சொல்லுகிறார்கள். 'உடலை எலும்புக் கூடிட்டு அதன்மீது நரம்பினால்

பின்னிக்கட்டிவைத்தான். அதன்மீது இறைச்சிமேத்திஞன். அதிலே அற்பமான புழுக்களைப் போதித்து சிகப்பு நீராகிய இரத்தத்தில் கலந்து வழியச் செய்தான். துர்நாற்றம் வீசும்படியும் துன்பம் தரத்தக்க நோய்கள் எல்லாவற்றிற்கும் தங்குமிடமாயும் செய்து மேலே தோலைப்போர்த்தி உடம்பை ஆக்கிவைத்தான். அந்த உடம்பே உயிரை வருத்தும் பிணியாகும். அஃதல்லாது வேறொன்றுமில்லை. இந்தப் பெரும் பிணியைத் தீர்க்கும் மருத்துவன் ஒருவன் உண்டு. அவனே பிறவியில்லாப் பரம்பொருள், அவனே முக்கட் பரமன் என்று தெரிந்து தேறி தெற்கு முகம் நோக்கிய தக்ஷிணாமூர்த்திப் பெருமானைப் புகலடைதல் வேண்டும். அப்படி விரும்பிச் சரண் அடைந்தவர்கள் இந்தப் பிறவிப் பெரும் பிணிநீங்கி என்றும் மங்காத (வீடுபேறு) முத்தியின்பத்தைப் பெற்றவர்களாவார்கள்' என்று அருளிச் செய்திருக்கிறார்கள்.

சிவஞான சித்தியில்....

இறைவன் ஆன்மாக்களின் மீது வைத்த பெருங் கருணையினாலே அவை உய்ய வழியும் வகுத்து, அதற்கு இலக்கியங்களும் செய்து தந்திருக்கின்றான். அந்த நூல் வழி தவறி நின்று அவச்செயல் செய்வோர் பாவங்களைச் சுமக்கிறார்கள்; அதற்கும் பரிகாரம் உண்டு. அவன் வைத்தியர்களுக்கு எல்லாம் தலையாய வைத்தியன். அவர்களுக்கு நரகத் துன்பத்தைக் கொடுத்துப் பாவங்களைப் போக்குகிறான். நற்செயல்களை மேற்கொண்டு புண்ணியம் பெருக்குவோரும் சிலர் உளர். அவர்களுக்கு சுவர்க்கானுபவம் முதலிய போகங்களைக் கொடுத்துப்

புண்ணியம் தீர்ப்பன். அவர்களைச் சார்ந்து நிற்கும் மலங்களையும் போக்குவன். அவன் உரைத்த நூல்வழி நிற்போரைப் பிணிகள் வந்து சாரா. அப்படியே தப்பித் தவறி வழி கெட்டுச் சென்றுவிடும் நிலை ஏற்படினும் நம்மை அவன் திருத்திவிடுவான். நோய் வந்துற்றாலும் அவன் தன் தரிசன மாத்திரையாலே மருந்து கொடாமல் அந்நோயைப் போக்கியருள்வன். கன்மத்துக்கீடான சரீரங்களைக் கொடுத்து அதனைப் போக்குவன்.

பூமியிற் பிறந்தவர்களைப் பல நோய்கள் வந்து பற்றக்கூடும். ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு வகையான மருத்துவம் உண்டு. சில வியாதிகளை மருந்து கொடுத்து உண்ணச்செய்துப் போக்குதல் ஒரு முறை. இன்னும் சில நோய்களை நோய்கண்ட இடத்தை அறுத்துக்கீறி உள்ளே உள்ள நோயணுக்களை அகற்றித் தீர்த்தல் மற்றொரு முறை. மற்றும் சில நோய்களுக்குச் சுவையான, பால், கற்கண்டு இவை கலந்து கொடுத்துத் தீர்த்தலும் உண்டு. இது மூன்றாவது முறை. நம்முடைய நல்வினை தீவினைகளுக்கேற்ப இன்பத் துன்பங்களைக் கொடுத்து அண்ணல் நம்மை ஆண்டருளுகின்றான்.

சிவப்பிரகாசசுவாமிகள் வாக்கில்

நல்லவர் ஒருவர் பொல்லா நோய் கண்டு கிடக்கிறார். உறவினர் பலரும் வருந்துகிறார்கள். மருத்துவரை நாடுகின்றார்கள். அவர் வந்தார். மூன்று நாடிகளையும் தொட்டுப் பரிசோதனை செய்து பார்த்தார். நோய்த்

தன்மை இத்தகையதென்று கருத்திலே கண்டார். 'மூன்று நாடிகளிலே நடுநாடி நன்ருக இருக்கிறது. உயிர்க்கு அழிவில்லை. அஞ்சவேண்டாம். நானும் வந்திருக்கிறேன். நெஞ்சில் கவலை வேண்டாம்' என்று நோயாளனைத் தேற்றுகிருர். 'நோய் வேகத்தால் நோயாளனுக்கு வாயில் கசப்பு இருக்கிறது. அதற்கு மாற்ருக நல்ல பால், சிவந்த நிறமும் மூன்று கண்களுமுடைய அதிமதுரமான கனி இரண்டும் கலந்து தருகின்றேன். அதை உட்கோள்வாயாக' என்று உள்ளுக்கு மருந்து கோடுக்கிருர். மருத்துவப்பையை எடுக்கிருர். சோதிக்கிருர். வெள்ளைப் போடி ஒன்றைத் தேடி எடுக்கிருர். உடலுக்கு மேற்பூச்சுப் பூசுகிருர். அழகான மணி ஒன்றேடுத்து அவன் கழுத்தில் கட்டுகிருர். மூன்ருவதாக நோயே வராமல் எப்போழுதும் அவனைக்காக்க ஒரு மந்திரமும் அவன் காதில் உபதேசம் செய்கிருர். முறை பிறழாமல் இதைச் சிந்தித்து வந்தால் உனக்குள்ள இந்தப் போல்லா நோய் அகலும். எப்போழுதும் உன்னை நோய் அணுகாமல் இன்பத்துள் இருக்கலாம். தேறுவாயாக' என்று பணித்து அவன் நோய் அகற்றிக் காத்து உதவிபுரிகிருர். இப்படி உலகியல் மருத்துவராக வருவோர் செய்வதை அடிக்கடி நாம் காண்கிருேம். இது உடல்நோய்க்கு மருத்துவம்.

இதேபோல உயிருக்கும் நோய் உண்டு. அந்தப் பேருநோய் பிறவி எனப்படுவது. பிறவியிற் பட்டோர் உய்ய அவன் அருள்வேண்டும். அந்த அருள் வந்து கைகூடியதும் அதுவரை நமக்கு மிகுத்திருந்த பிறவிநோய் வலியழியக் காணலாம். அவன் நம்மைப் பார்க்கிருன். பிங்கலை, இடைகலை, சுழுமுனை ஆகிய நாடிகளைச் சோதித்துப் பார்க்கிருன். அதிலே நடுநாடி வழியாகக் குண்ட

லினியை எழுப்பி அதிற் கலந்து உயிர்க்கு அழிவில்லை யென்று காட்டுகிறுன். உயிர் நித்தியவஸ்து என்பதைக் காட்டுகிறுன். அதனை அப்படி நிறுத்தி அவனுடைய நெஞ்சத்திலுள்ள அழுக்கைப் போக்கி அதுவரை அவனைக் கப்பிநின்ற மும்மலங்களையும் போக்கி வேத ஆகமங்க ளாகிய மந்திரங்களை உபதேசித்து செவ்வழல் மேனியும் மூன்று கண்களையுமுடைய தித்திக்கும் தீங்கனியான தன்னை (அங்கே சிவனை) உள்ளே கோண்டு சிந்தையில் தேக்கிச் சேம்மாந்து இருக்கப் பணிக்கிறுன். இதற்கு முன்னே நம்முடைய பக்குவாபக்குவம் தேரிந்து தன்னுடைய கருணை யாகிய மருத்துவப்பையினைச் சோதித்து மேற்பூச்சு மருந்தாகிய வேண்பொடி (வேண்ணீற்றை) எடுத்து உடல் எல்லாம் பூசி அக்குமணி அணிவித்து ஐந்தெழுத்து மந்திரத் தைப் போதித்து முறை பிறழாமல் உரைத்து இப்படியே ஒம்பி வருவாயாக. உனக்கு உறும் பவப்பணி அகலும் என்றும் மணிமந்திர ஔஷதங்களால் நோய் போக்கி இனி நோயும் வராது என்று அருளிச் செய்கிறுன். இவ்விதமாக மாசுகழுவி உயிர் நோயகற்றி ஆரா இன்பம் அளித்துத் தன்னுடைய திருவடிகளில் சேர்த்துக்கோள் கின்றுன். உயிர் நோயும் அகற்றப்பட்டு ஒளிபெற்று விளங்குகிறது.

வேதத்தில்....


प्रथमो दैव्यो भिषक्   ப்ரமோ தைவ்யோ பிஷக்

ஸ்ரீ ருத்திரம். 'தேவலோகத்திலுள்ள முதன்மையான வைத்தியன்.'

भिषक्तमं त्वा भिषजां शृणोमि (ரிக்வேதபிராமணம்)


பிஷக்தமம் த்வா பிஷஜாம் ச்ருணோமி

பாட்னு விமான நிலையத்தில்



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும், அமெரிக்கத் தொழிலதிபரும்

பாட்ருவில்



தானியக்களஞ்சியம்

ரிக்வேத பிராமணம். ‘மருத்துவர்களுள் உன்னைச் சிறந்த மருத்துவனாக அறிகிறேன்’

> सौरमण्डलमध्यस्थं साम्बं संसारभेषजं ।
> नीलग्रीवं विरूपाक्षं नमामि शिवमव्ययम् ॥

ஸௌரமண்டல மத்யஸ்தம் ஸாம்பம் ஸம்ஸாரபேஷஜம் |
நீலக்ரீவம் விருபாக்ஷம் நமாமி சிவமவ்யயம் ||

சூரியமண்டலத்தின் நடுவில் கருத்த கழுத்தையுடையவனும், அழிவற்றவனும். மாறு கண்ணுடையவனும் அம்பிகையோடு கூடியவனும், ஸம்ஸாரப் பிணிக்கு மருந்துமான சிவனை வணங்குகிறேன்.

அவனை உயிர்நோய் உடல்நோய்தீர்க்கும் பவரோக (உடற்கரைக்கும்) வைத்தியநாதனாகக் கண்டு நம் பேரியோர் அவனை வாழ்த்துகிறார்கள்.

குமரகுருபரசுவாமிகள் வாக்கில்

தீராத நோய் பிறவி நோய். அது முற்றும் தவிர்க்க முடியாத பையுள் நோய். ஊழிப் பெரும்பிணி. கருவாய் மன்னும். முற்றும் அதனை மாற்றி மகிழும் வண்ணம் அருள் செய்கின்றான். தேவர்க்கும், மனிதர்க்கும் ஒத்த பெரும் பிணி இது. பிணிதீர்க்கும் பிரானாக வேளூரில் எழுந்தருளியிருக்கிறான். அவனே வைத்தியன். நாதன். தீராவினை தீர்க்கும் வள்ளல். பிணி தீர்க்கும் முறை ?. அவனுடைய திருமுன்னர் அள்ளியிடும் வெண்சாந்து (திருநீறு), மண்ணுருண்டை; சித்தாமிர்தத் தடத்துறையும் தீர்த்தம். திருநீறு மேல்பூச்சுக்கு திருச்சாந்துருண்டை உள் ஏழு தீர்த்தம் - அகத்துக்கும் புறத்துக்கும்.

பாட்ளு

பாடலிபுத்திரம்

பாட்ளு என்பது பாடலிபுத்திரம் என்ற சரித்திரப் பிரசித்திபெற்ற பழைய நகரம். இங்கு ஆண்ட சந்திர குப்தன் சரித்திரப் புகழ்பெற்றவன். இந்தியச் சரித்திரத்தில் முக்கிய பங்குகொண்டவன். அவன் ஆட்சிக் காலத்தில் (300 கி மு.) செலிக்கஸ் நிகேதர் என்ற கிரேக்க அரசனின் தூதுவனாக மேகஸ்தனிஸ், இங்கு வந்திருக்கிறான். அந்தக் கிரேக்க அரசனின் மகளைச் சந்திரகுப்தனுக்குத் திருமணம் செய்துவைத்து கிரீஸ் தேசமும் இந்தியாவும் உறவாடி நின்றன. மேகஸ்தனிஸ் பெரிய அறிஞன். புகழ்பெற்ற சரித்திர ஆசிரியர்களில் அவனும் ஒருவன். அவன் குறிப்புக்கள் கிரேக்க இந்திய நாடுகளின் சரித்திரம் எழுதப் பெரும் உதவியாக இருக்கின்றன.

அவன் மொழியில் சந்திரகுப்தன் - Sandracottas என்றும் பாடலிபுரத்திரம்-Palibothra என்றும் வழங்கப் பட்டிருக்கின்றன. அத்தோடு பாடலிபுத்திரத்தைச் சுற்றி ஒருபெரும் அகழி இருந்ததாகவும், 15ஸ்டேடியா அகலம் - 30 ஸ்டேடியா ஆழமானதாக அது இருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. கோட்டை மதிலில் 570 கோபுர நிலைகள் வேலை செய்யப்பட்டிருந்தன. 64 வாசல்கள் அதற்குண்டு. அதன் சுற்றளவு 190 ஸ்டேடியா. அதாவது 24 மைல்.

மேலே சொல்லப்பட்டிருக்கும் பாடலிபுத்திரம் (பழய நகரம்) இப்பொழுதுள்ள பாட்ளுவின் அருகில் இருக்கிறது.

நாலந்தா சர்வகலாசாலை இருந்த இடம் இங்கிருந்து 10, 12 கல் தொலைவில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

குசுமபுரம்

வாயு புராணத்தால் இங்கு அஜாத சத்ரு ஆண்டதாகவும் அக்காலத்தில் இந்நகரம் குசுமபுரம் என்று பெயர் பெற்று விளங்கியதாகவும் தெரிகிறது. கௌதம புத்தர் காலத்தவனாக இங்கு ஆண்ட அரசன் அஜாத சத்ருவின் பேரன் உதயேஸ்வரன். கி. மு. 543ல் இறந்தான். Huien Tsiang என்னும் சீனயாத்ரிகனும் இங்கு வந்திருக்கிறான். அவன் குறிப்புக்களும் சரித்திர ஆசிரியர்களுக்குப் பெரும் பயன் அளிக்கின்றன.

அஜீமாபாட்

பிறகு ஔரங்கசீப்பின் மகன் ஷாஅஜீம் (Azim) இங்கு அரசப் பிரதிநிதியாக ஆண்டிருக்கிறான். அவன் காலத்தில் இந்தப் பெருநகரம் அஜீமாபாட் (Azimabad) என்று அவன் பெயரால் வழங்கப்பட்டது. அவன் இறந்த பிறகு அவனுக்கு இங்கு சமாதி கட்டப்பட்டிருக்கிறது. அது முகம்மதிய மசூதியாக விளங்கிவருகிறது. அங்கு இன்றும் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் சென்று வழி படுவதாகச் சொல்லப்படுகிறது. இது மிகப் பழைய கட்டிடம். இன்றுமிருக்கிறது. மகமம்மதிய மாதம் Zikandல் விசேஷமதிகம். கரபாலாவின் அருகில் பெருங் குளம் ஒன்றிருக்கிறது. அதில் முகரப் பெருநாளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து தீர்த்தமாடுவர்.

ஹரமந்திரம்

சீக்கியர்களுக்கும் இது ஒரு பெரிய சிறந்த க்ஷேத்திரமாகும். அவர்களுடைய கடைசி மதகுரு சரித்திரப் புகழ் பெற்ற குருகோவிந்த சிங்கின் அவதார ஸ்தலம். அந்த இடத்தில் இப்போழுது ஹரமந்திரம் என்ற கோவில் கட்டப்பட்டிருக்கிறது.

கங்கை

இவ்வளவு சிறப்பு வாய்ந்த பெரு நகரத்தைச் சுற்றிப் பார்த்தோம். நகரத்தின் வட எல்லையாக கங்கைப் பெருநதி ஓடுகிறது. இங்கு அகலமும் அதிகம். ஆழமும் அதிகம். நீராவிக் கப்பல்களும் சோல்லக்கூடியதாக இருக்கிறது. இரயில்வேயினர் கப்பல்கள் விடுகிருர்கள். வியாபாரப் பெருநகரம்.

பிகாகாட்

கங்கைக்குக் கரைகட்டி மக்கள் அதில் இறங்கிக் குளிப்பதற்கு வசதியாகப் பிகாகாட்டில் (Bhiga Ghat) அழகிய படித்துறையும் கட்டி வருகிருர்கள். இதன் அருகில் கண்டதி நதியும் சோனு நதியும், கங்கையில் சங்கமமாகின்றன. பெருவேள்ளக் காலத்தில் கங்கையைக் கரையிலிருந்து பார்ப்பதற்கே அச்சந் தருவதாக இருக்குமேன்று சோல்லுகிருர்கள்.

விவசாயம்

பீகாரில் கங்கை முதலிய பெருநதிகள் பாய்ந்து ஓடினுலும் அவை பாசனத்திற்குப் பயன்படுவதாக இல்லே. நவீன சாதனங்களேக்கோண்டு இங்கு இப்போழுது விவசாய அபிவிருத்திகள் சேய்துவருகிருர்கள்.

ஆனுல் இரும்பு, நிலக்கரி போன்ற சுரங்கப் பொருள்கள் ஏராளமாக இந்த இராஜ்யத்தில் கிடைப்பதால் விவசாயத்தில் மக்களுக்கு அதிக நாட்டமிருப்பதற்கில்லை என்றும் சொல்லப்படுகிறது.

தான்யக்களஞ்சியம்

இங்கு ஆங்கிலேயர் வருமுன் பெரு நதிகளில் மழைக்கால வெள்ளப்பெருக்கு வருங்காலங்களில் அவற்ருல் சேதமும், ஆற்றுப் பகுதிக்கு அப்பால் உள்ள பிரதேசங்களில் பெரும்பாலும் வறள் பாழாகவும் அடிக்கடி நேர்ந்து வந்திருக்கிறது. அதனுல் மக்கள் உணவுப் பஞ்சத்தால் அல்லலுற்ருர்கள். ஆங்கிலேயர் இதைப்பிடித்ததும் பஞ்சகாலத்தில் உதவியாக இருக்க பெரிய தான்யக் களஞ்சியம் (குதிர்) ஒன்று சேங்கல்லால் கட்டி யிருக்கிருர்கள். மேலே தான்யம் கோட்ட வாயும் கீழே அடிவாரத்தில் நான்கு புறத்திலும் திறந்து தான்யம் எடுக்க வாயில்களும் அமைத்துக் கிடைமுழுவட்டமும், நிலை அரை வட்டமுமாக (Dome) கட்டப்பட்டிருக்கிறது. 20-7-1784-ல் தோடங்கிய இக்கட்டிடம் 20-1-1786-ல் முடிவடைந்திருக்கிறது. படைப் பிரிவைச்சேர்ந்த (எஞ்சினீயர்களின்) கட்டிடநூல் வல்லாரின் சாதனை. இந்தப் புராதனச் சின்னம் இப்போழுது பயன்படவில்லை. ஆனுலும் அதை அப்படியே வைத்துக் காத்து வருகிருர்கள் நமது பாரத அரசாங்கத்தினர். இந்தப் பெரிய கட்டிடத்தைப் பழுதுபார்த்துக் காக்க சாரம் கட்டிவிடப் பட்டிருக்கிறது. வேலைகள் தோடங்கி இருக்கிற நிலை கண்டு பேருமைகோண்டோம்.

கண்காட்சிசாலை

அடுத்து அந்நகரக் கண்காட்சி சாலை சிறப்பானது, அது சமீப காலத்தில் ஏற்பட்டதுதான். ஆனாலும் அங்கே பழைய புதைபொருள்களும், பழங்கால மக்கள் நாகரிகத்தின் சின்னமாக உள்ளவைகளும் பல இருக்கின்றன. நாகரிகமில்லாத மக்கள் - பழங்காலக் குடிமக்கள் என்று சொல்லுகிறோமே,அவர்களைப்போல் உருவங்கள், அவர்கள் வசிக்கும் கட்டிடங்கள் குடிசைகள், அவர்கள் நடன வகைகள் தெரிய நிற்கும் கோலங்கள், நடை உடைகள் முதலியன தெரிய உருவ அமைப்புக்கள் செய்து வைக்கப் பட்டிருக்கின்றன. அவர்களுடைய கைவேலைத் திறன்கள் நாம் பார்த்து மகிழ்ந்து பெருமைப் படக்கூடியனவாக இருக்கின்றன. ஜாவாவில் உள்ள நரசிம்ம மூர்த்தி, சீன திபேத்திய பழங்கால நாகரிகச் சின்னங்கள் அவர்கள் நாட்டுப் பழங்கால சித்திர வேலைப்பாடுகள் முதலிய பலவும் சேகரம் செய்துவைக்கப்பட்டிருக்கின்றன.

எல்லாவற்றையும் விடப் பழைமையானது அசன் ஸாலில் (Asansol) இரயில்வே இலாகாவினர் நிலக்கரி தோண்டி எடுக்கும்போழுது கண்டு எடுத்த கல்லான மரம் (Fosilitised-tree) சுமார் 15 கோடி வருஷங்களானது அங்கிருப்பது தான். உத்தேசம் 30, 40 அடி நீளமிருக்க லாம். இப்படியே அறிவு பெருக்கும் பலபொருள்களும், நம் பழங்கால நாகரிகத்தின் பெருமைகளை எடுத்துக் கூறும் சின்னங்களும் அங்கே காணப்படுவதையும் கண்டோம்.

அந்தப் பெருநகரில் நமது தமிழ் நாட்டுச் சகோ தரர்கள் பலரும் இருக்கிறார்கள். சிறந்த தமிழ் நாட்டு

உணவு விடுதிகூட இருக்கிறது. அங்நகரப் பிரயாணிகள் விடுதியில் (Travellers' Bangalow) தங்கியிருந்துவிட்டு கட்மண்டுவுக்குப் பிரயாணம் ஆனோம்.

ஏனைய ஜோதிர்லிங்க ஸ்தலங்கள்

சோமநாதம் :- சௌராஷ்டிரத்தில் உள்ளது. பம்பாய் - அகமதாபாத் - வீராம்கான் - துவாரகை வழியாக வீராவல் அங்கிருந்து மூன்றுகல் தொலைவில் கடற்கரையில் உள்ளது. பிரபாஷ் பட்டான் (பட்டணம்) என்பது ஊர்ப்பெயர். சுவாமிசோமநாதர்.

சந்திரன் தன்னுடைய 27 மனைவியருள் ரோஹிணியிடம் மட்டும் தங்கியிருந்தான். அவளிடம் அவனுக்குக் காதல் அதிகம். இது மற்றையோர்க்கு மனவருத்தத்தை உண்டாக்கியது. அவர்கள் சந்திரனுடைய மாமன் தட்சப்பிரஜாபதியிடம் சென்று முறையிட்டுக் கோண்டார்கள். கோபம்கோண்ட தட்சன் சந்திரனுக்கு க்ஷய ரோகம் உண்டாகுமாறு சாபமிட்டான். சந்திரன் வருந்தினுன். அதற்கு மாற்றுத் தேட சில வழிபாட்டை மேற்கோண்டான். பிரபாஷ் பட்டணத்துக்கு வந்து சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டான். அவனுக்கு ஜோதி தரிசனம் காட்டி மாதத்தில் பாதிநாள் வளர்ச்சியும், பாதிநாள் தேய்வுமாக இருந்துவர அருள்பாலித்தான் இறைவன்.

கிருஷ்ணுவதார முடிவில் 'கிருஷ்ணன் இங்கே சிவ யோக சமாதியில் அமர்ந்தான். ஜோதி தரிசனம் கண்டு அதனுட் கலந்து முத்தியின்பத்துள் திளைத்து நிற்கிருன். அவனுடைய வம்சத்தினரான யாதவர்கள் தங்களில்

ஒருவரோடோருவர் அடித்துக்கோண்டு அழிந்ததும் இங்குத்தான். சரஸ்வதி நதி இந்நகர்க்கருகில் கடலிற் சங்கமமாகிறது. வழிபட்டோர் சகல ரோகங்களின்றும் விடுபடுவர்.

மல்லிகார்ஜுனம்

ஆந்திரத்திலுள்ளது. கர்நூல் ஜில்லா, ஆத்மகூர் தாலூகாவில் அமைந்திருக்கிறது. கிருஷ்ணாநதி தீரத்தைச் சேர்ந்தது. இப்போழுது இந்த ஆலயத்தை ஆந்திரப் பிரதேச அரசாங்கத்தார் செப்பனிட்டு நல்ல பாதையும் அமைத்துள்ளார்கள். அதற்கு முன்பு மக்கள் மிகுதியாகச் சிவராத்திரி நாட்களில் மட்டும் மிகுந்த துன்பத்தோடு சென்று வழிபட்டு வருவார்கள். அப்போழுது இது ஹைதராபாத் சமஸ்தானத்துக்குட்பட்டதாக இருந்தது. சிவராத்திரி, சித்திரை மாதம். ஐப்பசி மாதம் வழிபாடு விசேஷம். காடும், மலையுமாக உள்ள பகுதியாதலால், வேடர்கள் அதிகம்.

புராணம்

சிவகுமாரர்களான கணபதிக்கும், சுப்ரமண்யத்துக்கும் யார் முதலில் திருமணம் முடித்துக்கோள்வதேன்பதில் விவாதம் ஏற்பட்டது. உலகத்தை முதலிற் சுற்றி வருபவர்கள் முதலில் மணம் முடித்துக்கோள்ளலாம் என்று முடிவாயிற்று. சுப்பிரமணியர் மயில்மீதேறி உலகைச் சுற்றலானார். கணபதி, உலக காரணனான சிவபெருமானையும் பார்வதியையுமே சுற்றிவந்து வணங்கி நின்றார். திருமணமாயிற்று. குழந்தையும் பிறந்தது. நாரதர்மூலம் வழியிலேயே இச்சேய்தி யறிந்த சுப்பிரமணியர் இங்கு

ஸ்ரீ சைலத்தில்வந்து தங்கிஞர். தேவர்கள் வேண்டியும் அவர் கயிலே திரும்புவதாக இல்லே. அப்பனும் அம்மையும் எழுந்தருளியதைக்கண்ட சுப்ரமண்யர் அங்கிருந்தகன்று 3 யோசனை தோலேவுள்ள கிரவுஞ்சகிரி சென்றமர்ந்தார். பெருமானும் பெருமாட்டியும் ஜோதிவடிவில் இலிங்கத் திரு மேனியாக எழுந்தருளிஞர். அம்பிகை மல்லிகா. பெருமான் அர்ஜுனன். இரண்டும் சேர்ந்த திருவுரு மல்லிகார்ஜுனர் ஆயிற்று. தலம் மல்லிகார்ஜுனம்.

மஹாகாளம்

இது உஜ்ஜயினியில் இருக்கிறது. இது ஒரு பெரிய ரயில்வே ஸ்டேஷன். விக்ரமாதித்தன் ஆண்ட இடம். பெருமான் மஹாகாளர் கோவில் உள்ள இடம் அவந்திபுரி. பிராமணன் ஒருவன் அவந்திபுரியில் தங்கிச் சிவவழிபாடு செய்துவந்தான். அவனுடைய புதல்வர் நால்வரும் அவ்வாறே பூசைசெய்தனர். தூஷன் என்னும் அசுரன் அவர்களுடைய பூசையை அழித்துத் துன்பம் உண்டாக்க நினைத்தான். பெரும் சேனையுடன் வந்து துன்பம் தந்தான். கலங்கவில்லே ; பூசையையும் கைவிடவில்லே. பெருமான் மஹாகாளராக எழுந்தருளிவந்து அசுரனைப் படையோடும் அழித்தார். அந்தணர்க்கு ஜோதி தரிசனக்காட்சி நல்கி ஆட்கோண்டார்.

ஒங்காரேஸ்வரம்

உஜ்ஜயினியிலிருந்து 97 கல் தோலேவில் உள்ளது. ஒங்காரேஸ்வரா ரோட் என்ற ஸ்டேஷனிலிருந்து 7 கல் தோலேவில் ஆலயம் உள்ளது. மோர்டக்கா ஸ்டேஷனி லிருந்து 14 கல் தோலேவு. மோர்டக்காவிலிருந்து பஸ், டாக்ஸி வசதி உண்டு.

தருமசாலைகள் இருக்கின்றன. நருமதை நதியைத் தாண்டிச் செல்லவேண்டும், இங்குக் காவேரி என்னும் பிரிவில் கபில கங்காநதி வந்து கலக்கிறது. நருமதா பாணம் இங்கு எடுக்கிறார்கள். சுவாமி அமரேஸ்வரர்; மமலேஸ்வரர்; ஓங்கார சொருபமாக எந்திர உருவில் அமைந்திருக்கிறார். பிருத்வி ரூபம். மேரு, தவசியர்களும் ஞானியர்களும் தன்னிடம் தங்கித் தவம் பெருக உதவும் பெருமை உடையது. அக்காலத்தில் விந்தியம் எல்லாச் சிறப்புக்களையும் உடையதாயிருந்தும், ஞானவான்களுடைய சேர்க்கை இல்லாதிருந்தது. நாரதர் இச்செய்திகூறி, விந்தியத்தின் குறைபாட்டை எடுத்துக் காட்டினார். வருந்தியது - வழிகேட்டது விந்தியம். நாரதர் உபதேசப்படிச் சிவபெருமானை ஓங்காரவடிவில் எந்திரம் அமைத்து வழிபட்டது. பெருமான் ஜோதிவடிவில் எழுந்தருளி அருள் பாலித்தார். இன்றும் பெருமான் இஷ்டசித்தி வழங்கி வருகிறார்.

பீம்சங்கரம்

டாகினி பீம்சங்கரம் என்று வழங்கப்படுகிறது. பூனா - நாசிக் இரயில் பாதையில், மஞ்சா ஸ்டேஷனில் இறங்கி 3 கல் தொலைவு செல்ல வேண்டும். வாகன வசதி கிடைக்காது. மலையும் காடும் அடர்ந்த பகுதி. ஊர் சிறியது. கிடைக்கும் சில வசதிகளைக்கொண்டே தங்க வேண்டும். பீமாநதி உற்பத்தி ஸ்தானம்.

பீமன் என்ற அசுரன் தேவர்களுக்குத் துன்பம் தந்து வந்தான். காமருபதேச மன்னனையும் துன்புறுத்திச் சிறையிலடைத்தான். மன்னன் சிறையிலிருந்துகொண்டே சிவபூசை செய்தான். அசுரன் அரசனைக் கொல்லப்

படையுடன் வந்தான். பெருமான் தோன்றி அசுரனைப் படையோடும் அழித்ததனுல் பீமசங்கரன், பீமேஸ்வரன் என்ற திருநாமத்தோடு அருள் வழங்குகிருர். அரசன் ஜோதி தரிசனம் கண்டு திருவடி சேர்ந்தான்.

த்ரயம்பகம்

நாசிக் ரோடிலிருந்து 18 கல் தொலைவில் உள்ளது. எல்லா வசதிகளும் அமையப்பெற்ற ஊர். கௌதம முனிவரின் தவத்துக்கிரங்கிப் பெருமான் ஜோதிசொருப மாகத் தரிசனம் கொடுத்து ஆண்டுகொண்டார். அந்த ஜோதியே இலிங்க உருவில் த்ரயம்பகேஸ்வரனுக இன்று அருள் பெருக்கி வருகின்றது.

நாகேசம்

தாருகாவனம். பம்பாய்-பேட்துவாரகை வழியாக வந்து சேரவேண்டும். ஊர்ப்பெயர் சுதாமாபுரி. சொண்டி ஸ்டேஷனிலிருந்தும் செல்லலாம். 14 கல் தொலைவு. தாருகாவனத்தில் சிறைப்பட்ட ஒரு வைசியனுடைய தவத்துக்கு மகிழ்ந்து பெருமான் அருள் வழங்கிய இடம். ஜோதிவடிவினன். நாகநாதன், நாகேஸ்வரன் என்ற திருநாமங்களோடு எழுந்தருளியுள்ளான்.

குஷ்மேசம்

ஹைதராபாத் - மன்மாட் - அவுரங்காபாட் வந்து இறங்கவேண்டும். அங்கிருந்து விருடு என்னும் கிரா மத்தைப் போய்ச்சேர்தல்வேண்டும். சுற்றிலும் காடு. மிகச் சிறிய கிராமம், தங்கத் தனியிடம் கிடைக்காது.

அவ்வூரார்கள் ஆதரவில் தங்கவேண்டும். கோவிலும் சிறியதே. ஒருவர்தான் உள்ளே தங்கலாம். இந்தூர் மஹாராணி அகல்யாபாய் திருப்பணி.

தேவபர்வதத்தின் அருகில் வசித்துவந்த சுதர்மன் என்னும் பிராமணன் சிவபக்தன். மனைவி சுதேகாவுக்குக் குழந்தை இல்லை. அவள் வருந்தித் தன் கணவனுக்குக் குஷ்மா என்னும் பெண்ணை இரண்டாவதாக மணமுடித்து வைத்தாள். அவளுக்கு ஒரு அழகிய ஆண் மகவு பிறந்தது. அதைக் கண்டதும் சுதேகாவுக்குப் பொருமை உண்டாகவே, அதனைக் கண்டதுண்டமாக வெட்டச்செய்து அருகிலுள்ள குளத்திற் போட்டுவிட்டாள். குஷ்மா சிவ பூசை செய்பவள். தன்னை மறந்து பூசையில் ஈடுபடுவாள். பெருமான் அருள்பாலித்து அப்பிள்ளையை உயிர்பெற்றெழச் செய்தார். பிள்ளையைக் கொன்று குளத்தில் போட்டதற்கு வருந்தவும் இல்லை; உயிர் பெற்றதற்கு மகிழவும் இல்லை. பெருமானிடம் செலுத்திய சிந்தை மீளாது தவம் பெருக்கி வந்தாள். பெருமான் அவளுக்கு ஜோதி தரிசனம் தந்தார். அவள் விருப்பப்படி இங்கு இலிங்க உருவில் எழுந்தருளி அருள் பாலித்து வருகிருர்.

கேதாரநாதம், காசி விசுவநாதம், வைத்யநாதம், இராமேசுவரம் இவைபற்றிய விளக்கங்கள் முன்னே தனியே யும் தொகுத்தும் வெளியிடப் பெற்றிருக்கின்றன.

பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்கள்

ஸௌராஷ்ட்ரே ஸோமநாதம் ச ஸ்ரீசைலே மல்லிகார்ஜுனம்
உஜ்ஜயின்யாம் மஹாகாளம் ஓங்காரம் அமலேச்வரம் ||

பரல்யாம் வைத்யநாதம் ச டாகின்யா பீமசங்கரம் |
ஸேதுபந்தே ச ராமேசம் நாகேசம் தாருகாவனே ||

வாராணஸ்யாம் து விச்வேசம் த்ர்யம்பகம் கௌதமீதடே |
ஹிமாலயே து கேதாரம் த்ருஷ்டேசம் ச சிவாலயே ||

ஏதானி ஜ்யோதிர்லிங்கானி ஸாயம் ப்ராத: படேந்நர: |
ஸப்த ஜன்ம க்ருதம் பாபம் ஸ்மரணேந விநச்யதி ||

सौराष्ट्रे सोमनाथं च श्रीशैले मल्लिकार्जुनम् ।
उज्जयिन्यां महाकालमोङ्कारममलेश्वरम् ॥ १

परल्यां वैद्यनाथं च डाकिन्यां भीमशङ्करम् ।
सेतुबन्धे च रामेशं नागेशं दारुकावने ॥ २

वाराणस्यां तु विश्वेशं त्र्यम्बकं गौतमीतटे ।
हिमालये तु केदारं धृष्टेशं च शिवालये ॥ ३

एतानि ज्योतिर्लिङ्गानि सायं प्रातः पठेन्नरः ।
सप्तजन्मकृतं पापं स्मरणेन विनश्यति ॥ ४

பசுபதித் திருவிருத்தம்

நாலாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

சாம்பலைப் பூசித் தரையிற் புரண்டுநின் தாள்பரவி
ஏம்பலிப் பார்கட் கிரங்குகண் டாயிருங் கங்கையென்னும்
காம்பலைக் கும்பணைத் தோளி கதிர்ப்பூண் வனமுலைமேல்
பாம்பலைக் குஞ்சடை யாயெம்மை யாளும் பசுபதியே. 1

உடம்பைத் தொலைவித் துன்பாதந் தலைவைத்த உத்தமர்கள்
இடும்பைப் படாம லிரங்குகண் டாயிரு ளோடச்செந்தீ
அடும்போத் தனைய அழன்மழு வாவழ லேயுமிழும்
படம்போத் தரவரை யாயெம்மை யாளும் பசுபதியே. 2

தாரித் திரந்த விராவடி யார்தடு மாற்றமென்னும்
மூரித் திரைப்பௌவ நீக்குகண் டாய்முன்னை நாளொருகால்
வேரித்தண் பூஞ்சுட ரைங்கணை வேள்வெந்து வீழச்செந்தீப்
பாரித்த கண்ணுடை யாயெம்மை யாளும் பசுபதியே. 3

ஒருவரைத் தஞ்சமென் றெண்ணா துன்பாத மிறைஞ்சுகின்றார்
அருவினைச் சுற்ற மகல்விகண் டாயண்ட மேயணவும்
பெருவரைக் குன்றம் பிளிறப் பிளந்துவெய்த் தோளியஞ்சப்
பருவரைத் தோலுரித் தாயெம்மை யாளும் பசுபதியே. 4

இடுக்கொன் றுமின்றி யெஞ்சாமை யுன்பாத மிறைஞ்சுகின்றார்க்
கடர்க்கின்ற நோயை விலக்குகண் டாயண்ட மேண்டிசையும்
சுடர்த்திங்கள் சூடிச் சுழல்கங்கை யோடுஞ் சுரும்புதுன்றிப்
படர்க்கொண்ட செஞ்சடை யாயெம்மை யாளும் பசுபதியே. 5

அடலேக் கடல்கழி வான்நின் னடியிணை யேயடைந்தார்
நடலேப் படாமை விலக்குகண் டாய்நறுங் கோன்றைதிங்கள்
சுடலேப் பொடிச்சுண்ண மாசுணஞ் சூளா மணிகிடந்து
படரச் சுடர்மகு டாவெம்மை யாளும் பசுபதியே. 6

துறவித் தொழிலே புரிந்துன சுரும்படி யேதொழுவார்
மறவித் தொழிலது மாற்றுகண் டாய்மதில் மூன்றுடைய
அறவைத் தொழில்புரிந் தந்தரத் தேசெல்லும்-மந்திரத்தேர்ப்
பறவைப் புரமெரித் தாயெம்மை யாளும் பசுபதியே. 7

சித்தத் துருகிச் சிவனெம் பிரானென்று சிந்தையுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின் ரூர்பிணி தீர்த்தருளாய்
மத்தத் தரக்க னிருபது தோளும் முடியுமெல்லாம்
பத்துற் றுறநெரித் தாயெம்மை யாளும் பசுபதியே. 8

—நாவரசர்.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சடையானே தழலாடீ தயங்கு மூவிலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய்அடியேன்நான்
உடையானே உனையல்லாது உறுதுணை மற்றறியேனே.

—திருவாசகம்.

திருச்சிற்றம்பலம்

பாட்ரு கண்காட்சிச்சாலையில்



ஜாவாவில் நரசிம்ஹமூர்த்தி

பாட்னு கண்காட்சிச்சாலையில்



15 கோடி வருஷமான மரம் (கல்லானது)

நேபால வரலாறு

நேபால நாட்டில் ஓரிரண்டு நாட்களே தங்கியிருந்த போதிலும் ஓரளவு அந்த நாட்டுப் பழக்கவழக்கங்கள், சரித்திரம், நாகரிகம் முதலியவற்றைப் புரிந்துகொண்டு வந்தோம். சரித்திரம் சிறப்பானதாக இருக்கிறது. ஆயினும் தொடர்ந்த சரித்திர நிகழ்ச்சிகள் ஆராய்ச்சிக்குப் பொருந்துவனவாகக் கிடைக்கக்கூடியதாயில்லையென்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

நேபாலச் சரித்திரத் தொடக்கம், நமக்குப் பூதத்துவ ஆராய்ச்சிக்குப் பொருத்தமாக அமைந்துள்ள செய்தியாகும். பூதத்துவ நிபுணர்கள் ஒத்துக்கொள்ளக்கூடிய பல அருஞ் செய்திகள் அதில் உள்ளன. ஒருகாலத்தில் நேபாலப் பிரதேசம் பெரும் ஏரியாகக் கிடந்ததாகவும், *பௌத்த அவதாரத்தின் முன் அவதாரமான (விஷ்ணுவோ அல்லது மஞ்ஜூஸ்வரியோ அல்லது கிரஹசண்டனோ) மூவரில் ஒருவர் தம்முடைய கைவாளால் மலைப்பகுதியில் இரண்டு வெட்டுக்கள் போட்டதாகவும், ஒன்று சோபார் என்று வழங்குகின்ற சௌபகல் மலைப்பிளவு, மற்றொன்று மகா பாரத மலைச்சிகரத்துக்கும் சம்பாதேவிக் குன்றுகளுக்கும் இடையில் உள்ள ஃபார்ப்பிங் (Pharping) மலைப்பிளவு ஆக இரண்டு பிளவுகள் ஏற்பட்டதாகவும், அவற்றின்

* விஷ்ணுவின் தசாவதாரங்களில் பௌத்தாவதாரம்.

வழியே ஏரிநீர் வடிந்து கங்கையிற் கலந்து நதிப் பெருக்கானதாகவும் சொல்லப்படுகிறது. இவ்விதம் இவ் விடத்தில் நீர்த்தேக்கம் ஒன்றிருந்து பூகம்ப விளைவால் மலைப்பிளவுகள் ஏற்பட்டுத் தண்ணீர் வடிந்திருக்கக் கூடுமென ஆராய்ச்சியாளர்கள் ஒத்துக்கொள்கிருர்கள்.

கலி பிறப்பதற்குமுன்னே நிகழ்ந்த பாரதப்போரில், நேபால அரசன் பஞ்சபாண்டவர்கள் பக்கத்தில் நின்று போரிட்டதாகவும், அதற்குமுன்னே இராமாயண காலத் திலும் இங்கு நல்ல அரசு இருந்ததாகவும் செய்திகள் சொல்லப்படுகின்றன. பாரதப்போர் நிகழச்சியை வர லாற்றில் கி. மு. 1500 to 1100-க்குள் இருக்கலாம் என்று குறிக்கிருர்கள். விராட நகரத்தில் பஞ்ச பாண்டவர் அஞ்ஞாதவாசம் செய்ததும் பிறவும் பாரதத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன. இது 'விராட் நகர்' என்று வழங்கப் படுகிறது. ஜனகன் இருந்து அரசுபுரிந்த நகரம் இன்று 'ஜனக்பூர்' என்று வழங்கப்படுகிறது. ஜானகி அவதாரம் செய்து இராமனுக்குத் திருமணம் ஆன பெருமையை யோட்டி இன்றும் இந்த நாட்டுப் பெண்களை ராணிகள் என்றே அழைக்கிருர்கள்.

புத்தருடைய தந்தை ஆண்ட கபிலவாஸ்துவும், புத்தர் அவதாரம் செய்த லும்மினித் தோட்டமும், சித்தியடைந்த குசிநாரா என்கிற காசியாவும், இந்நாட்டைச் சேர்ந்தவையே. கௌதமபுத்தர் திருவவதாரம் கி. மு. 563 இல். சித்தார்த்தர் ஞானோபதேசம் பெற்றுப் புத்தரான பின்னரும் இந்த நாட்டுக்கு எழுந்தருளி வந்திருக்கிருர். அப்பொழுது இங்குள்ள மக்கள் வேடர்களாக வாழ்ந்துவந்தனர். அவ ருடைய ஜீவகாருண்ய வழியில் திருந்தி பௌத்த சமயத் தைப் பின்பற்றினர். இருந்தாலும் பௌத்தர்களைச் சிலர்

வேறுத்தார்கள். பௌத்தர்கள் பெருமளவில் கோல்லப் பட்டனர். பௌத்தர்களுடைய அவல நிலையை அவர் சிஷ்யர் அனந்தர் கேள்விப்பட்டார்: தங்களுக்கு உதவி யாக அனந்தர் வரவேண்டுமென்று நேபாலத்தில் இருந்த பௌத்தர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அதன்படியே அவர்களைக் காண அனந்தரும் நேபாலம் சென்று கண்டு ஆறுதல் சொல்லிவந்தார். அவர் திரும்ப வந்ததும் அவருடைய பாதங்கள், கைகள் முதலிய உறுப்புக்கள் பனியினால் வேடித்துக் கருத்துப்போயிருந்தன. அதைக் கண்டு வருந்திய அவருடைய சகாக்களிடம் நேபால நாட்டு நிலையைச்சொல்லி வருந்தினார். அவர் சொன்னது: "என் உடம்பில் நீங்கள் காணும் புண்களைப் போன்றிருக்கிறது அந்நாட்டு மன்னன் மனநிலை. அவன் பௌத்த சமயத்தை வேறுக்கிறான்" என்றார். "அப்படியானால் அந்நாட்டில் உள்ளவர்கள் இப்படியா உடல் வேடித்து விரிந்து துன்பப் படுகிறார்கள்" என்று கேட்ட சகாக்களுக்கு "அந்நாட்டு மக்கள் மேலுக்கு சட்டையும் காலுக்குப் பாதரக்ஷையும் அணிந்திருக்கிறார்கள். அவ்விரண்டும் எனக்கு அணிய சக்கிய முனியின் உத்தரவில்லை அல்லவா" என்று சொல்லி வருந்தினார். அதைக்கேட்ட புத்தர் "குளிர் மிகு நாட்டில் அவ்விரண்டும் அணிந்துகோள்ளலாம்" என்று உத்தரவிட்டார். அதிலிருந்து குளிர்ப் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு உடல்நிலை காத்துக்கோள்ள முடிந்தது என்பது ஒரு வரலாறு.

சீனயாத்திரிகன் ஃபாசீயான் (Fa-h-sien) கி.மு 400ல் இந்நாட்டுக்கு வந்து புத்தர் அவதார ஸ்தலத்தைப் பார்வை யிட்டுப் புனிதநிலமான அப்பகுதியை வணங்கிக் குறிப் பேடுத்துச் சேன்றுள்ளான். நல்ல நாகரிகம் அக்காலத்தே

நிலவியதாகத் தெரிகின்றது. புத்தமதம் இங்குப் பரவுவதற்குமுன் பலப்பல சிறுசிறு கூட்டங்களாகத் தலைவர்கள் அமைத்துக்கொண்டு தம்முள் அடிக்கடி சண்டையிட்டுவந்தனர்.

ஜைனம்

ஜைனமத ஆசாரியர்களான சம்புதருயர், பத்ரபாகு(மகாவீரப்பிரிவின் கர்த்தா) இருவரும் பாடலிபுத்திரத்தில் இருந்தனர். கி. மு. 312 ல் சம்புதவிஜயர் இறந்தார். அந்த நாட்டில் பெரும்பஞ்சம் வந்தது. ஜைனர்கள் தென்னுட்டுக்கு ஓடினர். பஞ்சம் தெளிந்தபின் பத்ரபாகுவுகும் அவர் திருக்கூட்டமும் பாடலிபுத்திரம் திரும்பவந்தது. ஆனுல் ஜைனத் தலைமைப் பதவி வகிப்பதில் பத்ரபாகுவுக்கு வேறுப்பேற்பட்டு நேபாலத்திற்குச் சென்றுவிட்டார். அதற்குப்பின் கி. மு. 300 ல் தென்னுட்டிலிருந்து திரும்பிய ஜைனர்களுக்கும் மகதத்தில் தங்கிய ஜைனர்களுக்கும் சண்டை உண்டாயிற்று. தென்னுட்டிலிருந்து வந்தவர்கள் ' மகதநாட்டிலிருந்தவர்கள் ஒழுக்கம் கெட்டவர்கள். மதப்பிரஷ்டர்கள் ' என்று குற்றம் சாட்டினர். மத ஒழுக்கங்கள் குறித்து சண்டை உண்டாயிற்று. இரண்டு கட்சிகளிலும் அறிஞர்களாக உள்ளவர்கள் இதனை ஒழிக்க ஒரு மதக் கூட்டம் போட்டு மதக் கொள்கைகளை வரையறுக்க முயற்சித்தார்கள். ஆனுல் அந்த மதத்தின் 14 கொள்கைகளையும் எடுத்து விரிவாகச் சொல்லக்கூடியவர் யாரும் அக்கூட்டத்தில் இல்லை. பத்ரபாகுவிடம் சென்று கேட்டு வரவேண்டுமென்று முடிவுசெய்து சம்புதவிஜயரின் சிஷ்யர் ஸ்தூலபத்ரர் அனுப்பப்பட்டார். அவர் பத்ரபாகுவைக் கண்டு கேட்டுவந்தார். ஆனுல் அவற்றுள்

வெளியிடக்கூடியது 10 கொள்கைகள்தாம் என்று சொல்லி விட்டார். அதனுல் அவர்களுக்குள் சுவேதாம்பரர், திகம்பரர் என்று இருபிரிவுகள் ஏற்பட்டன. மேலே சொன்னவற்றுள் சுவேதாம்பரர் வலுத்துவிட்டார்கள். பத்ரபாகு நேபாலம் வந்ததிலிருந்து ஓரளவு ஜைனமும் இங்கு பரவலாயிற்று. சுவேதாம்பரர் வெள்ளை உடை உடுப்போர். திகம்பரர் நிர்வாணிகள்.

அசோகன் (பிரியதர்சினி) கி. மு. 250 இல் புத்தர் அவதாரம் செய்த ஸ்தலத்துக்கு வந்து பார்வையிட்டிருக்கிருன். அதைப்பற்றிய குறிப்பு ஒன்றும் இருக்கிறது. அசோகர் உபகுப்தனுடன் தன் பரிவாரங்கள் சூழ புத்த அவதார ஸ்தலத்தில் ஏராளமான நறுமணப் பொருள்களும், மலர்களும் இட்டு வணங்க எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். தோட்டத்தை நெருங்கியதும் உபகுப்தன் ஆவேசம் வந்த நிலையில் தனது வலது கையை நீட்டி, ‘ ஓ அரசனே ! இந்த இடத்தில் புண்ணிய ஆன்மா, தவசீலன், சக்கியமுனி அவதரித்தான். இங்கு அவன் நினைவாக ஒரு சின்னம் அமைப்பாயாக ’ என்று சொன்னுன். அப்படியே அசோக ஸ்தம்பங்களில் முதல் ஸ்தம்பம் இங்கு நிறுவப்பட்டது. அதனுடைய முடியில் குதிரை உருவம் அமைத்து வழிபட்டுக் கபில வாஸ்துவையும் தரிசித்துத் தன்னுடு திரும்பினுன். இந் நிலையில் மீண்டும் ஒருமுறை இங்கு வந்திருப்பதாகச் சரித்திரம் சொல்கிறது. அக்காலத்தில் நேபாலம் இவன் ஆட்சியிலே இருந்தது.

இப்பொழுது அந்த அசோக ஸ்தம்பத்தின்கீழ் ஓர் இந்துமத தேவியின் திருவுருவமும் விநாயகர் திருவுருவமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அத்தேவிக்கு ‘ ரும்மிந்தேவ்

அல்லது ருபங்தேகி பகவதி ' என்றுவழிபாடு செய்யப் படுகிறது. ஆகவே அவ்விடம் இந்துக்களுக்கும் பௌத்தர் களுக்கும் மிகப் புனித இடமாக விளங்கி வருகிறது.

ரும்மிங்தேயில் (லும்பினித் தோட்டம்) புத்தருடைய தாய் மாயாதேவி பிரசவத்துக்குமுன் குளித்தகுட்டை இருக் கிறது. அதன் கரையில் உள்ள அத்திமரத்தின் பழத்தை அவள் தின்றுளென்றும் சொல்லப்படுகிறது. இன்றும் நேவாஜாதிப் பெண்கள் தங்கள் வாழ்க்கையில் வைதவ்யம் அடையக்கூடாதென்பதற்கு அக்குட்டையில் குளித்து அவ்வத்திப் பழத்தைப் பயபக்தியோடு (மணமாவதற்கு முன்) உண்கிறுர்கள். அதற்கு நல்ல பலன் இருப்ப தாகவும் நம்பப்படுகிறது.

அசோகருடைய ஆட்சிக்குப்பிறகு இங்கே இந்திய ஆதிக்கம் தளர்ந்துவிட்டது. ஜைனமும் ஓரளவு பரவுவ தாயிற்று.

கி. பி. 4-வது நூற்ருண்டின் பிற்பகுதியில் ஆண்ட அரசன் விரசதேவர் ஆவான். இவ்வேந்தன் நல்ல பக்தி, வீரம், ஞானம், வள்ளன்மை, ஆத்மசுத்தம், திருக் கோவில் கட்டுவதில் ஆர்வம் செறிந்தவன். கல்வெட்டு ஆதாரங்கள் பல உள்ளன. கி. பி. 496 to 880 வரை லிசவி பரம்பரையினர் ஆண்டுவந்திருக்கிருர்கள்.

கி. பி. 496 to 524 வரை மானதேவன் * என்னும் அரசன் இந்நாட்டை ஆண்டான். இவன் விரசதேவனின் மகன். இளமையிலேயே பட்டத்துக்கு வந்துவிட்டபடியால், தாய் இராஜ்யவதி பிரதிநிதியாக இருந்து ஆண்டிருக்கிருள்.

---

* சங்குநாராயணர் கோவிலில் கல்வெட்டுச் சான்று இருக்கிறது.

இராஜ்யவதியின் புருஷன் இறந்ததும், சககமன ஏற்பாடு களைச் செய்யும்படி உத்தரவிட்டாள். குழந்தைப் பருவத் தினனுன ஒரே மகன் மானதேவன் வேண்டிக்கோண்டதற் கிணங்க உயிர் தரித்திருந்து பதவியும் ஏற்று ஆண்டு, பல சீர்திருத்தங்களும் செய்தனள். மானதேவன் வேள்ளை ஹூணருடைய உதவிகோண்டு குப்த பரம்பரையினரை எதிர்த்துப் போரிட்டு, பிறகு நேசஉரிமை கோண்டு, தனி நாணயமும் போட்டுவந்திருக்கிருன். தாய் இறந்ததும் அவள் நினைவாக 'லஜன்பத்' (Lajan - Pat) தில் விஷ்ணு ஆலயம் ஒன்று கட்டினுன்.

மானதேவன் பரம்பரையினர் நாட்டின் சுதந்திரத்தை விட்டுவிடாமல் வீரர்களாகவே ஆண்டனர். சங்கு நாராயணர் கோவிலில் இதைப்பற்றிய கல்வேட்டுக் குறிப் புக்கள் பல கிடைக்கின்றன. மானதேவன் காலத்தில் பாடலிபுத்திரத்திலிருந்து ஆண்டுக்கோரு யானை நன்கோடை பெற்றுவந்தான். இவனுடைய ஆட்சி கிழக்கில் கிரந்திகள் நாடு வரையிலும் - மேற்கில் கண்டகி நதி வரையிலும் பரவி யிருந்தது.

சிவதேவன் மதப்பித்துக் கோண்டவன். தன்னுடைய இராஜ்யத்தை உறவினர்களுக்குப் பிரித்துக் கோடுத்து விட்டுத் தான் தவவாழ்க்கை மேற்கோள்ள விரும்பினுன். குருவினிடம் உபதேசம் பேற்றுத் தவம்செய்து வந்தான். சுபாலம் பிளந்து அதிலிருந்து ஒரு ரத்தினம் வேடித்து வந்து விழுந்ததாகவும் அதனை யேடுத்துக் கோவிலில் காத்துவருவதாகவும் வழங்குவர்.

அம்சுவர்மன் (கி.பி.595 to 640) சிவதேவனின்மகளை மணந்தான். அவன் (சிவன்) காலத்தில் உஜ்ஜயினி சக்கிர வர்த்தி விக்ரமாதித்தனை நேபாலத்துக்கு அழைத்துவந்து

உபசரித்தான். இங்குவந்த விக்ரமாதித்தன், தான் வந்ததன் நினைவாக நாட்டுப் பொதுக் கடன்களைக் கொடுத்துத் தீர்த்த தாகவும், 'கடன் தீர்த்த சகாப்தம்' என்று அதனை இந் நாட்டு மக்கள் சொல்லிவருவதாகவும் தெரிகிறது.

அம்சுவர்மன் பிறகு (தக்கூரி பரம்பரைத் தொடக்கம்) தலை யெடுத்தான். எல்லா அரசர்களையும் வெற்றிகொண் டான். இவன் காலத்தில் கி. பி. 625இல் சீன யாத்திரிகன் யுவான் சுவாங் நேபாலம் வந்தான். யுவான் சுவாங்கி னுடைய குறிப்புகள் :- "நிப்போலு ராஜ்யம் (நி போ லோ Ni-Po-Lo நேபாலம்) நாலாயிரம் லி சுற்றளவுள்ளது. தலை நகரம் 200 லி சுற்றளவு உள்ளது. பனி படர் மலைச்சிகரங் களின் நடுவில் அது அமைந்திருக்கிறது. தொடர்ந்த மலைச் சிகரங்களும் பள்ளத்தாக்குகளும் அமைந்துள்ளன. தானி யங்கள் பயிரிடப்படுகின்றன. மண் வளமிகுந்தது. புஷ்பம், பழம் ஏராளமாகக் கிடைக்கின்றன. செம்பு, சடையெருமை, மிங்மிங் என்ற பறவை காணப்படுகின்றன. செப்பு நாணயங்கள் வழங்கப்படுகின்றன. குளிர் மிகுந்த பகுதி. மக்கள் பொய் பேசுபவர்களாகவும், இரண்டகம் செய்வோராகவும் இருக்கிறார்கள். உழைப்பாளிகள், முரட்டு சுபாவம் உள்ளவர்கள், உண்மை, நேர்மை, படிப்பு, அறிவு அவர்களிடம் ஏறவில்லை. ஆனாலும் கைத்திறன், சிற்பத்திலும் சித்திரத்திலும் மிகத் தேர்ந்தவர்கள். விகார மான உருவத் தோற்றம். அவர்களுள்ளும் சிலர் ஞானம் பக்தி உடையோராய் உள்ளனர். தரும விரோதிகளாகவும் சிலர் இருக்கிறார்கள். பௌத்த விகாரங்களும் இந்துக் கோயில்களும் ஒன்றையொன்று அடுத்திருக்கின்றன. 2000க்கு மேற்பட்ட சமய உணர்வுடையவர்கள் அங்கிருப் பவராகக் கணக்கிடப்படுகின்றது. பிராமணர்களும், மதச் சார்பற்றவர்களும் எவ்வளவென்று கணக்கிட முடிய

வில்லை. அரசன் க்ஷத்திரியன் (T'Sa-Ti-Li). லிசவி (Li-Ch'e - Po) பரம்பரையைச் சேர்ந்தவன். உயர் குணமுடையோனுகவும், தெளிந்த அறிவினனுகவும், பௌத்த மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உடையோனுகவும் உள்ளான். அம்சுவர்மன் (Yang-Chou-Fa-Mo) என்ற பெயருடையோன். நியாயமும் விவேகமும் உடையவன். அவனே சில தோத்திரங்கள் பாடியிருக்கிருன். பண்டிதர் களையும் நல்லவர்களையும் ஆதரித்து வருகிருன். அவன் புகழ் எங்கும் பரவியிருக்கிறது. அவன் தலைநகர்க் கருகில் ஒரு சிறு குட்டை இருக்கிறது. அதன் மேற்புறத்தில் தீ வைத்தால் அது பற்றி யெரிகிறது. ஏதாவதொரு பொருளை அதில் போட்டாலும் தீப்பற்றி யெரிவதோடு வெளிச்ச மும் கொடுக்கிறது.'' இந்த நெருப்பு வரும்செய்தி பின்னர் இந்நாட்டுக்குவந்த - லி - யி - பியோ. வாங் - குவாங் - சீ இருவரும் குறிப்பிடுகிருர்கள். (A-Ki-Po-Li) அகிபோலி என்று குட்டைக்குப் பெயர் வழங்கப்படுகிறது. இப்பொழுது அது அங்கேதஹா (Ankedaha) என்றும் வழங்கப் படுகிறது.

இவ்வம்சுவர்மன் காலத்தில் திபேத்திய அரசன் ஸ்ராங்சான் கம்போ (Srong-san-Gambo) இந்த நாட்டுக்கு வந்திருக்கிருன். அவன் அம்சுவர்மனின் மகளுடைய அழகைக் கேள்விப்பட்டு இங்குவந்து சிறையெடுத்துச் சென்ருன். இது நடந்தது கி. பி. 639-ல் அவள் பெயர் பிரிப்ட் சன் (Bri-Btsun). திபேத்திய அரசன் பிறகு (Tai-Tsung) சீன அரசனையும் வேற்றிகொண்டு அவன் மகள் வேன்சேங் (Wen-Cheng)கை கி. பி. 641 இல் மணந்துகோண்டான். பிரிப்ட்சன், வேங்சேங் இந்த இரு ராணிகளுடைய உருவச்சிலைகள் மிகுந்த வேலைப்பாடுள்ள

வைகளாக அங்நாட்டில் மதிக்கப்படுகின்றன. அம்சுவர்மனின் மகளுக்கும் சீன அரசிக்கும் முறையே வெள்ளைத்தாரா, பச்சைத்தாரா என்று பெயர். நேபால சந்தனக் கட்டையில் பிரிப்ட்சனின் உருவம் செய்யப்பட்டது. பிரிப்ட்சன் திபேத்திற்குச் சென்றபிறகு, இந்திய நேபால சிற்பக் கைத்திறன் வேலைகள் அங்குக் கையாளப்பட்டு அது நிலைத்தது. அதனோடு ஓரளவு திபேத்திய ஆதிக்கம் நேபாலத்தில் பரவியது.

இந்த அம்சுவர்மன் சிவதேவன் பிரித்துவைத்த நாட்டை ஒன்றுபடுத்தி ஆண்டுவந்தான். நேரே அரச மரபில் இவன் வந்தவனில்லையாதலால் மனைவியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவனாகவே இருந்தான்.

நரேந்திரதேவனுக்குப் பின்வந்த சிவதேவன் II மகத நாட்டுச் சக்கிரவர்த்தி ஆதித்தசேனனின் பேத்தியை மணந்தான்.

பிறகு சரித்திரத் தொடர்பு இல்லை. நரேந்திரன் என்பவன் காலத்தில் சைனயாத்ரிகர்கள் (Li-1-piao) லியிபியோ, வாங்-ஹ்வான்-சே (Wange - Hiuen - tse) வந்திருக்கிறார்கள். அவர்களுள் பின்னவன் பல குறிப்புக்கள் எடுத்திருந்தான். அவை இப்போது கிடைக்கவில்லை.

ஜெயபிதா என்னும் காஷ்மீரிய அரசன் நேபாலத்தின் மீது படையெடுத்தான் அரமுடி என்னும் நேபால அரசன் அவனை எதிர்த்துப் போரிட்டு ஜெயபிதாவைச் சிறை பிடித்துக் கருப்புக்கண்டகி ஆற்றங்கரையில் இருந்த கோபுரத்தில் சிறை வைத்தான். ஜெயபிதாவின் மந்திரிகளின் ஒருவன் தன் அரசனைத் தேடிவந்தான். சிறைக்

கோபுரத்திலிருந்து காஷ்மீரிப் பாட்டுக்கள் கேட்டன. தன் உயிரைக் கொடுத்துத் தன் அரசனை மீட்டுவிட்டான்

ராகவதேவன் என்பவன் ஆட்சியில் நேபாலம் சுதந்திரமடைந்தது. திபேத்திய அரசன் லாங்வர்மன் அந்நாட்டுக் குழப்பத்தில் கொல்லப்பட்டான். நேபாலம் சுதந்திர பிரகடனம் செய்தது. கி. பி. 723 இல் குணகாமா என்னும் அரசன் காலத்தில் கட்மண்டு நகரம் விரிவாக்கப்பட்டது. அதற்கு முன்னே அது ஒரு சிறு கிராமமே. ஜனப்பெருக்கமும் தொழில் வளமும் பெருகின. சரித்திர காலத்துக்குமுன் நாகரிகம், வளம் வாய்ந்த இப்பகுதிகளில் சுயம்புநாதம், பசுபதிநாதம் சிறந்திருந்தன. விஷ்ணுமதிக் கரையில் மஞ்சேஸ்வரி தேவியின் கைவாளைப்போன்ற அமைப்பில் கட்மண்டு நகரம் நிறுவப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கி, பி. 889 இல் நேபால சகாப்தத் தொடக்கம்.

கி. பி. 1097 இல் தென்கர்நாடகத்திலிருந்து நான்ய தேவன் இந்நாட்டைப்பிடித்து அப்போதிருந்த மல்ல அரசனை வெளியேற்றிவிட்டு நாடாண்டான். அதிலிருந்து நேவா பரம்பரையினர் ஆட்சி.

மல்ல ஆட்சி

காமருபத்திலிருந்து வந்தவர்கள் மல்லர்கள் (குசிநாரா அல்லது காசியப்பகுதி மல்லர்கள் அரசுத் தொடக்கம்) மல்லர் - என்பது வீரர்கள் எனப் பொருள்படும் லிசவி (க்ஷத்திரிய) பரம்பரைக்கு அடுத்தபடியாக அரசியல் சட்டம் வகுத்த மனு மல்லர்களை க்ஷத்திரியப் பிரிவில் குறிப்பிட்டுள்ளான். அயோத்தி - நேபாலத்து இடைப் பகுதியில் மல்லர்கள் வாழ்ந்தனர். காஞ்சிநகரிலிருந்து முதல் மல்ல

அரசஞன தருமதத்தன் இங்நாட்டுக்குவந்தான் என்று ஒரு குறிப்பு இருக்கிறது. அரிதேவமல்லன் கி. பி. 13-வது நூற்ருண்டிலும், அவனுக்குப்பின் அபயமல்லன், அவனுக்குப்பின் அவன் சகோதரர்கள் ஜெயதேவமல்லன், ஆனந்த மல்லன். இவ்விரு சகோதரர்கள் கட்மண்டு, பாட்டம் என்று இரண்டு துண்டாடிக்கோண்டு ஆண்டார்கள். ஆனந்த மல்லன் காலத்தில் பாட்கான் நகரம் உண்டாக்கப்பட்டது.

கி. பி. 1326 இல் திர்கவுட் நாட்டைச்சார்ந்த அரிசிங் தேவன் என்பவன் கியாஸுடின் துக்ளக்குக்குப் பயந்து கோண்டு இங்கேவந்து நாட்டைக் கைப்பற்றி அரசஞனன். அவனுடைய முன்ஞேஞன நான்ய தேவனுக்குப்பிறகு 227-வருஷங்கள் கழித்துக் கட்மண்டு, பாட்டன் இரு பிரதேசங்களேயும் பிடித்து ஆண்டான். துக்ளக் இறந்த பிறகு இங்கே தனது பிரதிநிதிகளே வைத்துவிட்டு அவன் தன் நாட்டுக்குத் திரும்பிஞன்.

கி. பி. 1384 இல் சீனதேச மன்னன் ஹாங் உ (Hang-wu) என்பவன் அப்போழுது இந்த நாட்டில் மன்னஞக இருந்த மதிசிங்கினிடம் இரண்டு தூதர்களே அனுப்பிஞன். சீன பாஷையில் மதிசிங்குக்கு (Ma-ta-na-lo-mo)என்று குறிக்கப்பெற்றிருக்கிறது. அப்போழுது சீனர்கள் நேபாலத்தில் ஆட்சி செலுத்தும் அரசர்கள் எல்லோரும் லாமாக்களாக இருந்து அரசு செலுத்தினர் என்ற நம்பிக்கை யோடு இருந்தார்கள். கி.பி. 1415இல் சியாமாசிங் என்பவன் (அப்பரம்பரையில் கடைசியானவன்) காலத்திலும் சீனத் தூதுவர்கள் வந்திருக்கிருர்கள். இவன் அரச பரம்பரையில் இழிந்தவஞக ஒதுக்கப்பட்டவன். எனினும் சீனச் சக்கர வர்த்தி தன் முத்திரை போதிந்த அத்தாட்சி மூலம் இவனே

அரசனுக அங்கீகரித்தபடியால் இங்நாட்டை ஆள முடிங் தது. அரிசிங்கின் பின்வந்தவர்கள் கி. பி. 1387 - 1418 வரை ஆண்டுவந்திருக்கிருர்களென்பதற்குச் சீன வரலாற் றிலும் சான்றுண்டு.

அந்தக்காலத்தில் ஜேயஸ்திதி மல்லன் என்பவன் கட்மண்டு பட்டன் பிரதேசத்தில் வல்லவனுக இருந்தான்: இவன் அரிசிங் மரபில் வந்த ஜகத்சிங்கினுடைய மகள் இராஜல்லதேவியை மணந்தான். கி. பி. 1380 - 1395 வரை அங்நாட்டை ஆண்டான். இவன் காலத்திலிருந்து தோடங்கி இவனுடைய மகன் ஜோதிர்மல்லன் காலத்தில் இந்தநாட்டில் பிராமண ஆதிக்கம் வலுக்கத் தோடங்கியது. ஜேயஸ்திதிக்கு 3 பிள்ளைகள்; மூன்ருமவனுன ஜோதிர்மல் லன் கி. பி. 1413-ல் பட்டமேற்ருன். மிக்க வல்லமை வாய்ந்தவன். பிராமணர் ஆதிக்கத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உடையோனுயினும், புத்த ஸ்தூபங்கள் பலவற்றையும் புனருத்தாரணம் சேய்தான். சுயம்புநாதம் திருத்தப் பட்டது. கி. பி. 1427 இல் இறந்தான். யட்சமல்லன் ஜோதிர் மல்லனின் மகன். அவன் வேற்றிவீரனுக இங் நாட்டை விரிவுபடுத்தி ஆண்டான். 53 வருஷம் ஆட்சி. கி. பி. 1480 இல் இறந்தான். இறக்கும்போது நாட்டைத் தன் மூன்று பிள்ளைகளுக்கும் ஒரு பேண்ணுக்குமாகப் பங்கிட்டுக் கோடுத்தான். இது அவர்களுடைய ஆட்சி வீழ்வதற்கு இடமளித்தது. அவர்களுக்குள் பல போர்கள் மூண்டன.

இதற்குப்பிறகு கூர்க்க (கோர்க்க) வம்சத்தினர் இங் நாட்டைக் கைப்பற்றிப் புதிய நிலேத்த வமிசத்தை உண்டு பண்ணினர். இந்தநிலேயில் கட்மண்டு பாட்டான், பட்கான்

என்ற மூன்றுபகுதிகளைப்பற்றித் தனித்தனி சரித்திரநிகழ்ச்சி கள் பற்றிச் சொல்லவேண்டியிருக்கிறது. மூத்த பிள்ளை இராயமல்லனுக்கு பட்கானும், இரண்டாவது ரணமல்ல னுக்கு பனேபாவும். மூன்ருவது ரத்னமல்லனுக்கு கட்மண்டு வும், பெண்ணுக்கு பாட்டானும் ஆகப் பிரித்துக் கொடுக்கப் பட்டது. பிறகு பாட்டானும் கட்மண்டுவும் ஒன்ருக இணைக்கப்பட்டன. அப்பொழுதெல்லாம் அரசனுக்கு ஆட்சி யில் மிகச் செல்வாக்குடையவர்கள் (12 தக்கூர்கள்) சபை கூடி உதவி செய்துவந்தார்கள். அந்தத் தக்கூர்களை விஷமிட்டுக் கொன்ருன் மூன்ருவது மகன் இரத்னமல்லன். வெளியிலுள்ள நாயக்கோட் தக்கூர்கள் அவனை யெதிர்த்துப் போரிட்டார்கள். சண்டைக்குக் காரணம் இராஜேசுவரி திருவுருவத்துக்கு இரத்னனுடைய அநுமதி இல்லாமல் மெழுகிட்டதுதான். கி. பி. 1491 இல் அவர்களை வென்று பசுபதிநாதர் நைவேதனத்துக்கு நாயக் கோட்டிலிருந்து புஷ்பங்களும் பழங்களும் மலைமலையாக எடுத்து வந்தான். அவன் காலத்தில் திபேத்தியர், பூட்டானியர் களின் தொல்லை இருந்தது. பிராமணர்களுக்கு நில நிவந்தங்கள் கொடுத்தான். அது முதல் இதற்குமுன் இந்த நாட்டில் ஆட்சிபுரிந்த பௌத்தமதம் செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. அவன் காலத்தில் இந்திய - நேபால வியாபாரம் செழித்து வளரத்தொடங்கியது. முகமதியரும் வியாபார நோக்கத்தோடு கட்மண்டுவுக்கு அநுமதிக்கப்பட்டனர். சமரச நோக்குடையவன் அவன்.

அவனுக்குப்பின்வந்தோர் யாரும் குறிப்பிடத்தக்கசெய லேதுவும் செய்யவில்லை. டில்லியில் இந்தியச் சக்ரவர்த்தி யாக இருந்த ஹுமாயூன் காலத்தில் இங்கிருந்த மகேந்திர மல்லன் என்பவன் டில்லி சக்ரவர்த்திக்கு வெள்ளை அன்னம்

ஒன்றையும், இன்னும்சில வேட்டை வல்லூறுகளையும் பரிசா கக்கொடுத்து, அவன் விருந்தினனாகத்தங்கியிருந்தான். தன் நாட்டில் வெள்ளி மோகராக்கள் வெளியிட அனுமதி பெற்று வந்தான். அவன் காலத்தில் நாணயத்தில் லாசாவிலுள்ள லாமாவின் அரண்மனைத் தோற்றம் அச்சிடப்பட்டிருந்தது. கட்மண்டுவில் தலேஜு கோவில் கட்டினான். கட்மண்டு வைப் பெரிதுபடுத்தி மாடிக்கட்டிடடங்கள் கட்ட அனுமதி தந்தான். அவனுடைய மகன் சதாசிவன் ஒரு பைத்தியம். தானொரு பெரிய அரசன்; எல்லா உரிமையும் தன்னாட்டில் தனக்குத்தான் உண்டு என்ற எண்ணம் கொண்டவன். அவன் குதிரை எந்த விளைநிலத்திலும் மேயலாம்; அதைத் தடை செய்ய யாருக்கும் உரிமை இல்லை. அந்நாட்டின் அழகான பெண்களனைவரும் தனக்கே உரிமையாக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டான். அச்செயல்கள் மக்க ளிடையே பரபரப்பையும் குழப்பத்தையும் விளைத்தன. அவனை நாட்டை விட்டே துரத்திவிட்டார்கள்.

அவனுக்குப்பின் கி. பி 1585 - 1614 வரை சிவசிங் என்பான் மன்னனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். இவனும் தக்கூர் பரம்பரையைச் சேர்ந்தவனே. கங்காராணி என்னும் இவன் மனைவி தன்னைவிட அறிவிலும் ஆற்றலிலும் சிறந் தவளென்ற செருக்கு உடையவள். ஆட்சியில் மத சம்பந்த மான நிர்வாகத்தை அவள் கவனிக்கும்படியாகச் செய்தான். அவள் காலத்தில் பசுபதி, சங்குநாராயண், சுயம்புநாத் கோவில்கள் புதுப்பிக்கப்பட்டன. அவள் இறக்கும் தறுவா யில் பசுபதிநாதர் ஆலயத்திலிருந்து காது செவிடுபடும்படி யான சத்தம் (இரைச்சல்) ஒன்று கேட்டதாகவும், அவள் அவ்விதம் ஆண்டவனுக்கு உகந்தவளாக இருந்தாள் என்றும் சொல்லப்படுகிறது.

இவன் காலத்தில் ஒரு குழப்பமேற்பட்டு கட்மண்டும் பட்டானும் இரண்டாக பிரிந்தன. சிவ சிங் சகோதரன் ஹரி கலகம்செய்தான். சிவ சிங் வண்ணார் வீட்டில் புகுந்து ஒளிந்திருந்தான். அவனுக்கு அடைக்கலம் தந்த வண்ணார் களுடைய சமுக அந்தஸ்தை உயர்த்தித் தந்தான். ஹரிஹரன் கி. பி. 1603ல் பட்டான் நகரத்தில் மன்னனாக முடிசூடிக்கொண்டான்.

சிவனுடைய மகன் லக்ஷ்மிநரசிம்மன் கட்மண்டு அரச னான். அவன் காலத்தில் நடந்த மச்சேந்திர ஜாத்ராவில், தேவ விருட்சம் தரிசனத்துக்கு மனித உருவில் வந்திருந் தது. தச்சன் ஒருவன் வந்திருந்தான். அவன் கண்ணில் விருட்சம் தென்பட, அவன் அதனைப் பிடித்துக் கொண் டான். பெரியகோவில் கட்டுவதற்கு முழுமரம் அளிப்ப தாக வாக்களித்ததன் பேரில் அதனை விட்டான். நாலா வது நாள் தேவ விருட்சம் ஒரு சால் மரத்தை அனுப்பி வைத்தது. அதனை வெட்டி அவன் காந்திபூரில் ஒரு கோவில் கட்டினான். 'மாதுர் சாத்தால்' என்று அதற்குப் பெயர். இப்போது பழைய தர்பார் சதுக்கத்தில் இடது கை மருங்கில் அது இருக்கிறது. இந்தக்கோவில் கும்பாபி ஷேகம் செய்விக்கப்படவில்லை. அப்படிப் புனிதப்படுத்தி னால் கோவில் இடிந்துபோய்விடுமென்று தேவவிருக்ஷம் சொல்லிவிட்டதாம்.


இவன் காலத்தில் பிரபலமாக இருந்த பிம மல்லன், (திபேத்திலும், நேபாலத்தில் கட்மண்டுவிலும் பெரிய வியாபாரம் செய்துவந்தவன்) அரச பரம்பரை உறவைச் சேர்ந்தவன். அரச பீடத்துக்குத் தனக்கு உரிமை உண்டு என்று சொல்லி வந்தான் என்ற செய்தி எட்டி யதும் அரசன் அவனைக் கொன்றுவிட்டான். அவன்

கட்மண்ட்



விமானக்கூடம்

நேபால் – கட்மண்டு



விமான நிலையத்தில்

(பீமன்) மனைவி மகா பதிவிரதை. அவளும் சக கமனம் செய்தாள். அப்படி உடன் கட்டை ஏறுமுன் இப்படி அநியாயமாகத் தன் கணவனைக்கொன்ற அந்த அரசாங்கத்தில் என்றும் நீதி நிலை நில்லாதுபோவதாக என்று சபித்து உயிர் விட்டாள். அதனை அறிந்த அரசனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. அந்த நிலையிலேயே லக்ஷ்மி நரசிம்மன் 18 வருஷங்கள் இருந்திருக்கிறான்.

அவனுக்குப்பின் கி. பி. 1639 ல் பிரதாபமல்லன் பட்டத்துக்கு வந்தான். படித்தவன்; ஆனால் காவியப் பித்துப் பிடித்தவன். தன் காசுகளில் தானியற்றிய இலக்கியங்களை அச்சிடச் செய்தான். தர்பார் சதுக்கத்தில் 15 பாஷையில் கல்வெட்டு (அவனியற்றிய காளிகாதேவியின் தோத்திரங்கள்) கி. பி. 1654 ல் வெட்டினான். (Winter) ஆங்கிலம், (Automne and l' hivert) பிரேஞ்சு வார்த்தைகள் கூடக் கலந்து வருகின்றன. அரசர்கள் விஷ்ணு அம்சமாதலில் விஷ்ணுவை வணங்கலாகாதேன்ற நியதியை உண்டாக்கினான். சமய சமரச வாதி. அக்பரைப் போன்றே எல்லா மதங்களையும் ஏற்றுக்கோண்டவன். தன் ஆட்சிக் காலத்திலேயே தன் பிள்ளைகள் நால்வரும் ஒவ்வோர் ஆண்டு ஆட்சிப் பயிற்சி பேறுமாறு செய்தான். ஆனால் அது குழப்பமாகவே முடிந்தது. ராணி போக்கிரி (குளம்) கட்மண்டுவில் வேட்டப்பட்டது. இவன் காலத்தில் பசுபதிநாதர் ஆலயம் இப்போழுதுள்ள நிலையில் பேரும் போருள் சேலவில் கட்டப்பட்டது. தன்னை ஓர் கவி என்று சோல்லிக்கோண்டான். துலாபாரம் செய்து அப்போருளைப் பிராமணர்களுக்கு அளித்தான்.

அவன்பேரன் பாஸ்கரமல்லன்காலத்தில் தசராவிழாவை நேபால வருஷத்தில் பீடை மாதத்தில் கோண்டாட

உத்தரவிட்டான். அதனால் கொள்ளைநோய் உண்டாகி மக்கள் அதிகமாக அழிந்தனர். இவன் சுயம்புநாதர் ஆலயத்துக்குப் பக்கத்துக் காட்டுக்குள் ஓடிவிட்டான். நோய் ஓரளவு அடங்கியதும் கட்மண்டுவுக்குத் திரும்பினான். அன்றிரவே இறந்தான். இப்படி அவன் செய்கையால் தெய்வக்குற்றத்துக்கு ஆளானான் என்று நம்புகிறார்கள் மக்கள்.

அவனுடைய மனைவியர் நால்வரும் சககமனம் செய்தார்கள். அவர்கள் தங்கள் உறவினனான ஜகஜ்ஜய மல்லனை அரசனாகத் தேர்ந்தெடுத்து உயிர்விட்டார்கள். அவன் தன்னை மகிபதீந்திரன் என்று பெயரிட்டுக் கொண்டான். அவன் கோவில், மடங்களுக்குக் கொடுத்த சொத்துக்களை மீட்டும் அரசாங்கத்துக்கு எடுத்துக்கொண்டான். கடும் பஞ்சமும் வந்தது. நீர் வரண்டு மக்கள் துன்பப்பட்டார்கள். இதனால் மக்கள் கோபத்தையும் இதைப்போன்றே சிற்றரசர்கள் விஷயத்திலும் மூடத்தனமான காரியங்கள் பல செய்து அவர்கள் வருத்தத்தையும் தேடிக்கொண்டான்.

இவன் காலத்திலேயே நாயக்கோட் பகுதியில் பிரிதிவி நாராயணன்* என்பவன் தலையெடுத்து வலுத்துவந்தான். அவன் நாயக்கோட்டில் தலைநகரமைத்து சுற்றிலுமுள்ள

---

* பிருதிவிநாராயணன் பின்னேவரப்போகும் சந்ததியை - இப்போழுது ஆட்சிபுரியும் சந்ததியை உண்டாக்கியவன். அதிலிருந்து தொடர்ந்து அப்பரம்பரை இன்றுவரை ஆண்டு வருகிறது. நல்ல ரஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்தது அது.

ரஜபுதனத்திலுள்ள சித்தூரில் பாட்டேசிங் (Fateh-Singh) என்னும் அரசனுடைய மகள் பெரிய அழகி. அவள்மீது மையல்

பகுதிகளைப் பிடித்துவரும் செய்தி ஜகஜ்ஜயனுக்கு எட்டியது. அவன் செய்த காரியங்களில் சிற்றரசர்கள் ஒத்துழைப்பும் கிடைக்கவில்லை. படைவீரர்களும் ஒத்துழைக்கவில்லை. இந்தக் கவலைகளால் அவன் 1792 ல் இறந்தான்.

அவன் மகன்களில் ராஜ்யப்பிரகாசனுக்குத் துணையாக படைகள் உதவின. இருந்தபோதிலும் ஜயப்பிரகாசன் தன் வலிமையால் பட்டமேறினன். ராஜ்யப்பிரகாசன் தன் சிற்றப்பன் விஷ்ணுமல்லனிடம் பாட்டானுக்குச் சேன்றடைந்தான். அவனை வரவேற்றுத் தனக்குப் பிறகு இளவரசாகவும் ஏற்றுக்கோண்டான் விஷ்ணுமல்லன்.

ஜேயப்பிரகாசனை எப்படியும் இறக்கிவிட்டு வேருெருவனைக் கோண்டுவர படைவீரர்கள் பலரும் முயன்றனர். அரசசபையிலுள்ளவர்களுக்கு உரிய மரியாதைகள் காட்டப்படவில்லை என்று குற்றம் சாட்டினர். ஜேயப்பிரகாச

கோண்டான் டில்லி பாதுஷா. போர் நடந்தது. ரஜபுத்திரர்கள் பேருமளவில் கோல்லப்பட்டனர். பாட்டேயும் கோல்லப்பட்டான். ரஜபுத்திர பேண்மணிகள்சதி (தீ வளர்த்து) யில் இறந்தனர். அந்தப் பேண் கோதிக்கும் எண்ணையில் விழுந்து இறந்தாள். இப்படி ஒரு பேண் விஷயமாக வந்த சண்டை நாட்டைக் கேடுத்தது. ரஜபுத்திரர்கள் தங்கள் நாட்டைவிட்டு ஓடினர். இரண்டு பிரிவாகப் பிரிந்தனர். ஒன்று உதயபுரிக்கு வந்து அங்கு தங்கியது. மற்ருென்று மன்மத் ராணு சிங்கின் தலைமையில் உஜ்ஜயினியில் தங்கியது. மன்மத்துக்கு இரண்டு பிள்ளைகள். அவர்களில் இளையவன் பூபால ராணுஜி ராவா ஹிமய மலைக்குச் சேன்ருன். அவன் 1495ல் ரிடிக்குத் திரும்பி வந்தான். அவன் இளைய மகன் மிச்சகான் (Micha Khan) பூட்வாலுக்கு அருகிலுள்ள நாயக்கோட்டில் தானே அரசனுன்.

னுடைய மற்ருெரு சகோதரன் நரேந்திரனை அரசனுக்கத் திட்டமிட்டனர். அவனைத் திபேத்தியப்பாதையில் சங்கு கிராமத்தின் அருகில் உள்ள தேவபட்டனில் அரசனுக அமர்த்தினர். சிறிதுகாலம் இந்த நாடகம் நடந்தது. ஜயப்பிரகாசன் படையெடுத்து நரேந்திரனையும் அவன் உதவிகளையும் விரட்டிவிட்டான். நரேந்திரனும் பின்னர் இறந்துவிட்டான்.

பிற்பாடும் அரசவை அதிகாரிகளின் சூழ்ச்சி நின்ற பாடில்லை. அவன் மனைவி தயாவதியைத் தன் வசப் படுத்திக்கொண்டார்கள். அவனுடைய 18 மாதக் குழந் தையை அரசனுக்கி அவளை அரசப்பிரதிநிதியாகச் செய்து விடுவதாக ஆசைகாட்டினர். அவளும் அதற்கு சம்மதித் தாள். இதன்படி எடுத்த நடவடிக்கைகளால் ஜெயப் பிரகாசன் தன் தலைநகரைவிட்டுக் காட்டுக்குச் செல்ல

இவர்கள் வழியில் வந்த திரவியசஹா (Drabya Sah) இப் போழுதுள்ள நேபாலப் பரம்பரையின் முதல் அரசன். அவன் லாம்ஜாஸ் அரசன் யசோபம் (Yasobam) சஹாவின் மகன்; அவன் காஸ்கி அரசனுன யசோபம் (Yasobam) சஹாவின் இளைய குமாரன். யசோபம் காஸ்கியைக் கைப்பற்றினுன். முகலாயர்கள் இவனுக்குப் பரம்பரைப் பட்டமாக சஹா (Sah) என்னும் பட்டத்தை அளித்தனர். இப்படி வந்த சஹா பரம்பரையினர்தான் இன்றும் ஆண்டு வருகிருர்கள்.

இந்தப் பரம்பரையில் வந்த பிருதிவி நாராயணன் சஹா நாயக்கோட்டின் சுற்றிலுமுள்ள பல சிற்றரசர்களையும் நேசப் பான்மையால் ஒன்றுபடுத்தினுன். இதற்கு ஜகஜ்ஜயன் மூடத்தனம உதவியது. பிறகு பிருதிவியே நாயக்கோட்டில் தானே அரசனுகிக்கொண்டு மற்றவர்களைத் தன்னுள் சிற் றரசர்களாக இருக்கும்படிச் செய்துகொண்டான்.

வேண்டியதாயிற்று. காடுகளில் அலையவேண்டியதாகவும் ஆயிற்று.

பிறகு பல முயற்சிகள் எடுத்து மீண்டும் காட்மாண்டுவுக்குள் ஜேயப்பிரகாசன் வந்து வெற்றியோடு அரண்மனைக்குள் நுழைந்தான். தயாவதியும் கொடுமை நிறைந்தவள். சாகசக்காரி. தான் நல்லவள் என்று காட்டிக்கொள்ள அவனை ஆட்சிக்குக் கொண்டுவந்த இராஜகுருவை முதலில் கொலைசெய்துவிட்டாள். தன் கணவனை வரவேற்பதில் தான் மிக மகிழ்ச்சிகொண்டிருப்பதாகவும் பிறர் தூண்டுதலால் கெட்டுவிட்டதாகவும் நடித்து ஜேயப்பிரகாசன் பாதங்களில் விழுந்து வணங்கிக் குழைந்து நின்றாள். அரசனும் முதலில் அதனை ஏற்பதாக நடித்தாலும் தயாவதியைச் சிறையிட்டுவைத்துப் பிறகு கொன்றுவிடவும் உத்தரவிட்டான். நல்லவர்களையும் பிராமணர்களையும் சேர்த்து அரசவை கூட்டினன் ஜேயபிரகாசன். சிறிதுநாள் அமைதி நிலவியது. காசிராம்தப்பா என்ற ஒருவன் மிகவும் செல்வாக்கு உடையவனாக இருந்தான். அவனைப் பிருத்வி நாராயணன் தன் வசப்படுத்திக்கொண்டான். கூர்க்கர்களுக்கு நாட்டைக்காட்டிக்கொடுக்கத் தயாரானான் காசிராம். தப்பாஸ் (Thapas), புதக்கோட்டி (Buthakoti), பிஸ்தி (Bisti), பக்லி (Bagli), பஸ்னியாத் (Basniat) இவர்கள் ஜேயப்பிரகாசனை அரசனாக ஏற்க மறுத்தற்காக தபாஸ் தலைவனான காசிராமைக் கொன்றுவிட்டான் அரசன். இதைச் சாக்கிட்டுப் பிருதிவிநாராயண் படையெடுத்து வந்து நாயக்கோட்டைப் பிடித்துக்கொண்டான்.

இந்தச்சமயத்தில் பாட்டான் ஆட்சியிலிருந்த சகோதரன் இராஜ்யப் பிரதானியர் அறுவரால் குருடாக்கப் பட்டான் என்ற செய்தி கிடைத்தது. ஜேயப்பிரகாசன்

படையெடுத்துச் சென்று பாட்டாணைக் கைப்பற்றிப் பிரதானிகளையும் அவர்கள் மனைவியரையும் நிர்வாணமாக்கிக் கடைத்தெருவில் பிச்சை யேற்றுண்ணும்படியாக வற்புறுத்தினுன். இப்படிச் சிலநாள் செய்து பிறகு அவர்களை விரட்டிவிட்டான். அவர்கள் ' பிருதிவிநாராயணனோடு சேர்ந்து கொண்டு இலக்குச் சொல்லிப் பேருதவிபுரிந்து நாட்டைக் காட்டிக்கொடுத்தார்கள். பாட்கனுக்கும் கட்மண்டுவுக்கும் சில்லரைத் தகாராறுகள் வலுத்தன. பாட்கன் நாட்டு அரசன். ரஞ்சித்மல்லன் பிருதிவிநாராயணனை அழைத்துத் தனக்கு உதவி செய்யும்படிக் கேட்டான். முதல் இரண்டு படையெடுப்புக்களில் பிருதிவிநாராயண் தோற்றுத் திரும்பினுன்.

தந்திரத்தால் வெல்ல நினைத்துப் புத்த ஸ்தூபத்துக்கு மரம் தூக்கிக் கொடுப்பதில் உதவி செய்வதாக வீரர்களை அனுப்பி நாட்டுக்குள்ளிருந்தே தாக்கச்செய்து வெற்றி பெற்ருன் பிருத்வி. முதல் சண்டையில் பிருதிவியின் தம்பி கொல்லப்பட்டான். பிருதிவி ஓடிவிட்டான். முதற்சண்டையில் இறைவன் துணைநின்று அவனைக் காத்தான். பிருதிவியைக் கொல்லக் கத்தியை உயர்த்தினுன் ஒரு வீரன். பக்கத்திலிருந்த பிறிதொரு வீரன் சாதாரண வீரன் அரசனைக் கொல்வது தகாது என்று தடுத்தான். அப்படிப் பிழைத்து ஓடியவன் பிருதிவி. பிருதிவி நாராயண் மிகவும் கொடியவன் நேபாலத்துக்கு இந்திய நாட்டிலிருந்து உணவு கொண்டுவந்தவர்களை ஆண் பெண்ணென்று பாராமல் வெட்டி வீழ்த்தினுன்.

ஐயப்பிரகாசனும் பிராமணரிடமிருந்த நில நிவந்தங்களைப் பறிமுதல் செய்தான். பசுபதிநாதருடைய கோவிலில் உள்ள எல்லாப் பொருள்களையும் எடுத்துச்சென்ருன்.

நாட்டுத்தலைவர்கள் ஜயப்பிரகாசனை வெறுக்கத் தொடங்கினர். ஜயப்பிரகாசனைக் கொன்றுவிடுவதெனத் தீர்மானித்தனர். கி. பி. 1767 இல் பிருதிவி மறுபடியும் படையெடுத்தான். * கீர்த்திபூர் வரை வந்துவிட்டான். ஜயப்பிரகாசன் எதிர்த்துப் போராட முயற்சிகள் எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. பிருதிவி நாட்டைக் கைப்பற்றினான். நாடு தன் வசமான முதல்நாள் உதவிசெய்த அவ்வளவு பேரையும் அணிவகுத்து நிறுத்திப் பாராட்டுக் கூறுவது போல் கொன்றுவிட்டான். கீர்த்திபூரிலுள்ள எல்லோரையும் மூக்கையும் உதட்டையும் வெட்டிவிடும்படி உத்திரவிட்டான். இதனால் நாட்டிலே ஒரு அச்சத்தை உண்டாக்கி வைத்தான்.

மூன்றாவது முறையாக வெள்ளையர் தலையீட்டால் தோற்றுத் திரும்பினான். நேபால நாட்டில் இந்திரவிழா (Indra Jatra) என்னும் உற்சவம் அந்தக் காலத்தில் ஆண்டுதோறும் நடைபெறும். வீரர்கள் அன்று கத்தியெடுத்துச் சண்டைசெய்ய மாட்டார்கள். விழாக் கொண்டாடுவர். அந்த நேரத்தில் பிருதிவி படையெடுத்துவந்து நாட்டைப் பிடித்துக்கொண்டான். பாட்கானில் முதல் வெற்றி கிடைத்தது. நாட்டுத் தலைவர்கள் அத்தனை பேரையும் கொன்றுவிட்டான். அங்கிருந்து கௌகட்டிலிருந்து மேலே தொடர்ந்து நாட்டினுள்ளே புகுந்தான். அந்தச் சண்டையில் ஜயப்பிரகாசன் குத்தப்பட்டான். உயிர் போவதற்குமுன் அவனுக்குப் பிருதிவி செய்யவேண்டிய உதவி என்னவென்று கேட்க ஒரு குடை, இரண்டு செருப்பு

---

* கட்மண்டு பிரிதிவி நாராயணன் வருவதற்குமுன் கீர்த்திபூர் என்று வழங்கப்பட்டது.

அணிந்து அரச மரியாதையோடு தன்னை (ஜெயப்பிரகாசனை) பசுபதிநாதர் ஆலயத்துக்கு முன்னால் உள்ள மேடையில் தகனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அவ்விதமே பிருதிவியும் செய்தான். பிருதிவி நாட்டைப் பிடித்ததும் ஐரோப்பிய வியாபாரிகள் நாட்டுக்குள் வரலாகா தென்று தடை விதித்தான். இந்திய வியாபாரத்துக்கு மட்டும் அநுமதிதந்தான்.

இதற்குப் பிறகு பிருதிவி கூர்க்க அரச பரம்பரையை இங்கே ஸ்தாபித்தான். இன்றும் அந்தப் பரம்பரையே நின்று ஆட்சி புரிந்து வருகிறது. கோர்க்கா என்னும் ஊரிலுள்ள கோரக்கநாதர், அவர்களுக்குக் குலதெய்வம். அதனால் அவர்கள் கூர்க்கர்கள் என்று அழைக்கப்பட லாயினர். கி. பி. 1771ல் பிருதிவி இறந்தான். பிரதாப் சிங்சஹா அடுத்து பட்டத்துக்குவந்தான். கி. பி. 1790ல் ராணா பகதூர் தலைலாமா அரண்மனையைக் கொள்ளை யடித்தான். சீன சர்க்கார் எச்சரிக்கை செய்தார்கள். அதற்கும் அஞ்சவில்லை. சைனா, நேபாலப்போர் நடந்தது. நேபாலம் தோற்றது. உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டது. அதன்படி நேபாலத்திலிருந்து 5 வருஷத் திற்கு ஒருமுறை சைனாவுக்குத் திபேத்து வழியாக ஒரு குழு செல்லவேண்டும். இடையில் அவமதிப்புக்கள் நேர்ந் தாலும், சைனாவில் அரச மரியாதை தரப்பெறும் என்பது. பிற்காலத்தில் பல ஆண்டுகள் வரைக்கும் இது நடந்து வந்தது.

ராணா பகதூர்சஹா இளமையில் பட்டத்துக்குவந்தான். ரஞ்சிட் குன்வார் ராணா அரசப் பிரதிநிதியாக ஆண்டான். காஷ்மீரத்திலிருந்து சிக்கிம் வரை அவன் தேசம் பெருகியது. சிக்கிய அரசன் ரஞ்சித் சிங்கின் உதவியும்

அவனுக்குக்கிடைத்தது. ராஜு ஒரு பிராமணப் பெண்ணை மணந்து கொண்டான்.

நூல் வல்லோர் பிராமணப்பெண்ணை மணந்ததனுல் அனர்த்தங்கள் விளையும், கூடாதென்று கண்டித்தார்கள். தடுத்தும் அவன் கேட்கவில்லை அவள் நோய்வாய்ப் பட்டாள். அதற்குப் பரிகாரங்கள் மிகுதியாகச் செய்தான். பெரும் பொருட்செலவு செய்தான். கடைசியாக அந்தப் பிராமண அரசிக்கு அம்மை வார்த்து அவள் குரூரமானுள். நிலைக்கண்ணுடியில் தன் உருவைப் பார்த்து அருவருப் படைந்த அந்தப்பெண், தற்கொலை செய்துகொண்டு இறந்தாள்.

அவனுக்கு இதுவல்லாது (க்ஷத்திரிய, சூத்திர ஸ்தரீ கள்) இருமனைவிகளும் இருந்தார்கள். பல பரிகாரங்கள் செய்தும் மனைவி இறந்த கோபத்தில் அந்நாட்டுக் கோவில் களைப் பீரங்கிவைத்து நொறுக்கினுன். பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட நில நிவந்தங்களைக் கைப்பற்றினுன். நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டது. நிர்வகிக்க முடியாமல் நிர்க்குணனந்த சுவாமிகள் என்னும் பெயருடன் காசி சென்ருன். வைப்பாட்டி மகனுன கீரவாஜஉத்தான் விக்கிரமன் என்பவனை, மக்கள் மன்னனுகஏற்றனர். அவன் இளம்பிள்ளையானதால், ராஜுவின் வைப்பாட்டி - அவன் தாய் - அரசப்பிரதிநிதியாக ஆட்சிபுரிந்தாள்.

காசிக்கு ராஜுவோடு அவன் ரஜபுத்ர மனைவியும் சென்ருள். சில நாட்களில் அங்குவந்த வேருெர் அழகிய பெண்மீது காதல்கொண்டு அவளை அங்கேயே மணந்தான் அரசன். ரஜபுத்திர மனைவியிடமிருந்த ஆபரணம் முதலிய எல்லாவற்றையும் அவளுக்கு இட்டு மகிழ்ந்தான்.

அவளை மகிழ்விக்க எண்ணிப் பெரும்பொருள் ஆடம்பர மாகச் செலவு செய்தான். எல்லாவற்றையும் விற்றுச் செலவும் செய்தான். பொருள் இல்லை. கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் தன் நாட்டில் ஆங்கிலேயப் பிரதிநிதி ஒருவனை வைத்துக்கொள்வதென்ற நிபந்தனையில் இலட்சம் ரூபாய் கடன் வாங்கினான். மீண்டும் அரசுரிமையை நிலை நாட்ட க்ஷத்திரிய மனைவியையும் உடன் அழைத்துக் கொண்டு நேபாலம் திரும்பினான்.

வைப்பாட்டி அரசப் பிரதிநிதியாக - அவள் மகன் மன்னனாக இருப்பதை விரும்பாத மக்கள் இவனை ஏற்றுக் கொண்டனர். இந்த அரசன் இல்லாத காலத்தில் தாமோதர பன்ரே (Dhamodhar Panre) என்பவன் பிரதம மந்திரி யாக இருந்து ஆட்சிக்கு உதவிவந்தான். காசிக்கு ராணு பகதூரோடு உடன்சென்றிருந்த பீம்சிங் தப்பா, தாமோதரப் பன்ரேயைக் கொன்றுவிட்டுத் தானே பிரதமர் என்று பிரகட னம் செய்துகொண்டான். ராணு பகதூர் பெயரால் ஆட்சி நடத்தப்பட்டது. அண்டைநாட்டு - பலப்பநாட்டு அரசன் பிருதிவி பாலனுக்கு அரசனுடைய மகளைக் கொடுப்பதாகச் சாகசம்செய்து அழைத்து வந்து சிறையில் அடைத்து அந்நாட்டையும் கைப்பற்றினான்.

ரஞ்சிட்சிங் நேபால பிரதேசத்தைத் துண்டித்துக் காஷ்மீரத்தைக் கைப்பற்றவே, இப்போதுள்ள நேபால நாடு தங்கியது. பலப்பநாட்டைக் கைப்பற்றிய ராணு பகதூர் தன் இயற்கை வெறியால் மடங்கள், கோவில்கள், பிராமணர் சொத்துக்களைக் கொள்ளையிட்டான். இதனால் கட்மண்டுப் பகுதியில் குழப்பம் உண்டாகியது. இவ னுடைய வைப்பாட்டி மகன் ஷர்பகதூர் என்பவன் உள் நாட்டில் இப்படித் துன்பம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கச்

சகியாத நிலையில் ராணுபகதூரை அரண்மனையிலே குத்திக் கொன்றான். பாலநரசிங்கன் என்பவன் ஷேர்பகதூரைக் குத்திக் கொன்றுவிட்டான். அரசப் பிரதிநிதியாக இருந்து ஆண்ட வைப்பாட்டியை ராணுபகதூரோடு வைத்து சககமனம் செய்யச்செய்தார்கள், இராஜேந்திர விக்ரம சஹா சிறு குழந்தையாக இருந்தபடியால், ராஜபுத்திர மனைவி திரிபுரசுந்தரி அரசப் பிரதிநிதியாக இருந்து 28 வருஷம் ஆண்டாள். கி. பி. 1814இல் கம்பெனியார்க்கும் நேபாலி யர்க்கும் நிகழ்ந்த போரில் காளி நதிக்கு அப்பாலிருந்த பகுதியையும், கார்வால் பகுதியையும் நேபாலியர் விட்டுவிட வேண்டியதாயிற்று. இமயத்தையோட்டிய தேரைப் பகுதி யையும் நேபாலத்திற்குக் கம்பெனியார் விட்டுக்கொடுக்க ஒத்துக்கொண்டார்கள். அதனோடு அந்த ஒப்பந்தம் அமர் சிங் தப்பாவும் காப்டன் ஒச்சர்லோனியும் இரு நாட்டு அரசி முத்திரையோடு ஒப்புக்கொண்டதாகும். அதில் "நேபாலம் சுதந்திர நாடு. ஒப்பந்தத்தில் கட்டுப்பட்ட இரு நாடுகளும் எக்காரணத்தாலும் ஒன்றையொன்று படையெடுப்பதில்லை. நேச நாடுகளாக இருந்துவரவேண்டும். இந்தியப் பிரதிநிதி யாக வெள்ளைக்காரர் ஒருவர் நேபால தர்பாரில் இருந்து வரவேண்டும். அவர் குடியிருப்புக்கு வசதியான இடம் கொடுத்தல்வேண்டும். அவருடைய உதவிக்குச் சிறு பட்டாளம் ஒன்று வைத்துக்கொள்ளலாம். போஸ்டாபீஸ், டாக்டர் தனியே வைத்துக்கொள்ள அநுமதி தரப்படும்." 4—3—1918ல் இவ்வொப்பந்தம் முடிந்தது. இதன்படி நடைமுறையில் ஒரு பிரதிநிதி இருந்து வரலானார்.

பீம்சிங் தப்பா மிகவும் கடுமையான ஆட்சியாளன். வேகம் உள்ளவன். பேராசைக்காரன். நீதி நேர்மையற்ற வன். கூர்க்கர்களை ஒன்றுபடுத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்தவன். தந்திரசாலி. பிரிட்டிஷாருடைய மனம்

னோகாதவாறு உறவாடுவதாகத் தானும் Order of the Garter என்னும் பதக்கத்தை அணிந்து ஆங்கில யுத்த உடைகளைத் தாங்கி நின்றான். அவன் காலத்தில் தேரைப் பகுதியை வருஷம் ஒன்றிற்கு 2 லட்ச ருபாய்க்குக் குத்தகை யாக எடுத்துக்கொண்டான். 18 வருஷங்களுக்குப் பிறகு 9 லட்சத்துத் தொண்ணூற்றுருயிர ருபாய் அவ்விடத்தி லிருந்து கிடைத்தது. குழந்தை தன்னுட்டில் அரசனுக இருப்பதால் வெள்ளையர் ஆதிக்கம்கொண்டுவிடாதபடி ஆட்சி செலுத்தி வந்தான்.

ஆங்கிலேயருக்கும் நேபாளியர்க்கும் அடிக்கடி சண்டை மூளுவதால் படைகளைப் பெருக்கப் பணம் தேவையாக இருந்தது. எந்த நேரத்திலும் ஆங்கிலேயர் படைதிரட்டலா மென்ற பயம் இருந்தது. பிராமணரிடம் பணம் கேட்கப் பட்டது. மறுத்துவிட்டனர். அரசமானியங்களைக் கைப் பற்றினான். திரிபுரசுந்தரி இறந்தாள். இராஜேந்திர விக்ரம சஹாவுக்குப் பருவமும் வநதுவிட்டது. அவனுக்கு இரு மனைவிகள். முதல் மனைவி பன்ரே வகுப்பினள். இரண்டா மவள் தப்பாவை ஆதரித்தாள். இரு வகுப்பினரிடையேயும் பூசல்கள் மூண்டன. 1833ல் அதிகார வயதை அடைந்தான். அந்நாட்டில் பைஜினி விழாக் காலத்தில் அரசனுடைய எல்லா அதிகாரிகளையும் நியமிப்பது வழக்கம். வருஷா வருஷமும் பெயர் அந்த பட்டியலில் வரவேண்டும். அதில் வராதவை எவ்வளவு பெரிய அதிகாரியுடையதாக இருப் பினும் நீக்கப்பட்டதாகவே கருதப்படும். அவ்வாண்டில் பீம் சேனின் பெயர் அதிலிருந்து விலக்கப்பட்டிருந்தது. இதனுல் உள்நாட்டுக் கலகம் மூளும் நிலையும் வந்தது. ரஷ்யர்கள் நேபாலத்தில் படையெடுக்கப் போவதாக ஓர் வதந்தியும் வந்தது.

பீம்சேன் ராணுவ அதிகாரத்தையும் வலியக் கைப் பற்றினுன். ஆங்கிலப் பிரதிநிதியோடு ஹாக்ஜஸேடு (Hodgson) வியாபார ஒப்பந்தம் செய்து அவர்களையும் தன்வசப்படுத்திக்கோண்டான். பீம்சேன் வியாபார ஒப் பந்தப்படி கி. பி. 1830 இல் 3 லட்ச ருபாயில் தோடங்கிய வியாபாரம் 1923 இல் 60 லட்ச ருபாயாகப் பெருகி விட்டது. இப்போது பீம்சேன் சகோதரன் ரணவீரசிம்மன் பிரதமதளபதியாக இருந்தவன், மந்திரி பதவிபெற முயற்சி செய்தான். முத்தராணி உதவியும் அவனுக்குக் கிடைத்தது. ரணவீரசிம்மன் மகன் மதபர்சிங்கும் ஆவல் கோண்டான். மதபர்சிங் பிரதமமந்திரியானுன். ஆங்கிலேயரோடு நேசப் பான்மை கோள்ளும் நோக்கத்தோடு இங்கிலாந்து சேல்ல விரும்பினுன். அரசவை இரண்டுபட்டது. ராஜீயமுறையில் இங்கிலாந்து சேல்ல இயலவில்லை. தன் சகோதரன் மனை வியை மதபர் சிங் வைத்திருப்பதாக வதந்தியும் கிளப்பப் பட்டது. சீனுவுக்குத் தூதனுப்பவேண்டிய கட்டமும் வந்தது. ஸௌத் ஆரியடு என்பவர்க்குத் தலைமை கோடுத்து மன்னன் அனுப்பினுன். ரகுராம பண்டிதர் (பிராமணர்) பிரதம நீதிபதியாக்கப்பட்டார். மதபர் பதவி யைவிட்டு நீக்கப்பட்டான். தாமோதர பன்ரேயின் மகன் பிரதம மந்திரியாக்கப்பட்டான். அவன்பேயர் ராணுஜங் பன்ரே. பன்ரேயை ஆதரித்த இரண்டாவது ராணியும் இறந் தாள். இந்த நிலையில் பன்ரே வகுப்பினர்க்குச் சில தனிச் சலுகைகள் கோடுக்கப்பட்டன. இரண்டாவது மனைவியின் கடைசி மகன் இறந்தான். பீம் சிங்கினுல் வைத்தியர்களைக் கோண்டு விஷமுட்டிக்கோன்ருன் என்று குற்றம்சாட்டி, பீம்சிங், மதபர் இருவரையும் கைதுசேய்தனர். பிராமண ஆட்சி வலுத்தது. விசாரணையில் குற்றச்சாட்டு ருசுவாக வில்லை. பீம்சிங் விடுதலையானுன். ரணவீர்சிங் பிரதம

தளபதி ஆனுன். பீம்சிங் துறவுகொண்டு காசிபோவதாகச் சொல்லியதை ஒத்துக்கொள்ளாமல், குழந்தையைக் கொலே செய்ததாகக் குற்றம் சாட்டி, நிலவறைக்கீழ்ச் சிறைப் படுத்திவிட்டனர் இந்தநிலேயில் பீம் சிங்கிற்கு, அவன் மனைவி நிர்வாணமாகிப் பிச்சையெடுக்கும் நிலே வந்து விட்டதென்ற செய்தியை எட்டவைத்துத் தற்கொலே செய்து கொள்ளும்படிச் செய்தனர். பிணம் துண்டாடப்பட்டு சந்திகள்தோறும் போடப்பட்டது; ஆற்றோரம் கழுகும், காகமும் கொத்தித் தின்னும்படியும் விடப்பட்டது. பிரதம மந்திரி ராணுசிங் பதவியிலிருந்து நீக்கப்பட்டான்.

பீம்சிங் தப்பா இறந்தபிறகு, தான் சகல அதிகாரங் களுடன் கூடிய வல்லவனுகக் காட்டிக்கொள்ள நினைத் தான் மன்னன். பன்ரேக்கலை முதல் மகாராணி ஆதரித் தாள். பீம்சிங் வீழ்ச்சியோடு அவள் ஆட்டமும் ஓய்ந்தது. தேரைப்பகுதிக்கு ஓடிவிட்டாள். அங்குச் சிலநாள் வசிக்கு முன்னம் அவல் என்னும் காய்ச்சலுக்கு இரையானுள். இரண்டாவது மகாராணி தப்பாக்களே ஆதரித்தவள். பிற்பாடு அதிக செல்வாக்கோடு இருந்துவந்தாள். அரசனும் பிரதமர் ஜங்பகதூரும் அவளே நாடுகடத்திவிட்டனர்.


ஜங்பகதூர் பிரதம மந்திரியானுன். அரசனின் பல வீனத்தைத் தெரிந்துகொண்டிருந்தவன் அவன். அரசன் அவன் கையில் துப்பாக்கியைக் கொடுத்து மதபரைக் கொல்ல ஏவினுன். 17—5—1845 ல் மதபரை அரச காரியத்துக்காக அரண்மனேக்கு அழைப்பதாக அழைத்து வரச்செய்து, அப்படி அவன் வந்ததும் சுட்டுக் கொல்லச் செய்தான். மதபர் கொல்லப்பட்டான். அவன் பிணம் சாளரம் வழியே தெருவில் எறியப்பட்டது பிறகு கருணே காட்டுவது போலப் பசுபதிநாதத்தின் முன்புறம்

வைத்துத் தகனம் செய்யச் செய்தான். இப்படியே ஜங்பகதூர் பதவியேற்ருன். பீம்சிங்கை வீழ்த்திவிட்டு பிரதமராக வர விரும்பிய அவன் சகோதரன் சந்நியாசி யாகப் போய்விட்டான். ஜங்பகதூர் மதபருடைய நெருங் கிய உறவினன். சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தவன். நேபால நாட்டை உருவாக்கிய பெருமை இவனுக்குண்டு. ஷேர்பகதூரைக் கொன்ற பாலநரசிங்கனின் மகன். அதற் காகச் சில சிறப்புக்கள் இவன் தந்தைக்கு வழங்கப்பட்டன. பீம்சிங்கினுடைய சகோதரன் பெண்ணை பாலநரசிம்மன் இரண்டாவது மனைவியாக ஏற்றவன். அவள் வயிற்றில் ஜங்பகதூர் பிறந்தான். ஜங்பகதூர் வேட்டையாடுவதில் வல்லவன். குறிவைத்தால தப்பாது. குதிரையேற்றத் திலும் வில்வித்தையிலும், மற்போரிலும்-சமர்த்தன். ஒரு சந்தர்ப்பத்தில் இரு யானைகள் போருக்கு விடப்பட்டன. ஒன்றின் மீதிருந்த பாகன் தள்ளப்பட்டான். யானைகள் வெறியோடு போரிட்டன. அந்நிலையில் அவற்றைக் கட்டுப் படுத்தக்கூடிய பாகர் இல்லை. ஜங்பகதூர் நெஞ்சுறத்தோடு இரு யானைகளையும் கட்டுப்படுத்திஞன். ஆங்கிலம் கற்றுக் கொள்ளவேண்டும் ஆங்கியேர்களுடன் தொடர்புகொள்ள வேண்டுமென விரும்பியவன். உலக விவகாரம் தெரிந்து கொள்ள் ஆவலுற்றவன். ஜங்பகதூர் யாவருக்கும் நல்ல வளுக நடந்ததில்லை. உறவினரும் வெறுத்தனர்.

கி. பி. 1846லே் ககன்சிங், (F) பாட்டா, ஜங்பகதூர், அபிமான் சிங் நான்குபேரும் தளகர்த்தராஞர்கள். ககன் சிங்கிற்கு7பட்டாளம். மற்றமுவர்க்கும்ஒவ்வோர்பட்டாளம். ககன்சிங் காஞ்சமகாராணி ஸ்ரீ லக்ஷ்மி தேவிக்கு மிகவும் வேண்டியவன். ஜங்பகதூர் இளவரசனுக்கு வேண்டியவன். மற்ற இருவரும் அரசருக்கு வேண்டியவர்கள். பாட்டா சிங் சில நிபந்தனைகளின் பேரில் பிரதமராஞன். 1845

டிசம்பரில் பஞ்சாபியர் (சீக்கியர்) இந்தியாவின்மீது படையெடுத்தார்கள், கட்மண்டுவிடம் உதவி கோரினர். ககன் சிங்கும், ஜங்பகதூரும் இந்தியாவுக்கு எதிராக நடக்கலாகாது என்றனர். மற்றையோர் சீக்கிய உதவிவேண்டும் என்றனர். சீக்கியர் டில்லியைப் பிடித்தால் பின் உதவலாம் என்ற முடிவுசெய்யப்பட்டது. இதனுல் ராணிக்கு வேண்டியவனுக ஆனுன் ஜங் பகதூர்.

ககன்சிங் ராணியினுடைய ஆசைநாயகன். அவனை எப்படியாவது ஒழித்துக்கட்டிவிடவேண்டுமென்று சுரேந்திரன், உபேந்திரனைக் கேட்டுக்கொண்டான். சுரேந்திரன் யோசித்தான். உபேந்திரன் தான் செய்துமுடிப்பதாக ஒப்பினுன். அவன் பிரதம மந்திரி முதலியோரைக் கலந்தான். உபேந்திரன் இளைஞன். கைக்கூலி ஒருவனை நியமித்துக் ககன் கொல்லப்பட்டான். ராணிக்கு மிக்க கோபம வந்தது. ககனேடு அவனுடைய மனைவியர் சககமனம் செய்வதாக இருந்ததைத் தடுத்து நிறுத்தி நிர்வாகத்துறை படைத்துறைத் தலைவர்களையழைத்து ஒரு பெருங்கூட்டம் நடத்த ஏற்பாடு செய்தாள், 12-9-184லே் இது நடந்தது. இப்படி ஒரு கூட்டம் திட்டமானது தெரிந்து தன் படையில் முக்கியமான 3 பிரிவுகளை அழைத்துவந்து கூட்டம் நடக்கும் 'கோட்' என்னுமிடத்தைச் சுற்றி நிறுத்தி வைத்துவிட்டான் ஜங்பகதூர். ராணிக்குச் செய்தி எட்டியது. முதலில் அவள் சந்தேகித்தாள். ஜங்பகதூர் மற்றவர் வராவகையில் தடுத்து நிறுத்தியிருப்பதாகத் தெரிவிக்க அவளும் நம்பினுள். ராணி அங்குவந்து ககன் சிங்கைக் கொலைசெய்தோன் யாரெனத் தெரிவிக்கும்வரை யாரும் வெளிச்செல்லலாகாதென்று எல்லையிட்டாள். வீர்கிஷோர் என்பவன்தான்ககன்சிங்கைக்கொலைபுரிந்ததாகவும், அவன் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் ராணி



(பிரதமர்) ராணு அரண்மனை



அரசன் அரண்மனே (தர்பார் மண்டபம்)

உரக்கச் சத்தமிட்டாள். அவன் ஒத்துக்கொள்ள வேண்டு மென்றும் ராணி வற்புறுத்தினள். அவன் ஒத்துக்கொள்ள மறுத்தான். அங்கே நின்ற படைவீரன் ஒருவனை அழைத்து வீர் கிஷோரை உடனே குத்திக்கொல்லும்படி உத்தரவிட்டாள். அரசன் பக்கத்திலிருக்கும்போது அரசன் ஆணையை எதிர்பார்த்து எவரும் இதனைச் செய்ய முன் வர வில்லை.

ராணி அரசன் ஆணையிட வேண்டுமென்று விரும்பினள். பிரதமர் ஃபாட்டாசிங்கைக் கலந்து முடிவு செய்வதாக மன்னன் கூறி எழுந்து சென்றுவிட்டான். நிலை ஒருவாறு குழம்பி வருவதை அங்கிருப்பவர்கள் புரிந்து கொண்டார்கள். அரசன் பிரிட்டிஷ் தூதுவராலயத் தில் ஓடி அடைக்கலம் புகுந்தான். தூதன் அவனை ஏற்க மறுத்தான். அரசன் அங்கிருந்து திரும்ப வரும்போது 'கோட்' பகுதியிலிருந்து மனித இரத்தம் ஓடிவந்து சாக் கடையில் விழத் தொடங்கியது; ஃபாட்டா வீட்டில் ஓடி ஒளிந்தான்.

பிரதம மந்திரி கோட்' பகுதிக்கு வரும் போது, ஜங்பகதூர் ஆதிக்கம் பெற்றுவிட்டதை உணர்ந் தான். ஜங்பகதூரும், ஃபாட்டா சிங்கும் சிறிது நேரம் கலந்தாலோசித்தனர். ஒன்று பீர் கிஷோர் கொல்லப்பட வேண்டும் அல்லது அரசி கைது செய்யப்படவேண்டும் என்ற நிலையில் இருந்தது. ஃபாட்டா ராணியைக் கைது செய்வதொன்றே தக்கதென்ருன். ஜங் பகதூர் ஒத்துக் கொள்ளவில்லை. ராணி மேல்மாடியில் சென்று ஒரு பலகணியின் வழியே "கொலை செய்தவனின் பெயரைச் சொல்லவேண்டும்" என்று கத்தினள். மறுபடியும்

மாடியிலிருந்து வேகமாக இறங்கி ஒடி வந்து தானே வீர் கிஷோரைக் குத்திக் கோல்வதற்குச் சென்ருள். பிரதம மந்திரி, ஜங்பகதூர் இருவரும் தடுத்துவிட்டார்கள். ராணிக்குச் சினம் அதிகமாயிற்று

ஃபாட்டாசிங், அபிமானன் இருவருமாகச்சேர்ந்து ஒரு முடிவுக்குவந்து 300 படைவீரரோடு அவ்விடத்துக்குவருவ தாக ஜங்பகதூருக்குச் செய்திகிட்டியது. உடனே இதனை அரசிக்கு அறிவித்து, அவளுடைய உத்தரவின்படிக் 'கோட்'டிலிருந்து யாரும் வெளியே செல்லக்கூடாதேன்று ஆணைபிறப்பித்தான். அபிமானன் முயன்றபோது ஒருவீரன் தடுத்து நிறுத்தினுன். அந்த வீரனை ஒதுக்கித்தள்ளிவிட்டுச் செல்ல முயன்ருன் அபிமானன். பக்கத்தில் நின்ற வீரன் ஒருவன் அபிமானனைச் சுட்டுக்கோன்றுவிட்டான். அபிமானன் கீழே விழும்போது தன்னைக் கோன்றது ஜங்பகதூர்தான் என்று உரக்கக் கத்திக்கோண்டு இறந்தான். நின்றவர் பலரும் ஆத்திரத்தோடு ஒருவரை யோருவர் வேட்டிப் போரிட்டனர். பலர் குத்திக் கோல்லப்பட்டனர். இரத்த ஆறு பெருக்கேடுத்தது.

இப்படி இங்கே நடந்துகோண்டிருக்கும் போது ராணி ஜங்பகதூரை அழைத்து நாட்டின் பிரதம மந்திரி யாகவும், பிரதம தளபதியாகவும் நியமித்தாள்.

ஒருவாருகக் கீழே நடந்த வேறியாட்டம் கட்டுக் கடங்கிவந்ததும் ஜங்பகதூருக்கு முதல் உத்தரவு சுரேந்திர விக்ரமனை அழைத்து இரத்தக் களரியைக் காட்டுஎன்பதே. சுரேந்திரன் வந்ததும் ஜங் பகதூர் சர்வசாதாரணமாக அங்கே நடந்திருப்பதேல்லாம் சுரேந்திரனுடைய எதிரிகளைக்

கோன்று குவித்திருப்பதாகவும், இனி பயப்படத்தக்க நிலை எதுவும் இல்லாததாகவும் சொல்லிவைத்தான். இங்கே நடந்த படுகோலைக்குக் காரணம் ராணியேயென்று ஜங்பகதூர் ஆங்கிலப் பிரதிநிதிக்குச் செய்தி சொன்னான். அத்தோடு சுரேந்திரன், உபேந்திரன் இருவருக்கும் யாதொரு தீமையும் ஏற்படாதுகாக்கத்தக்க ஏற்பாடுகளையும் செய்தான்.

ராணி தன் மகன் ரணேந்திரன் என்பவனைப் பட்டத்திலமர்த்த ஆசைப்பட்டாள். பலகீனனான அரசன் நாட்டைவிட்டுக் காசிக்கு ஓடுவதற்கு எல்லா முயற்சிகளும் செய்துவிட்டான் என்று தெரிந்ததும், இளவரசர் இருவரையும் உடன் அனுப்பிவிடலாம் என்று சொன்னாள். அரசன் இவ்வளவு பெரிய கோலைக் காரியங்கள் யாருடைய ஆணைப்படி நடந்தன என்று கேட்டதற்கு. ராணியின் ஆணையின்படி என்று ஜங்பகதூர் சொன்னான். அரசனே அதிகாரம் கொடுத்தபடி நடந்தது என்றும் அமைதியோடு கூறினான். அரசன் காசியாத்திரை செல்வதற்காகக் கட்மண்டுவிலிருந்து பாட்டனுக்குச் சென்றான். அங்கிருந்து காசி செல்வதாக உத்தேசம். யானையின்மீது ராஜேந்திரனும், வேலையாள் பவானிசிங்கும் சென்றார்கள். பவானி சிங்கைக் குத்திக் கொல்லுவித்தாள் ராணி. காசி செல்லவிருந்த அரசன் மீண்டும் கட்மண்டுவுக்கு வந்துசேர்ந்தான். அடிக்கடி அரசவாரிசாக வரக்கூடிய *இளவரசர்களைக் கொன்றுவிடவேண்டுமென்று ராணி ஜங்பகதூரை வற்புறுத்தி வந்தாள்.

சிறிது காலம்கடத்திவிட்டு 'ஒருநாளும் தங்களுடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிய முடியாது. நாட்டு நலனைக்

---

* சுரேந்திரன், உபேந்திரன்.

காக்கும் பொறுப்பு எனக்கிருக்கிறது. மேலும் வற்புறுத்துவதாக இருந்தால் தங்களையே கொலைத் தூண்டுதலுக்காக கைது செய்ய நேரும் என்பதை அறியவும்' என்று எச்சரித்தான். 'கோட்' சம்பவம் நடக்கும்போது ஜங்பகதூர் நின்ற நிலையை நேரிலேயே கண்டவளாதலால், அவன் சொன்னபடி நேர்ந்துவிடுமோ என்று அஞ்சினுள். அவ்வருஷம் பைஜினி விழாவின்போது தனக்கு ஆதரவாக இருந்த பலர்க்கும் வெகுமதிகள் கொடுத்ததோடு, எதிரிகளாக இருந்த பலரை எடுத்துவிட்டான் ஜங். ஆதரவாளர் பலருள் ஜங்கின் சகோதரர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர். ராணி தன் கோரிக்கை மறுதளிக்கப்பட்டவுடன் ஜங்பகதூரைக் கொலை செய்ய ஓர் கொலையாளியையும் நியமித்தாள். இத்திட்டம் ஜங்குக்குத் தெரிய வந்தது. கொலை செய்யத் திட்டமிட்ட நாளன்று கொலையாளி கொல்லப்பட்டான்.

அவள் இவ்விதம் செய்திருக்கும் செய்தியை அறிவித்து ராணியை அப்புறப்படுத்தும் நோக்கோடு அரசனிடம் சென்ருன் ஜங். ராணி இச்செய்தி தெரிந்து அரசன் முன்னிலைக்குத் தானும் வந்தாள். இரு எதிரிகளும் அரசன் முன்னிலையில் சந்தித்தார்கள். ஜங் பகதூர் ஆட்களை வைத்து ராணியை அவள் ஜாகையிலேயே கைது செய்து வைத்து, அரசவை கூட்டிக் குற்றப்பத்திரிகை வாசித்து, நாடுகடத்த ஆணையும் பிறப்பித்தான். ராணி தான் தனியே செல்ல முடியாதென்றும், புதல்வர்களும் அரசரும் தன்னுடன் வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள். தன் நாட்டில் தன் ஆட்சியில் நடந்த பாதகச் செயல்கள் தன்மீது பாவச் சுமையாகிவிட்டமையால் அரசனும் காசியாத்திரை செல்ல எண்ணினுன். 23—11—1846ல் ராணியும் குடும்பமும் காசியாத்திரைக்குப் புறப்பட்டது.

எல்லேவரை கொண்டுவிட ஆறு பிரிவு படைகளும் சென்றன.

சுரேந்திரன் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான். ஜங் பகதூரைக் கொன்றுவிட நினைத்திருந்த சுரேந்திரன் அவன் கைப்பாவையானுன். பகதூரின் உறவினர் ஆட்சிப் பொறுப்பில் முக்கிய நியமனம் பெற்றனர். ஜங்பகதூருடைய ஆட்சியிலிருந்து ராணுக்களின் ஆட்சி நேபால நாட்டில் வலுத்துவிட்டது. காசியிலிருந்து ராணி முதலானோர் சில சதித்திட்டங்கள் செய்தனர். அரச முத்திரையோடு ஜங்கைக் கொல்ல ஆட்களை அனுப்பினர். காசியில் நடந்த எல்லாச் செய்திகளையும் ஒற்றர்கள் மூலம் தெரிந்து, ஆட்களைப் பிடித்து அரச ஆணையைக் கைப்பற்றினுன்; தன்னுடைய படைகளைத் திரட்டிவைத்து அரச உத்தரவைப் படித்துக்காட்டி அரச ஆணையின்படி தன்னை அங்குள்ளோர் கொல்லும்படிக் கேட்டுக்கொண்டான் ஜங்பகதூர்.

அவர்கள் மறுத்துவிட்டதோடு, கொலேபாதக நோக்குள்ள மன்னனை இனியும் விட்டுவிடலாகாதென்று உரத்துச் சத்தமிட்டனர். அதன்படியே மக்கள்சபை கூட்டி பீம்சிங் தப்பாவைக் கொலேசெய்த குற்றத்துக்காக இராஜேந்திரனை நீக்கியிருப்பதாகவும், சுரேந்திரன் நாட்டு மன்னனுக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டன. விழாக்கள் கொண்டாடப்பட்டன. மன்னனுக்குக் குற்றப் பத்திரிகை அனுப்பப்பட்டது. அத்தோடு அரசனையும் நாட்டிற்கு வரும்படியான் அழைப்பும் அதில் அடங்கியிருந்தது. ராணியும் மற்றவர்களும் தன்னுடன் அழைத்துவர அனுமதி இருந்தாலொழிய வர இயலாதென்று மறுமொழி விடுத்து விட்டான் இராஜேந்திரன். அரசியை அனுமதிப்பதற்கில்லே; மற்றையோர் வரலாம்; குறிப்பிட்ட

நாளில் வராவிட்டால் சுரேந்திரன் அரசனுவான் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டது. காசியில் இருந்த அரச ஆட்கள் ஒன்றுகூடி ராணியின் தூண்டுதலின் பேரில் ஒரு பெரும்படை திரட்டி நேபாலத்தின்மீது படையெடுக்க வந்தார்கள். ஒற்றர் மூலம் செய்தியறிந்த ஜங்பகதூர் தன் சேனையை அனுப்பி, அந்தக் கூலிப்பட்டாளத்தைச் சிதற அடித்தான். எப்படியாவது பிழைத்தோடலாம் என்று ஓடிய அரசனைக் கைதியாக்கி ஜங்பகதூரிடம் உரிய மரியாதைகளோடு பல்லக்கில் அழைத்து வந்தனர். கட்மண்டுவில் வைத்து உபசரிக்கப்பட்ட அரசன் பட்கான் அரண்மனைக்கனுப்பப்பட்டான். அங்கும் சூழ்ச்சி செய்ய முற்பட்டமையால் மீண்டும் கட்மண்டு அரண்மனையில் அரச மரியாதைகளோடேயே சிறைவைக்கப்பட்டான்.

கி.பி. 1849ல் சீக்கிய அரசன் ரஞ்சித்சிங் மனைவி சந்த குன்வார் என்பவள் நேபாலத்துக்கு அடைக்கலமாக வந்தாள். பகதூர் அவளை மரியாதையோடு வரவேற்றுத் தனி இருக்கை தந்தான். வெள்ளையரோடு சமாதானப் போக்காக வாழ்வை நடத்திவந்தான். 1850 ல் ஜங் பகதூர் ஆங்கிலேயர் எங்கோ ஒரு மூலையில் இருந்து கொண்டு ஆதிபத்தியம் செலுத்தி வருவதன் உண்மையை நேரில் கண்டறிவதற்காக இங்கிலாந்து பிரான்ஸ் முதலிய நாடுகளுக்குப் பயணமானுன். அரச மரியாதைகளோடு வரவேற்கப்பட்டு, இங்கிலாந்தில் ராணி (விக்டோரியா) அறிமுகமும் பெற்ருன். அங்குச் சிலநாள் தங்கியிருந்துவிட்டு நேபாலம் திரும்பினுன். வரும்போது கடல் கடந்து சென்றதற்கு ஹிந்துக்கள் செய்யவேண்டிய எல்லா விதமான பரிகாரங்களையும் செய்து கொண்டு (இராமேசுவரத்தில் தீர்த்தமாடுதல், கங்கைக்கரையில் தானம்

செய்தல்) மீண்டும் புனித நிலையில் நேபாளம் திரும்பினுன். பெரிய வரவேற்பும் கிடைத்தது.

ஜங்பகதூர் இங்கிலாந்து சென்றசமயம் அவனது சகோதரன் பாம்பகதூர் நாட்டின் பிரதம மந்திரியாக இருந்து காத்தான். சுரேந்திரன், நேபால எல்லையில் வந்ததும் கொலையாளிகளைவிட்டு ஜங்பகதூரைக் கொலை செய்வதற்குத் திட்டமிட்டான், உபேந்திரன் சுரேந்திரனைத் தீர்த்துவிட்டு அரசனுகி பாம்பகதூரைப் பிரதம மந்திரி யாக்கிவிடுவதென்றும் திட்டம் இட்டான். ஆனுல் ஜங் பகதூர் வநதவுடன் பாம்பகதூருக்குத் திட்டங்களை நிறை வேற்றத்தெரியமில்லை. எல்லாவற்றையும் தானே ஒருநாள் தன் அணணனிடம் வெளிப்படுத்திவிட்டான். அரசவை யைக் கூட்டித் தொடர்புள்ள நால்வரையும் கைது செய்தான் பகதூர். பழைய அரசனே அரசனுனுன். முடிவு, கைதிகள் எல்லோர்க்கும் சிரச்சேதம். ஆனுல் அதனை ஜங்பகதூர் ஒத்துக்கொள்ளாமல் தீய சூழ்ச்சிகள் செய்யத் திட்டமிட்ட அவர்கள் அதன்பலனை உயிருள்ளவரை அனுபவித்தே ஆக வேண்டுமல்லவா? கைதிகளுடைய கண்களைப் பழுக்கக் காய்ச்சிய இரும்புகொண்டு தீய்த்துவிட வேண்டுமென்றும், உயிர் பாழும்படி விட்டுவிட வேண்டுமென்றும் ஆணை யிட்டாள். தண்டனை நிறைவேற்றப்பட்டது. அலகாபாத்தில் அவர்கள் கைது செய்துவைக்கப்பட்டிருந்தார்கள். கி. பி. 1853ம்ஆண்டு செப்டம்பரில் நால்வரில் ஒருவர் இறந்து விட்டதகச் செய்தி வந்தது. உபேந்திரனையும், தன் சகோதனையும் அழைத்து வந்து கைதியாகவே நடத்தினுன். கி. பி. 855ல் திபேத்திய நாட்டின்மீது படையெடுத்தான். அது ஏளவு வெற்றியும் தோல்வியும் தந்தது. திபேத்தி யர்க்குச் சீன உதவி கிடைத்தது. 24—3—185லே் நேபால் - திபேத்திய ஒப்பந்தம் :- ஒருவர்க்கொருவர் நேச

நாடுகளாக இருக்கவேண்டுமென்றும், திபேத்தியர் வருஷம் ஒன்றுக்கு ருபா 10,000 நேபாலியர்க்குக் கொடுக்க வேண்டுமென்றும், சீன அரசுக்கு இரு நாடுகளும் உரிய மரியாதை காட்டவேண்டுமென்றும் முடிவு செய்து கொள்ளப்பட்டது. தூதுவர்கள் மாற்றிக்கொள்வதென்றும் முடிவாயிற்று.

சிறிது நாளைக்கெல்லாம் ஜங்பகதூர் உடனிலே காரண மாக ஒய்வு எடுத்துக்கொண்டான். பாம்பகதூர் அவனுக்குப் பதிலாகக் காரியங்களைக் கவனித்து வந்தான். இருப்பினும் ஜங்கைக் கலந்து கொண்டே எல்லாம் நடத்தப்பட்டன. ஜங் பகதூரையே அரசனுகும்படி பல தலைவர்கள் கேட்டுக் கொண்டனர். தானே நியமித்த மன்னனை விட்டுக் கொடுக்க முடியாதென்றும், சேவையைத் தான் தொடர்ந்து புரிவதாகவும் உறுதிகூறினுன். பிறகு காஸ்கி, லம்ஜாங் என்ற பகுதிகளுக்கு அவனையே அரசனுகும்படிக் கேட்டுக் கொண்டனர். அவன் பரம்பரையினரே பிரதம மந்திரிகளாக வரவேண்டும் என்றும், நேபால அரச காரியங்களில்முக்கிய அதிகாரங்கள் (தூக்கு, சிறை, உத்தியோக நியமனம், நீக்கம், நாட்டு நிர்வாகம், குற்றப்பகுதி நிவாகம். பிற நாடுகளுடன் உறவு, படைப் பிரிவு இவை சம்பந்தப் பட்ட சட்டத்திட்டங்களை மாற்ற உரிமைகள்) கலமும் அவனிடமே இருந்துவந்தன. அவன் பின் வந்தவர்கள் பரம்பரை பாத்தியத்துடன் பிரதம மந்திரியாக இருந்து வருகிருர்கள்.

வேருெருவன் பிரதமராக இருக்கும்போது உள்நாட்டில் அவன் செல்வாக்கு எப்படியிருந்த போதிலும், வேறு அதிகாரங்கள் பெற்றவனுக வேண்டுமானுலும் இருக்லாம்,

இருந்தாலும், பிரிட்டிஷ் அரசாங்கம் அவனைப் பிரதமமந்திரியாக ஏற்றுக்கொள்ள மறுத்தது. 25—5—1857ல் பாம் பகதூர் இறந்தான். மீண்டும் ஜங் பகதூர் பதவிக்கு வந்தான். 10—5—1857ல் இந்தியச் சிப்பாய்க் கலகம் தோடங்கியது. அதில் நேபாலியர் பிரிட்டிஷாருக்கு உதவிப் படையனுப்பினர். ஜங் பகதூர் முயற்சியாலே கலகக் காரர்கள் அடக்கப்பட்டார்கள். 1858ல் நன்றியாக தேரைப்பகுதிகள் நேபாலியர்க்கு விட்டுக் கோடுக்கப் பட்டன. தன் பிற்கால வாழ்க்கையை நாட்டைச் சீர்திருத்து வதில் இவன் செலவிட்டான். கி. பி. 1872ல் சீனமன்னன் இவனுக்கு ‘துங்-லிங்-பிங்-மா-குவா கான்-வாங்’ என்ற பட்டம், மயிலிறகு, மரியாதை மேலங்கி, முதலியவற்றை அளித்தான். இரண்டாவது முறை ஐரோப்பா செல்ல ஏற்பாடுகள் நடந்தன. அலகாபாத் வழியாகச்செல்வதேனத் திட்டம். அப்போழுது அங்கு ஒரு மேளா நடைபேற்றது. விருதுகளுடன் யாரும் செல்லலாகாதேன்று சட்டம். அதனைமீறி இவன் சென்றான். இந்திய அரசிலிருந்து அவனுக்குத் தனிச்சலுகை காட்டுவதாயிருந்தாலும், முன்னறிவிப்பின்றிச் செல்வது தவறேன்று சுட்டிக்காட்டினர். தீர்த்தமாட விரும்பவில்லை என்றும், ஐரோப்பாவிலிருந்து திரும்பும்காலையில் தீர்த்தமாடுவதாகவும் கூறிப் பம்பாய் சென்றான். கப்பலிலும் சாமான்கள் ஏற்றப்பட்டன. குதிரை சவாரிசேய்து போனான். கீழே விழுந்துவிட்டான். நன்றாக அடிபட்டுவிட்டது. நாட்டு வைத்தியர் பலரும் வந்து சிகிச்சை அளித்தார்கள். நேபாலத்திற்கு வரும்படி அழைத்தார்கள். அவனுக்கு ஆங்கில வைத்தியமுறையில் நம்பிக்கை கிடையாது. அடுத்த வருஷம் ஐரோப்பா செல்வதாக மாற்றினான் திட்டத்தை. அடுத்த வருஷம் வேல்ஸ் இளவரசர் ஏழாம் எட்வர்ட் இந்தியா வந்தவரை

ஜங் பகதூர் வரவேற்ருன். சிலநாட்கள் பொழுதுபோக்குகள் நடத்திக்காட்டினுன். அப்பொழுது இளவரசருடைய வைத்தியராகவந்த ஃபயரர் என்பவன் ஜங்பகதூரைப் பார்த்து இதயத்தில் சதை வளர்வது பகதூர்க்கு அபாயமாகு மெனவும் எச்சரித்தார். சொத்துக்களை யெல்லாம் மனைவி, மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தான். அந்திய காலத்தில் பிள்ளைகளில் இருவர் (நார்ஜங், பாபார் ஜங்) இறந்துவிட்டதாகவும், பிடித்தமான யானை யொன்று இறந்ததாகவும் செய்திவர மனம் உடைந் தான். மயக்க நிலையில் இருந்து வாங்மதிக் கரையில் பதார் கட்டடத்திலிறந்தான். அங்கே தகனம் நடந்தது. மனைவியர் மூவரும் சககமனம் செய்தார்கள்.

இந்தியாவிலிருந்து வெள்ளையரால் விரட்டப்பட்ட நானுசாகிப் இங்கு ஒடிவந்தான். அவன் மனைவியர்க்கும் நேபாலம் புகலிடமளித்தது. இப்பொழுது ஆட்சியில் இருப்பவர் வீரவிக்ரமசஹா. இவருக்கு முன்பு இவருடைய தந்தையார் திரிபுவன விக்ரமசஹா ஆண்டுவந்தார். நல்ல முற்போக்கான அரசன். அவன் காலத்தில் சந்திரசம்ஷேர் ஜங்பகதூர் ராணுவாக இருந்து நல்ல சீர்திருத்தங்களைச் செய்திருக்கிருர். கி. பி. 1892 ல் கட்மண்டுப் பகுதியில் குடிநீர்க் குழாய் அமைக்கப்பட்டது. இதனை நேபாலியர் பீர்தாரா என்று அழைக்கின்றனர். ஃபார்பிங் பகுதியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு கட்மண்டு பாட்டான் பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. திரிபுவன விக்ரமர் காலத்தில் உலகச் சண்டைகள் இரண்டு நிகழ்ந்தன. கூர்க் கர்கள் பிரிட்டிஷாருக்கு உதவிகள் புரிந்தார்கள். இரண் டாவது உலகப்போர் முடிந்த பிறகு உலகத்தின் பல பகுதிகளில் பல நாடுகளும் சுதந்திரம் பெறுவனவாயின.

ஆட்சி முறையும் மாறலாயிற்று. முடியாட்சிகள் குடியாட்சி களாயின. திரிபுவனரும் தன்னுட்டின் ஆட்சி முறையை ஜனநாயக முடியாட்சியாகத் திருத்தியமைக்க முடிவுசெய் தார். ராணு அதற்கு ஒத்துவரவில்லை. திருபுவனரை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டு அவர்க்குப்பதில் அவருடைய 3 வயதுள்ள மகனைப் பட்டமேற்றினுன். 27 நாட்கள் இப்படி ஒரு ஆட்சிநடந்தது. இந்திய அரசாங்கத் தலையீட் டால் தவற்றை உணர்ந்த ராணு இந்தியாவுக்கு ஓடி வந்து விட்டான். திரிபுவனரும் காலமானுர். அவர் மகன் வீரவிக்ரமசஹா இப்போது அரசனுக இருந்து வருகிருன். ஜனநாயக முடியாட்சி இப்போது இங்கே நிகழ்கிறது. ராணுக்களின் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டுவிட்டது. பிற நாடுகளைப்போலப் பல சீர்திருத்தங்களும் செய்து நாட்டை மேலும் பலவகையிலும் வளப்படுத்தி வருகிறது.

நியாயம் வழங்கும் முறை

இரு சாரார் பேர்களையும் எழுதி நாணல் தட்டைக்குள் வைப்பர். ராணி போக்கிரி என்ற குளக்கரைக்குச் செல்வர். இரண்டு சக்கிலியர்களை அழைத்துப் போட்டிட்டுப் பூச் சூட்டி எதிரேதிர்ப்புறமாக அந்நாணல் தட்டைகளைத் தண்ணீரில் எறிவர் .. சக்கிலியனை விட்டு முழுகி எடுக்கச் செய்வர். முதலில் எடுக்கப்படும் பேயர் உள்ளவன் வேற்றிபேற்றதாக அறிவிக்கப்படுவான் - இதில் மத்ய ஸ்தன் பிராமணனுக இருப்பான் - இது நியாயம் வழங்கு வதில் கையாளப்பட்ட நேபால முறைகளுள் ஒன்ருகும். இப்போது பஞ்சாயத்து முறை இருக்கிறது. உயர்நீதிமன்ற மும் (High Court), அரசநீதிஸ்தலமும் (Privy Council) நிச்சாரி அட்டா அமைக்கப்பட்டிருக்கின்றன.

கட்மண்டுப் பிரதேசம்

தெருக்கள் மரவேலைப்பாட்டின் அற்புதத்தோடு விளங்கும். கேய்ரோ (Mashrabiyah) வேலைப்பாடு. இது அதனைவிடச் சீரியது. நுணுக்கமான திறப்பாடுடைய வேலைப்பாடு. பாட்டான், பட்கான், கீர்த்திபூர்-ஜன்னல்கள் கோடிவேலையுடன் காட்சிதரும். கட்டிடத்துக்கு வெளியே 1 கெஜ தூரம் நீட்டிக்கொண்டிருக்கும். வேலைப்பாடு வியந்தகு திறம் உடையது. தூண்கள் கீழே தாமரைப் பூவும், மேலே சாஸ்திரப்படிச் சிற்ப வேலையும் உடையன வாயிருக்கும். சைனுக் கூரைபோல கூரை யமைப்பு. நேபாலத்திலிருந்துதான் பல அடுக்குக்கட்டிட முறை சீனு சென்றதென்பர். தங்கரேக்கு கொடுக்கப்பட்ட அழகிய வேலைப்பாடுகளைக் கோவில்களில் காணலாம். உதைகால் களில் ஹிந்துமதக் கடவுளுருவங்கள் ஜோடி ஜோடியாகச் செதுக்கப்பட்டிருக்கும். சிகை அலங்காரங்களுடன் நடனக் கோலத்தில் சில - தண்டியக் கட்டைகளில் காம லீலைகள் தெரியும்படியான வேலைப்பாடுகள் சில இப் படியே இருக்கும். சுயம்புநாதம், புத்தநாதம், கட்மண்டு தீர்க்கரேகை 88 டிகிரி 19 சேண்ட். அக்ஷரேகை 28 டிகிரி 43 சேண்ட் ஜனவாசம் கோவில் பக்கம் அதிகம் இல்லை. புராணசம்பு-பழமையான இடம். தேவபட்டாம் கோவில் சூழ்ந்த பகுதி. கி. மு. 300 லேயே சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது. அசோகர் கி. மு. 250ல் வந்தபோது பாட்டானுடைய பெயர் - புத்தர் அவதாரப் புகழ் - பரவி யிருந்தது அசோகர் வருவதற்கு முன்னேயே புத்தர் வந்து வாசஸ்தலமாக்கியமை வரலாறு. குணகாமதேவன் கட் மண்டுவை உற்பத்தி செய்தான். அவன் வருகைக்கு

முன்பே அது ஒரு புனித ஸ்தலம். அந்நாட்டுக் கைதிகளைக் கொண்டு இந்நகரைக் கட்டுவித்தான் குணகாமன். அதன் நினைவாக அவன் ஒரு கொண்டாட்டம் கொண்டாடினான். சிறுவர் கல்லெடுத்து எறிந்து ஆடுவது அதில் சிறப்பு நிகழ்ச்சி. கைதிகள் கல்லெடுத்ததை நினைவூட்டுவதாகும் அது. பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் மேல் அப்படி எறிந்த கல் ஒன்று பட்டுவிட்ட காரணத்தால் ஜங் பகதூர் ராணு காலத்தில் இந்தவிழா நிறுத்தப்பட்டது; அரண்மனைகள் பெரியவை; அழகிய சிறு சிறு சந்துக்கள், தெருக்கள் நெருக்கமுள்ளவை. ராணிபோக்கிரியிலிருந்து பிரிட்டிஷ் ரெஸிடெண்டுக்குப் போகும் வழியில் அரண்மனை ஒன்றுண்டு ராணிபோக்கிரி நடுவில் கோவில் உண்டு; நீர் நிலையும் ஓடையும் அரண்மனையைச் சுற்றி அழகு செய்கின்றன. கட்மண்டுவிலுள்ள தர்பார் மண்டபத்தை யொத்தது இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. அங்குள்ள தொங்கு விளக்குகள் மிக்க எழில் உடையவை. வெள்ளைக்காரர் பாணியில் அறைகள் நிருமாணிக்கப்பட்டுள்ளன. படங்கள் புராண இந்துமதச் சார்பானவையே. மஹாராஜாவின் குடும்பங்கள் வசதிகளோடு தங்குவதற்கு ஏற்றவை. தனிக் கட்டிடங்களும் இல்லாமலில்லை. மன்னர் மட்டும் தங்குவதற்காகச் ‘சிங்க தர்பார்’ கட்டியுள்ளனர். மல்லர்களது பழைய அரண்மனையிலுள்ள தர்பார் சதுக்கத்தின் மருங்கில் அழகான கோவில்கள் பல இருக்கின்றன. நேபாலத்திலேயே அழகான இடம் அது. வர்ணமெல்லாம் பழங்கால வர்ணச் சேர்க்கை; மிகஉயர்ந்த வேலைக்காரர் கைத்திறனைக்காட்டும்.

தெருக்களிலும் கடைகளிலும் பலரும் ஹுக்கா பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்க்கலாம்.

காடை வியாபாரம் (இந்தியாவுக்கனுப்ப) செய்வர். விஷ்ணு மதியில் பலரும் சாயம் தோய்ப்பதையும் காணலாம். கட்மண்டுவில் பெண்கள் பாவாடை கட்டிக்கொள்கின்றனர்.

தர்பார் சதுக்கத்தில் இருபக்கங்களிலும் ஹனுமான் தோக்கா அமைந்திருக்கின்றன. அதன் தலைவாயிலில் அனுமான் உருவம் வர்ணவேலைகளோடு இருக்கிறது. அரசசபை உள்ளே வெகு அழகாக இருக்கும். வரவேற்பு அறையில் தங்கரேக் கொடுத்த மீன் ஒன்று கழிநுனியிற் காட்சியளிக்கும். மீனென்றால் அவர்கள் பாஷையில் ஙியா என்று சொல்லப்படும். ஙியா என்பதற்கு மீன், ஐந்து என்ற இரண்டு பொருள்கள் உண்டு. மல்லராட்சியில் 5 கோடி ரூபாயை அரண்மனையில் புதைத்து வைத்திருப்பதாக நம்பப்படுகிறது. ஹிரண்ய கசிபுவினுடைய வரலாற்றுக் குறிப்புகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. மன்னன் பந்தல் என்று சொல்லப்படும் முற்றவெளி 45 அடி நீளம், 15 அடி அகலம் உள்ளது. பிருதிவி நாராயணன் காலத்திற் கட்டப்பட்டது. தொங்கியிருக்கும் யானைக்காது போன்ற கூறை மல்லர் வேலைப்பாடு; தர்பார் சதுக்கத்திலுள்ள எல்லாக் கோவில்களும் மகாதேவர் (சிவன்)க் குரியன. அவற்றில் பழங்காலக் கல்வெட்டுகள் கீழ்மதிலில் உள்ளன. (மந்திர சக்கரங்களும்) உள்ளன. குஹ்யேசுவரி, ஜகந்நாதர், இந்திராணி முப்பத்துமுக்கோடி தேவர் கோவில்களும், தியான, யோகப்பயிற்சிக்காக அமைக்கப்பட்ட இடங்களும் உள்ளன. ஹனுமான் உருவத்துக்கு வடபுறமுள்ள அரண்மனைச் சுவற்றில் அரச பரம்பரையின் குலதெய்வங்கள் வரையப்பட்டு உள்ளன. முக்கியமான கோவில் தலஜு. 1764ம் வருஷத்திய சதித்திட்டம் நடந்த இடம் 5 மாடிக்

கட்டிடம். சிலோனிலிருந்து வந்த மாயாபிஜே என்ற அரக்கனுல் துலஜா என்னும் தேவதைக்காகக் கட்டப் பட்டது.

கோட் என்னும் அரண்மனை 184லே் படுகொலை நடந்த இடம். சுற்றிலும் நல்லமரங்கள் இருக்கின்றன. துண்டிக்கல் நதியின் கரையில் அமைக்கப்பட்டுள்ள மஹங்கல் எல்லாக் கோவில்களிலும் அழகு வாய்ந்தது. அங்கே வேலைப் பாட்டில் அழகு அதிகம். ஒரே திருவுருவம். இந்து, புத்தர் பெயர் சொல்லி வழிபடப்படுகிறது. அவலோஹிதேசுவரர் பத்மபாணியாக உள்ளவர் (பௌத்த தேய்வம்) மகாயானிக் வேலைப்பாட்டை அநுசரித்துச் செய்யப்பட்டது. அமீதாபா என்ற பெண் தேய்வத்தின்தலை தாமரையிலிருந்து வேளியே வருவதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. அதில்ருந்து அவலோஹிதேசுவரர் வருவதுபோல் இருக்கிறது. இந்துக் கள் சிவனேன்றே நம்புகிருர்கள். தபதலி என்னுமிடத் துக்குப் பக்கத்தில் ஜங் பகதூர் ஜகந்நாதர்க்குக் கட்டிய கோவில் உள்ளது. கட்மண்டுவில் வாழும் ஹிந்துக்களும் பாட்டானில் வாழும் பௌத்தர்களும் வழிபாடு செய்யுமிட மாகவும் அவலோஹிதேசுவரர் கோவில் அமைந்துளளது. மச்சேந்திரநாதன், கட்டிசம்பு முக்கிய பௌத்த ஸ்தலங்க ளாக இருந்தாலும் பழங்கோவில்களாக இடிந்த நிலையில் உள்ளன - புதுப்பிப்போர் இறந்துவிடுவர் என்ற நம்பிக்கை யும் இருந்துவருகிறது.

பீம்சன் தப்பா நிறுவிய 200 அடி உயரமுள்ள வட்ட வடிவில் அமைந்த கோபுரம் ஜங் பகதூருடைய சிலைக்குப் பக்கத்தில் துண்டிக்கல்லில் இருக்கிறது. திரிகோண நில அளவுக்கு முக்கியமான பகுதி இக்கோபுரம். நேபால இஞ்ஜி னீயர்கள் இதையாதாரமாக வைத்துக்கோண்டு நில அளவு

தோடங்குவர். சுயம்புநாதர் ஆலயம் உள்ள மலே புத்தர் காலத்துள் முன்னேயே புனிதம் உடையது. கோரேய்ட்ஸ் 2000, 3000 ஆண்டுகள் முன்பே கோவில் கட்டி யிருந்தான்.

மஞ்சு பர்வதம்-பிராமணர் வழிபடும் இடம். பலிபெறும் தேய்வம் - மஞ்சேசுவரியின் மலே - சரசுவதி வழிபாடு இந்துவினரால் இயற்றப்படும்.

புத்தர் பிரபலமான பிறகுதான் பௌத்த மதம் பரவி யிருக்கக்கூடும். புத்தநாத் கோவில் கி. பி. 496 to 512ல் மானதேவன் காலத்தில்தான் கட்டப்பட்டது. சுயம்புநாதர் ஆலயத்தில் கீழ் விமானத்தில் சதுரப்பகுதி உள்ளது. புத்தரின் நான்கு திசைப்பார்வை குறிக்கும் ஐதிகமாக நான்கு புறங்களிலும் இரண்டிரண்டு கண்கள் வேலே செய்துவிடப்பட்டிருக்கின்றன. நேவார் சிற்பத்திறமைகள் அனேத்தும் இவ்விரு ஆலயங்களில் பார்க்கலாம். புத்த நாதரில் அக்கினிதேவன், மாரியம்மன்கோவில் (சீதளா தேவி)கள் இருக்கின்றன. இந்துக்கள் வழிபடுகின்றனர் இங்கே. எல்லா மதத்தைச் சார்ந்த கோவில்களும் இருக் கின்றன. இரு மதத்துக் கருத்துக்களோடும் திபேத்திய தலேநகர் லாஸாவிலும் சிவாலயமும், சக்தி ஆலயமும் உள்ளன. தலேலாமாவின் அரண்மனேயருகில் உள்ளன. மஹாயானம் - புத்தநேறி - பேண்தேய்வம் உண்டுபோலும்; தேளிவாகக் கூறுவ்தற்கில்லே.

நோபாலப் பிரதேசத்திலுள்ள காடுகளில் புலி அதிகம். அவைகளே பிடிப்பதற்கு அங்கு ஒரு வழி கையாளப்படு கிறது. காட்டில் ஐந்து அல்லது ஆறடி உயரமான புல் மண்டி நிற்கும். புலிகள் அதில் பதுங்கி வாழும்.

அரசர்கள் வேட்டைக்குச் செல்லும்போழுது யானைகள் பல உடன் சேல்லும். அவற்றை வரிசையாக நிறுத்தி ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுற்றி வளைப்பார்கள். அந்த வட்டத்திற்குள் பதுங்கி இருக்கும் புலிகள் புற்காட்டின் அடியில் பயந்து பதுங்கிப் படுத்திருக்கும். அவைகளை வேளிக் கோண்டுவர மேலும் யானைகளைக் குறுக்குமறுக்குமாக விரட்டுவார்கள். யானைகளால் மிதிபட்டோ அல்லது வேறு விதமாகவோ துன்பம் நேர்ந்த புலிகள் சீறி வெளியே பாயும். தயாராகக் கையில் துப்பாக்கியுடன் நிற்கும் வேட்டைக்காரர்கள் அவைகளைச் சுட்டு வீழ்த்துவார்கள்.

புத்தநாதம்

எல்லாப் புத்தர் கோவில்களிலும் ''பிரார்த்தனைச் சக்கரம்'' (Prayer wheel) இருக்கும். 'கங்ம' என்ற தேவகன்னி இந்திரன் தோட்டத்தில் சில மலர்களைத் திருடி விட்டதனுல், இந்தப் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் பன்றி மேய்ப்போனின் பேண்ணுகப் பிறக்கும்படியாகச் சபிக்கப் பட்டாள். நான்கு பிள்ளைகள் அவளுக்குப் பிறந்தனர். கணவன் இறக்க விதவையாகி வாத்துக்களை வளர்த்து வாழ்க்கை நடத்திஞள். பணமும் சேர்ந்தது. ஒரு ஆசை - புத்த அமிதபாவுக்கு ஒரு கோவில் கட்டவேண்டுமேன்ற ஆசை. அரசனிடம் சென்று ஒரு இடம் வேண்டிஞள் - ஒரு தோச் பரப்பக்கூடிய இடம் கோடுத்தான்.

'ஐ - ரங்' (சேய்யக்கூடும்) என்ருன் அரசன். தோலை வார்வாராகக் கிழித்துக் கயிருக்கிஞள் சுற்றிவளைத்து ஒரு சதுரம் அமைத்தாள். அந்த இடம் தன்னதேன்றுஉரிமை கோண்டாடி அதில் புத்தநாதத்தைக் கட்டிஞள். இதற்குப் பல பெயர்கள் உண்டு, கசோ, சைத்யா, மகுதா, போதநாதம் என்பவை அவை.

அதனைப்பற்றிக் கிளம்பிய பல புகார்களுக்கு 'ஜாரங்-கா-சோர்' (I have said that she may) என்று சொல்லி விட்டதாக அரசன் பதில் சொன்னான். அவள் இறந்ததும் பிள்ளைகள் ஸ்தூபத்தைக் கட்டி முடித்தனர். ரங்கோன் சுவேத-கானை விட எழிலுடையது இது. காசியப் புத்தருடைய அஸ்தி மத்திய கர்ப்பக்ருஹத்தில் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. கங்மாவுக்குப் பிள்ளைகள் நான்கு. அவர்களில் ஒருவன் புத்தமதத்தில் ஒரு அறிஞன் தேன்மே சம்பூதா. இப்போது வழங்கும் திபேத்திய பாஷையின் எழுத்துருவங்களை அமைத்தவன். இரண்டாமவன் சம்யாஸ் மடத்துத் தலைவன். ஸ்தூபம் கட்ட சாமான் தூக்கிப்போனயானை சுணங்கிற்றும், வழிபட்டதாம், புத்தநாதர் 'மறு பிறவியில் லாங்தர்மாவாகப் பிறப்பாய் ; வேலைசெய்' என்றாராம். இதை முன்றாவது குருட்டுப்பிள்ளை கேட்டான். லோலன் - பேல் - கி - டோர்ஜியாகப் (புத்த சந்நியாசியாக) பிறந்து லாங்தர்மா பிறந்ததும் குத்திக் கொன்றுவிட்டான். நான்காவது பிள்ளைபற்றிய செய்தி தெரியவில்லை. 'சோடா-புத்தநாதம்' அவன் நினைவாகக் கட்டப்பட்டதாக இருக்கலாமோ என்று ஆராய்ச்சியாளர் நினைக்கின்றனர்.

பாட்டான் (Patan)

கட்மண்டுவுக்குப் பக்கத்தில் உள்ள பெருநகரங்கள் பழமையானவை. வாங்மதி விஷ்ணுமதி சந்திக்கும் இடம், இந்நகரின் பக்கத்தில் அமைந்துள்ளது. நினைவிற் கெட்டாத காலத்திலிருந்து அந்த சங்கமம் இந்து, பௌத்தர் இருசாரார்க்கும் புனிதம் உடையது. பசுபதிநாதர், அங்கேதஹா, சுயம்புநாதர் என்ற மூன்று ஆலயங்களும் முக்கோண அமைப்பில் இருக்கின்றன. சங்கமப் பிரதேசத்திலிருந்து ஒரு முக்கோண அமைப்பாக இவை உள்ளன.

பட்கான் ஒரு பேரிய சிறந்த நகரமாக இருந்தபோதிலும் கட்மண்டு,பாட்டான் பகுதி எப்போதும் வளமும் நாகரிகமும் சேறிந்த பகுதியாக விளங்கி யிருக்கின்றன. பாட்டான் தலைநகராக இருந்த சிறப்புடையது. கட்மண்டு அதனைவிடச் சிறப்பில் மிகுந்திருந்தபோதிலும் ஒரு பேரிய வாணிபச் சேழிப்புடைய ஊர். கட்மண்டுவைப் போலப் பேரிய தேருக்களும் இதர வசதிகளும் இல்லா விட்டாலும், பாட்டான் எந்தக் குறையும் உள்ள நகரம் அல்ல. தற்கால நாகரிகத் தேவையான சுகாதார வசதி கள் இல்லை. ஓரிரண்டு தலைமுறைகளாவது அவற்றைத் திருத்தியமைக்க முயற்சி எடுக்கவேண்டும். தேருச்சந்திப்புக் களில் வியாபாரிகள் தரையிலே கடைபரப்பிப் போவோர் வருவோர்க்கு இடைஞ்சலாக இருப்பர். அவைகளைச் சீர் திருத்தம் சேய்வதற்கு மன்னர் பேருமுயற்சி எடுக்கிறார். போருள்வசதி இல்லை. ஆனாலும் மலைப்பிரதேசப் பள்ளத் தாக்குகளுக்குள்ள அழகிய தோற்றம், கலப்பில்லாத அழகு, யாரையும் கவரத்தான் சேய்கிறது. போது இடங் களில் கோயிலமைப்புக்களும் அழகிய மாடங்களும் கோடி வேலைகளும் பிரமிக்க வைப்பவையாக அமைந்திருக் கின்றன. பாட்டானிலுள்ள தர்பார் சதுக்கம் பயபக்திக்கு எடுத்துக்காட்டாகவும், கீழ்நாட்டு நாகரிகத்தின் சிகரமாக வும் அமைந்து விளங்குகிறது. இந்த மூன்று நகரங் களிலும் ஒன்றை முதலில் பார்ப்போர் மற்ற நகரங்களின் அமைப்புக்களையும் பாராட்டாமலிருக்கமுடியாது.

தர்பார் சதுக்கம் நிலத்துக்கு அணியாக விளங்கு கின்றது. அங்கே சிற்பிகளும், ஓவியக்காரர்களும் கைத் திறமை முழுவதையும் காட்டியிருக்கிறார்கள். 5 அடுக்குக் கோபுரநிலையுள்ள இராதாகிருஷ்ண கோவில் தர்பார் சதுக்

கத்தின் அழகுக்குச் சிகரமாகும். மோகலாய சிற்ப வேலைப் பாட்டுக்கும் ஃபஞ்சு மஹால் வேலைப்பாட்டுக்கும் ஒத்த அமைப்புடையது. 2000 வருஷங்களுக்குமுன் அசோகர், புனிதமான புத்தர்தொடர்புடைய இடங்களைத் தேடியலைந்து, இமாலயத்தில் இந்தப் பாட்டான் நகர்க்குள் கண்டார். புத்தர் தொலை தூரத்திலுள்ள இந்தப் பள்ளத்தாக்குக்கு வந்த நினைவுப் பதிவுகள் இங்கே இன்றும் இருக்கின்றன. அன்னியன் ஒவ்வொருவனுக்கும் பக்தி உணர்வை, அமைதியை உண்டாக்குகின்றது இங்கே.

நகர நடுவில் முதன்முதலாக புத்த விகாரத்தைக் கட்டினான் அசோகன். சில்லேன் தேவ் என்று ஒரு கோவில் (சைத்யம்) வெள்ளைக் கற்களாலானது; தாமரைக் குளத்துக்கருகில் அமைந்திருக்கிறது. பாட்டானுடைய நான்கு திசைகளிலும் நான்கு சைதன்யங்கள் உள்ளன - இப்பி அதாவது ஜிம்பிதாடு, - தேய்தோஸ், லகான், உல்சா, என்று பேயர். வடபுற ஜிம்பிதாடுவில் திகம்பர புத்தர் வயிரோசனர் கோவிலில் உண்டு. ஸ்தூபத்துக்குக்கிழே நல்ல ஊற்று அமைந்துள்ளது - தென்மேற்கு மூலையிலிருந்து ஊற்றுக் கிளம்புகிறது. சுயம்புநாதத்துக்கு அடியிலும் இருந்தது. அடைத்துவிட்டனர். நல்ல தொடர்புகள் இக்கோயில்களினிடையே உள்ளன. இந்தக் கோவிலில் தெற்குப் பகுதியில் ஒரு ரதம்; மச்சேந்திரரை வைத்து வருஷத்துக்கொருமுறை விழா நடத்தப்படும். தெற்கு ஸ்தூபம் மிகப் பேரியது. அமிதபாவினுடைய மூன்று பெருஞ்சிலைகள் மேற்குப் பகுதியில் உள்ளன. மேல்பகுதி மர வேலைப்பாடுடையது. பட்டான் ராணுவப்பயிற்சி நிலையத்துக்கருகில் அமைந்திருக்கிறது: கீழை ஸ்தூபம் - டேரியிட்டஸ் தாடு, தேயித்தாஸ் எனப்படுகிறது - கீழ்

எல்லையிலிருந்து ½ மைல் தொலைவு, விரோசனர்தகை - கோவில் - மேலைஸ்தூபம் :- ஃபுல்ச்சா தாதூ (Phulcha-dhatu) வாங்மதியின் பாலத்தைத் தாண்டினவுடனே அமைந்துள்ளது.

தாமரைக்குளங்கள் பலவும் கீழ்ப்புறத்தில் அமைந் திருக்கின்றன - குசிஞராவிலிருந்து (புத்த நிர்வாணமான இடம்) எடுத்துவந்த அஸ்திச்சாம்பல் இந்த நான்கு ஸ்தூபங் களிலும் வைக்கப்பட்டிருக்கின்றது. தங்கப் பாத்திரத்தி லும், நீலக்கல் பதித்த வேலைப்பாடு மிக்க பாத்திரங்களிலும், கண்ணாடிபோன்ற பாத்திரங்களிலும் அந்த அஸ்திகளை வைத்து வழிபாடுகள் நடத்துகிறார்கள், மக்கள் தனி வாழ்விலும் பொதுவாழ்விலும் வழிபட்டுச் சிறப்பதை இந்த நான்கிடங்களிலும் காணலாம்.

வெளியார் யாராக இருப்பினும் புனித நிலத்தில் தாம் வந்திருக்கிறோம் என்ற எண்ணத்தை உண்டாக்குவதாக பாட்டான் நகரம் அமையப்பெற்றிருக்கிறது. மச்சேந்திரா கோவில் 1408ல் பாட்டானில் கட்டப்பட்டது. புத்த ருடைய பத்மபாணி கோலத்தில் உள்ள பெருமானுக்காக அது அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது - கடவுள் பக்தி உள்ள நேபாலிகளின் பொதுவழிபாட்டு இடமாக அமைந்திருக் கிறது. மிகப் பெரிய தேரில் (25 அடி நீள உத்தரம் போடவேண்டியதாக உள்ளது.) பவனிவருவார் மச்சேந்திர நாதர் கோயில்சிகரத்தைவிட உயரமான கட்டடம் இங்கு இல்லை.

பட்கான்

தர்பார்பகுதி பாட்டானுடைய தர்பாரைவிடச் சிறந்தது. அங்குள்ள ஒரு மணி 5 அடி குறுக்களவு உடையது;

அதனுடன் அரண்மனே வாசற்கதவு போன்ருலானது ஆசியாக் கண்டத்தில் அவ்வளவு சிறந்த அழகிய உலோக வேலே எங்கும் இல்லேயென்றே கூறலாம். பக்கத்திலுள்ள சுவற்றிலும் சிறந்த வேலேப்பாட்டைக் காணலாம். கதவிலே நாகர்கள், கருடர்கள் வேலே விழுமிதாய் உள்ளது. 5 அடுக்கு நிலேயில் உள்ள கோயில் ஒன்று உள்ளது ; எம் மதத்துக் கடவுளுக்கு அதுஎன்று குறிக்க இயலவில்லே. அதில் 5 அடிக்குப் படிகள் இருக்கின்றன. ஜெயமல்லன், பாட்டா - மல்லன் முதல் அடுக்கிலும், 2-ம் அடுக்கில் இரு யானேகளும் (மல்லரைவிட 10 மடங்கு வலியது). 3-ம் அடுக்கில் சிங்கங்கள் (அதைவிட 10 மடங்கு வலியது). 4-ம் அடுக்கில் பூதங்கள் (அதைவிட 10 மடங்கு வலியது). 5ம் அடுக்கில் புலி, (பாகினி), சிங்கம் (சிங்கினி) என்ற தேவதைகளுமாக உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 5 மேனிலே அடுக்கு உண்டு. இது மல்ல அரசர் காலக் கோவில். மல்ல மன்னரின் உண்மையான வீரத்தையும் சிற்பச் சிறப்பையும் காட்டுவது.

சங்கு நாராயணன்

பட்கானிலிருந்து சில மைல் தோலேவில் சங்கு நாராயணராலயம் உள்ளது. பசுபதிநாதர், பலாஜி போன்ற மகிமையின்றேனும் நேபால வரலாற்றின் இருட்கால நிலேயை எடுத்துக்காட்டும் கல்வெட்டுக்கள் பல இங்குண்டு. சுவர்களிலும் கதவுகளிலும் முன்பார்வையிலும் பழமையான வேலேப்பாடுகள் பல இருக்கின்றன. மதத்தோடர்பான செய்திகளே கிடைக்கும். நேவாரி மதபக்தியின் சின்னமாக இக்கோவில் அமைந்திருக்கிறது. உலகச் சிற்ப கலேச் சிகரங்களான பீக்கிங் மரவேலே, மாண்டலேயில் உள்ள இராணி தங்கமடம், நாரா கோஸ்யூஜி கோவில் (ஜப்பான்)

முதலியவற்றினும் சிறந்தது என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

நீலகண்டா

தண்ணீரில் உள்ள அனந்த சயனப்பெருமான், குடியானவன் ஒருவனால் வெட்டி எடுக்கப்பட்டுக் கட்டப்பட்ட கோயிலில் காட்சி வழங்குகிறார். மருங்கெலாம் சோலைகள். இதைப்போலவே பிறிதொரு கோவிலும் உண்டு. இங்கும் சேஷசயனமேயாகும். இராஜா தரிசனத்துக்கு வருவதில்லை. காரணம் தான்விஷ்ணு அம்சம் ஆதலால் விஷ்ணுவைத்தரிசனம்செய்யக்கூடாதுஎன்றஎண்ணத்தால் பாலாஜியைக் கும்பிட மன்னன் வருவதில்லை. நீரூற்றுக்கள் உண்டு. அழகான வேலைப்பாடு. இக்காட்டுப் பிரதேசம் மிக்க அழகுடையது; தென்மேற்கில் கீர்த்திபூர் மலையில் கோவில் ஒன்று உண்டு; நாக்கட்பூர் என்று பெயர் - நேவாரிக் கோவில்; பைரவர் ஆலயம் அது.

சோபார், சார்கார் ஊர்களின் நடுவில் தௌடா ஏரி இருக்கின்றது - அதற்குள் ஓர் புதையல் உண்டாம். புராண மரபாக : தாஞசுரன் தொல்லை தருவதைக்கண்ட இந்திரன் அவனுக்குப் பயந்து கார்க்கோடகனிடம் தன் செல்வத்தைக் கொடுத்து மறைத்து வைக்கச் சொன்னானும்; அப்புதையல் அங்குள்ளதாம். ஜங் பகதூர் இக்கதையை நம்பி ஏரியைச் சுத்தம் செய்தும் பயன் ஒன்றும் இல்லை. தாஞசுரன் தன்பெண் நீந்தி விளையாடச் சோபார் கணவாய் வழியாக வரவழைத்ததே இவ்வேரி என்றும் சொல்வர். 'மக்களைக்காக்க வந்த விஷ்ணு, அசுரனைக்கொன்று பள்ளத்தாக்கு நீரை வடியச் செய்து அவன் பெண்ணைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்' என்றுமொரு கதை உண்டு.

அரிசிதிக்குப் பக்கத்தில் அங்கேதஹா என்று ஒரு குளம் உண்டு. அதுவும் ஒரு ஏரியேயாகும். அங்கே தஹாவின் நீர் நெருப்பாக ஒரு காலத்தில் எரிந்ததாம் - இப்போது ஒன்றும் இல்லை. ஓரத்தில் கசிவு, நாற்றம் இருக்கிறது. எண்ணெய் சம்பந்தம் இருக்கலாம் என்று நம்பவும் இடம் உண்டு. சாக்கிய முனி - முன் அவதாரத்தில் மகாசத்வர் - பசியாயிருந்த புலிக்குத் தன்னைக் கொடுத்தார். Stay - mo - lus - skin என்று திபேத்தியர் கூறுகின்றனர். கோதாவரி - என்ற ஊர் உண்டு. தென்னிந்தியத் தொடர்புள்ள நேபால சின்னங்களுள் இதுவும் ஒன்று.

மச்சேந்திர ஜாத்ரா

மச்சேந்திரர் சிஷ்யர்பாட்டானுக்கு வந்து அங்குள்ள மலையில் தவம் பெருக்கினர். அதைக் கலைத்தான் அரசன். தபோதனர் அந்த மலையின் உச்சியில் வந்து ஒரேநிலையில் நின்றார். அங்க அசைவில்லாது அவர் நின்றதும் ஊரில் மழை பெய்யவில்லை. கடும் பஞ்சம் வந்தது. மக்கள் வருந்தினர். பிறகு அவர் மகிமையைப் புரிந்துகொண்டான் அரசன். பலரும் சென்று வேண்டியும் அவர் அசைவதாக இல்லை.

அவருடைய குரு மச்சேந்திரர் வந்தாலொழிய விமோசனம் இல்லை என்பதை அரசன் உணர்ந்தான். மச்சேந்திரரைத் தேடிக் கண்டு வணங்கி நாட்டில் நிலவும் அவல நிலைமையை எடுத்துச் சொல்லி அவரை அழைத்து வந்தார்கள்.

அவர் வந்து தன் சிஷ்யரைச் சமாதானம் செய்து கீழே அழைத்துவந்தார். பெருமழை பெய்தது. அங்கேயே

மச்சேந்திரர் நினைவாகக் கோவில் கட்டப்பட்டிருக்கிறது. வருஷா வருஷமும் மச்சேந்திர விழா நடைபெறும். அதற்கு ஒரு பெரிய தேர்கட்டி மச்சேந்திரரை எழுந்தருளப் பண்ணிவைத்து இழுத்துச் செல்வர். சுவாமி கோவிலி லிருந்து எழுந்தருளியானவுடனே மழை சிறு தூறலாகத் தொடங்கிப் பிறகு கனமழை பொழியும். இது கண்கூடு.

Perceival Landon என்னும் சரித்திராசிரியன் கீழே கண்டபடி தன் அனுபவத்தை விளக்குகிருன் :

நான் சரித்திரம் எழுதும் நோக்கத்தோடு அரசாங்க உதவிபெற்றுச் செய்திகள் சேகரித்து வந்தேன். அந்த ஆண்டு கோடை மிகக் கடுமையாக இருந்தது. தரை காய்ந்து வெடித்துவிட்டது. நதிகளும் குளங்களும் வரண்டு விட்டன.

வியர்வை ஆருகப்பெருகும் நிலையில் கொடுமையான வெய்யலில் மக்கள் நிலங்களை உழத்தொடங்கினர். நான் என் அனுதாபத்தை அவர்களுக்குத் தெரிவித்தேன். ஆனல் அவர்கள் கோடையின் துன்பத்தைப் பொருட் படுத்தாமல் மிக்க உற்சாகத்தோடு அவசர அவசரமாக வேலைசெய்தனர். "ஐயோ, பாவம்! மழை பெய்யாமல் குடிதண்ணீர்கூட இல்லாமல் வருந்துகின்றீர்களே. இந்த நிலையில் உழவும் தொடங்கிவிட்டீர்களே. மழைக்குறி கண்டபிறகு செய்யலாமே. ஏன் இப்படித் துன்பப்பட வேண்டும்" என்றிரங்கி ஆறுதல் கூறினேன். "ஐயா தாங்கள் இப்பகுதிக்குப் புதிது. ஆகவேதான் இப்படிப் பேசுகிறீர்கள். இன்னும் ஒரு வாரத்தில் மச்சேந்திரர் விழா வரப்போகிறதே. உங்களுக்கு அது தெரியாதுதானே. அப்புறம் உழமுடியுமா? பெருமழை பிடித்துவிடுமே.

அப்புறம் என்ன செய்வது'' என்று சொல்லி என் அனு தாபத்தை ஏற்க மறுத்துவிட்டனர்.

"மூட நம்பிக்கையில் பேசுகிறார்களே. இவர்களை எப்படித் திருப்பமுடியும். பழய நாகரிகத்தில் ஊறிய வர்கள் இவர்கள். அவர்கள் வழியில் அவர்கள் இருப் பதைத்தான் விரும்புவர். நாகரிக உலக வியவகாரம் தெரியாதவர்களல்லவா'' என்று நினைத்தேன்.

ஒருவாரம் கழித்து, அரசர் தான் மச்சேந்திர விழா வுக்குப் போவதாகவும் என்னையும் அழைத்துப்போக உத்தேசிப்பதாகவும் சொன்னார். அது ஒரு பெருவிழா என்று கேள்விப்பட்டிருந்தேன். வேடிக்கைப்பார்க்க நானும் விரும்பினேன்.

நடுப்பகலில் அரண்மனைக் கார் ஒன்று வந்தது. அதில் ஏறிக்கொண்டேன். ஒரே புழுக்கம். வியர்வை ஆறுக ஓடியது. மூச்சுவிடவும் முடியவில்லை. அவ்வளவு கொடிய உஷ்ணம். இருந்தாலும் அந்த நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களைத் தெரிந்துகொண்டால் சரித்திரம் எழுதும் எனக்கு அது உதவுமே என்ற எண்ணத்தால் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

வழிநெடுக ஆயிரக்கணக்கான மக்கள் சாரிசாரியாகச் சென்றனர். சாலை மட்சாலை. கூட்ட மிகுதியால் பெரும் புழுதிப்படலம் கிளம்பியது. மக்கள் ஆர்வத்தோடும் பக்திப் பெருக்கோடும் சென்றுகொண்டிருந்தார்கள்.

கோவிலை அடையும்பொழுது பிற்பகல் மணி மூன் றிருக்கும். கோவில் வாசலில் தேர் ஒன்று நின்றிருந்தது.

உள்ளேயிருந்து மச்சேந்திரர் திருவுருவத்தை எழுந்தருளப் பண்ணினார்கள். வெளுத்து தாங்கமுடியாத வெய்யலைக் கொளுத்திக்கொண்டிருந்த வானவெளியில் சிறுசிறு மேகங்கள் தென்பட்டன. இன்னும் சிறிது நேரத்தில் புயலால் உந்தப்பட்டவைபோல பல மேகப்படலங்கள் ஒரு விநாடியில் வேகமாக ஓடிவந்து கூடின. சுவாமி கோவில்வாசல் வந்தடைவதற்குள் சிறு தூறல்; தேரில் எழுந்தருளப் பண்ணுவதற்குள் பெருமழை கொட்டத் தொடங்கியது. இதெல்லாம் ஒரு சில விநாடிகளில் நடந்தவைதாம். பிறகு பாட்டம் பாட்டமாகப் பெருமழை பொழிந்து தள்ளி விட்டது. ஆறுகளில் பெரு வெள்ளமும் வந்தது. நீர் நிலைகள் நிரம்பி வழிந்தன. மக்கள் மழையில் நனைந்து ஆடிப்பாடி அவன் புகழ் நினைந்து கொண்டாடினர். எல்லாம் மாயமாக மந்திர சக்தியால் செய்யும் வித்தைகளைப்போல நடைபெற்றன. இப்படி உள்ள ஒரு தெய்வீகம் நான் எங்கும் கண்டதில்லை. அவர்களுடையது மூட நம்பிக்கை என்று நான் எண்ணியது என் அறியாமையால் தான் என்பதை உணர்ந்தேன். அந்தத் தேரைப்பாக்மதி நதிவரை சுமார் 1 மைல் இழுத்துச்சென்று திரும்ப கோவிலுக்கு வந்துசேர ஒரு வாரமாகிறது. அந்தக்காலம் முழுமையும் மக்கள் கொண்டாட்டமாக இதனை நடத்தி மகிழ்கிறார்கள்''.

இராஜமுடி

இராஜ முடியில் வளைவுப் பதக்கங்கள் 'ஸ்ரீ பஞ்ச[1] சர்க்கார்' உள்ளன. [2]ஸ்ரீ தீன் சர்க்கார் மந்திரிகள். குரு

---

[1] ஐந்து மரியாதைகள் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ.

[2] மூன்று மரியாதைகள் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ.

பாதுகாவும் அதற்குக் கீழ்த்திருவடிகள் இரண்டும் இருக்கும். கூர்க்கக் * காவல்தெய்வம் 108 கோரக்கநாதருடைய பாதுகைகளாகக் கருதப்படும். ராஜுக்கள் கூர்க்க என்ற ஊரிலிருந்து வந்தனரேன்பதும் நினைக்கத்தக்கது. பாதுகைக்குக் கீழே நேபால உடைவாள் இரண்டு. அது கூர்க்க மதச் சின்னமாகும். அக் 'குக்கிரி'யினுடைய இரு பக்கமும் சூரிய சந்திரர் உருவம் வேலை செய்யப்பட்டிருக்கும். காசு, கோடி, கல்வெட்டு சேப்புப், பட்டயம் அனைத்திலும் இது இருக்கும். ஆண்டவன் அருள்பெருக்கும் குறி. சூரிய சந்திரர் உள்ளவரை நிலைத்து நிற்கும் குறி. குருபாதுகை திருவருட்சின்னம். பிறைமதி, வளர்பிறையாகப் பேயரும் புகழும் மேலும் ஓங்கி வளர்தற்குற்ற பிரார்த்தனைக் குறி. அரசாங்க முகர் சின்னத்தில் இவ் வேலைப்பாடுகளோடு நேபாலக் காவல்தெய்வமான 108 பசுபதிநாதர் திருவுருவம்' நான்கு திருக்கரங்களுடன், கங்கா விசர்ஜனராகக் காட்சியளிப்பார். பனிமலைச்சிகரம் பின்னே அமைவதுபோன்று இருக்கும். அந்தச் சின்னம் ஆக்கல் அழித்தல், காத்தல் முத்தொழிலும் செய்யக்கூடிய சர்வ வல்லமையின் அருட்சின்னமாகக் கருதப்படும். அதற்குக் கீழே வடமொழியில் சுலோகம் எழுதப்பட்டிருக்கும். அதில் 'ஒருவனுடைய தாயும், தாய்நாடும் சொர்க்கத்தைவிட உயர்ந்தவை என்ற சிறந்த கோள்கை சொல்லப்பட்டிருக்கும். இந்த இரண்டுக்கும் தியாகம் செய்யவல்லார் வீட்டுலகுக்குச் செல்வார்கள்' என்ற முடிவைக் காட்டும். போதுவாக 'இந்தச் சின்னம் அணிவோர்க்கு அவர்களுடைய அலுவலைத் திறம்பட நடத்த வல்லமை அளிக்க வேண்டும். அந்நாட்டின் உரிமையைக்காக்க வலிமை

* Gorka.

அளிக்க வேண்டும். பெயரையும் புகழையும் சூரிய சந்திரர் உள்ளவரை காப்பாற்றும் சக்திதந்து மேன்மை அருள வேண்டும். இதை எல்லாம் வல்ல இறைவன் திருவருள் அருளிச்செய்யும்' என்ற நம்பிக்கையைக் காட்டுவதாக அணியப்படுகிறது. இது ஒரு சிறந்த பண்பாட்டுச் சின்னம் அல்லவா ?

இராஜ முடியில் சிகாமணியாகியது :- எகினி அரசி கி. பி. 188லேல் விற்றவிலை மதிப்பற்ற முடிப்பு. 5'' அங். நீளம்; 4½'' அங். அகலம். வயிரக் கற்கள் வைத்து இழைக்கப் பெற்றது. வரலாற்றுத் தொடர்புடையது.

தேசிய கீதம்

இராஜா வருங்கால் :-

[1] ஸ்ரீமான் கம்பீர கோர்க்காலி பிரசண்ட பிரதாபி பூபதி
ஸ்ரீபாஞ் சர்க்கார் மஹாராஜாதி ராஜகோசதாரகோஸ் உன்னதி
ராகூன் சிராயு ஈசலி பிரச்சா ஃபேயிலியோஸ் புகாரோன்
ஹாமீ கோர்க்காலி பாயி சராலே. [ஜெய பிரமலி

---

[1] श्रीमान् गम्भीर गोर्खाली प्रचण्डप्रतापी भूपति ।
श्रीपाँच सर्कार महाराजाधिराजकोसदा रहोस् उन्नति ॥
राखून् चिरायु ईशले प्रजाफैलीयोस् पुकारौं जय प्रेमले ॥।
हामी गोर्खाली भाई साराले ॥॥

பைரி சாரா ஹராவுன் சாந்த ஹோன் சபே விக்னபியாதா காவுன் சாரா துனியாலே சஹஸ்ர நாதகோ சுகீர்த்தி கதா ராகோன் கமான பாரி பீரதாலி நேபால மாதீ சத்ய நாதகோ ஸ்ரீ கோஸ் துலோ ஹாமே கோர்க்காலி கோ.

நேபால மஹாராஜா

[3] இமாசயில மண்டித சுஹிந்துதாஸ்ருத ''
அதிதேவதா பசுபதி பிராசாதித
நயபால தீன சரகார பயிரகோ
ஜெயஹேசு நிராமய சிராயு பயிரகோஸ்

[4] ரிபு நாஷ்டகூன் அதல சாசஞு ரகோஸ்
குணகண மக்ன சபலோக பயிரகோஸ்
ஸ்திர பயிரகோஸ் முலுக்மா ஸ்வதந்திரா
சுக சாந்தி உன்னதி ரகோஸ் ஜதாததா !

---

[2] वैरी सारा हराऊन् , शान्त होऊन् सबै विघ्नव्यथा ।
गाऊन् सारा दुनीआले सहर्ष नाथको सुकीर्ति - कथा ॥
राखौं कमान् भारी - वीरताले , नेपालमाथी सबैं नाथको ।॥
श्रीहोस् ठूलो हामी गोर्वालीको ॥॥

श्रीश्रीश्री महाराजाको सलामी

[3] हिमशैलमण्डित सुहिन्दुताऽऽश्रित अधिदेवता पशुपति प्रसादित नयपाल तीन् सरकार वीरको जय होस् निरामय चिरायु भैरहोस्

[4] रिपुनष्टहून् अटल शासना रहोस् गुणगानमग्न सबलोक भैरहोस् स्थिर भैरहोस् मुलुकमा स्वतन्त्रतासुख शान्ति उन्नति रहो्स जता तता

இராஜ விருதுகள்

[5] சக்கிரவர்த்திக்கு:- ஸ்வஸ்தி ஸ்ரீ கிரிராஜ சக்ர சூடா மணி நரநாராயணேத் யாதி விவித விருதாவளி விராஜமான மாேேன்னத புரோஜ்வால நேபால தாரா மஹாதிபதி ஸ்ரீ மான் மஹாராஜாதிராஜ ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாராஜா திரிபுவன வீர விக்ரம ஜங் பகதூர் சக பகதூர் சம்-ஷ-ஜங் தேவானும் சத சமார விஜயினும்.

பிரதம மந்திரிக்கு [6] (படைத் தலைமை)

ஸ்வஸ்தி ஸ்ரீ மததி பிரசண்ட புஜதண்டேத்யாதி புரோ ஜ்வால நேபால தாராதீஷ மஹாராஜா சந்திர சம்ஷேர் ஜங் பகதூர் ராணு துங்-லிங்-பிங்-மா-கோ-கான்-வாங்.

---

[5] स्वस्ति श्री गिरिराज चक्र चूडामणि नरनारायणेत्यादिविविध-बिरुदावलि विराजमान मानोन्नत प्रोज्वल नेपाल तारामहाधिपति श्रीमन्महाराजाधिराज श्रीश्रीश्री महाराज त्रिभुवनवीरविक्रम जङ्गबहादुर शाहबहादुर शम्शेरजङ्ग देवानां सदा समरविजयिनाम्

[6] स्वस्ति श्रीमदतिप्रचण्डभुजदण्डेत्यादि प्रोज्ज्वलनेपालताराधीश श्रीश्रीश्री महाराज जन्द्रशम्शेर जङ्गबहादुर राणा G.C.B., G. C. S. I., G. C. M. G., G. C. V. O., D. C. L., आनरेरि जनरल वृटिश आर्मि आनरेरि कर्णेल फोर्थ गोर्खाज़्, थोङ् लिन् - पिम्मा , कोकाङ् - वाङ् - स्यान् ; ग्राँह्द् अफिसिए दलालेजिओद् अनेयर् ; प्राइम्मिनिष्टर् मार्शल , सुप्रीम कमाण्डर् इन् चीफ कस्य रुक्का

மஹாராஜா (சுரேந்திரர் காலத்தியது)

[7] ஸ்வஸ்தி ஸ்ரீ கிரிராஜ சக்ர சூடாமணி நரநாராயணேத்யதி விவித விருதாவளி விராஜமான மானோன்னத ஸ்ரீமான் மஹாராஜாதிராஜ ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாராஜா சுரேந்திர விக்ரம் ஜங் பகதூர் சக பகதூர் சம் ஷேர் ஜங் தேவாநாம் சதாசமர விஜயீனும்.

பிரதமர்

[8] ஸ்வஸ்தி ஸ்ரீ மததி பிரசண்ட புஜ தண்டேத்தியதி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாராஜா ஜங் பகதூர் ராண[9] துங்-லிங்-பிங்-மா-கோ-கான்-வாங்.

பழய நேபால நிறுத்தலளவை

ஒரு பெரிய பைசா - 1 தோலா. 19 தோலா - ஒரு பாவ். 4 பாவ் - 1 சூர். 3 சூர் - 1 தரணி.

---

[7] स्वस्तिश्री गिरिराजचक्रचूडामणि नरनारायणेत्यादि विविध-विरुदावलिविराजमान मानोन्नत श्रीमन्महाराजाधिराज श्री श्री श्री महाराज सुरेन्द्रविक्रम जङ्गबहादुर् शाहबहादुर् शम्शेर्जङ्ग् देवानां सदा समरविजयिनाम् ।

[8] स्वस्ति श्रीमदतिप्रचण्डभुजदण्डेत्यादि श्री श्री श्री महाराजा जङ्गबहादुर राणा G. C B., G. C. S. I., थोन् लिन् पिम्मा-को काङ् वाङ् स्यान् प्राइम्मिनिष्टर् अण्ड कमाण्डर इन् चीफ कस्य रुक्का ।

[9] உண்மை வீரம் படைத்த இளவரசன். சேனதிபதி.

நில அளவை

3 ஜோவ் - 1 அங்குல், 12 அங்குல் ஜம் - 1பிட்டி, 2 பிட்டி - 1 ஹட், 2 ஹட் - 1 கேஜம். 2 கேஜ் - 1 தனு or தண்டி, 2000 தண்டி - 1 கோசம், 4 கோசம் - 1 யோசனே.

துணியளவை

27 ஜோவ் - 1 அங்குல், 3 அங்குல் - 1 கிரஹம், 4 கிரஹம் - 1 பாவ், 4 பாவ் - 1 கேஜம், 8 கிரஹம் - 1 ஹட், 2 ஹட் - 1 கெஜம்.

பிறிதொரு நில அளவை

8 கோடு - 1 இஞ்ச், 12 இஞ்ச் - 1 அடி, 3 அடி - 1 கேஜம், 9 அடி - 4 அங்குல், 1 ஜாஞ்சிர் - 1 சேயின், 16 சதுர சேயின் - 1 முரி, 4 முரி - 1 ரோபானி, 25 ரோபானி - 1 கேடி.

நாணயம்

4 தாம் - 1 பைசா, 4 பைசா - 1 அணு, 4 அணு - 1 ஜாவா, 4 ஜாவா - 1 ரோபானி.

கால அளவு

6 பிபலே - 1 பலா, 60 பலா - 1 கார்ஹி (24 நிமிஷம்) 7½ கார்ஹி - 1 பிரகாரா, 8 பிரகாரா (60 கார்ஹி) - 1 தின் (நாள்), 7 தின் - 1 சப்தஹ, 2 சப்தஹ - 1 பட்சம், 2 பட்சா - 1 மஹிஞ, 12 மஹிஞ - 1 பர்ஷ. (வருஷம்.)

தான்ய அளவு

2½ முத்தீஸ் - 1 சௌதய், 4 சௌதய் - 1 மன (ஒரு Pint), 2 மனஸ் - 1 குருவா, 4 குருவா - 1 பதி, 20 பதி - 1 முரி.

தாள்

10 தாவ் - 1 தேப், 20 தேப் - 1 கோரி, (தாவ்-sheet)

தெரை

மழைக்காலத்தில் வேட்டைக்கு உகந்த இடம். யானை, புலி, கரடி, காண்டாமிருகம் முதலிய கொடுவிலங்குகளைக் காணலாம்-இந்தியாவில் முடிசூடிக்கொண்ட ஐந்தாம் ஜார்ஜ் சக்கிரவர்த்தி வந்துள்ளார்-பாராட்டியுமுள்ளார். தெரைக்குச் சற்று மேலே அழகிய காட்டுப்பூக்கள் - நேபால எல்லையாகப் பனி மலைச்சிகரங்கள் கஞ்சஞ்சேங்கா, எவரஸ்ட் முதலியன உள்ளன. ரயிலில்போக: ராக்ஸோல், அமலேக் கஞ்ச் ரோடு. அதன்பின் - உலகிலேயே மிக நீளமான ரோப் - வே (Rope way) Dhimphedi to Katmandu 20 மைல் நீளம். மின்சார சக்தியால் இயக்கப்படுவது.

கண்காட்சி சாலை

சிறப்பாக 2 தோல் பீரங்கிகள் 1856 ல் திபேத்தியரிடமிருந்து பறிக்கப்பட்டவை உள்ளன. 4 தடவை சுடலாம். இதுபோன்ற பல பழங்காலப் பொருள்களை அங்கே காணலாம்.

கல்வெட்டு

ரும்முந்தேயில் இரண்டும்சங்கு,நாராயணன்கோவிலில் பலவும் இருக்கின்றன. ரும்முந்தேயில் உள்ள அசோகர் காலத்து இரண்டு கல்வேட்டுக்கள் கீழே தரப்படுகின்றன.

முதற் கல்வெட்டின் பொருள்

தேவானும் பிரியதர்சனி அரசன் பட்டத்துக்கு வந்து 20வது ஆண்டில் தானே இங்கு வந்து சக்கியமுனி புத்த தேவன் இங்கே பிறந்ததனால் இந்த இடத்தில் வழிபாடுகள் செய்தான். அவன் ஒரு கற்றூணையும் அதனுடைய சிகரமாக ஒரு குதிரையையும் செய்தமைத்து, இந்த இடத்தில் புண்ணியசீலன் அருள்நிறை செல்வன் பிறந்தான் என்பதைக் காட்டுவதற்கு அமைத்தான். அவன் லும்மினி கிராமத்தில் எல்லா வரிகளையும் வஜாசெய்தான். அதனோடு விளைபொருளில் $\frac{1}{8}$ இறைகோடுக்கவேண்டுமேனவிதித்தான்.

இரண்டாவதன் பொருள்

தேவனும் பிரியதர்சனி அரசன் பட்டத்துக்கு வந்த 14ம் ஆண்டில் புத்த கோனகமன ஸ்தூபத்தை இரட்டித்துப் பேரிதாகக் கட்டினான் - பட்டத்துக்கு வந்த 20வது ஆண்டில் தானே இங்கு வந்து இந்த இடத்தில் வழிபட்டதோடு கற்றூணும் அமைத்தான். *

ரும்மின்டே தூண்

*देवानपियेन पियदसिन लाजिनवीसति वसाभिसितेन अतन आगाच महीयिते हिद बुधे जाते सक्यमुनी ति सिला विगडभी चा कालापितसिलाथभे च उसपापिते हिद भगवंजाते ति (C) लुमिनिगामे उवलिकेकटे अतभागिये च

எல்லைகள்

காளி என்கிற சாரதா நதி - மேற்கெல்லை. பஸ்தி, கோரக்பூர், சம்பரான், தர்பங்கா ஜில்லாக்கள் தெற்கு. மேச்சி நதி, சிங்கதா மலைப்பிளவு சிக்கிம் - கிழக்கு. திபேத் - வடக்கெல்லை ; கட்மண்டுப் பள்ளத்தாக்குத்தான் பெரும்பாலும் நேபாலம் எனவழங்கப்பெற்றது.

அக்ஷரேகை :- 26° டிகிரி 25 to 30° டிகிரி 17

தீர்க்கரேகை :- 80° டிகிரி 6 to 88° டிகிரி 14

நாட்டின் நீளம் 512 மைல் ; அகலம் 70 to 150 மைல் உத்தேசம் 54000 சதுரமைல் ; ஜனத்தொகை 56 லட்சம், (தெளிவான கணக்கில்லை.)

ஜில்லாப்பிரிவினை; பெய்தாரி, தோதி, அச்சாங், தும்லா, சதியானு (D) தாங்தேஷ்கும்; பல்ப புக்கிரா, கோர்க்கா, கட்மண்டு, சிந்துலியா, தங்குட எலாம், நயமுல்க் (புதுப் பகுதி).

தெரைப்பகுதி :- பட்வால், நேவல்பூர், கயிடவான், போர்சாபாரா, ரோடஹாட், சிர்லஹி, மிஹ்தாரி, அட்டாரி, மோராங்.

Mount Everest : தூத் கங்கா எனப்பெயர் - பால் நிறைந்த கங்கை. சம்பு - பெரிய ஏரி. சம்பு எனும் நதி உற்பத்தியாகிறது அதில். திபேத்தின் எல்லை - வட எல்லையில் நீர்த்தேக்கங்கள் இருக்கின்றன. அதிலிருந்து கோர்னலி, ஷண்டகி, கோசி - மூன்று நதிகள் உற்பத்தியாகின்றன.

தெற்குப்பகுதி கொஞ்சம் சரிவாக உள்ளது. அபி (Pi), (D) தவளகிரி, கோசய்ந்தான், கஞ்சஞ்சங்கா - எல்லே யோர (எப்போதும் பனி முடிய) சிகரங்கள். இவைபோன்ற பனிச் சிகரங்கள் பல இருக்கின்றன. பல பல சிற்ருறு களும், மலேயருவிகளும் பேருக்கேடுக்க பனிமலே வருஷம் முழுவதும் உதவுகின்றன.

கட்மண்டுப் பள்ளத்தாக்குக்கு வாங்மதி வடிநீர் ஆறு, பல முக்கியமான பள்ளத்தாக்குக்கள் :- சம்ல, கட்மண்டு. போக்ர, (D) தாங், பேஸ்கும், சிட்டாவான். V அமைப்பில் பள்ளத்தாக்குக்கள் அமைந்துள்ளன - கட்மண்டுவில் கோடையில் சீதோஷ்ண நிலே 81° to 86° பாரன்ஹீட். சூரியோதய காலத்தில் 60° to 64°. இரவு 9 மணிக்கு 70° to 75°

விளேபொருள்கள்

அன்ஞரி, கரும்பு, பார்லி, சோளம், கம்பு போன்ற தானியம். பீச், மல்பரி, வால்நட், ராஸ்பரி - பழவகைகள் 12 மாதத்திலும் ஏதாவதொரு பழவகை கிடைக்கும். இந்திய சோளம், நேல் - கோடைதானியங்கள் விளேயும். முப்போகம் விளேவிருக்கிறது. கோதுமை, பார்லி - முதலியவை மாரிக்காலம்; முள்ளங்கி, உருளே இளவேனிற் காலம் (spring); இந்திய சோளம் நேல், மிளகு-குளிர்காலம் (winter.) மலேப்பகுதிகள் வயல்களாக்கப் பட்டுள்ளன. எள், கடுகு, கரும்பு, கோள் முதலிய தானியங்களும் இஞ்சி யும் விளேகின்றன. முக்கிய உணவு அரிசிதான். புஞ்சை யிலே - நேல் விளேகிறது. நேல் பேயர்: (G) கியா. எருவிடுதல்: மாட்டுச் சாணம் முதலியனவே, மண் கருப்புக்களி. உயர்ந்த சாரமுள்ள மண். தேரைப்பகுதி -

நேல், ஓபியம், லின் சீட், புகையிலே, உஷ்ஆர் - பாசனவசதி உண்டு. மலேரியா பிரதேசம் - சால் மரம் கிடைக்கும்.

காட்டு மரங்கள்

மிமோசா, சிசு, பஞ்சா கிடைக்கும். ஓக், சேச்நட், மேபில், வால்நட், பயின், பர்ஸ்ட் கிடைக்கும். வெளி நாட்டுக்கு ஏற்றுமதி வசதியில்லாததால் அங்கேயே பயன் படுத்தப்படுகின்றன. பழ மரங்களும் உண்டு. கிழங்கு வகைகள் உண்டு. சந்தனம் போன்ற வாசனே மரங்களும் உண்டு. ஜியா - என்ற சணல் வகை கிடைக்கிறது. அதிலிருந்து சரஸ் என்ற வாசனேப் போருள் எடுக்கப் படுகிறது. இலேயிலிருந்து ஒருவகை நார் எடுத்து அதைக் கோண்டு நேவார் முரட்டுக் கம்பளி நேய்கின்றனர். அதிலி ருந்து சாக்கும் நேய்கிருர்கள். மேய்ச்சல் வசதி உண்டு. ஆடு மாடுகள் குளிர் காலத்தில் மலேயடியிலும் வேயில் காலத்தில் மலே உச்சியிலும் மேயும், பச்சிலே மூலிகை தின்பதால் நோயின்றி வளர்கின்றன. ஆட்டு ரோமக் கம்பளி கள் உயர்ந்தவை. யானே பிடித்தல் முக்கியமான வேட்டை; நேபால நாய் (திபேத்து வர்க்கம்), சிறுத்தை, அழகான பறவைகள், சேம்பு, இரும்பு, கந்தகம் சலவைக்கல், சூரிய காந்தம் என்ற இரத்தினக்கல், பளிங்குக் கல், சுண்ணும்புக் கல் கிடைக்கும்.

மக்கள்

ஆதிக்குடிகள் தார்த்தார். சீனவமிசத்தவர் - மலேப் பகுதிகளில் வாழ்வு. இது இந்து குடியேற்றத்துக்கு முன்பு. கி. பி. 14 ம் நூற்ருண்டில் இந்துக்கள் வருகை. காளிநதிப் பக்கத்துக் குடிகள் ஹிந்து பரம்பரை என்கின்றனர்.

மக(G)ர், வேரி மர்சியாங்தி நதி இடை வெளியில் வாழ்கின்றனர். (G) குராஸ், (K) கஸ் என்பவர்கள் கூர்க்காலி பட்டாளத்தில் மிகுதியாக இருப்பர். மகர் வசிக்கும் பகுதிக்கும் பனிப்பகுதிக்கும் இடையில் (G) குராங் நேவார் - காட்மண்டுவின் ஆதிக் குடிகள் இருக்கிறார்கள். சிறந்த வீரர்கள், கூர்க்காலிப் படையெடுப்புக்குப் பிறகு உழவு, வியாபாரம் மேற்கோண்டனர். மலைப்பகுதியினரைவிட நாகரிக முன்னேற்றம் உடையோர். கட்மண்டு சிக்கிங், டார்ஜிங் எல்லைப் பகுதியில் லிம்பு, கிரந்தி, லெப்சாஸ் என்ற ஜாதியினர் உள்ளனர். கட்மண்டுவுக்கு வடக்கில் பூட்டியர்கள் இருக்கிறார்கள். தேரைப் பகுதியில் காஸ்வார், தேன்வார், தாருஸ் இருக்கின்றனர். கூர்க்காலி பிராமணர் : பன்ரே, உபாத்யா. க்ஷத்திரியர் :- கஸ், தப்பா. இவர்கள் ஆப்கானியர் படையெடுப்பில் இராஜபுதனத்தைவிட்டு ஓடி வந்தவர்கள். முதலில் குமாங் பகுதியில் குடியேறி மலை வாசிகளோடு கலந்த கலப்புசாதியே கூர்க்கர். கூர்க்கர்கள் பழையசம்பிரதாய ஹிந்துக்கோள்கைகளை விடாப்பிடியாக உடையவர்கள். பல பழங்காலகுடி மக்களைத் தம் மதத்திற்கு எடுத்துக்கோண்டவர்கள். நேவார் பூட்டியர்போன்ற வகுப்பினர் புத்த மதச் சார்புடையராயினும் இந்துக்களே.

நில உரிமை

கூர்க்கப் பகுதியில் இராஜா பெயரால் நிலம் உண்டு. அதில் பயிர் செய்யும் குடிகளுக்குப் பகுதி (விளைச்சலில் ஒருவாரம்) உண்டு. கூர்க்கப் பகுதியல்லாத பகுதியிலும் இராஜாவுக்குச் சோத்துண்டு. குறிப்பிட்ட நாட்களில் ஆள் வேலைக்கு வரவேண்டும், அரச குடும்பத்திற்கு வேண்டியவை இவற்றிலிருந்து வரும். பிராமணர்களுக்கு வரியில்லாத வினியோகபாத்தியமுள்ள நிலமுண்டு.

குற்றச்சாட்டிருந்தால் இராஜா பறிமுதல் பண்ணலாம். நேவார் அரசர் ஆட்சியிலும், புதிய ஆட்சி தோடங்கும் போதும் தண்டம் விதித்து வரி வாங்கிக் கோண்டிருக் கிறார்கள். எல்லா நிலங்களிலும் ஜாகீர் அல்லது அரசருக்கு ஒருபகுதியுண்டு. நிலவாரம் சுங்கம், பலவிதத்தண்டங்கள், மர விற்பனே, வியாபார உரிமை, சுரங்கம் அரசாங்க வருமானம். சுபாக்கள் (Governors) வருஷம் ஒருமுறை மன்னனுக்குக் கப்பம் கட்ட வேண்டும். அரசனேப் பார்ப்போர் கையுறையுடன் வரவேண்டும். அரண்மனேயில் அரச குடும்பத்தில் திருமணமோ பிறவோ நேர்ந்தால் கட்டாய வரி வாங்கப்படும். பட்டாளத்தில் சேவை செய்வோர்க்கு நிலமான்யம் உண்டு.

வியாபாரம்

தீபத்தியரோடும், இந்தியப் பிரதேசத்தோடும் வேளி நாட்டு வியாபாரம். திபேத்துக்கு 3 வழி உண்டு. கோசி நதியின் உபநதிக்கரை வழியே கடல் மட்டத்துக்குமேல் 14000 அடி உயரப் பகுதிக்குச்சேல்வது, கண்டகி வழியே தடம் ஒன்று 9000 அடி உயரம் தம்புக்குப் போதல், இவை கஷ்டமான வழிகள். ஆடு, செம்மறியாடு. திபேத்திலிருந்து வரக்கூடியவை. பஸ்மீனா சால்வை செய்யக் கூடிய ஆட்டு ரோமம், முரட்டுக் கம்பளி, உப்பு, யாக் வால் அல்லது சவரி மஞ்சட் பாஷாணம், ரஸம் தங்கத்தூள், சுரா என்ற போதை வஸ்து, காய்ந்த பழங்கள், சில மருந்துவகைகள் இவை நேபால வழி இந்தியாவுக்கு வருபவை. நேபாலத்திலிருந்து திபேத்துக்கு :— சேப்புப் பாத்திரம், இரும்பு வேண்கலப் பாத்திரம், மில் துணி, இரும்பு சாமான், அயல் நாட்டுத் துணி, புகையிலே, வேற்றிலே பாக்கு, நவமணி, உலோகங்கள் முதலியவை. வாசனே

சாமான்கள் ஆடம்பரப்போருள்களுக்குச் சுங்கம் அதிகம்; அத்தியாவசியப் போருள்களுக்குக் குறைவு. தேவைக்கு ஏற்றபடிச் சுங்கம் விதிக்கப்படும். வியாபார வழிகளில் எங்கும் சுங்கச் சாவடி உண்டு. வரி வசூல் செய்யும் உரிமை குடியானவனுக்கு உண்டு. திக்கதாருக்கு ஏலத்தில் விடுதல் உண்டு. மரம் தந்தம், சேப்புத் தகடு, உப்பு, கடுகு, புகையிலே, அரசுரிமைப் போருள்கள், அரசர் தானமாக அளிக்கப்படுபவைகள், மற்ற வாணிபப்போருள் களுக்கு வரிவிதிப்பில்லே. உள்ளூர்வரி அந்தந்த வணிகர்க் கும் தேரியும். ஊருக்குஊர் வரிவிதிப்பில் வேறுபாடுண்டு. நிறை, முட்டை, எண்ணிக்கை அடிப்படையில் இப்படி ஏதாவதோன்றைக் கணக்கிட்டு வரி விதிக்கப்படும். சம்பரான் ஜில்லா பாட்ஞ வழியாகவும் முக்கியமான வியா பாரப்போக்குவரத் திருக்கிறது. நேபாலிலிருந்து இந்தியா வுக்கு அரிசி, எண்ணேய்வித்து, "கீ" (G) நேய், மட்டரக தான்யங்கள், ஆடு மாடு குதிரைகளும், பிகங். மைஞ, வல்லூறு, முதலியனவும், மரம், வேங்காரம், சாயவேர்க் கோடி, நிலவேம்பு, கர்ப்பூரத்தைலம், சணல், தோல், கத்தைக் காம்பு (Catechu), பூஞ்சிறகு (fur), சுக்கு ஏலக்காய், மிளகாய், மஞ்சள், சவரி முதலியனவும் வருகின்றன.

இந்தியாவிலிருந்து

பருத்தி, நூல், பஞ்சுத்துணி, கம்பளித்துணி, சால்வை கள், விரிப்புகள், கம்பளித்துண்டு, பட்டு, ஜரிகை, ஜரிகைத் துணிகள், சர்க்கரை, வாசனேப்போருள், பாக்கு புகையிலே, ஜாதிலிங்கம்(vermelion), நீலவர்ணம், அரக்கு, எண்ணேய் கள், உப்பு, அரிசி, எருமை, ஆடு, சேப்புத்தகடு, சேம்பு பித்தளேநகைகள், கண்ணுடி மணி, துப்பாக்கி, நவரத்னம், வேடிமருந்து, தேயிலே முதலியன அனுப்பப்படுகின்றன.

முக்கியமான சரித்திர நிகழ்ச்சிகள்

கி. மு.

563 - ‘ சித்தார்த்தர் ’ புத்த சக்கியமுனி - ரும்மிங்தேயில் அவதரித்தார்.

520 - சக்கியமுனி இங்கு விஜயம்.

360 - பத்ரபாகு ஜைனமத ஆசாரியார் வருகை.

250 - அசோகச் சக்கரவர்த்தி நிக்லிவா (Nigliva) ரும்மிங்தே கட்மண்டுப் பகுதிக்கு விஜயம். அவர் மகள் சாருமதியை இங்கு விட்டுச்சென்றார் - புத்தமதப் பிரசாரம் வலுத்தது.

கி. பி.

340 - சமுத்திரகுப்தன் வெற்றிப் பிரதாபத்தில் நேபாலம் குறிக்கப்பட்டது - அலகபாத் அசோக ஸ்தம்பத்தில் கல்வெட்டு.

406 - பாசியான் (Fa-hsien) ரும்மிங்தே வருகை.

417 - விருசதேவன் பிறப்பு.

437 - மச்சேந்திரர் விஜயம்.

440 - சங்கரதேவன் பிறப்பு.

460 - தருமதேவன் பிறப்பு.

480 - மானதேவன் பிறப்பு - வாசுபந்து விஜயம்.

496 - மானதேவன் ஆட்சி ஏற்றது - ராஜ்யவதி அரசப் பிரதிநிதி.

497 - ராஜ்யவதி இறந்தது.

524 - மானதேவன் இறந்தது - மஹிதேவன் பட்ட மேற்றது.

539 - வசந்ததேவன் ஆட்சிக்கு வந்தது.

550 - சிவதேவன் பிறப்பு.

565 - அம்சுவர்மன் பிறப்பு.

585 - சிவதேவன் பட்டம்.

595 - அம்சுவர்மன் சிவதேவனுடைய துணை அரசுப் பட்டம் - அவன் மகளை மணந்தது.

635 - Hsuan-Tsang - ரும்மிந்தே வருகை.

639 - பிருப்ட்சன் - திருமணம் - திபேத்தில் புத்தமதப் பிரசாரம் - லாசா தலைநகர் உண்டாக்கியது.

640 - அம்சுவர்மன் இறப்பு - ஸ்ராங்ட்ஸான்கம்போ நேபால அரசனானது.

641 - அவன் வேங்-சேங்கைத் திருமணம் முடித்தது.

643 - விஷ்ணுகுப்தன் - நாட்டைக் கைப்பற்றியது - ை சனாவுக்குத் தூது.

647 - 55 - லி-யி-பியோ, வாங் ஹ்வான் ட்சே. பாங், தோசெங், ஹ்வான்ட்டை, மதிசிம்ஹா, ஹ்வான்ஹோய் விஜயம்.

651 - நரேந்திரன் சைனுவுக்கு தூது அனுப்பியது.

657 - வாங்வான்ட்சே இரண்டாம் முறை விஜயம்.

665 - மேற்படியான் சுயசரிதம் எழுதியது.

ஆங்கில மொழி பெயர்ப்பு அசோகன் கல்வெட்டு. qswba1956C

A. When king Devanamoriya Oruyadarsin had been anointed twenty years, he came himself and worshipped (this spot), because the Budha Sakyamuni was horn here.

B. (He) both caused to be made a stone bearing a horse (?) and caused a stone pillar to be set up (in order to show) that the blessed one was born here.

C. (He) made the village of Lummini free of taxes, and paying (only) an eighth share (of produce.

Another interpretation of taxes:

"free of religious cesses and declared entitled to the eighth share (of produce claimed by the Crown).

A. When King Devanampriya Priyadarsin had been anointed fourteen yesrs, he enlarged the Stupa of the Buddha Konagamana to the double (of its original size).

B. And when he had been anointed (twenty) years he came himself and worshipped (this spot (and) caused (a stone pillar to be set up).

The Kings of Nepal: (Gorka)

Drabya Sah - 1559 - 70.

Purandar Sah 1570 - 1605.

Chhatra Sah, 1605 - 06.

Rama Sah, 1606 - 33.

Dambar Sah, 1633 - 42.

Krishna Sah, 1642 - 58.

Rudra Sah, 1658 - 69.

Prithwipati Sah, 1669 - 1716.

Birbhandra Sah, d. v. p.

Narbhupal Sah 1716 - 42.

Prithvi Narayan 1742 - 74.

Singha Pratap Sah 1774 - 77.

Rana Bahadhur Sah, 1777 - 99.

Girvan Judha Vikram Sah, 1799 - 1816,

Rajendra Vikram Sah 1816 - 47.

Surendra Bir VikramSah 1847 - 81.

Trailokya Bir Vikram Sah(b. 1-12-47 d. v. p.)

Prithwi Bir Vikram Sah, 1881 - 1911.

Tribubana Bir Vikram Sah, 1911-56

Vir Vikram Sah. 1956

Prime Minister of Nepal.

Gen. Bhim Sen Thapa. b. 21-7-1775. Prime Minster 10-4-1806. committed suicide in prison 29 th July 1839 after having been removed from office in 1837.

Gen. Mathabar Singh Thapa. b. 2-10-1798. P. M. 28-11-1843. Killed by Jang Bahadhur 18-5-1845.

Gen. Maharaja Jang Bahadhur - b. 18-6-1817 P. M. 17-9-1846 died. 25-2-77.

Gen. Maharaja Rana Udip Singh. b. 3-4-1825. P. M. 27-2-1877. put to death 22-11-85.

Gen. Maharaja Bir Sham Sher. b. 10-12-52. P. M. 22-11-1885. died 5-3-1901.

Gen. Maharajah Deva Sham Sher b. 17-7-62. P. M. 5-3-1901 removed from office 26-6-01 died in India 20-2-14.


Gen. Maharaja Chandra Sham Sher. b. 8-6-1863 P. M. 26-6-01.

P. M. Prime Minister.

பிழை திருத்தம்

பக்கம்	பிழை	திருத்தம்
3.	கூடியளவதான்	கூடியளவதாம்
5.	ஒருவர்க்கும்	
7.	நேயமும்	நேயம்
7.	விட்டுச்சேன்	காட்டிச்சேன்
8.	உபநிஷத்	உபநிஷத்தில்
,,	ஆகாசம் சரீரட்	ஆகாச சரீரம்
9.	யஜூர்	யஜுர்
,,	ஹிரண்யபதயே	ஹிரண்யபதயே
10.	சுவர்ண்ம்	சுவர்ணம்
,,	அல்ல	அல்லன்
,,	என்றும் சோல்லுகின்றள	என்றும் சுருதிகள் சோல்லுகின்றன
,,	நமச்சர்வாயச்	நமச்சர்வாயச
,,	பசுபதயேவ	பசுபதயேச
12.	திருவருவம்	திருவுருவம்
13.	இராஜராஜேஸ்வரி	இராஜராஜேஸ்வரி
15.	ஆளாய்ச்	ஆளாய்க்
,,	குறுகிஞேமே	குறுகிஞேம்
,,	ஆளேயின் பலமும்.	ஆணேயின் பலமும்,
19.	ஆருருலாய	ஆருருவாய
28.	விளேங்தனர்	விளேங்தன.
32.	ரசக்ரீடை	ராசக்ரீடை,
33.	நடைபேறுவது	நடைபேறுவன
42.	சகஸ்ரநாமார்ச்சனே	சகஸ்ரநாமார்ச்சனேகள்
43.	संगते	संगथे
,,	जानासो	जनासो
,,	वृत्रघ्नेएवघ्नात्	वृत्रघ्नेऽवघ्नात्

பக்கம்	பிழை	திருத்தம்
,,	पञ्जाद	
44.	நதிகளையும்	நதிகளும்
51.	அவள் சந்திர	அவளைச் சந்திர
55.	அமர்ந்தார்கள்,	அமர்ந்தார்கள்.
58.	கோவே "	" கோவே "......
61.	பியாணச்	பிரயாணச்
76.	ராஜேஸ்வர	ராஜேஸ்வரி
79.	தனக்கு	எனக்கு
84.	சாப்பா	சர்ப்பா
..	ஊர்ததுவ	ஊர்த்துவ
119.	நேருநிலே	நேருநலே
121.	உரை "	உரை " குருஞானசம்பந்தர்
155.	தீர்த்வாந்தஸ்ஸங்நந்தே	தீர்த்வாந்தஸ்ஸங்நங்தோ



சரித்திரக் குறிப்புக்கள் Perceival Landon அவர்களுடைய நேபால் (Nepal) என்னும் நூலை அடியொற்றியது.

